செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

விலை ரூ.10/-

81/2008





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், விழாப்பேருரையாற்றி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உள்ளனர். (29.9.2007)


# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
புரட்டாசி – ஐப்பசி அக்டோபர் 2007
மலர் : 39 இதழ் : 4



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர்.ஜெயஸ்ரீ**
**ஆர்.தே[illegible]ர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா. இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.வெரியார் சாக்ரடீஸ**
**ஜெ.ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.ராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர்.பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழைதிருத்துபவர்

**ஜி.சந்தானம்**



சென்னை – தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை–600 002
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்**
**கருதி இடத்தாற் செயின்**

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்


- சேது சமுத்திரத் திட்டம் தேவை அந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திற்கு வளம் தேவை. வாழ்வு தேவை. ........ 2
- ஏழை-எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை பல மடங்கு அதிகம் வழங்கிய ஆட்சி ..... 10
- மனித உயிர்கள் சுகமாக வாழ சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மரங்களை வளர்ப்போம் ......... 18
- ஓய்வு பெற்றவர்கள் தங்கள் உழைப்பை சமுதாயத்திற்குத் தந்திட வேண்டும் ........ 22
- தமிழகம், மருத்துவத்துறையிலும் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது ........ 25
- தமிழ்நாட்டின் வளம்பெருக சேது சமுத்திரத் திட்டம் தேவை ........ 29
- கடந்த ஓராண்டு கால கழக அரசு 11 நிறுவனங்களுடன் 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டில் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் மூலம் 1 இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளது ........ 35
- தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி அளவு ரூ.20 ஆயிரம் கோடியைத் தாண்டிவிட்டது .. 46
- கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது ........ 51
- பொதுப்பணியில் எந்தப் பொறுப்பானாலும் மக்களுக்காற்ற வேண்டிய தொண்டினை ஆற்றுகின்ற மனப்பக்குவத்தை எல்லோரும் பெற வேண்டும் ........ 53
- 2,82,674 அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 79 கோடியே 28 இலட்சத்து 43 ஆயிரத்து 139 ரூபாய் உதவித்தொகை ........ 55
- காமன்வெல்த் மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழக விளையாட்டு வீரர்களுக்கு 1 கோடியே 31 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசுகள் ........ 57
- பார்வையற்ற மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் விலக்களித்து ஆணை ........ 58


## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
## திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்


- அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,618 ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை ........ 61
- சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் கண்கவர் புதிய அதிநவீன குளிர்சாதனப் பேருந்துகள் ........ 65
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பல்வேறு நிலைகளில் பணி நியமனங்கள் ........ 66
- ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் ........ 68
- நிலக்கோட்டை சிப்காட் வளாகத்தில் இரண்டு தொழில் நிறுவனங்கள் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்து ........ 70
- சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 32 பெண் மருத்துவர்களுக்குப் பணி நிரந்தர ஆணை ........ 72
- நகராட்சி நிருவாகத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை ........ 74
- பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகத் திகழும் தமிழக அரசின் செய்தித்துறை - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் ........ 75



228655


### அட்டைப் பட விளக்கம்

*முதலாம் பக்க அட்டை :* அண்ணல் காந்தியடிகளின் 139ஆவது பிறந்தநாள் விழாவில் மேதகு ஆளுநர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (2.10.2007)

*இரண்டாம் பக்க அட்டை :* திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள் (29.9.2007)

*நான்காம் பக்க அட்டை :* தந்தை பெரியாரின் 129ஆவது பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாலையணிவிப்பு (17.9.2007)




# சேது சமுத்திரத் திட்டம் தேவை. அந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திற்கு வளம் தேவை. வாழ்வு தேவை.

சென்னையில் 16.10.2007 அன்று நடைபெற்ற 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுக்களுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :

இந்த விருதுகள் வழங்குகின்ற விழாவில் தலைசிறந்த நடிகர்கள் இருவர் தங்களுடைய வாழ்த்துக்களை வழங்கியிருக்கிறார்கள். என்னுடைய அன்புக்கும் பாசத்திற்கும் உரிய தம்பி ரஜினிகாந்த் அவர்கள், ஒரு வேண்டுகோளையும் இந்த விழாவிலே வைத்திருக்கின்றார். வேண்டுகோள் வைக்கப்பட வேண்டிய இடங்கள் என்பது எது என்று அவருக்குத் தெரிந்திருந்தாலுங்கூட இந்த வழியாக அந்த வேண்டுகோள் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரட்டும், போய்ச் சேரும் என்ற நம்பிக்கையோடு அவர் இந்த வேண்டுகோளை வைத்திருக்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

இந்த இனிய விழாவில், அந்தப் பிரச்சினை குறித்துநான் ஆழமாகவோ அல்லது விரிவாகவோ இப்பொழுது பேச விரும்பவில்லை. இருந்தாலும், முதலில் விருதுகளும் பரிசுகளும் பெற்ற நம்முடைய கலை உலகத்துக் காவலர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பது என்னுடைய கடமையாகும்.

**கலை உலகத் தொடர்பு**

கடந்த இரண்டு ஆண்டு காலமாக 2005, 2006 ஆகிய இந்த இரண்டு ஆண்டுகளிலும் வழங்குவதற்கு தவறிப்போன அல்லது தட்டிப்போன அந்த விருது வழங்கும் விழாவை இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக இங்கு வரவேற்புரையாற்றிய தம்பி பரிதி இளம்வழுதி கூட இந்த அரசு கலை உலகத்திற்கு எத்தகைய நன்மைகளைச் செய்தது, சாதனைகளைப் புரிந்திருக்கின்றது என்பதைக் கூறி தம்பி கலைஞானி கமல் அவர்களும் அதைத் தொடர்ந்து சுட்டிக்காட்டினார்.






நான், இன்று நேற்றல்ல; 1950 ஆண்டிலே இருந்து கலை உலகத்திலே தொடர்பு கொண்டவன். என்றைக்கு அந்தத் தொடர்பு நின்றது என்று யாரும் கணக்கிட முடியாது. காரணம், தொடர்ந்து கொண்டே இருக்கின்ற தொடர்பு, இந்தத் தொடர்பு அதனால்தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் வராவிட்டாலும் ஆட்சிச் சக்கரத்தை சுழற்றுகின்ற வாய்ப்பு ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் அந்த வாய்ப்பை தமிழ்நாட்டு மக்கள் எனக்குத் தந்த காலத்திலும் சரி, தராத காலத்திலும் சரி, அந்த நேரங்களில் நான் என்னுடைய கடமை – ஒரு பொறுப்பு கையிலே கொடுக்கப்பட்டாலும், கொடுக்கப்படாவிட்டாலும் தமிழ்நாட்டு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்கின்ற பொறுப்பு எனக்குத் தரப்பட்ட ஒன்று என்ற அந்த உணர்வோடு பணியாற்றிக் கொண்டிருக் கின்றேன்.

ரஜினிகாந்த் அவர்கள் நான் எழுதிய மந்திரிகுமாரி படத்தில் இயக்குனருக்கு வேண்டிய குறிப்புக்களை எல்லாம் கூட எழுதி வைத்தேன் என்பதை இங்கே குறிப்பிட்டார். இதை நம்முடைய கமல் போன்ற நண்பர்களும் சில இடங்களிலே குறிப்பிட்டதாக எனக்கு நினைவு. நான் ஒரு காலத்திலே இயக்குனராகக்கூட ஆக வேண்டும் என்று விரும்பாவிட்டாலும்கூட பட அதிபர்கள் விரும்பி அதற்கான வாய்ப்பை எனக்கு நான் விரும்புகின்ற அளவிற்கு தொகை தந்து வழங்குவதற்குத் தயாராக இருந்தபோதும் கூட நல்ல வேளையாக நான் அதை ஏற்றுக்கொள்ளாமல் பொதுவாழ்க்கையிலே நான் முழு நேரமும் என்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தப் பணியிலே தொடர்ந்து இருக்கிறேன்.






நம்முடைய செய்தித்துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி இங்கே பேசும்போது, கலை கலைக்காக என்ற உரையை மாற்றி கலை மக்களுக்காக, நல்ல காரியங்களுக்காக சில கொள்கைகளைப் பரப்புவதற்காக என்ற நிலையை திராவிட இயக்கம் தான் உருவாக்கிற்று என்று சொன்னார். இது அப்படியே பதிவாகுமேயானால், நான் இதை மறுக்கவில்லை – மறுக்க முடியாது. ஏனென்றால் அதிலே உண்மையும் இருக்கிறது. ஆனால் அரசியல் கருத்துக்களை, நாட்டுக்குத் தேவையான கருத்துக்களை, மக்களுக்குத் தேவையான கருத்துக்களை, சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை, திராவிட இயக்கத்திற்கு முன்பு கூட கலை உலகத்திலே பலர் புகுத்தி இருக்கிறார்கள்.

பதிபக்தி என்ற ஒரு படமானாலும், தேச பக்தி என்ற ஒரு படமானாலும், திரு.கே.பி.கேசவன் என்ற பழம்பெரும் நடிகர் அந்தக் காலத்திலே எடுத்த படங்கள் நாட்டு பக்தியை, தேச பக்தியை நாட்டு விடுதலைக்காக போராட வேண்டும் என்கின்ற உணர்ச்சியை மக்களிடத்திலே ஏற்படுத்துவதற்கு பயன்பட்ட திரைப்படங்கள் ஆகும்.

**இதிகாசம் – வரலாறு**

கல்கி அவர்கள் எழுதிய பாபநாசம் சிவன் அவர்கள் நடித்த "தியாக பூமி" என்பது கூட வழக்கமான கதையல்ல. வழக்கமாக சொல்லப்படுகின்ற படம் அல்ல. அதுகூட







கொஞ்சம் திசை திரும்பி, தேசத்திற்காக, சமுதாயத்திற்காக, மக்களுக்காக பாடுபட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்திய படம். எனவே பூரண உரிமையை இந்தப் பிரச்சினையிலே நானோ அல்லது என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களோ பெற்று அதற்கான உரிமையைக் கொண்டாடுவதைவிட எங்களுக்கு முன்பே எங்களுக்கு வழிகாட்டியவர்கள் காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தார்கள்; அவர்கள் நாட்டுப்பற்றை படங்களின் மூலமாக வளர்த்தார்கள் என்ற உண்மையை நாம் மறந்துவிட முடியாது. ஏனென்றால் வரலாறு உண்மையை மறைக்கப் பயன்படுமேயானால், சேது சமுத்திரத் திட்டமாக ஆகிவிடும்.

இதிகாசத்தையும் வரலாற்றையும் தனித் தனியாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். இதிகாசம் வேறு, வரலாறு வேறு, இதிகாசம் என்பது நாமாக செய்து கொள்கின்ற கற்பனை–சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் – அதாவது மூதறிஞர் இராஜாஜி அவர்கள், இந்திய இதிகாசங்களை அவருடைய நடையிலே எழுதுவதில் வல்லவர். அவருக்கு இராஜரிஷி என்ற பெயரும் உண்டு. மூதறிஞர் என்றும் நாம் அவரை அழைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட இராஜாஜி அவர்கள் "சக்கரவர்த்தி திருமகன்" என்ற ஒரு தொடர் ஓவியத்தை பத்திரிகையிலே எழுதினார். அது புத்தகமாக வந்திருக்கிறது. இன்றைக்கும் அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தால் அவர் அதில் எழுதிய முன்னுரையிலே என்ன





குறிப்பிட்டிருக்கிறார் என்றால்; "இராமாயணம் என்பது ஒரு இதிகாசமே தவிர சரித்திரம் அல்ல. நான் இதிலே அடையாளம் காட்டுகின்ற இராமன் கடவுள் அவதாரம் அல்ல. இராமன் மனிதன்தான், ஒரு இராஜகுமாரன்தான், நல்லவன், நல்ல காரியங்களைச் செய்தவன், அவனிடத்திலே தெய்வீக அம்சம் என்று சொல்லப்படுகின்ற சில விஷயங்கள் இருந்தாலும்கூட இராமன் செய்ததை கடவுளின் வேலை என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்று நான் அல்ல, நம்முடைய அன்புக்கும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மூதறிஞர் ராஜாஜி அவர்களே எழுதியிருக்கிறார். புத்தகம் இருக்கிறது, தம்பி ரஜினி அவர்களுக்கு சந்தேகம் தேவையில்லை, இருக்காது. நான் சொன்னால் அவர் நம்புவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஒரு வேளை நம்பாவிட்டால் காலையிலே அந்தப் புத்தகத்தை – பக்கத்திலேதான் வீடு – கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். எழுதியதைப் பார்க்கலாம்.

**அறிவியக்கம்**

எப்படி பெரியாருடைய கருத்துக்கள் முதலிலே சந்தேகத்திற்கு உரியவைகளாக இருந்து இன்றைய தினம் ரஜினி அவர்களாலே ஏற்றுக் கொள்ளப்பட்டு பரிமாறப்பட்ட பத்துப் பண்டங்களிலே எனக்கு பிடித்த பண்டங்களை நான் சுவைப்பேன், சுவைக்கிறேன் என்று குறிப்பிட்டாரோ, அதைப்போல ராஜாஜி அவர்கள் படைத்த பண்டங்களில் எங்களுக்குப் பிடித்த பண்டம் இராமன் ஒரு ராஜகுமாரனே தவிர, அவதாரப் புருஷன் அல்ல என்று இராஜாஜி குறிப்பிட்டதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? வேண்டாமா? நாங்கள் அனைவரும் இந்த இயக்கத்தை ஒரு அறிவியக்கமாக நீண்ட காலமாக வளர்த்து ஆளாக்கி இன்றைக்கு பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறோம் சமுதாயத் துறையிலே என்றால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட ஒரு இயக்கத்தின் சார்பாக இன்னும் கூட சொல்கிறேன். அவர்கள் குறிப்பிட்டார்கள், சேது சமுத்திரத் திட்டப் பிரச்சினையிலே இந்தியாவிலே இருக்கின்ற தலைவர்களோடு அமர்ந்து பேசி ஒரு நல்ல முடிவிற்கு வாருங்கள் என்று கேட்டார்கள். இது உள்ளபடியே சந்தேகம் எழுந்தால் போக்கலாம். யார் இதை முதன்முதலாக ஆரம்பித்தார்கள் என்பதை என்னுடைய அருமைத் தம்பி ரஜினிகாந்த் அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அவருக்கும் தெரியும்.

**தலைசிறந்த திட்டம்**

ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளைக்காரன் காலத்தில் அவர்களுடைய ஆட்சி நடைபெற்றபோது இந்தத் திட்டத்திற்கான கருத்துரை வழங்கப்பட்டு வெள்ளைக்காரன் காலத்தினுடைய பொறியாளர்கள் எல்லாம் விஞ்ஞானிகள் எல்லாம் அதை ஆராய்ந்து அப்பொழுது எட்டுக்கோடி, பத்துக்கோடி என்ற அளவிலே இந்தத் திட்டம் நிறைவேறும் என்ற அளவிலே சிந்திக்கப்பட்டு ஏதோ சில தடங்கல்கள் ஏற்பட்ட காரணத்தால் அது நின்றுபோய் 1963–ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக தமிழகத்திலே இருந்தபோது பண்டித ஜவகர்லால் நேரு பிரதமர் என்ற முறையிலே அதைச் சிந்தித்து பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துச் சொல்லி அது மத்தியிலே ஆராயப்பட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பிறகு என்ன காரணத்தினாலோ அது நின்று விட்டது.

அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967–ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் ஒரு முதலமைச்சர் என்ற முறையிலே அவரே அதை ஒரு கடிதம் எழுதி டெல்லிக்குத் தெரிவிக்கலாம் என்று விரும்பினாலும்கூட "எழுச்சி நாள்" என்ற ஒரு நாளை குறிப்பிட்டு அந்த எழுச்சி நாளில் சேது சமுத்திரத் திட்டம் தமிழர்களுக்குத் தேவை என்ற உணர்வை உருவாக்கி தமிழகம் முழுவதும் எழுச்சிநாள் கொண்டாடப்பட்டு அதற்கு அடுத்து பேரறிஞர் அண்ணா மறைவிற்குப் பிறகு







தி.மு.கழகம் தேர்தலிலே நின்றபோதும் சரி, அ.தி.மு.க தேர்தலிலே நின்றபோதும் சரி, கம்யூனிஸ்ட்டுகள் தேர்தலில் நின்றபோதும் சரி, அவர்கள் வெளியிட்ட ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் தலைசிறந்த திட்டம் சேது சமுத்திரத் திட்டம், அதை எங்களுக்கு உருவாக்கித் தர வேண்டுமென்று மத்திய சர்க்காரை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறோம். அதன் தொடர்ச்சி தான் இது.

இப்படி கேட்டுக் கொண்டு வந்த போது யாரும் இதற்கு தெய்வீக முலாம் பூசவில்லை அல்லது மத வர்ணம் யாரும் இதற்கு அளிக்கவில்லை. இது ஒரு திட்டம். எப்படி பாம்பன் கால்வாய், எப்படி தேம்ஸ் நதி என்றெல்லாம் திட்டங்கள் இருக்கிறதோ, எப்படி பக்ரா நங்கல் திட்டம் இருக்கிறதோ அதைப் போலத் தான் இந்தத் திட்டம். இது ஒரு வழிப்பாதை – ஒரு பாலம் அல்ல – அந்த வழியை பொருளாதாரத்திலே சிக்கனத்தைக் கடைப் பிடிக்கவும், தமிழகம் வளம் பெறவும், வியாபார ரீதியாக உலகத்தோடு பல தொடர்புகளைக் கொள்ளவும் நம்முடைய கடல் வழி சுருக்கமாக, குறுகிய காலத்திலே போய்ச் சேரக் கூடியதாக அமைய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை யோசித்தோம்.



இதை இன்னும் சொல்லப்போனால், அறிஞர் அண்ணா அவர்களின் அந்த முயற்சிக்குப் பிறகு இடைக்காலத்திலே நாங்கள் கடிதம் மூலமாக நான் முதல் அமைச்சராக இருந்த போது கடிதம் மூலமாக இதை வலியுறுத்தி இருக்கிறேன். டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே வலியுறுத்தியிருக்கிறேன். அதற்குப் பிறகு திரு.வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்த போது, அவர்தான் இந்தத் திட்டத்தை முதன் முதலாக நீண்ட நாட்களுக்குப் பிறகு அறிவித்து, அதை சென்னையிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில், அண்ணா பிறந்த நாளில் வாஜ்பாய் அவர்களே இதை அறிவித்து, அந்தத் திட்டம் விரைவிலே நிறைவேற்றப்படும் என்று அவரும் சொன்னார்.

**ரூ.2,400 கோடி மதிப்பில் திட்டம்**

அதற்குப் பிறகு பா.ஜ.க. வைச் சேர்ந்த டெல்லியிலே இருந்த அமைச்சர்கள் எல்லாம் – என்னுடைய தம்பி திருநாவுக்கரசர் உட்பட அந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டு சேது சமுத்திரத் திட்டத்திற்கான வழிமுறைகள் எல்லாம் செய்யப்பட்டன. இடையிலே வந்த தேர்தலில் பா.ஜ.க. ஆட்சிக்கு வர இயலவில்லை. நம்முடைய சோனியா காந்தி அவர்கள் தலைமையில் ஒரு வழி காட்டுதலோடு திரு.மன்மோகன் சிங் அவர்களின் ஆட்சி இங்கே நடைபெறுகிறது.

நாம் தொடர்ந்து கேட்ட நிலையில் அதைக் கேட்டோம். அவர்களும் அதை ஆலோசித்து, அதற்கான அனுமதியைத் தந்து, நம்முடைய தம்பி டி.ஆர். பாலு அவர்களிடம் அந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையிலே பொறுப்பை ஒப்படைத்து ஏறத்தாழ இரண்டாயிரத்து நானூறு கோடி ரூபாய் மதிப்பில் திட்டத்தை அறிவித்து முக்கால்



பகுதி பணி முடிந்துவிட்டது. இந்த நிலையில் தம்பி ரஜினிக்கு நன்றாகத் தெரியும். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். பத்திரிகை படிப்பவர்களுக்கெல்லாம் தெரியும். வரலாற்றைப் படிப்பவர்களுக்கும் தெரியும். இந்திய அரசின் திட்டங்களைப் பற்றி தெரிந்து கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் தெரியும். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும் என்ற நிலையிலே இந்த ராமர் பிரச்சினையை யார் முதன் முதலாக எழுப்பினார்கள் என்றால், நாம் அல்ல. இது ராமர் கட்டிய பாலத்தை இடிக்கிறார்கள் என்று சொல்லி, இந்தத் திட்டத்தையே குலைப்பதற்காக சில பேர் இந்தத் திட்டம் நமக்கு வரக் கூடாது என்பதற்காக, தமிழ்நாட்டிற்கு வரக் கூடாது, வந்தால் தமிழ்நாடு வளர்ந்து விடும், பொருளாதாரத் துறையில் எல்லாத் துறையிலும் வளர்ந்து விடும், தமிழ்நாடு என்ற மாநிலம் வளர்ந்தால், மற்ற மாநிலங்கள் எல்லாம் குறிப்பாக வட மாநிலங்களுக்கு இதனால் ஏதோ ஆபத்து ஏற்படும் என்று தவறாகக் கருதி, இதைக் கெடுப்பதற்காக சில யோசனைகளைக் செய்து இதற்கு ராமரைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். ராமரிடத்திலே எங்களுக்கு எந்தவிதமான விரோதமும் கிடையாது. ராமருக்கும் எங்களுக்கும் இடையில் தனிப்பட்ட விரோதம் கிடையாது. ராமரை நாங்கள் வெறுப்பவர்கள் அல்ல. எந்த அவதார புருஷர்களாக இருந்தாலும், அவர்கள் அவதார புருஷர்களாக இருந்து நன்மைகளைச் செய்திருந்தால், அந்த நன்மைகளைப் பாராட்டக் கூடியவர்கள்தான் நாங்கள். ராமர் என்பதற்காக ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று கூற மாட்டோம். கிருஷ்ணா என்பதற்காக கிருஷ்ணா நதி நீரை வேண்டாமென்று சொல்லி விட்டோமா? கிருஷ்ணா நதிநீர் எங்களுக்கு வேண்டும், அந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடியுங்கள் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகனும், தம்பி மு.க.ஸ்டாலினும் தூதே போய் விட்டு வந்தார்கள். ஆந்திராவிலே இருக்கின்ற சாய்பாபா அவர்களிடத்தில் சென்று கிருஷ்ணா நதி திட்டத்தை நிறைவேற்றிக் கொடுங்கள் என்று சொல்லி, இங்கேயுள்ள அமைச்சர்களை அங்கே போகச் சொல்லி, அவரும் நிறைவேற்றுவதாகச் சொல்லி என்னுடைய இல்லத்திற்கே வந்து நிறைவேற்றித் தருகிறேன், பயப்படாதீர்கள் என்று கூறி விட்டுப்போய் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால், நான் அவரிடத்திலே கிருஷ்ணா என்று திட்டத்தின் பெயர் இருக்கக் கூடாது என்று சொன்னேனா? நீங்கள் கிருஷ்ணா என்று மாத்திரம் அல்ல, ராமகிருஷ்ணா திட்டம் என்றே வைத்துக் கொள்ளுங்கள், ராமனையும் சேர்த்து.

இப்போது என்ன சொன்னேன்? என்ன சொல்கிறேன்? சேது சமுத்திரத் திட்டம் என்பதில் சேது என்கின்ற பெயர் உங்களுக்குப் பிடிக்காவிட்டால், சேது மன்னர்களின் பெயரால்



அமைந்த ஒரு பகுதி அது, சேது மன்னர்கள் ஆண்ட பகுதி அது, நம்முடைய கமல் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அவருடைய பரமக்குடி எல்லாம் அந்தச் சேது பூமியைச் சேர்ந்த இடம் ஆகும். அப்படிப்பட்ட சேது பூமிக்கு மன்னர்களாக இருந்தவர்கள் பெயரால்தான் சேது சமுத்திரம் என்ற அந்தப் பெயர் உருவாயிற்று. அந்தச் சேது திட்டத்தைதான் நாம் நிறைவேற்ற





வேண்டுமென்று சொல்கிறாமே அல்லாமல், அந்தப் பெயர் வைக்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆயிரம் வருடமோ, இரண்டாயிரம் வருடமோ, வெள்ளைக்காரன் காலத்திலோ அல்லது அதற்குப் பிறகோ அதற்கு ராமர் பாலம் என்று பெயர் இருந்திருக்குமேயானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன் அந்தத் திட்டத்தை அந்தப் பெயரால் நிறைவேற்றுங்கள் என்று சொல்லியிருப்பேனே அல்லாமல், அந்தப் பெயர் வேண்டாம் என்று சொல்கின்ற முட்டாள் அல்ல நான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக எங்களுக்கு சேது சமுத்திரத் திட்டம் தேவை. அந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திற்கு வளம் தேவை. வாழ்வு தேவை. தமிழர்கள் வெளி நாட்டோடு தொடர்பு கொள்ள வசதிகள் வாய்ப்புகள் தேவை. அதற்காகத் தான் அந்தத் திட்டத்தை நாம் கோருகிறோம். அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு எனக்கு ஒரு யோசனையை தம்பி ரஜினி சொன்னார். என்னை விட அதிகமாக வடநாட்டிலே சுற்றுப் பயணம் செய்யக் கூடிய வாய்ப்பும் வசதியும் படைத்தவர் அவர். அவர் நினைத்தால் இமயமலை வரை சென்று சாமியார்களை யெல்லாம் சந்திக்கக் கூடிய வாய்ப்பு அவருக்கு உண்டு. எனவே நீங்கள் அங்கே செல்லும் போது இதைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லுங்கள். "கருணாநிதி நாத்திகன்தான், அது வேறு விஷயம். ஆனால் கருணாநிதி ராமர் என்ற அந்தப் பெயரை வெறுப்பவனல்ல. என்னுடைய தலைவர் பெரியாருக்கு பெயரே ராமசாமி. ஆகவே ராமர் என்ற பெயரை வெறுப்பவனல்ல" என்று இந்த உண்மையை ரஜினி போன்றவர்கள் அவர்களுடைய செல்வாக்கோடு அங்குள்ள சாமியார்களுக் கெல்லாம் சொல்லி, அந்தச் சாமியார்கள் திருந்தினால் நாடு திருந்தும் என்பதை இந்த விழாவினுடைய செய்தியாக நான் தம்பி ரஜினி அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் எனக்கொரு வேண்டுகோளை விடுத்தார்கள். நான் அவர்களுக்கு இந்த வேண்டுகோள் விடுக்கிறேன். இது அண்ணன், தம்பிக்குள் ஒரு கருத்துப் பரிமாற்றம். இரண்டு பேரும் சேர்த்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருக்கிறோம். நான் பரிமாறியதை அவர் மனதிலே இருத்தி, அவரும் சேர்ந்து இந்தத் திட்டத்திற்கு உறுதுணையாக இதனால் ஏற்படக் கூடிய நன்மைகளை – இதிலே மதம் குறுக்கிடக்கூடாது, சாதி குறுக்கிடக் கூடாது, இதிலே கடவுள் தன்மை குறுக்கிடக் கூடாது. இதில் இதிகாசம் குறுக்கிடக்கூடாது. இதிலே குறுக்கிட வேண்டியதெல்லாம் நம்முடைய நல்வாழ்வு, எதிர்காலம், வருங்காலம் என்பதைப் பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும் என்ற அந்த உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறக் கூடிய அந்தப் பொறுப்பை – தம்பி ரஜினி ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே நான் இப்போது இங்கே அவருக்கு விருது மட்டும் வழங்கவில்லை, இந்த வேண்டுகோளையும் வழங்கி விடைபெறுகிறேன்.

* * *

# ஏழை - எளிய மக்களுக்கு
# வீட்டுமனைப் பட்டாக்கள்
# பல மடங்கு அதிகம் வழங்கிய ஆட்சி



**புதுக்கோட்டையில் 28.09.2007 அன்று ஐந்தாவது கட்டமாக இலவசமாக நிலம் மற்றும் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**

இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்த மகத்தான விழா மக்கள் பணியாற்றுகின்ற நம்முடைய பெரும் பணியில் ஒரு பணியாக நாமெல்லாம் கலந்து கொண்டு மக்களைச் சந்தித்து அவர்களுடைய தேவையை உணர்ந்து அவற்றை வழங்குகின்ற நிகழ்ச்சியாகும். இந்த நேரத்தில் புதுக்கோட்டையில் வெயில் ஒரு புறம் கொளுத்தினாலுங்கூட, பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் பந்தல் வழிய வழிய அமர்ந்திருக்கின்ற காட்சியினைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன், பாராட்டுகின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்கள், அவர்களுக்குத் துணையாக தோழமைக் கட்சிகளின் நண்பர்கள், மேலும்





துணையாக ஆளும் கட்சியின் நண்பர்கள் இவர்களெல்லாம் ஒருங்கிணைந்து ஒரு இரண்டு நாள் அல்லது மூன்று நாள் அவகாசத்தில் மாநில மாநாடு போன்ற விழாவை இங்கே நடத்தியிருக்கின்ற இந்த மாண்பினைக் கண்டு நான் உள்ளபடியே பெருமையடைகிறேன். ஒரு புறத்திலே பொறாமையும் அடைகிறேன். பொறாமை அடைவதற்குக் காரணம் இவ்வளவு ஆற்றலையும், இவ்வளவு நேர்த்தியாக காரியம் ஆற்றுகின்ற திறமையையும் பெற்றிருக்கின்ற நீங்கள் இன்னமும் நல்ல முறையிலே பணியாற்றலாமே. அப்படி பணியாற்றக்கூடிய உங்களிடத்திலே நான் இதை எதிர்பார்ப்பது தவறல்லவே என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

மூன்று இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவது என்று கடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டில் தலைமைச் செயலகத்தில் ஒரு முடிவெடுத்து அதை அறிவித்த போது தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் குறிப்பாக நம்முடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இன்னும் சிறப்பாக அந்த மனைகள் வழங்க வேண்டும் என்பதற்காகப் பாடு பட்டுக் கொண்டிருக்கின்ற இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் வாழ்த்தினார்கள், பாராட்டினார்கள். உடனடியாக இந்த 3 இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். அதுமாத்திரமல்ல, சொன்னபடி செய்வோமோ இல்லையோ என்ற சந்தேகமும் அவர்களுக்கு ஏற்பட்டது.

நம்முடைய நண்பர் இராஜசேகரனுக்கு வேண்டுமானால் ஏற்படாமல் இருக்கலாம். வேறு சிலருக்கு ஏற்பட்ட காரணத்தால் அதை ஞாபகப்படுத்தும் விதத்திலே பல ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்தி நம்முடைய கவனத்தையும் கவர்ந்தார்கள். அத்தகைய தூண்டுதலான நிகழ்வுகளை நடத்தியதன் காரணமாக நம்முடைய அரசும், அரசுத் துறையிலே உள்ள அதிகாரிகளும், என்னுடைய வேண்டுகோளின்படி மேலும் மேலும் முயன்று, அயராது பாடுபட்டு இப்பொழுது மூன்று இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களின் எண்ணிக்கையை நெருங்குகின்ற அளவிற்கு தங்களுடைய பணியை வெற்றிகரமாக ஆற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

### இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

பொதுவாக தமிழகத்திலே கழக அரசு அமைகின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும், வீடில்லாத ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டத்திற்கு தனி உரிமை அளிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 1967, 1975ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அண்ணா தலைமையிலே அமைந்து நடைபெற்ற அந்த காலகட்டத்தில், அதாவது கழக அரசின் பணியினால் 5 இலட்சத்து 3 ஆயிரத்து 697 பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் பிறகு 1989 – 1990 ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் 4 இலட்சத்து 78 ஆயிரத்து 95 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளன.

1996 – 1997 ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 10 ஆயிரம் ஏழைகளுக்கு இந்த இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1997–1998 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 50 ஆயிரத்து 800 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1998–1999 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 27 ஆயிரத்து 416 ஏழை மக்களுக்கு இந்த இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2000–2001ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 63 ஆயிரத்து 829 ஏழைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1996–2001ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகளில் மொத்தம் 9 இலட்சத்து 50 ஆயிரத்து 400 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதை நான் சொல்வதற்குக் காரணம், இவற்றை நீங்கள் கணக்கிலே வைத்துக் கொண்டு, ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 2001 – 2006 இந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 60 ஆயிரம் தான்.

நான் இங்கு எடுத்துச்சொன்ன அந்தக் கணக்கையும், இந்தக் கணக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தி.மு.க. ஆட்சியிலேதான் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் அ.தி.மு.க. ஆட்சியை விட பலமடங்கு அதிமாக வழங்கப்பட்டிருக்கின்ற உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

இது ஏதோ புள்ளி விவரங்களைச் சொல்லி அது பெரிதா, இது பெரிதா, அது பெருமையுடையதா – அது சிறப்புடையதா ? இது பெருமையுடையதா – இது சிறப்புடையதா – என்ற ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக் காட்டுவதற்காக நான் இங்கே வரவில்லை.

புதுக்கோட்டைக்கு நான் வருவது என்பது இது முதல் தடவையல்ல. புதுக்கோட்டைக்கு நான் என்னுடைய இளமைக் காலத்திலிருந்து எத்தனை முறை வந்திருக்கிறேன் என்பதைச் சொல்லக்கூடிய அளவில் புதுக்கோட்டை வட்டாரத்திலே மிகச் சிலர் தான் இன்றைக்கு இருக்க முடியும். அத்தனை முறை இந்த மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். புதுக்கோட்டை நகரத்திலே பேசியிருக்கிறேன். யார் யார் இங்கு வாழ்ந்தார்கள், யார் யார் இந்த இயக்கத்தைக் கட்டி காத்தார்கள், யார் யார் இங்கு மக்கள் தொண்டர்களாகத் திகழ்ந்தார்கள், யார் யார் எனக்கு நண்பர்களாக விளங்கினார்கள், யார் யார் மூலம் இந்த வட்டாரத்திலே என்னுடைய கொள்கைகளை எடுத்துச் சொல்ல அவர்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டேன். அவர்கள் எப்படி என்னை பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதையெல்லாம் நான் விளக்கிச் சொல்ல நேரம் போதாது.

ஆனால், முதல் முதலாக நான் புதுக்கோட்டைக்கு வந்தவுடன் ஏதோ இன்னொரு கோட்டையைப் பிடிப்பதற்காக வந்தேன் என்று சொல்லிவிட்டு உங்களை சந்திக்கவில்லை. நான் புதுக்கோட்டை வருவதாகச் சொல்வதற்கு முன்பு, பல கோட்டைகளுக்குச் சென்று வந்தவன்.

பல கோட்டைகளில் ஒன்று; பாளையங்கோட்டை, இப்படி பல கோட்டைகளுக்கு, எங்கெங்கே சித்திரவதை செய்யப்பட வேண்டுமோ, அந்தக் கோட்டைகளுக்கெல்லாம் அழைத்துச் செல்லப்பட்டவன். இப்படி கோட்டைகள் பலவற்றைக் கடந்து, காராக்கிரகங்களைச் சந்தித்து, தியாகக்குண்டங்களைத் தாண்டி அதற்குப் பிறகுதான் புதுக்கோட்டைக்கு நான் அமைச்சராக வந்தேன். இப்பொழுது 5 ஆவது முறையாக முதலமைச்சராக வந்திருக்கிறேன் என்றால், நான் கடந்து வந்த பாதை, என்னைப் பற்றி மாத்திரம் நினைக்காமல், புதுக்கோட்டை மாவட்ட மக்களையெல்லாம் எப்படி மன நிறைவு கொள்ளச் செய்தேன், அவர்களுடைய தேவைகளை எந்த அளவிற்கு நிறைவு செய்தேன் என்பதை நம்முடைய தோழமைக் கட்சி நண்பர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினரும் இங்கே எடுத்து சொல்லியிருக்கின்றார்கள்.

### சேது சமுத்திரத் திட்டம்

இந்த வட்டாரத்திலே தி.மு.க. ஆட்சியின் காரணமாக என்னென்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன, என்னென்ன சாதனைகள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன என்பதையெல்லாம் எனக்கு அவர்கள் நினைவூட்டுகின்ற அளவிற்கு இங்கே பேசிவிட்டு, இன்னமும் சிலவற்றை கோரிக்கைகளாக வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளில் ஒன்றுதான் கோதையாறு திட்டம் – சுமார் 300 கோடி ரூபாய் அளவில் திட்டத்தை அறிவித்தீர்களே எப்போது கொண்டு வருவீர்கள் என்று அவர் கேட்டார். நான் அறிவித்ததை மறுபடியும் நிறைவேற்றாமல் இருக்கவில்லை என்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது.



அறிவித்தவைகள், அறிவிக்கப்பட்ட அடுத்த ஆண்டிலே நிறைவேறாவிட்டாலும் கூட 5 ஆண்டு காலத்திற்குள்ளே அவைகள் நிறைவேறின என்பதற்கான சான்றுகள் நூற்றுக்கணக்கிலே உண்டு. அதிலே ஒன்றுதான் இங்கே நம்முடைய தம்பி எல்.கணேசன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல சேது சமுத்திரத் திட்டம்.

சேது சமுத்திரத் திட்டத்தை நூறாண்டு காலமாகத் தமிழர்கள் கேட்டு வருகிறார்கள் தமிழ்நாட்டு மக்கள் கேட்டு வருகின்றனர். அந்தத் திட்டம் நிறைவேற வேண்டும் என்பதற்காக



ஏற்கெனவே இருந்த அரசுகள் எல்லாம் முயற்சித்தன. ஆனால் நிறைவேறவில்லை. நிறைவேற முடியாமல் பல தடங்கல்கள் ஏற்பட்டன. இப்பொழுது அதை நிறைவேற்றக்கூடிய நல்ல எண்ணம் கொண்ட ஒரு அரசு மத்தியிலே அமைந்தது. நாமும் அந்த அரசுக்குத் தோழமைக் கட்சியாக அமைந்தோம். அப்படி அமைந்த காரணத்தால் திருமதி. சோனியாகாந்தி அவர்களைச் சந்தித்து, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்து, வாதாடி அவர்களிடத்திலே வலியுறுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எடுத்துச் சொல்லி அவர்களும் அதற்கான அனுமதியை அளித்தார்கள்.

இந்த அனுமதியை அளிப்பதற்கு முன்பு, ஏற்கெனவே மத்தியிலே ஆட்சியிலே இருந்த நம்முடைய அன்புக்குரிய நண்பர், பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்கள் அதற்கான அனுமதியை அளித்தார். சேது சமுத்திரத் திட்டத்திற்கான அனுமதியை முதலில் அளித்ததே வாஜ்பாய்தான்.

### செம்மொழித் தகுதி

அனுமதியை அளித்து இந்த வழியாகத்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப்பட வேண்டும். இந்த முறையிலேதான் நிறைவேற்றப்பட வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுத்ததும் வாஜ்பாய்தான். பா.ஜ.க. ஆட்சியிலேதான் இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு அதற்கான வழிமுறைகளெல்லாம் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் நடைபெற்ற தேர்தலில் பா.ஜ.க. மத்தியிலே ஆட்சிக்கு வரமுடியாமல் தோல்வியுற்று, மன்மோகன் சிங் அவர்களுடைய தலைமையிலே நம்முடைய கூட்டணி ஆட்சி அங்கே அமைந்தது. அமைந்தவுடன் நான் அந்த ஆட்சிக்கு நினைவூட்டியது இரண்டு; ஒன்று – உணர்வுபூர்வமானது. மற்றொன்று, நம்முடைய வாழ்வு பூர்வமானது. உணர்வு பூர்வமானதுதான், எங்களுடைய மொழிக்கு "செம்மொழி" என்ற அந்தத் தகுதியைத் தரவேண்டும் என்பது. ஏனென்றால் ஹீப்ரு, லத்தீன் போன்ற மொழிகளெல்லாம் உலகத்திலே செம்மொழி அந்தஸ்தைப் பெற்றிருக்கும்போது, எல்லா வளமும் பொருந்திய இலக்கிய நயம் பொருந்திய, இலக்கண வளம் பொருந்திய தமிழுக்குச் செம்மொழி என்ற அந்தஸ்து இல்லை, தகுதியில்லை. அது வேண்டும் என்று வலியுறுத்தினோம். அதை நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வலியுறுத்தி பாடுபட்டவர் யார் என்பதும், அவருடைய பெயர் சூரிய நாராயண சாஸ்திரி என்பது தெரிந்திருந்தும் கூட, சாஸ்திரி சொன்னால் என்ன, சர்மா

சொன்னால் என்ன – தமிழ் செம்மொழி ஆகவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, நாங்கள் தொடர்ந்து இதைச் சொல்லுகிறோம் என்று சொல்லி, அந்தக் கருத்துக்கு வலுவேற்றி இப்பொழுது அதைச் செம்மொழி என்று அறிவித்தது மாத்திரமல்ல, அதற்கான ஒரு செயலாற்றுக் குழுவையும் சென்னையிலே அமைத்து அதனுடைய தொடக்க விழாவிற்கு மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் வந்தார் என்பதும் நம்முடைய எண்ணம் எந்த வகையிலே ஈடேறியது என்பதும் நீங்கள் அறிந்த ஒன்றாகும்.

அதைப்போலத்தான் நம்முடைய வாழ்வாதாரத்திற்கு, நம்முடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு, ஒரு காலத்திலே திராவிடத்தினுடைய வணிகத் தொடர்பும் உலகெல்லாம் பரவியிருந்தது. பெருமையோடு சொல்லிக்கொள்வோம். நம்முடைய தமிழ்நாட்டு முத்துக்களை "கிளியோபாட்ரா அவள் குடிக்கின்ற சாராயத்தில் போட்டு கலக்கிக் குடித்தாள்" என்றெல்லாம் நம்முடைய முத்து வியாபாரத்தில் உள்ள பெருமையை அந்தக் காலத்திலேயே நாம் பேசியிருக்கின்றோம். அப்படிப்பட்ட உலகத் தொடர்புக்கு வழிவகுக்கக்கூடிய வாணிப வியாபாரத்திலே முன்னேற்றம், பொருளாதாரத்திலே வலிவு இவ்வளவும் உண்டாக்கக்கூடிய ஒரு திட்டம்தான் சேது சமுத்திரத் திட்டம். தமிழன் என்றைக்கும் தலைதாழாமல் பிறரை எதிர்பார்க்காமல் வாழ வைக்கின்ற திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் ஏறத்தாழ 2,000 கோடி ரூபாய் அளவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு ஒத்துக் கொண்டு அதற்கான கால்கோள்விழா மதுரை மாநகரத்திலே நடைபெற்றது. சோனியா காந்தி அவர்கள் வந்திருந்தார்கள், மன்மோகன் சிங் வந்திருந்தார். தோழமைக் கட்சிகளின் தலைவர்களெல்லாம் நான் உட்பட அத்தனை பேரும் கலந்துகொண்ட பெருவிழா, திருவிழாவாக நடைபெற்றது. அதற்கு பிறகு அந்த முயற்சி மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலு அவர்கள் மூலமாகத் தொடர்ந்து, அது முடியும் தருவாயிலே, விரைவிலே அது முடியப்போகிறது என்று எல்லோரும் முகமலர்ந்திருக்கின்ற நேரத்தில் திடீரென்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று சிலர் கொடி பிடிக்கிறார்கள். தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டு அரசியல் எந்த அளவிற்கு தமிழன் தன்னையே அடமானம் வைத்துவிட்டு தன்னையே பலிகொடுத்து விட்டு, தமிழ்ச் சமுதாயத்தையே காவு கொடுத்துவிட்டு நடத்துவதற்குத் தயாராக இருக்கின்றான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற அரசியலா? அல்லவா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

**எழுச்சி நாள்**

சேது சமுத்திரத் திட்டத்தை அறிஞர் அண்ணா தொடங்கினார். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற குரலை முதலில் தொடங்கியவர் அறிஞர் அண்ணா. எப்போது? 1967ல் அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகம் முழுவதும் "எழுச்சி நாள்" கொண்டாடினார்– சேது சமுத்திரத் திட்டம், நெய்வேலி நிலக்கரி இரண்டாவது சுரங்கம், சேலம் இரும்புத் தொழிற்சாலை இவைகளையெல்லாம் இணைத்து தமிழ்நாடு முழுவதும் "எழுச்சி நாள்" கொண்டாடியவர் முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள். முதலமைச்சர், மத்திய அமைச்சரைப் பார்த்து வலியுறுத்தி கோரிக்கை வைக்கலாமா, மக்களிடத்திலே போய் இதைப் பிரச் சாரம் செய்யலாமா, முதலமைச்சராக இருப்பவர் தன்னுடைய மாநிலத்திற்கு வேண்டியவைகளைப் போராடி பெறலாமா என்றெல்லாம் கேட்கிறார்களே அவர்களுக்குத் தருகின்ற பதில்தான், அன்றைக்கு முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த அண்ணா அவர்கள். பொறுப்பேற்ற 3 மாத காலத்திற்கெல்லாம் தமிழகத்திற்கு இன்னின்ன வளமான திட்டங்கள் தேவை என்று கொண்டாடிய நாள்தான் "எழுச்சி நாள்" என்பதை அவர்கள் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி கொண்டாடப்பட்ட அந்த நாள் உடனடியாக வெற்றிகரமாக அமையாவிட்டாலும் கூட நாளாவட்டத்தில் நாம் வலியுறுத்தி வலியுறுத்தி இறுதியாக அந்தத் திட்டம் நிறைவேறுகின்ற தருவாயில் அப்பொழுது யார் யார் நம்முடைய அண்ணாவோடு சேர்ந்து இந்தத் திட்டம் தேவைதான் என்று சொன்னார்களோ, அவர்களெல்லாம் இந்தத் திட்டத்திற்கு எதிராக இன்றைக்கு அறிக்கை விட்டுக்கொண்டிருப்பதை நீங்கள் காண்கின்றீர்கள்.

நான் அரசியல் அனுபவம் உள்ளவர்களைக் கேட்கிறேன் அல்லது அரசியலை அறிந்து கொள்ள வேண்டுமென்று கருதுகின்ற இளைஞர்களைக் கேட்கின்றேன். படித்த வாலிபர்களைக் கேட்கிறேன். உள்ளபடியே தமிழ்நாட்டின் மீது அன்பும், அக்கறையும், ஆர்வமும் உள்ளவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த தேர்தல் அதற்கு முந்தைய தேர்தல் இந்த இரண்டு தேர்தலிலும் வெளியிடப்பட்ட கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை வாங்கிப் படித்துப் பாருங்கள். தி.மு.க தேர்தல் அறிக்கையானாலும், பா.ம.க.வின் தேர்தல் அறிக்கையானாலும், அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையானாலும் இந்தத் தேர்தல் அறிக்கைகளையெல்லாம் வாங்கி தயவுசெய்து





படித்துப் பாருங்கள். அதில் என்ன இருக்கிறது? சேது சமுத்திரத் திட்டத்தை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்ற வாதாடுவோம், போராடுவோம், வலியுறுத்துவோம், அது நிறைவேறப் பாடுபடுவோம், பணியாற்றுவோம் என்று சொல்லியிருக்கிறோம். நம்மைப் போலவேதான்; அ.தி.மு.க. அந்தக் கட்சியினுடைய தலைமையும் வெளியிட்டிருக்கின்ற தேர்தல் அறிக்கையில் "இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலே உள்ள "ஆடம்ஸ் பிரிட்ஜ்" பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகள் இவற்றையெல்லாம் வெட்டி, அகற்றி, ஆழப்படுத்திவிட்டு கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்".

சொன்னது யார் தெரியுமா? இன்றைக்கு அதை "ராமர் பாலம்" என்று சொல்லி அதைத் தடுக்கின்ற அம்மையார் தான் அன்றைக்கு அவர் கைப்பட எழுதிய தேர்தல் அறிக்கையில் சொல்லுகிறார். இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலே உள்ள "ஆடம்ஸ் பாலம்" பகுதியில் கப்பல் போக்குவரத்திற்கு தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகள் இவைகளையெல்லாம் வெட்டி, அகற்றி, ஆழப்படுத்தி கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம். சொன்னது யார்? அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே ஜெயலலிதா வெளியிட்டிருக்கிறாரா இல்லையா? அதைத்தான் தொடர்ந்து நாம் மாத்திரமல்ல, எல்லாக் கட்சிகளும் சொல்லி வருகின்றார்கள். அவைகளையெல்லாம் அகற்றிவிட்டு அந்த திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் சொல்லி வருகின்றார்கள். சொல்லி வந்திருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் மாத்திரம் இப்பொழுது தங்களுடைய தேர்தல் அறிக்கையையே மறந்துவிட்டு – மன்னிக்க வேண்டும் –அவர்கள் மறந்துவிட வில்லை மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு நாம் கேட்கிறோமாம், மத்திய சர்க்கார் செய்கிறதாம், அதனால் நமக்குப் பெயர் வந்துவிடுமாம், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறியது என்று ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி உலகத்திற்குக் கிடைத்தால், அடுத்து வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றுவிடுவோமாம். "சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிய சோனியா காந்தி அவர்களுக்கு வாக்களியுங்கள்," "சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிய மத்தியிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய வெற்றிக்கு உதவுங்கள்" என்று சொல்லுவோமாம். அதனால் சேது சமுத்திரத் திட்டம் வேண்டாமாம். எவ்வளவு நல்ல எண்ணம் (?) பாருங்கள். எப்படிப்பட்டவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே இந்த மாபெரும் திட்டத்தை நம்முடைய தமிழகமும் குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், சிறப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் தென்னகம் பயன்பெறக்கூடிய திட்டத்தை, போக்குவரத்து சிரமத்தைக் குறைக்கக் கூடிய திட்டத்தை, பொருளாதார வளத்தை மேலும் கொழிக்க வைக்கக்கூடிய திட்டத்தை, வேண்டாம் என்று இன்றைக்குச் சொல்லுவதற்கு காரணம்—அந்தப் பெயரும் புகழும் எங்கே கருணாநிதிக்கு வந்துவிடுமோ, சோனியாகாந்திக்கு வந்துவிடுமோ, மன்மோகன் சிங்கிற்கு வந்துவிடுமோ, இந்தத் தோழமைக் கட்சிகளுக்கெல்லாம் வந்துவிடுமோ என்கின்ற அச்சத்திலேதான் திட்டமே வேண்டாம் என்கின்றார்கள். தேர்தல் அறிக்கையிலே எந்தத் திட்டத்திற்காக வாதாடினார்களோ, எந்தத் திட்டத்திற்காக அவர்கள் முரசு கொட்டினார்களோ, அந்தத் திட்டம் இன்றைக்கு வேண்டாம் என்று சொல்லுகின்ற அளவிற்கு தேவையில்லாமல் ராமரைக் கொண்டுபோய் நிறுத்துகிறார்கள். நீங்கள்தான் பாவம் செய்கிறீர்கள், அந்தப் பாவத்திற்கு துணையாக ஏன் ராமரை இழுக்கிறீர்கள், அவர் பாவம் என்ன செய்தார் உங்களுக்கு, இது ராமர் கட்டிய பாலம், அதனால் இடிக்கக்கூடாது என்கிறார்கள்— யார் சொன்னது ராமர் கட்டிய பாலம் என்று நீங்கள் தேர்தல் அறிக்கையிலே போன தேர்தலிலும், அதற்கு முந்தைய தேர்தலிலும்— அந்தத் தேர்தல் அறிக்கைகளிலே ராமர் பாலம் பகுதியில் சேது சமுத்திரத் திட்டம் வேண்டாம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்களா ?அப்படி குறிப்பிட்டிருந்தால் நாளைக்கே கொண்டு வந்து காட்டுங்கள். நான் அரசியலை விட்டு விலகத் தயாராக இருக்கிறேன்.

நாங்கள் சேது சமுத்திரத் திட்டத்தை அங்கீகரிக்கவில்லை, அனுமதிக்கவில்லை என்று வாஜ்பாய் சொல்லட்டும். நான் அத்வானியிடத்திலே கேட்கவில்லை, ஏனென்றால் நான் வாஜ்பாயை நம்புகிறவன். அவர் யோக்கியர். வாஜ்பாயைப் பொருத்தவரையில் நிதானமான நண்பர், வாஜ்பாயை பொருத்தவரையில் சத்தியசீலர். இன்றைக்கும் அவருக்கும் எனக்கும் சில மன கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கூட, அவருடைய மனிதாபிமானத்தை, அவருடைய பெருந்தன்மையை, அவருடைய அரசியல் நாகரிகத்தை மதிப்பவன். நான் அத்வானி சொல்வதற்காகக் கேட்கமாட்டேன். இது ராமர்தான் கட்டினார் என்று வாஜ்பாய் சொல்லட்டும். நாங்கள் அன்றைக்கு இதை அனுமதித்தபோது, நாங்கள் தெரிந்துதான் அனுமதித்தோம் என்று சொல்கிறாரா, இல்லை தெரியாமல் அனுமதித்துவிட்டோம் என்று வாஜ்பாய் சொல்கிறாரா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே, வேண்டுமென்றே ஒரு நல்ல காரியத்தை மக்களுக்காக, நாட்டுக்காக, நம்முடைய எதிர்கால வளங்களுக்காக செய்யப்படுகின்ற பெரிய திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே அந்தத் திட்டத்தையே அழித்து ஒழிப்பதற்கு எதிர்க்கட்சியிலே உள்ள சிலபேர் ஆண்டு அனுபவித்துவிட்டு இன்று ஆட்சி கைவிட்டு போய்விட்டதே என்று ஆலாய் பறந்துகொண்டு இருக்கிறார்களே அவர்களுக்கு—





துடித்து துவளுகிறார்கள் ஐயோ, பேரும் புகழும் இவர்களுக்கு போய்விடுமே என்று—சேது சமுத்திரத் திட்டம் என்பது யாருக்குப் பெயர் வருவது, யாருக்குப் புகழ் வருவது என்ற அந்தக் கேள்வியின் அடிப்படையிலே இன்றைக்கு பார்க்கப்படுகின்ற ஒன்றாக இருக்கிறதே அல்லாமல் தி.மு.கழகமோ அல்லது இடதுசாரி கட்சிகளோ அல்லது காங்கிரஸ் இயக்கமோ அல்லது கூட்டணியில் உள்ள கட்சிகளோ எண்ணுவதைப் போல இது நாட்டு நலனுக்காக எதிர்கால நன்மைக்காக, நம்முடைய பொருளாதார வளங்களுக்காக, உலகத்திலே இருக்கின்ற நாடுகளோடு தொடர்பு கொள்வதற்காக இந்தத் திட்டம் என்று நாம் எண்ணுவதைப்போல அவர்கள் எண்ணவில்லை. நமக்கு பேரும் புகழும் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்தத் திட்டத்தை உருக்குலைக்க எண்ணுகின்றார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுகின்றேன். தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகளல்ல. அவர்கள் இவர்களுடைய பேச்சைக் கேட்டு இந்தத் திட்டத்தை எதிர்க்கக்கூடியவர்கள் அல்ல.

புதுக்கோட்டைக்கு நான் புதியவனல்ல. தொடக்கத்தில் சொன்னதைப் போல புதுக்கோட்டையிலே எனக்கு ஏராளமான நண்பர்கள் உண்டு. அதிலே இருப்போர் சிலர், இறந்தோர் பலர். நாம் இழந்தோர் பலர். அவர்கள் எல்லாம் இருந்து இவ்வளவு பெரிய மகத்தான கூட்டத்தை நாம் சந்திக்கின்ற ஒரு சூழ்நிலை இல்லையே என்ற வருத்தம் இருந்தாலுங்கூட, புதுக்கோட்டைக்கு இன்றல்ல, இன்னும் பல முறை வருவேன்.

ஒன்று சொல்கிறேன். எந்த இடத்திற்கு வந்தாலும், எந்த இடத்திற்குச் சென்றாலும், நான் பழைமையை மறப்பவனல்ல. புதுமையைக் கண்டு வியப்பவனுமல்ல. பழைமை தான் என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. பழைய நிகழ்ச்சிகள் தான் பழைய நண்பர்கள் தான் அவர்கள் ஊட்டிய உணர்வுகள் தான் இந்தக் கருணாநிதி என்கிற உருவம் என்பதை நீங்கள் மறந்து விட மாட்டீர்கள், நானும் மறந்து விடவில்லை. ஆகவே இந்தப் புதுக்கோட்டைக்கு நான் வந்த நிகழ்ச்சி அருணாசலம் என்ற நண்பரின் இல்லத்திற்கு நான் வந்தேன். அவர் நடத்திய ஒரு கூட்டத்திற்கு வந்தேன். எந்த நிலையில் வந்தேன் என்று அருணாசலத்தின் மகனைக் கேட்டால் அவர் சொல்வார். அருணாசலம் இப்போது இல்லை. நெருங்கிய நண்பர். இங்கே கூட்டம் நடத்தினார். கூட்டத்திற்கு தேதியெல்லாம் அறிவித்து விளம்பரம் எல்லாம் செய்தார். நான் திருவாரூரிலிருந்து வரவேண்டும். நான் இன்று காலையிலே புறப்பட வேண்டுமென்றால், காலையிலே என்னுடைய மனைவிக்கு உயிருக்குப் போராட வேண்டிய ஒரு சூழ்நிலை. டாக்டர்கள் கை விட்டு விட்டார்கள். நான் புறப்படுவதா இல்லையா என்று தயங்கிக் கொண்டிருந்தேன். அங்கே அருணாசலமே வந்து விட்டார். வந்து பாருங்கள் மனைவியை என்றேன். எப்படியும் கூட்டம் நடத்த வேண்டும், ஏனென்றால் விளம்பரம் எல்லாம் செய்து விட்டேன் என்று சொன்னார். என் மனைவியின் நிலையைப் பார்த்து விட்டு அவரும் அழுதார். வீட்டிலே உள்ளவர்கள் எல்லாம் அழுதார்கள். இந்த நிலையில் அழைத்துக் கொண்டு போகிறேன் என்கிறீர்களே, நியாயமா என்று கூட அவரைக் கேட்டார்கள்.

கேட்டவர்களின் கண்ணீரைத் துடைத்து விட்டு வாருங்கள் போகலாம் என்று அருணாசலத்துடன் இங்கே வந்தேன். பொதுக்கூட்டம் பேசினேன். பேசி விட்டுத் திரும்பிச் செல்ல ரயிலோ பேருந்தோ கிடைக்காத காரணத்தால் ஒரு லாரியிலே ஏறி திருவாரூரைச் சேர்ந்தேன். லாரியில் இறங்கி என்னுடைய மனைவியைப் பார்க்க உள்ளே போனால், மனைவியைப் பார்க்க முடியவில்லை. மனைவியின் சடலத்தைத்தான் பார்த்தேன். நான் என்னுடைய கடைசி முத்தத்தை என் மனைவிக்கு அந்தச் சடலத்தின் முகத்திலே தான் தந்தேன். இது தான் என்னுடைய பொது வாழ்க்கை.

ஆகவே பொது வாழ்க்கையிலே நான் கண்ட இன்பங்களில் ஒன்று இது. பொது வாழ்க்கையிலே நான் சந்தித்த நிகழ்ச்சிகளிலே இது ஒன்று. புதுக்கோட்டை என்றால் இந்த நிகழ்ச்சி என் ஞாபகத்திற்கு வராமல் போகாது. அதைப்போல அருணாசலம் என்றாலும் இந்த நிகழ்ச்சி என் முகத்திலே உடனடியாக பளிச்சிடாமல் இருக்காது. அப்படிப்பட்ட ஒரு நினைவு நிகழ்ச்சியை என்றென்றும் என் நெஞ்சத்தில் தேக்கி வைத்திருக்கின்ற இந்தப் புதுக்கோட்டையில் உங்களைக் காண்பதும், உங்களுடைய மலர்ந்த முகங்களை ரசிப்பதும் நான் செய்த பெரும்பேறு, எனக்குக் கிடைத்த பாக்கியம் என்ற முறையில் உங்களையெல்லாம் இந்த நேரத்தில் சந்திப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்த புதுக்கோட்டையிலே உள்ள நம்முடைய அரசு அதிகாரிகளுக்கும், குறிப்பாக கழகத் தோழர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், ஒற்றுமையாக இருந்து இவர்கள் செய்த இந்தக் காரியத்திற்காக அவர்களுக்குப் பல்லாண்டு வாழ்த்துக் கூறி இன்று போல் என்றென்றும் வாழ்க என்று மணமக்களை வாழ்த்துவதைப் போல, இங்கேயுள்ள கழகத் தோழர்களையெல்லாம் இன்று போல் என்றென்றும் வாழ்க, அப்போது தான் கழகம் வாழும், நீங்கள் வாழ்வீர்கள், நாடு வாழும் என்று குறிப்பிட்டு இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்.



# மனித உயிர்கள் சுகமாக வாழ சுற்றுச் சூழலைப் பாதுகாக்க மரங்களை வளர்ப்போம்

*ஈஷா அறக்கட்டளை சார்பில், சென்னையில் 23.9.2007 அன்று நடைபெற்ற விழாவில் இரண்டரை கோடி மரக்கன்றுகள் நடும் பணியைத் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை.*

இன்று மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த மரம் நடுகின்ற திட்டத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு வெள்ளம் போல் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் காண்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மரம் நடும் விழாக்கள், அதற்கான தொடக்க நிகழ்ச்சிகள் பல நேரங்களில் நடந்து அதிலே கலந்து கொள்கின்ற வாய்ப்பை நான் அப்போதெல்லாம் பெற்றிருக்கிறேன். ஆனால் அந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததைப் போல் இன்றையதினம் நம்முடைய சத்குரு அவர்களுடைய பெருமுயற்சியினாலும், சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர், நண்பர் கார்த்திகேயன் அவர்களுடைய அரிய முயற்சியினாலும் பல்லாயிரக்கணக்கிலே பட்டணங்கள், பஞ்சாயத்து கிராமங்கள், பட்டிதொட்டிகள் இங்கெல்லாம் இருந்து ஏராளமான மக்கள் வருகை தந்திருப்பதைக் காணும் பொழுது நீங்கள் மரம் நடுகின்ற இந்த பெரும்பணியில் எந்த அளவிற்கு மனதைப் பறி கொடுத்திருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.

### துறவிகளிடத்திலே பற்று–பாசம்

பெருமதிப்புக்குரிய அருட்திரு சத்குரு அவர்களின் முயற்சியும், அவருடைய வார்த்தைகளும், அவர் மக்கள் பால் எடுத்து வைக்கின்ற வாதங்களும், அவர் மணிப்பிரவாளமாக, அருவியாக வழிய விடுகின்ற அருள் மொழிகளும் எந்த அளவிற்கு – சில பட்டணங்களிலே மாத்திரமல்லாமல், பட்டிதொட்டிகளிலே உள்ள மக்களையும் கவர்ந்திருக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது.



நான் அவர்களையும் உங்களையும் நோக்குகின்ற நேரத்தில், துறவிகளாக இருப்பவர்கள் எல்லாம் இப்படியிருந்தால் இந்த நாடு, இந்த உலகம் எந்த அளவிற்கு முன்னேறும், எந்த அளவிற்கு உயர்ந்து நிற்கும் என்று எண்ணி பெருமூச்சு விடுகிறேன். இந்தப் பெருமூச்சு பக்கத்திலே உள்ள அவருக்கு விசிறி போல ஒரு காற்றை எப்படி வீசிப் பயன்படுமோ, அதைப் போலப் பயன்படும் என்று நான் நம்புகின்றேன்.

நான் துறவிகளிடம் கொண்டுள்ள பற்று, பாசம் எத்தகையது என்பதையும், எப்படிப்பட்ட துறவிகளிடத்திலே பற்றும் பாசமும் கொண்டிருப்பேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமேயானால், நான் இந்து மதத்திலே பெரும் துறவியாகக் கருதப்படுகின்ற மறைந்த குன்றக்குடி அடிகளார் இடத்தில் எனக்கு மிகுந்த அன்பு உண்டு. காரணம், அவரிடத்திலே குடி கொண்டிருந்த தமிழ் மீது – இப்போது இளைய தம்பிரான், இளைய மடாதிபதி குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரிடமும் அதே அன்பு தொடருகிறது. காரணம் அவர்கள் தமிழ் வளர்ப்பதால். நம்முடைய சத்குரு அவர்களிடம் அன்பு பெருகக் காரணம், அவர்கள் தமிழ் வளர்க்கிறார்கள், இவர்கள் மனிதர்களுக்குத் தேவையான மரம் வளர்க்கிறார் என்பது தான். மதத்தை வளர்க்காமல், மரத்தை வளர்ப்பவர்களை நான் பெரிதும் நம்புகிறவன். மதத்தை வளர்த்தால் தலையைக் கொண்டு வா, கையைக் கொண்டு வா, நாக்கைக் கொண்டு வா என்று சொல்லத் தோன்றும். மரத்தை வளர்த்தால் மக்களை வாழ வைக்கப் பயன்படும் என்ற நல்லுரையை அவர்களுக்கு வழங்கிட முடியும். அதைத் தான் நம்முடைய சத்குரு அவர்கள் செய்கிறார்கள். நான் அவரையும் பார்த்து, இந்தக் கூட்டத்தையும் நினைத்தால், ஏ அப்பா, இவரா இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கூட்டினார் என்று நான் மலைத்துப் போகிறேன்.

நாங்கள் ஒரு பெரிய கட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஆங்காங்கு ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கிளைக்கழகச் செயலாளர்கள், இவர்களை அன்னியில் அமைச்சர்கள், அவர்களுக்கு உதவியாளர்கள் என்றெல்லாம் ஏராளமான தோழர்கள் இருந்தாலுங்கூட, அமைப்பு முறைகள் இருந்தாலுங்கூட அவர்களையெல்லாம் ஒரே நாளில் கூட்டிக் காட்ட முடியாத ஒரு பெரிய மாநாட்டை சத்குரு அவர்கள் இன்றைக்குக் கூட்டிக் காட்டியிருக்கிறார் என்றால் நான் இனி தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் கொள்ளை இலாபம், கொள்ளை அதிருஷ்டம் என்று தான் நம்பி மகிழ வேண்டியிருக்கின்றது.



மரத்தை ஏன் வளர்க்க வேண்டும்? இது இன்றைக்கு மக்களிடத்தில் ஒரு ஸ்லோகம் என்று வடமொழியில் சொல்வார்களே, அதைப் போல ஒரு பொன்மொழியாகவே ஆகிவிட்டிருக்கிறது. ஒரு அறிவுரையாகவே ஆகிவிட்டிருக்கிறது. அந்த அறிவுரையைப் பின்பற்றி நடக்க வேண்டும், அதைச் செய்கின்ற காரணத்தால் நான் மாத்திரமன்று, நாடு வாழ நலிவு தீர இன்றைக்கு சாதாரணமாகத் தோன்றுகின்ற ஒன்று, பிரமாண்டமான பயனை நாட்டிற்குத்தரும் என்ற அந்த எண்ணத்தை மெல்ல மெல்லத்தான் மக்களிடத்திலே பரப்ப முடிந்தது. அதை அரசின் சார்பாகத்தான் செய்ய வேண்டியிருந்தது. இன்றைக்கு துறவிகள் செய்கிறார்கள். முற்றும் துறந்தவர்கள் செய்கிறார்கள். வீட்டை மறந்தவர்கள் செய்கிறார்கள். ஆனால் அன்றைக்கு அரசு தான் இதைச் செய்ய முடிந்தது.

நாம் பழைய சரித்திரப் புத்தகங்களை பால பாடங்களை எடுத்து இன்றைக்குப் படித்துப் பார்த்தால் அசோகன் என்ன செய்தார்? அக்பர் என்ன செய்தார் என்றெல்லாம் அவர்கள் செய்த நன்மைகளை எடுத்துப் பார்க்கும்போது அசோகன் சாலையோரங்களில் எல்லாம் மரம் நட்டான் என்பது தான் பெரிதாக அந்தக் காலத்து சரித்திரப் புருஷர்களைப் பற்றி, அவர்கள் செய்த சாதனைகளைப் பற்றி, புத்தகங்களில் இப்போதும் வெளியிடப்படுகின்ற செய்திகளை நாமறிகிறோம். ஆக மன்னர் காலத்திலே கூட மரங்களை வளர்ப்பது சர்வ சாதாரணமாக இருந்திருக்கின்றது. மக்கள்



ஆட்சிக் காலத்தில் அது மேலும் பெருகிட வேண்டும் என்ற எண்ணத்தினாலேதான் நமது இந்திய அரசு மரம் வளர்ப்பதற்கு ஒரு முக்கியத்துவத்தை தந்து மர வாரம் என்ற ஒரு வாரத்தையே உருவாக்கி, அந்த வாரம் முழுவதும் மரம் நடுகின்ற வாரம் என்று அந்த வாரம் முழுவதும் கொண்டாடப்பட்டது. ஆனால் மரத்தை நடுகின்ற நேரத்திலே இருக்கின்ற ஆர்வம், அதை வளர்ப்பதிலே காட்டுவதில்லை. நம்முடைய அதிகாரிகள் ஒரு அரசின் ஆணையை ஏற்றுச் செயல்படும் போது, அந்த அதிகாரிகளோடு நின்று விடாமல் அவர்களுக்குக் கீழே இருக்கின்ற அதிகாரிகள், அவர்களுக்கு கீழேயிருக்கின்ற சிப்பந்திகள் வரையிலே நடப்பட்ட அந்த மரங்களைப் பற்றிய நாட்டமும், அதற்கு நாம் தரவேண்டிய ஊட்டமும் அடங்கியிருக்கின்ற காரணத்தால் நாளாவட்டத்தில் நாம் நடுகின்ற மரங்கள் – என்ன மரம் என்பதை ருசி பார்க்க தெருவிலே மேய்ந்து கொண்டிருக்கின்ற ஆடுகள் முனைகின்றன. ஆடுகளுக்கு நாம் எப்போது மரம் நடுவோம் என்று மரம் நடுகின்ற விழாவையே எதிர்பார்ப்பது இன்றைக்கு வேலையாக ஆகிவிட்டது. ஆகவே ஆடுமாடுகள் நாம் நட்ட மரங்களை சேதப்படுத்தாமல், அவைகளை அழித்து விடாமல் பாதுகாக்கின்ற அந்தப் பணியையும் செய்ய வேண்டியிருக்கின்ற காரணத்தால் தான் அரசாங்கமே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அரசாங்கத்தை மாத்திரம் நம்பி, அவர்களே இந்தக் காரியத்தைச் செய்வார்கள் என்று விட்டு விடாமல் ஒவ்வொருவருக்கும் ஒரு மரத்தை நட்டால் அதை வளர்த்து ஆளாக்கி விட்ட பெரும் பொறுப்பு இருக்கிறது என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும்.

அந்தப் பெரும் பொறுப்பை உணர்ந்தவர்களின் தலைவராகத் தான் நம்முடைய சத்குரு அவர்கள் விளங்குகிறார் என்பதால் அவரை வாழ்க, வாழ்க என்று நான் வாழ்த்துகிறேன்.

**மழை தேவை என்றால்**
**மரம் தேவை**

"மரத்தை நாம் வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும்'' என்று நான் ஒரு முறை சொன்னேன். ஒரு முறை சொல்லி அதையும் விளக்கியும் இருக்கிறேன். நாம் ஒரு மரத்தை வளர்த்தால், அந்த மரம் எப்படி நம்மை வளர்க்கும் என்றால், மரங்கள் பெருகி, அவை பெருங்காடாகி, அந்த மரங்களிலிருந்து வெளி வருகின்ற குளிர்காற்று, மேக மண்டலத்தை முத்தமிட்டு, அதன் காரணமாக மழை பொழிந்து, அந்த மழை பொழிந்த காரணத்தால் மாநதிகள் உருவாகி, மாநதிகளிலிருந்து வெள்ளம் வாய்க்கால் வழியோடி நம்முடைய வயல்களுக்கும் பாய்ந்து, கழனிகளிலே கதிர் குலுங்கி, அந்தக் கதிர்களிலே தோன்றுகின்ற நெல்மணிகளோ, கோதுமை மணிகளோ எந்த உணவு மணிகள் ஆயினும் அது நம்முடைய உயிரை வளர்க்கப் பயன்படுகின்றன. ஆகவே மழை தேவை என்றால் மரம் தேவை. மரத்திற்கும், மழைக்கும் என்ன தொடர்பு என்பதை இன்றைக்கு பால பாடத்திலேயே, இரண்டாவது மூன்றாவது படிக்கின்ற சிறுவர்களே கூட தெரிந்துகொள்ளக் கூடிய அளவிற்கு ஆசிரியர்கள் கற்றுத் தருகின்றார்கள். எனவே மரம் வளர்ப்பது சாதாரண விஷயமல்ல. அது ஒரு நாட்டின் உயிரை நீண்ட காலத்திற்கு வாழ வைக்கக் கூடிய, நீட்டிக்கக் கூடிய ஆற்றல் பெற்றது மரம் என்பதை யாரும் மறந்திடக் கூடாது. அதனால் தான் இதை அலட்சியப்படுத்தக் கூடாது என்று பெரியவர்கள் இதை இன்றைக்கு கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.





மரங்கள் நிறைந்த மாநகரம் என்று டெல்லிப் பட்டணத்தைச் சொல்கிறோம். அதைப் போல பெங்களூர் சென்றால், அங்கே சாலையோரங்களிலே நடு வீதிகளிலே இருக்கின்ற மரங்கள், அழகழகாக வளர்ந்திருக்கின்ற தருக்கள் இவைகளைக் கண்டு மரங்கள் அடர்ந்த ஊர் என்று பெங்களூரைப் புகழ்கிறோம். நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். பெங்களூரைப் புகழ்வதைப் போலவோ, டெல்லி மாநகரத்தைப் புகழ்வதைப் போலவோ சென்னையைப் புகழ என்னால் முடியவில்லை. காரணம் அந்த அளவிற்கு ஒழுங்கான முறையிலே சென்னை மாநகரத்தின் வீதிகளை, சாலைகளை நாம் வைத்திருக்கவில்லை. இங்கே சாலைகளிலே மரங்களுக்குப் பதிலாக பெரிய பெரிய பேனர்களை வைக்கிறோம். பெரிய பெரிய விளம்பரங்களை வைக்கிறோம். கோபுர உயரத்திற்கு இருக்கின்ற பட விளம்பரங்களை வைக்கிறோம். அரசியல் விளம்பரங்களை வைக்கிறோம். விளம்பரங்கள் வைப்பது பார்ப்பதற்காக, ஒரு நாள் இரு நாள் என்றில்லாமல் வாரம் முழுவதும் வைக்கிறோம், மாதம் முழுதும் வைக்கிறோம். ஏன் சில நேரங்களில் ஆண்டு முழுவதும் வைக்கிறோம். அப்படி வைக்கின்ற காரணத்தால், அந்த மரங்கள் வளருவதற்கும் வழியில்லாமல், மரங்கள் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்வதற்கும் வழியில்லாமல் மரங்களால் ஒரு நகரத்திற்கு ஏற்பட வேண்டிய எழில் குலுங்குகின்ற அந்தத் தன்மையும் இன்றைக்குப் பறிக்கப்பட்டு விடுகிறது.

எனவே வெளியூர்களிலிருந்து வந்திருக்கின்ற இந்தப் பெரும் கூட்டத்தின் எதிரொலியாக சென்னை மாநகரம் இனி மேலாவது எழிலோடு விளங்க வேண்டுமென்பதற்கு ஏற்ற வகையில் நான் மாத்திரமல்ல, நான் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது, என்னுடைய அதிகாரிகளும் கவலைப்பட வேண்டும். அதிகாரிகள் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது, சிப்பந்திகளும் கவலைப்பட வேண்டும். சிப்பந்திகள் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது, நாங்கள் இங்கே விளம்பர போர்டுகளை வைத்துத் தான் தீருவோம் என்று நீதிமன்றத்திற்கு சென்று "தடையாணை'' வாங்குகிறார்களே சில பேர், அவர்களும் கவலைப்பட வேண்டும். "தடையாணை'' வாங்குபவர்களும் கவலைப்பட வேண்டும், தடையாணையைக் கொடுக்கின்ற நீதிமன்றங்களும் கவலைப்பட வேண்டும். எல்லோரும் சேர்ந்து கவலைப்பட்டால் தான் மரங்களை வளர்க்க முடியும், மரங்கள் வளர்ந்தால் தான் மனித உயிர்கள் வாழும், மனித உயிர்கள் ஆரோக்கியமாக வாழ நிம்மதியாக வாழ சுகமாக வாழ சுற்றுச் சூழலைப் பாதுகாத்துக் கொண்டு வாழ முடியும். எனவே மரங்களை வளர்ப்போம். மரங்களை நாம் வாழ வைப்போம். அப்போதுதான் மரங்கள் நம்மை வாழ வைக்கும் என்ற அந்த உண்மையை உணருவோம், அனுபவரீதியாக உணர்வோம், அதை உணரக் கூடிய வகையிலே இங்கே வெள்ளம் போல் மக்கள் கூட்டத்தை கூட்டிக் காட்டிய நம்முடைய சத்குரு அவர்களுக்கும், நண்பர் கார்த்திகேயன் அவர்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்து உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்காக, இந்த வாய்ப்பை உருவாக்கியவர்களுக்கு நன்றியினை நவின்று விடைபெறுகிறேன்.

# ஓய்வு பெற்றவர்கள் தங்கள் உழைப்பை சமுதாயத்திற்குத் தந்திட வேண்டும்



சேலத்தில் 14.09.2007 அன்று நடைபெற்ற தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் மாநிலச் சங்க முப்பெரும்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை

இன்றைய தினம் சேலத்தில் நடைபெறுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வந்துள்ள என்னை நீங்கள் அழைத்து வரவேற்றுப் பாராட்டி, உங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்து அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகள் வரிசைப்படுத்தப்பட்டு என்னிடத்திலே நான் மேடைக்கு வந்த பிறகு தான், என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தால், அவைகளையெல்லாம் படித்துப் பார்த்து, அலுவலர்களோடு கலந்து பேசி, அதிகாரிகள் மட்டத்திலே சிந்தித்து ஆவன செய்வேன் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருப்புமுனை

நீங்கள் ஓய்வு பெற்றவர்கள் – ஓய்வூதியத்தினுடைய ஏற்றத்தாழ்வு, அதை வகைப்படுத்தி வழங்குதல், இன்னபிற பிரச்சினைகளில் எத்தனையோ கோரிக்கைகளை வைத்து, இந்த அரசின் சார்பாக அவற்றையெல்லாம் பெற்றிருக்கிறீர்கள். இந்த அரசு அவற்றை நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றது. அதில் நாங்களும் பெருமையடைகிறோம், நீங்களும் மகிழ்ச்சி அடைகின்றீர்கள். என்னைப் பொறுத்தவரையில் ஓய்வு பெற்றவர்களைப் பார்த்து பொறாமை கொள்பவன். ஏனென்றால் எனக்கு இன்னும் ஓய்வு கிடைக்கவில்லையே என்ற காரணத்தினால் பொறாமைப்படுபவன். அது சேலத்திற்கு பிறகாவது எனக்குக்





கிடைக்கவேண்டும், ஏனென்றால் சேலம் திராவிட இயக்கச் சரித்திரத்தில் சில முக்கியமான திருப்பு முனைகளை உருவாக்கிய இடம், உருவாக்கக் கூடிய இடம், இனிமேலும் உருவாக்கும் என்று நான் எதிர்பார்க்கின்ற இடம். ஆகவே ஓய்வு பெற்ற உங்களையெல்லாம் நீங்கள் இருக்கும் உற்சாகத்தைக் கண்டு, நானும் ஓய்வு பெற்றால் எவ்வளவு உற்சாகமாக இருக்கலாம், இந்த உபத்திரவம் எல்லாம் இல்லாமல் என்கின்ற அந்த எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. இதை வைத்தே நாளை சில பத்திரிகைகள் தலையங்கங்கள் எழுதும், சில வாரப் பத்திரிகைகள் யூகங்களை வெளியிடும். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவாவது இந்த வாசகங்களை நான் இங்கே சொல்ல வேண்டுமென்று எண்ணி சொல்லியிருக்கிறேன், வேறொன்றுமில்லை. ஒன்றுமில்லை என்றால் ஒன்றுமே இல்லை என்று அர்த்தமல்ல, ஒன்றிரண்டு இருக்கிறது என்பதை என்னுடைய தம்பிமார்கள் அறிவார்கள்.

### பண்டிகை முன்பணம் உயர்வு

உங்களுடைய கோரிக்கைகளில் மிக முக்கியமாக ஓய்வூதியர்களுக்குப் பண்டிகை முன் பணமாக, 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்பதாகும். ஓய்வூதியர்களுக்குப் பண்டிகை முன்பணம் 500 ரூபாய் வழங்கப்பட்டு, இந்த முன்பணம் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் என பத்து மாத தவணைகளில் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தப் பண்டிகை முன் பணம் 1992ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. அண்மையில் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணமாக 1,000 ரூபாய் என்பதை 2,000 ரூபாயாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டதையும், தற்போது உங்களுக்கு நடைமுறையில் உள்ள 500 ரூபாய் என்பது 92ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது என்பதையும் கருத்தில் கொண்டு ஓய்வூதியதாரர்களுக்குப் பண்டிகை முன் பணமாக 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கலாம் என்று கருதியிருக்கிறோம். இந்த மகிழ்ச்சியான செய்தியை ஓய்வூதியர்கள் குழுமியிருக்கின்ற இந்த மாநாட்டில் நான் மிகுந்த பெருமையோடும் பூரிப்போடும் நீங்கள் எல்லாம் நிச்சயமாக நிம்மதி அடைவீர்கள் என்ற கருத்தோடும் வெளியிடுகின்றேன்.

அதைப் போலவே 1–6–1988 முதல் 31–12–1995 வரையில், ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு பெறும்போது பெற்ற அகவிலைப்படி முழுவதையும், ஓய்வூதியம் கணக்கிடுவதற்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் உங்கள் முதல் கோரிக்கையாக வைத்துள்ளீர்கள். அதுபற்றி இங்கே பேசிய நண்பர் கூடக் குறிப்பிட்டார். இதுபற்றி நிதித் துறைச் செயலாளர்களோடு நான் ஏற்கெனவே ஒரு முறை கலந்து பேசியிருக்கிறேன். இந்தக் கோரிக்கை வரும் என்று தெரிந்து இதைப் பற்றிப் பேசிய போது, அவர்கள் சொன்ன குறிப்பினை உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன். இப்படி படித்துக் காட்டுவதால் அந்தக் கோரிக்கையை விட்டு விட்டு, வேறு பிரச்சினைக்குச் செல்கிறேன் என்று நீங்கள் யாரும் கருதத் தேவையில்லை.

### சொன்ன சொல் வீண் போகாது

நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி 31–5–1988 வரையில் ஓய்வு பெற்றவர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெறும் தருணத்தில் பெற்ற அகவிலைப் படியினை ஊதியத்தோடு இணைத்து, ஓய்வூதியம் கணக்கிட ஆணையிடப்பட்டது. இந்தச் சலுகை 1–6–1988 முதல் 31–12–1995 வரை ஓய்வு பெற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்திலே, இந்தச் சங்கம் மற்றும் ஓய்வூதியர்கள் தொடுத்த வழக்கிலே, தீர்ப்பு அவர்களுக்குச் சாதகமாக உயர்நீதி மன்றத்தால் அளிக்கப்பட்டது. நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள்படி, இதனை 1–10–1984 முதல் 31–5–1988 வரை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும், 1–6–1988க்குப்



பின் இதனுடைய பரிந்துரையை நடைமுறைப்படுத்த இயலாது. எனவே, அரசு இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து தடையாணை பெற்றது. இந்த வழக்கின் மீது விசாரணை முடிந்து தீர்ப்பு நிலுவையிலேயே உள்ளது. சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புப் பெறப்பட்டவுடன் அந்த அடிப்படையில் இந்தக் கோரிக்கையின் மீது முடிவெடுக்கலாம் என்று அதிகாரிகள் மட்டத்தில் யோசித்து வைத்திருக்கிறோம். எனவே, தீர்ப்பு வந்த பிறகு இதைப்பற்றி யோசித்து உங்களுக்கு நன்மை கிட்டுகின்ற வகையில், உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், எப்படி அந்தத் தீர்ப்பை அணுகலாம் என்ற முறையிலே இந்த அரசு செயல்படும் என்பதை உங்களுடைய நம்பிக்கைக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படாமல் நான் நிறைவேற்றித் தருவேன் என்பதையும் – இந்த முதல் கோரிக்கையை, முதன்மையான கோரிக்கையை இங்கே என் முன்னிலையிலே எடுத்துச் சொல்லப்பட்ட அந்தக் கோரிக்கையைப் பற்றி என் கருத்தினை வெளியிட்டிருக்கிறேன். நான் இங்கே சொன்ன சொல் வீண் போகாது, காப்பாற்றப்படும், காப்பாற்றப்படுவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலிலே சொன்னதைப் போல உங்களையெல்லாம் இங்கே சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஓய்வு பெற்று விட்டோம் என்று அத்துடன் நம்முடைய கடமைகளை மறந்து விடக் கூடாது. ஒருவர் ஓய்வு பெற்று விட்டால்கூட, ஓய்வு பெற்ற பிறகு தான் அவர்களுக்கு நிரம்பப் பணிகள் சமுதாயத்திலே இருக்கின்றன என்பதை எல்லோரும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஓய்வு பெறுகிற வரையிலே ஒரு பணி தான். ஓய்வு பெற்று விட்டால் பல பணிகள். பல பணிகளிலே அவர்கள் ஈடுபட வேண்டும். அப்படிப்பட்ட பணிகளிலே முதன்மைப் பணியாக இந்தச் சமுதாயத்திலே பகுத்தறிவு கொளுத்துகின்ற, இந்தச் சமுதாயத்திலே மூட நம்பிக்கைகளை வீழ்த்துகின்ற, இந்தச் சமுதாயத்திலே சாதி மத பேதங்களை அகற்றுகின்ற, இந்தச் சமுதாயத்தில் முன்னேற்றக் கருத்துக்களை முகிழ்க்கச் செய்கின்ற அந்தப் பணிகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். அந்தப் பணிகளிலே நீங்கள் ஈடுபடவேண்டும். இதுவரையில் நீங்கள் ஆற்றிய பணிகளுக்காக, நிரம்ப ஊதியம் பெற்றிருக்கிறீர்கள், ஓய்வு பெற்ற பிறகு நீங்கள் ஆற்றவிருக்கின்ற பணிக்கு, நீங்கள் பெறக் கூடிய ஊதியம், நீங்கள் இந்த உலகத்திலே வாழ்கின்ற வரையிலே மாத்திரமல்ல, நம்முடைய வாழ்வு, ஓய்வு பெற்றவர்களுடைய வாழ்வு முடிந்த பிறகும் கூட, அவர்களுடைய வாழ்வுக்கு நல்ல புகழ் தரத் தக்க ஒரு பயனை தரக் கூடிய அளவிற்கு அமைய வேண்டுமேயானால், நம்மால் உருவாக்கப்பட்ட பணிகளால், நம்மால் வடிவமைக்கப்பட்ட பணிகளால், இந்தச் சமுதாயம் பெரும் ஏற்றத்தைப் பெற்றிருக்கிறது. இந்தச் சமுதாயம் மற்றச் சமுதாயங்களோடு போட்டி போடுகின்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. மற்றவர்களோடு போட்டி போட்டு முன்னேறுகின்ற அளவிற்கு பொருளாதாரத்தில், சமுதாயத் துறையில், அரசியலில் விழிப்புற்றிருக்கிறது என்ற ஒரு நிலை ஏற்படுமேயானால், ஓய்வு பெற்றிருக்கின்ற நீங்கள் தான் அதற்காக உழைக்க வேண்டும். ஓய்வு பெற்று விட்டோம் என்று எண்ணத் தேவையில்லை, ஓய்வு பெற்ற பிறகு நாம் செய்ய வேண்டிய, வழங்க வேண்டிய உழைப்பை எண்ணிப் பார்த்து, அந்த உழைப்பை இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உங்களுடைய அன்பான வரவேற்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

---

*தொகுப்பு :*
**தா. மனோகரன்,** செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், சேலம் மாவட்டம்.



# தமிழகம், மருத்துவத் துறையிலும் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் பெருமிதம்!

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் 17–ஆவது பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய சிறப்புரை – 11.10.2007.

**மே**தகு தமிழக ஆளுநரும் – பல்கலைக்கழக வேந்தருமான சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களே!

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்– இணை வேந்தர் கே.கே.எஸ்.எஸ்ஆர்.இராமச்சந்திரன் அவர்களே!

துணைவேந்தர் டாக்டர் மீர் முஸ்தபா உசேன் அவர்களே!

ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களே! ஆசிரியர் பெருமக்களே! மருத்துவத் துறை நண்பர்களே! பட்டம் பெறும் பாசத்திற்கினிய கண்மணிகளே! என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தினை 31.8.1989 அன்று இதே மாமன்றத்தில் தொடங்கி வைத்து 14.10.1990 அன்று நடந்த முதல் பட்டமளிப்பு விழாவிலும், 21.3.1997 அன்று நடந்த ஏழாவது பட்டமளிப்பு விழாவிலும், 22.4.1999 அன்று நடந்த ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவிலும் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பசுமையான நினைவுகளோடு இன்று 17–ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அரிய வாய்ப்பினையும் பெற்றுள்ளமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன்.

31.7.1998 அன்று இப்பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு என்னுடைய அருமை நண்பர் மறைந்த எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்த அந்த நிகழ்வையும் இவ்வேளையில் மகிழ்வுடன் நினைவு கூர்கிறேன்.

இந்தியத் திருநாட்டில் இரண்டாவது மருத்துவப் பல்கலைக்கழகம் என்னும் பெருமைக்குரிய இப்பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் அருமை மருத்துவமாமணிகளுக்கு என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் உரித்தாக்குகிறேன்.

இன்று பட்டம் பெறுவோரின் எண்ணங்களில் வண்ணக் கனவுகள் எண்ணற்றவையாய் இருந்திடக் கூடும். அவை அனைத்தும் நிறைவேறிட வேண்டுமென விரும்புகிறேன்.

### மருத்துவர்களின் திறமை

இந்தியத் திருநாட்டில் தமிழகம் இன்று பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக சென்னை மாநகரம் பல்வேறு சிறப்புகளைப் பெற்று வருகிறது. இந்தியாவின் மிகச் சிறந்த மாநகராட்சியாக சென்னை மாநகரம் தேர்வு செய்யப்பட்டு, 9.10.2007 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் வழங்கிய மத்திய அரசின் விருதினைப் பெற்றுள்ளது. இன்று மருத்துவத் துறையிலும் உலக மக்களின் கவனத்தை ஈர்த்து நிற்கிறது.

இந்தியாவின் பொருளாதார நகரமாக மும்பை விளங்குவது போல இந்தியாவில் மருத்துவத் துறையின் தலைநகரமாக சென்னை மாநகரம் வளர்ந்து வருகிறது. குறைந்த செலவில், சிறந்த தரத்தில் உயர்ந்த தொழில்நுட்பங்களின் துணையோடு இதய அறுவை சிகிச்சை, மூட்டுமாற்று அறுவை சிகிச்சை முதலிய மருத்துவ வசதிகள் சென்னை மாநகரில் எளிதாகக் கிடைக்கின்றன. இதன் காரணமாக அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா, சூடான், ஆப்கானிஸ்தான், இலங்கை, பியூஜி தீவுகள் முதலிய பல்வேறு நாடுகளில் இருந்தும் பலர் சென்னை மாநகருக்கு வருகை புரிந்து மருத்துவ சிகிச்சைகள் செய்துகொண்டு மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்கின்ற காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் நம்மால் காண முடிகிறபோது நம்முடைய தமிழ் மருத்துவர்களின் திறமையை போற்றாமல், பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

### மத்திய–மாநில அரசுகளின் ஒத்துழைப்பு

சில ஆண்டுகளுக்கு முன்புவரை கடுமையான நோய்களுக்கு உரிய சிகிச்சைகளை மேற்கொள்ள மேலை நாடுகளை நம்பி இருந்த நமது தமிழகத்தில், இன்று பலர் வெளிநாடுகளில் இருந்து சிகிச்சைக்காக வந்து செல்கின்ற வாய்ப்பு குவிந்துள்ளமைக்கு, இங்கு அரசுத் துறையில் மட்டுமல்லாமல் தனியார் துறையில் அமைந்துள்ள பல்வேறு தனித்தன்மை வாய்ந்த மருத்துவ மனைகளும் முக்கிய காரணங்கள் ஆகும். அவை சுதந்திரமாகவும், சிறப்பாகவும் செயல்படுவதில் நமது மத்திய – மாநில அரசுகள் அளித்துவரும் ஒத்துழைப்புகளும் உதவிகளும் குறிப்பிடத் தக்கவையாகும்.

இன்று தமிழகத்தில் மருத்துவக் கல்லூரிகளும், மருத்துவப் பணிகள் சார்ந்த பிற கல்வி நிறுவனங்களும் தமிழ்நாடு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் சீரிய ஒத்துழைப்புடன் இயங்கி வருகின்றன.

பட்டம் பெற்றுச் செல்கின்ற மாணவச் செல்வங்களாம் நீவீர் இன்று பெற்றுள்ள பட்டம் மருத்துவத் தொண்டுபுரியும் வாய்ப்பினை உங்களுக்கு வழங்குகிறது; கற்றதுபோதும் என நீங்கள் எண்ணிடக் கூடாது. கற்கும் வாய்ப்புகள் மருத்துவ உலகில் குவிந்து கிடக்கின்றன.

உளம் விழையும் துறைகளில் ஈடுபட்டு, ஆய்வுகள் மேற்கொண்டு உலகம் புகழும் மருத்துவ மேதைகளாகத் திகழ்வீர்களாக!

### நோயாளிகள்பால் கனிவு காட்டுங்கள்

மருத்துவப் பணியில் ஈடுபட்டுத் தொண்டுகள் புரிந்து, செல்வம் ஈட்டிச் சிறப்புடன் நீங்கள் வாழ்ந்திட வேண்டும். அல்லும் பகலும் நீங்கள் ஆற்றும் மருத்துவத் தொண்டுகளின் போது உங்களைத் தேடிவரும் நோயாளிகள்பால் கனிவு காட்டிட வேண்டும். அந்தக் கனிவே உங்களை நாடி வருவோரின் நோயை விரைந்து குணமாக்கும் மருந்தாகும்.

> ‘உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
> அப்பால்நாற் கூற்றே மருந்து’

‘நோயாளி, மருத்துவர், மருந்து, அருகிருந்து துணைபுரிபவர் என மருத்துவமுறை நான்கு வகையாக அமைந்துள்ளது’ – எனும் அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளையும், அது தரும் பொருளையும் எண்ணிப் பார்த்திடுவீர்.

ஒருவனின் நோயைத் தீர்க்கும் மருந்தின் கூறுகள் நான்காகும். அவற்றில் ஒன்று ‘தீர்ப்பான்’ என்பது; இந்த ‘தீர்ப்பான்’ எனும் சொல் நோயைப் போக்குகின்ற மருத்துவர் ஆகிய உங்களைக் குறிக்கிறது. எனவே நீங்கள் நோயாளியின் நோய் தீர்க்க மருந்து அளித்திடும் மருத்துவர்கள் மட்டுமல்ல; நோயாளிகளிடம் நீங்கள் காட்டும் கனிவு, மருந்தாகவும் அமைவதால் உங்களை மருந்தின் ஒரு பகுதியாகவே குறிக்கிறார் அய்யன் திருவள்ளுவர். எனவே தான் இரக்க உணர்வின் அடிப்படையில் எழும் கனிவு மருத்துவத் தொழிலில் ஈடுபடும் உங்கள் அனைவரையும் அணி செய்திட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

### ஏழைகளுக்குத் தொண்டு செய்க

உங்களுடைய மருத்துவ வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்வதும் ஒன்றாக அமைந்திட வேண்டும்.

நமது சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்துவரும் ஏழை எளிய மக்கள் ஆண்டாண்டு காலமாக அடக்கி



ஒடுக்கப்பட்டவர்கள். வாழ்வின் எந்த ஒரு சுவையையும் நுகர்ந்து அறியாதவர்கள், கல்வி வாய்ப்புகள் காலம் காலமாக மறுக்கப்பட்டவர்கள். முன்னேற்றத் திசையின் வாயிற்படிகளைக்கூட கண்டறியாதவர்கள். அத்தகையவர்கள் உழைக்க மட்டுமே பிறந்தவர்களாகக் கருதப்படுபவர்கள். அத்தகையவர்களைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘சாமானியர்கள்’ என்று குறிப்பிடுவார்கள். அந்தச் சாமானியர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான், வாழ்வின் முழு சுவையையும், அவர்கள் காண வேண்டும் என்பதற்காகத்தான், அவர்களுக்குக் கல்வி வாய்ப்புகளும், வேலைவாய்ப்புகளும் தடையின்றிக் கிடைத்திட வேண்டும் என்பதற்காகத்தான், தந்தை பெரியார் அவர்களும், பெருந்தலைவர் காமராசர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பாடுபட்டார்கள். அவர்களுக்குப் பின்னால் தமிழகத்தில் அமைந்துள்ள இந்த அரசும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

### அதிக நிதியை அளிக்கும் அரசு

நோய்நொடி என்றால் ஏழை எளியோர் எந்த மருத்துவமனைக்குச் சென்று இன்றைக்கு இருக்கின்ற நவீன வசதிகளைப் பெற முடியும் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோதுதான் அந்த வசதிகள் அவர்களுக்கும் கிடைத்திட வேண்டும், எல்லோரும் அந்த வசதிவாய்ப்புகளைப் பெற்று நலவாழ்வை நுகர்ந்திட வேண்டும் என்று கருதி மருத்துவத் துறைக்கு நமது தமிழக அரசு ஆண்டுதோறும் அதிக நிதியை ஒதுக்கீடு செய்கிறது; புதிய புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது; தகுதிவாய்ந்த மருத்துவ வல்லுநர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

2006–ஆம் ஆண்டு மே திங்களில் தமிழகத்தில் இந்த அரசு அமைந்த பிறகு அரசு மருத்துவமனைகளில் 2,297 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

முதுநிலை மருத்துவப் பட்டம் மற்றும் பட்டயம் பயின்ற 203 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்; பல ஆண்டுகளாக நீலகிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர் மாவட்டங்களில் மருத்துவர் பணியிடங்கள் 30 முதல் 50 விழுக்காடு வரை நிரப்பப்படாமல் இருந்து வந்தன. தற்போது அம்மாவட்டங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றில் நூறு சதவீத மருத்துவர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் இல்லை என்ற குறை அறவே அகற்றப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 1,405 மருத்துவர்களுக்கு நவம்பர் 2006 முதல் கால முறை

**“உங்களுடைய மருத்துவ வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்வதும் ஒன்றாக அமைந்திட வேண்டும்”.**

ஊதியம் அளிக்கப்பட்டு, மருத்துவ வல்லுநர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

### புதிய மருத்துவக் கல்லூரிகள்

அதேபோல, தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 2,540 செவிலியர்கள், 419 மருந்தாளுநர்கள், 280 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் அனைவரும் காலமுறை ஊதிய விகிதத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளனர். மொத்தம் உள்ள 13,000 காலியிடப் பணியிடங்களில் இதுவரை 9,000 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்பிட ஆணைகள் வழங்கப்பட்டு, நிரப்பும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற கோட்பாட்டின்கீழ் விழுப்புரம், திருவாரூர், தருமபுரி மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படுகின்றன.

அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையை, சென்னை அரசுப் பொது மருத்துவமனைக்கு நிகராக 100 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டு, முதல் தவணையாக இந்த ஆண்டு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமங்களில் வாழ்பவர்களுக்கும் மருத்துவ உதவிகள் சென்று சேர வேண்டும் என்ற சிந்தனையோடு 30.12.2006 முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள “வருமுன் காப்போம்” திட்டத்தின் மூலம் 9,000 மருத்துவ முகாம்கள் நடத்த ஆணையிடப்பட்டு, 5.10.2007 முடிய 3,766 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் 39 இலட்சத்து 95 ஆயிரத்து 89 பேர் பயனடைந்துள்ளனர்.

### தரமான மருத்துவ வசதிகள்

ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் “ டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ்” 15.9.2006 முதல்

இதுவரை மொத்தம் 4 இலட்சத்து 78 ஆயிரத்து 512 ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு மொத்தம் 211 கோடியே 53 இலட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் செயல்படுகின்ற 270 வட்ட மற்றும் மாவட்ட மருத்துவமனைகளைச் சீர்செய்யவும், விரிவுபடுத்தவும் 597 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன.

85 கோடி ரூபாய் செலவில் அரசு மருத்துவ மனைகளில் MRI ஸ்கேன், சிறுநீரக கல் அகற்றும் கருவி, சி.டி. ஸ்கேன் போன்ற அதிநவீன மருத்துவ சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

அலோபதி மருத்துவ முறையுடன் இந்திய மருத்துவ முறையையும் தீவிரமாகச் செயல்படுத்தும் நோக்குடன், அரசு மருத்துவமனைகளில் 150 சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இத்தகைய பணிகள் தமிழக அரசின் மருத்துவத் துறையில் நிறைவேற்றப்படுவதன்மூலம், தரமான மருத்துவ வசதிகள் தடையின்றிக் கிடைக்க வழிவகுக்கப்படுகின்றன.

**தொண்டு மனப்பான்மை**

இந்த அடிப்படையில் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழுகின்ற மக்களுக்கு உழைத்திட வேண்டுமென்னும் தொண்டு மனப்பான்மை உங்களிடமும் அமைந்திட வேண்டுமென விரும்புகிறேன்.

அமெரிக்க அதிபராகத் திகழ்ந்த உட்ரோ வில்சன் என்பார் பொதுத் தொண்டில் ஈடுபடுபவர்கள், சமுதாயம் சீரமைக்கப்பட வேண்டும் என்பவர்கள் தங்கள் பணியை அடித்தளத்தில் இருந்து தொடங்கிட வேண்டும் என்கிறார்.

'Nations are renewed from the bottom, not from the top... real wisdom of human life is compounded out of the experiences of ordinary men... The great struggling unknown masses of the men who are at the base of everything are the dynamic force that is lifting the level of society. A Nation is as great and only as great as her rank and file'.

"சமுதாயச் சீரமைப்பு என்பது கீழ் மட்டத்திலிருந்து தொடங்கப்பட வேண்டுமே தவிர, மேல்மட்டத்திலிருந்து அல்ல. சாதாரண சராசரி மனிதனது எண்ணங்களையும், வாழ்க்கை அனுபவங்களையும் எண்ணியுணர்ந்து, இணைத்துச் சிந்தித்துச் செயலாற்றிட வேண்டும். அதுதான் மனிதத் தன்மை...

> "நமது நாட்டிலும் அடித்தள மக்கள் முன்னேற வேண்டுமென்பதற்காக பாடுபடக்கூடிய வழி வந்தவர்கள் நாம் என்பதால்; உங்களுடைய தொண்டின் ஒரு பகுதி அந்த ஏழை எளிய மக்களுக்கான தன்னலமற்ற அர்ப்பணிப்புப் பணியாகத் திகழ வேண்டும் என நான் உங்களிடம் உரிமையுடன் வேண்டுகிறேன்."

......குறிப்பிட்ட வகையில் புறக்கண்களுக்குத் தெரியாவிட்டாலும் சமுதாய முழுமையிலும், உலகு எங்கணும் பல்கிப் பெருகி நீக்கமற நிறைந்திருக்கும் சாமானிய மனிதர்களது எண்ணமும் எழுச்சியும் வாழ்வும் தாழ்வுந்தான் சமுதாயச் சீரமைப்பின் பேரியக்கச் சக்தியாக செயல்பாட்டுத் திறனாக உள்ளது.

சாமானிய சராசரி மக்களின் எழிலையும் ஏற்றத்தையும் பொறுத்தே எந்த ஒரு சமுதாயத்தின் பெயரும் பெருமையும் சீரும் சிறப்பும் அமையும்."

என்ற உட்ரோ வில்சனின் இந்தக் கருத்துகள் அமெரிக்க நாட்டிற்கு மட்டுமல்ல; உலகின் எந்த நாட்டிற்கும் பொருந்தும் பொதுக்கருத்தாகும். அதனால்தான் நமது நாட்டிலும் அடித்தள மக்கள் முன்னேற வேண்டுமென்பதற்காக பாடுபடக்கூடிய வழி வந்தவர்கள் நாம் என்பதால்; உங்களுடைய தொண்டின் ஒரு பகுதி அந்த ஏழை எளிய மக்களுக்கான தன்னலமற்ற அர்ப்பணிப்புப் பணியாகத் திகழ வேண்டும் என நான் உங்களிடம் உரிமையுடன் வேண்டுகிறேன்.

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு' – என்று அய்யன் திருவள்ளுவர் கூறிய அருமையான குறளுக்கு ஓர் இலக்கணமாய் எடுத்துக்காட்டாய் நமது தமிழகத்தை, தாய்த் திருநாட்டை உருவாக்கிட முனைந்து உழைத்திடுவீர்! உயர்ந்திடுவீர்!!

★ ★ ★



# தமிழ்நாட்டின் வளம்பெருக சேது சமுத்திரத் திட்டம் தேவை

திருச்சிராப்பள்ளியில் 29.9.2007 அன்று நடைபெற்ற மாநகராட்சி குடிநீர் விரிவாக்கத் திட்டம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவிழாவில் பங்கேற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.



நீண்ட நேரம் இந்த விழாவில் உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் விரிவாக, விளக்கமாக, திருச்சி மாவட்டத்திலும் இந்த மாநகரத்திலும் தி.மு.கழகத்தினுடைய ஆட்சியில் நடைபெற்ற, நடைபெறப்போகிற, நடைபெற்று வருகின்ற, நடைபெறுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்ற சாதனைகளை யெல்லாம் விளக்கிக் கூறியிருக்கின்றார்.

அதற்கு மேல் நான் அதையே விவரித்துப் பேசுவது தேவையில்லாத ஒன்று. "நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்" என்பதைப் போல, நான் பேச நினைத்ததையெல்லாம் தம்பி ஸ்டாலின் பேசி விட்டக் காரணத்தால், நான் அவற்றையெல்லாம் மீண்டும் தொட்டுப் பேச விரும்பவில்லை. எத்தனை முறை பேசினாலும் அனுபவ ரீதியாக இந்த ஆக்கப் பணிகளை நுகர்கின்ற உங்களுக்குத் தெளிவு ஏற்படாது என்று நான் சொல்லமாட்டேன். அந்தத் தெளிவு உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால்தான் இன்னும் சொல்லப் போனால், எங்களிடத்திலே நீங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கை, நாளுக்கு நாள் விரிவடைகிற காரணத்தினால்தான், வளர்கின்ற காரணத்தினால்தான், ஒரே நாளில், நேற்று இதே திருச்சியினுடைய ஒரு பக்கத்திலே இலட்சக்கணக்கிலே குழுமினீர்கள். அடுத்த

24 மணி நேரத்திற்கெல்லாம் இந்தப் பகுதியிலே இலட்சக்கணக்கிலே குழுமியிருக்கின்றீர்கள்.

நேற்று ஒரு பத்திரிகையில் எந்தப் பத்திரிகை என்று பெயர் சொல்ல விரும்பவில்லை. அந்தப் பத்திரிகையிலே ஒரு செய்தி படம் வந்திருக்கிறது. அதிலிருந்தே அந்தப் பத்திரிகையினுடைய பெயரை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கருணாநிதிக்கு இப்போது கூட்டமே சேருவதில்லை என்று எழுதியிருக்கிறார்கள். நான் அந்தப் பத்திரிகை யினுடைய நிருபர் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தால் இதெல்லாம் கூட்டம் தானா? அல்லது மக்கள் வெள்ளமா என்பதற்கான விரிவுரையை அவர் அந்தப் பத்திரிகையிலே எழுதிக் காட்டுவார் என்று நான் நம்புகிறேன்.

## பெரியார் அண்ணா பாசறை

நான் பத்திரிகைகாரர்களிடத்திலே எங்களுடைய கூட்டம் பெரிய கூட்டமாக இருந்தாலும் அதைப் பெரிய அளவிலே போடுங்கள் என்று நான் சொல்ல மாட்டேன். உள்ளதை உள்ளபடியே போடுங்கள். உள்ளதை உள்ளபடியே வெளியிடுங்கள் என்பதுதான் என்னுடைய வழக்கமான வாதமாக இருந்திருக்கிறதே தவிர, இப்போதும் இருக்கிறதே தவிர, அதை திரித்துப் போடுங்கள் அல்லது பெரிதாகப் போடுங்கள் அல்லது விவரமாக போடுங்கள் என்றெல்லாம் நான் யாரையும் என்றைக்கும் மிரட்டியது கிடையாது. மிரட்டப் போவதுமில்லை. மிரட்டியும் பழக்கப்பட்டவனும் அல்ல. காரணம், நான் பேரறிஞர் அண்ணாவினுடைய பாசறையிலே, அரசியல் பயின்றவன். தந்தை பெரியார் அவர்களுடைய பாசறையில் சமுதாயம் பயின்றவன்.

பெரியாரிடத்திலே விடியற்காலை 6 மணிக் கெல்லாம் அவரைச் சூழ்ந்து நாங்கள் ஈரோடு குடியரசு அலுவலகத்திலே பணியாற்றியபோது அவருடைய இல்லத்திலே அமர்ந்திருப்போம். இப்போது என்னுடைய தம்பிமார்களெல்லாம் என்ன இவ்வளவு சீக்கிரம் எழுந்து விடுகிறீர்களே என்று ஆச்சரியப்படுகிறார்கள். என்ன செய்வது? நான் பெரியாரிடத்திலே அப்படிப்பட்ட பாடத்தைப் பயின்றிருக்கிற காரணத்தால், அண்ணாவிடத்திலே அந்த பாடத்தை பயில முடியாமல் அதற்கு முன்பே நான் பெரியாரிடத்திலே அந்தப் பாடத்தைப் பயின்றவன். அதனால் 6 மணிக்கெல்லாம் எழுந்து பெரியாரைச் சுற்றி உட்கார்ந்துகொள்வோம். நான், தவமணிராஜன், ஏ.பி.ஜனார்த்தனம், கருணானந்தம் என்று ஐந்தாறு பேர் அமர்ந்திருப்போம். அப்போது அங்கே சங்கரய்யா என்று ஒருவர் வேலை பார்த்தார். அவர் பெரியாரிடம், அய்யா என்றார். என்னப்பா என்பார் பெரியார். பெரியாரிடத்திலே சங்கரய்யா சொல்லுவார், இதோ பாருங்கள் இன்றைக்கு உங்களை ரொம்ப கிண்டல் செய்து இந்தப் பத்திரிகையிலே கார்ட்டூன் போட்டிருக்கிறார் என்று ஆத்திரத்தோடு சங்கரய்யா பெரியாரிடத்திலே அந்தப் பத்திரிகையைக் கொடுப்பார். பெரியார் அதை வாங்கிப் பார்த்து, ஏன் அதற்காக ஆத்திரப்படுகிறாய், இதையாவது போட்டார்களே என்று சந்தோஷப்படு. நம்மை எப்படியோ, திட்டியோ அல்லது நம்மை திருப்திப்படுத்த வேண்டுமென்று பாராட்டியோ, எப்படி செய்தி போட்டாலும், நம்மைப் பற்றி செய்தியே போடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தவர், போட்டுத்தான் தீர வேண்டும் என்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்களல்லவா? அதற்காக சந்தோஷப்படு என்று சங்கரய்யாவிடத்திலே பெரியார் சொல்வார்.

## குடிநீர்த் திட்டப் பணிகள்

அதைப்போலதான் அண்ணா ஒரு முறை சென்னை கடற்கரையிலே பேசும்போது சொன்னார். இன்றைக்குப் பத்திரிகைகளெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய்திகளை ஒரு வரி, இரண்டு வரியாவது போடுகிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இந்த ஏடுகளெல்லாம் ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாதுரையும் அந்தக் கூட்டத்தில் பேசினார் என்று ஒரு வரியிலேதான் என்னுடைய செய்திகளைப் போடுவார்கள். அவர்கள் இன்றைக்கு மாறியிருக்கிறார்கள் என்றால் மாற்றத்திற்குக் காரணம் நான் அல்ல தம்பிமார்களே, நீங்கள் தான் அந்த மாற்றத்திற்கு காரணம் என்று அண்ணா அவர்கள் சொல்லுவார்கள்.

இப்போது திருச்சி நகரத்திலே நேற்றும் கூட்டம், இன்றைக்கும் கூட்டம், நான்கூட தம்பி நேருவிடத்திலே கேட்டேன். என்னய்யா, 24 மணி நேரத்திற்குள்ளாக ஒரே நகரத்தில் இரண்டு கூட்டங்களா? இரண்டு விழாக்களா? மக்கள் வருவார்களா? என்று கேட்டேன். அந்தக் கவலை உங்களுக்கு ஏன் என்று சொன்னார். நான் திருச்சியில் இரண்டு கூட்டமல்ல, திருச்சி மாநகரத்தில் ஒரே நாளில் மூன்று கூட்டங்கள் போட்டாலும் கவலைப் படமாட்டேன். மக்கள் வருவார்கள் என்றார். ஏனென்றால் இன்றைக்கு மக்களுக்கு தமிழகத்திலே இருக்கின்ற எதிர்கால வாழ்வுக்கான நம்பிக்கை நட்சத்திரமாக தி.மு.கழகமும் அதனுடைய கூட்டணி அமைப்பும்தான் இருக்கிறது என்பதை நானும் அறிவேன். நீங்களும் அறிவீர்கள். அத்தகைய ஒரு சூழ்நிலையில் இன்று நாம் இந்தப் பெரும் மைதானத்தில் கூடியிருக்கின்றோம். இது உழவர் சந்தையை ஒட்டிய மைதானம். அண்ணாநகர், உழவர் சந்தை மைதானம். இந்த உழவர் சந்தை





மைதானத்தை உபயோகத்திற்குத் தகுதியில்லாமல் கூட ஆக்குவதற்கு சில சில காரியங்கள் எல்லாம் நடைபெற்று ஆனாலும் தமிழகத்திலே 103 உழவர் சந்தைகள் செயல்பட முடியாத அளவிற்கு செய்யப்பட்டாலும், கடந்து 5 ஆண்டு கால ஆட்சியில் திருச்சி உழவர் சந்தை மாத்திரம் தப்பித்துக்கொண்டது என்பதை நான் கேள்விப்பட்டேன். அப்படி தப்பிய காரணத்தால்தான் இன்றைக்கு இவ்வளவு பெரிய மாநாடு போன்ற ஒரு கூட்டத்தைத் தாங்குகின்ற அளவிற்கு இந்த உழவர் சந்தை மைதானத்திலே நாமெல்லாம் குழுமியிருக்கின்றோம்.

144 கோடி ரூபாய் குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணி ஆரம்பமாகி யிருக்கிறது என்று தம்பி ஸ்டாலின் இங்கே சொன்னார். ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய தொகை ரூ.144 கோடி! 144 என்பது கொஞ்சம் மிரட்டுகின்ற எண். அதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். தவறு செய்தால் ஒதுக்கப்பட்ட பணம் 144 என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் என்று தவறு செய்ய எண்ணுகிறவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் அல்லது அங்கத்தினர்களாக இருந்தாலும், அல்லது அன்பர்களாக இருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும் யாராக இருந்தாலும் 144 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை மனதிலே வைத்துக் கொண்டு அதை ஒழுங்காக, செம்மையாக, சீராக, செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

## வெள்ள சேதத் தடுப்புக்கு ரூ.87 கோடி

நண்பர்கள் எல்லாம் இங்கே குறிப்பிட்டதைப் போல் இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு, இன்னும் சொல்லப் போனால் கடந்த புயல் மழை தமிழகத்தைத் தாக்கிய போது திருச்சி மாநகரம் வெள்ளத்திலே மூழ்கிய போது நானும் கூட இடுப்பளவு தண்ணீரில் இந்தப் பகுதியிலே நடந்து வந்தேன். என்னை அழைத்து வந்தவர்கள், வேதனைப்பட்டார்கள், எந்த அளவிற்கு தலைவரை நனைய விட்டு, நீந்திச் செல்கிற அளவிற்கு நிலைமை ஏற்பட்டு, அதற்கு நாம் காரணமாக இருந்த விட்டோமே என்று கண் கலங்கினார்கள். கவலைப்படாதீர்கள், இந்தக் கண்ணீர் இப்போது பெருகியிருக்கிற தண்ணீரைத் துடைப்பதற்கு, இந்தப் பகுதியிலே வளத்தை உருவாக்குவதற்குப் பயன்படட்டும், அந்தப் பணியை ஆற்றுங்கள் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

அப்போது உய்யக்கொண்டான் சீர்படுத்தப்பட வேண்டுமென்ற மனுக்களை நான் சென்ற திக்கெல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் என்னிடம் அளித்தார்கள். தம்பி துரைமுருகன் அப்போது என் பக்கத்திலே இருந்த காரணத்தால் உடனடியாக துரைமுருகனிடம் சொல்லி, இந்த உய்யக்கொண்டான் ஆற்றை ஒழுங்குபடுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணித்தேன். அன்றைக்கு அவர் எடுத்த முயற்சி உடனடியாக பலிக்காமல் போனதற்குக் காரணம், நீங்கள் அதன் பின் உடனடியாக எங்களை வீட்டுக்கு அனுப்பி விட்டீர்கள், அது தான் காரணம்.

உய்யக்கொண்டான் வந்தால், உய்வதற்கு முடியும், திருச்சி மாநகரம் உய்யும், மக்கள் உய்வார்கள், ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற குடிசைகளுக்கெல்லாம் நற்கதி ஏற்படும் என்கின்ற அந்த நிலையில் நீங்கள் செய்த காரியம் நாங்கள் தொடர்ந்து ஆட்சியிலே அமர முடியாமல், உய்யக்கொண்டானை நாங்கள் தொடர முடியவில்லை.

ஆனால் இன்றைக்கு உய்யக் கொண்டானை மீண்டும் தொடருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, இன்னும் சொல்வேன், குடமுருட்டி கால்வாய்கள் வழியாக ஏற்படும் வெள்ள சேதத்தைத் தடுப்பதற்கு 87 கோடி ரூபாய்க்கு அரசாணை 27-9-2007 அன்று பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றைக்கு அரசு மீண்டும் வரும், உய்யக் கொண்டானும் வரும் என்று சொன்னேன். அரசு மீண்டும் வராததற்கு நான் காரணமல்ல, நீங்கள் காரணம். வராத காரணத்தால், உய்யக்கொண்டான் அப்படியே உட்கார்ந்துவிட்டது. இன்றைக்கு மீண்டும் வந்த காரணத்தால் உய்யக்கொண்டானுக்கு உய்வு ஏற்பட்டிருக்கின்றது. அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது. பணி தொடங்கப்படவுள்ளது.

அது மாத்திரமல்ல, கரூர், திருச்சி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் காவேரி, கொள்ளிடம் ஆகிய ஆற்றுக் கரையை பலப்படுத்த 207 கோடி ரூபாய்க்கு நபார்டு ஒப்புதல் தர வேண்டுமென்று கேட்டிருந்தோம். இந்த நல்ல நேரத்தில் அந்த நல்ல செய்தியைச் சொல்லுகிறேன். அந்த ஒப்புதலும் நபார்டு மூலமாகக் கிடைத்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டாலின் பேசியதை விட புதுச் செய்தி சொல்ல வேண்டுமல்லவா? அதனால் இதைச் சொல்லுகிறேன்.

### அழகாக சீர்படுத்தப்பட்டுள்ள குளம்

கட்டடப் பிரிவில் அடிக்கல் நாட்டும் புதிய புதிய திட்டங்களின் திறப்பு விழா மதிப்பீடு இன்றைக்கு 30 கோடி ரூபாய் ஆக இன்றைய தினம் பொதுப்பணித் துறையின் மூலமாக மட்டும் 118 கோடி ரூபாய்க்கு வேலைகள் தொடங்கப்படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற பணிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம். இங்கே மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் மக்கள் பணியிலே நல்ல ஆர்வம் படைத்தவர். இளைஞர். அவர் ஒரு அழகான புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். ஒரு தொகுப்பு நூல். அந்த நூலில் பல வண்ணப் படங்கள், பளபளப்பான படங்கள்—வெறும் பளப்பளப்பு மாத்திரம் என்னைக் கவரவில்லை. என்னைக் கவர்ந்தவைகள், திருவரம்பூரில் வெட்டப்பட்டிருக்கின்ற குளம். மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்ற அந்தக் குளத்தைப் பார்த்தேன். மஞ்சத் திடல் குளத்தைப் பார்த்தேன். திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமப் பகுதியிலே இருக்கிறோமா? அல்லது சிகாகோ போயிருந்த போது, அங்கே அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் இருக்கிறோமா என்கின்ற அளவிற்கு அவ்வளவு அழகாக இந்தக் குளம் சீர்படுத்தப்பட்டிருக்கின்றது.

இப்படி இந்தப் புத்தகம் முழுவதும் குளங்கள், நீர்நிலைகள், வாய்க்கால்கள் எல்லாம் வளமாக எழிலோடு அத்தனையும் செம்மைப்படுத்தப் பட்டிருக்கின்றன, சீர்படுத்தப் பட்டிருக்கின்றன. இங்கு மாத்திரமல்ல நான் மாமல்லபுரம் பக்கத்திலே காஞ்சிபுரம் மாவட்டத்திலே சில பகுதிகளை இரண்டு வாரத்திற்கு முன்பு சென்று பார்த்தேன். தம்பி ஸ்டாலினும், நம்முடைய அருமை நண்பர் ஆர்க்காட்டார் அவர்களும், தம்பி துரைமுருகனும், தம்பி பொன்முடியும், தம்பி வேலுவும் என்னோடு வந்தார்கள். அவர்களோடு அந்தக் குளத்தைச் சென்று நான் பார்த்த போது எந்த அளவிற்கு அந்தக் கிராமம் எழில் பெற்றிருக்கிறது, வசதி வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறது. வசதி என்றால் சாதாரணமல்ல, அந்த ஊரிலே யாராவது இறந்து விட்டால் அவர்களைக் கொண்டு போய் புதைக்க அல்லது தகனம் செய்ய இந்த இரண்டு காரியங்களுக்காகக் கட்டப்பட்டிருக்கின்ற அந்த மேடை இருக்கிறதே, அந்த மேடைக்கு மேலே கட்டப்பட்டுள்ள மண்டபம் இருக்கிறதே, அதையெல்லாம் பார்த்தபோது நாமே கூட சாகலாம் போல் இருக்கிறது. அவ்வளவு அழகான எழில் மயமான அற்புமான வசதிகள் நிறைந்த மயானத்திற்கு யாராவது சென்றால், பிணத்தை எடுத்துக் கொண்டு போய்ப் புதைக்கவோ எரிக்கவோ சென்றால், செல்லுகின்ற ஊரார் அந்தக் கிராமத்து மக்கள் அங்கே உட்கார, ஓய்வு பெற, தண்ணீர் அருந்த ஏன் சாப்பிடக் கூட அவ்வளவு வசதிகளோடு, தகனம் செய்கின்ற இடம் அல்லது சமாதி வைக்கின்ற இடம் கூட அங்கே அமைக்கப்பட்டுள்ளது.

### அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அங்கேயுள்ள ஒரு குளம், பெரிய பணக்காரர்கள் வீட்டிலே உள்ள நீச்சல் குளத்தைப் போல அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எந்தத் திட்டத்திலே வந்தவைகள் என்றால் கிராம ஊராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக செய்யப்பட்டவை. அதைப் போல இப்போது பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – இந்த இரண்டு திட்டங்களும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொரு பகுதியிலும் நிறைவேறுகின்ற காரணத்தால், அந்தந்த பகுதிகளிலே இருக்கின்ற



கிராமப்புற மக்கள் எல்லாம் ஏற்றமிகு வாழ்வு காண்கிறார்கள். எழில் குலுங்கும் ஊர்களைக் காணுகிறார்கள், தோட்டங்களைக் காணுகிறார்கள். குரோட்டன்ஸ் செடியே பார்க்காதவர்கள் எல்லாம், தோட்டங்களிலே குரோட்டன்ஸ் செடிகளை வைத்து, அதைப் பார்த்து மகிழ்கிறார்கள். அதையெல்லாம் பார்க்கும் போது நமக்கும் அவர்கள் கொள்கின்ற மகிழ்வில் – ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றாரே அண்ணா, அதைப்போல கிராமப்புறத்திலே இருக்கின்ற அந்த ஏழைகளின் சிரிப்பில் நான் இறைவனைக் கண்டேன், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு மாமல்லபுரம் பகுதியிலே நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட போது.

இது ஒரு மாமல்லபுரம் பகுதிக்கு மாத்திரம் போதாது. அதைப் போல ஒரு திருச்சி, திருவரம்பூர் பகுதிக்கு மாத்திரம் போதாது. தஞ்சையின் ஒரு வல்லம் பகுதிக்கு மாத்திரம் போதாது, தமிழ்நாடு முழுதும் இப்படிப்பட்ட நீர்த்தேக்கங்கள், வசதி வாய்ப்புகள், நகர்ப்புறத்திலே கிடைக்கின்ற அவ்வளவு வசதிகளையும் இந்தியாவின் முதுகெலும்பு என்று சொன்னாரே உத்தமர் காந்தி அடிகள், அந்த முதுகெலும்பாம் கிராமப்புறத்திலே இருக்கின்ற சாதாரண ஏழைக்கும் கிடைத்தாக வேண்டும். அப்போது தான் நாம் உண்மையான சுதந்திர இந்தியாவிலே வாழ்கிறோம் என்று பொருள். அப்போதுதான் நாம் உண்மையான தமிழ்நாட்டில் தமிழர்களுக்கு மத்தியில் வாழ்கிறோம் என்று பொருள். அந்த நிலையை நோக்கித்தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடைபோடுகின்ற நேரத்தில் தம்பி ஸ்டாலின் இங்கே சொன்னதைப் போல் ஆங்காங்கு சில இடையூறுகள், தடங்கல்கள் தோன்றலாம். இது சகஜம். அதற்காக நாம் நம்முடைய பணிகளை விட்டு விலகிட முடியாது.

வீட்டுக்குள்ளே தாய், பொங்கலுக்காக மா கோலம் போடுவாள். அப்படி மா கோலம் போடுகின்ற நேரத்தில், அவள் பெற்ற குழந்தை, இரண்டு வயது அல்லது மூன்று வயது குழந்தை விளையாட்டாக அல்லது விஷமத்தனமாக அந்தக் கோலத்தை ஒரு பக்கத்திலே அழித்துக்கொண்டே இருக்கும். அந்தக் கோலத்தை அழிக்கிறதே குழந்தை என்பதற்காக அந்தக் குழந்தையை அவள் அடிக்கமாட்டாள், அதற்காக குழந்தையைத் தூக்கி ஒரு புறத்திலே உட்கார வைத்துவிட்டு கோலத்தை அவள் தொடருவாள், கோலத்தைப் போட்டு முடிப்பாள். அதைப் போலத் தான் இந்த அரசு, இந்த ஆட்சியிலே இருக்கின்ற அமைச்சர்கள், இந்த ஆட்சிக்கு துணையாக இருக்கின்ற தோழமைக் கட்சிகளின் நண்பர்கள் அத்தனை பேரும் கோலம் போடுகிறோம், சேர்த்து கோலம் போடுகிறோம், அப்படி போடுகின்ற அந்தக் கோலத்தை குழந்தைத் தனமாக யாராது அழிப்பார்களானால், பாவம் குழந்தை தானே என்று தூக்கி ஒரு புறத்திலே உட்கார வைத்து விட்டு, கோலத்தை முடிப்போமே தவிர, வீட்டை அலங்கோலமாக ஆக்கமாட்டோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலத் தான் நாட்டையும் நாங்கள் கவனிப்போம், வாழ வைப்போம். அதற்கு எங்களுக்கு தேவையான காலத்தை இயற்கை வழங்குமேயானால், அதைப் பயன்படுத்திக் கொள்வோம்.

இந்த ஆட்சி உடனடியாக விலக்கப்பட வேண்டும், இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும், இப்படிப்பட்ட அருமையான வசனங்களை சில பேர் பெரிய மனிதர்கள் குறிப்பாக பா.ஜ.க. வின் தலைவர்கள், அத்வானி போன்ற நண்பர்கள், வாஜ்பாயைத் தவிர மற்றவர்கள் – குடியரசுத் தலைவரிடம் சென்று கருணாநிதி ஆட்சியை உடனடியாகக் கலைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏன் தெரியுமா? இங்கே பேசினார்களே, அரிசி விலை கிலோ இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள், ஆகவே கலை – கருணாநிதி ஆட்சியைக் கலைத்து விடு – ஏன்? கிராமங்கள் தோறும் நீர் நிலைகள், குளங்களை வெட்டுகிறார்கள், ஆகவே கருணாநிதி ஆட்சியைக் கலைத்துவிடு. ஏன்? கருணாநிதி ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்கிறாய் என்று கேட்டால், அவர்கள் இலவச மின்சாரம் தருகிறார்கள், ஆகவே கலைத்துவிடு என்று ஏன் சொல்கிறார்கள் என்றால் மிக முக்கியமான காரணம், கோவில்களிலே அர்ச்சகர்களாக ஆதிதிராவிடர்களும் வரலாம் என்று சொல்லுகிறார்கள், ஆகவே கருணாநிதி ஆட்சியைக் கலைத்து விடு, ஏன் ஆதிதிராவிடர்கள் வந்தால் என்ன? கோவிலுக்குள்ளே நந்தன் வரவில்லையா? நந்தன் விதி விலக்கு. நாங்கள் அதை அனுமதிக்கவில்லை, இப்போதும் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள்.

### தமிழ்நாட்டை வாழவைக்கும் திட்டம்

தமிழில் அர்ச்சனை செய்யச் சொல்கிறான் கருணாநிதி, ஆகவே ஆட்சியைக் கலைத்து விடு என்கிறார்கள். இதையெல்லாம் விட முக்கியமாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று கல்வியில், வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு இருந்ததை, இந்துக்களுக்கு மாத்திரமல்ல, முஸ்லீம்களுக்கும் உண்டு, கிறித்தவர்களுக்கும் உண்டு என்று ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கிறான், ஆகவே அந்த ஆட்சியைக் கலைத்து விடு, அந்தச் சட்டம் தான் நீதி மன்றம் வரை போய், அது செல்லும் என்று தீர்ப்பளித்து விட்டார்களே, பிறகு ஏன் கலைக்கச் சொல்கிறாய் என்று கேட்டால், எங்களுக்குப் பிடிக்கவில்லை, நாங்கள் இந்துக்களைப் போல் கிறித்தவர்களை, முஸ்லீம்களை படிப்பறிவு உள்ளவர்களாக வேலைவாய்ப்புப் பெற்றவர்களாக இருப்பதை எங்களால் பார்க்க முடியாது. நாங்கள்

எல்லாம் இந்துக்கள். எங்களால் இதைத் தாங்கிக் கொள்ள முடியாது, ஆகவே ஆட்சியைக் கலைத்து விடு என்கிறார்கள்.

இவ்வளவிற்கும் மேலாகத்தான் நான் நேற்றைக்கு திருச்சியில் சொன்னதைப் போல, இன்று காலையில் வல்லத்தில் ஓரளவு விளக்கியதைப் போல் மிகப் பெரிய திட்டம், தமிழ்நாட்டை வாழ வைக்கக் கூடிய திட்டம், பிரமாண்டமான திட்டம், ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாயில் நிறைவேற வேண்டிய திட்டம் – சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் அல்ல, என்னுடைய தலைவர் அறிஞர் அண்ணா காலத்திலிருந்து இன்று வரையில் கேட்கப்படுகின்ற திட்டம், பல பொறியாளர்கள், பல விற்பன்னர்கள், வித்தகர்கள், விஞ்ஞானிகள், வரலாற்றுப் பேராசிரியர்கள் அத்தனை பேரும் எடுத்துச் சொன்ன திட்டம் – அந்தத் திட்டம் வந்தால் தமிழ்நாடு வாழும். தமிழ்நாடு உலகத்திலே இருக்கின்ற வேறு பல நாடுகளைப் போன்ற ஒரு வல்லரசாக மாறக் கூட தமிழ்நாட்டிற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டின் வளம் பெருக சேது சமுத்திரத் திட்டம் தேவை, அப்போது தான் தமிழன் தமிழனாக நடமாட முடியும்.

ஒரு காலத்திலே திராவிடத்தின் உலகத் தொடர்புகள் என்பதைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் எனக்கு ஆணையிட்டு திருச்சி மாநாட்டிலே பேசும்படி சொல்லி, இங்கே நான் பேசும்போது திராவிடத்தின் உலகத் தொடர்புகள் பற்றி 1956 ஆம் ஆண்டு திருச்சி மாநில மாநாட்டில் அந்தத் தலைப்பிலே பேசும்போது நான் குறிப்பிட்டேனே அந்தத் தொடர்புகள் எல்லாம் திராவிடத்துத் தொடர்புகள் எல்லாம் மீண்டும் நிலைநாட்டப்பட, மீண்டும் வர, நாம் வளர வாழ ஏழையெளியவர்கள், இல்லாதவர்கள், ஏதுமற்றவர்கள் அவர்கள் எல்லாம் வளம் பெற செல்வநாடுகளோடு போட்டி போடக் கூடிய அளவிற்கு நாமும் செழிப்படைய ஒரு திட்டம், ஒரு பெரிய திட்டம் வரப்பிரசாதம்போல் நமக்கு இயற்கை கொடுத்த திட்டம்–

அந்தத் திட்டம் நிறைவேறினால் தமிழன் தலைநிமிர்ந்து நிற்பான் என்று பொறாமை கொண்ட – அசூயை கொண்ட சிலபேர் இன்றைய தினம் அந்தத் திட்டத்தை இராமர் பெயரைச் சொல்லி அழிக்கப் பார்க்கிறார்கள், கெடுக்கப்பார்க்கிறார்கள். நாமும் இராமர் பெயரை அதற்காக தேவையற்ற முறையிலே பயன்படுத்தவில்லை. இராமருக்கும் அதற்கும் சம்மந்தமில்லை. இராமர் கோயிலிலே இருக்கிறார். அனுமார் கோயிலிலே இருக்கிறார். இராமர் நமக்குப் பிடிக்கவில்லை என்றால் பிள்ளையார் மாத்திரம் பிடிக்கிறாரா நமக்கு? பிள்ளையார் பிடிக்கவில்லை என்றால் தமிழ்நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிலே பிள்ளையார் சதுர்த்தி விழா நடைபெற்று வருகிறதா இல்லையா? அதையா போய் தடுத்தோம்.

### கடைசித் தமிழன் உள்ளவரை போராடுவான்

பிள்ளையார் சதுர்த்தி வேண்டாம் என்றா சொன்னோம். பெரியார் பிள்ளையார் சிலையை உடைக்க வேண்டும் என்று சொன்னபோதுகூட, பிள்ளையார் மீது எங்களுக்கு எந்தக் கோபமும் இல்லை. பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டோம், பிள்ளையாரையும் உடைக்கமாட்டோம் என்று சொன்னவர் நம்முடைய தலைவர் பேரறிஞர் அண்ணா. அந்த வழியிலே அரசியல் நடத்துகிறவர்கள் நாம். எனவே இராமர் மீது நமக்கு எந்தக் கோபமும் இல்லை. கோபம் இருப்பதாகக் காட்டிக் கொண்டு நம்முடைய அருமையான திட்டத்தை – நம்மை வாழ வைக்கக்கூடிய திட்டத்தை – வருங்காலத்திலே தமிழகத்தை செல்வ பூமியாக ஆக்கக்கூடிய திட்டத்தை, இப்போது கருவிலே அழித்துவிட வேண்டுமென்று ஒரு கூட்டம் – ஒரு குள்ளநரிக் கூட்டம், ஒரு குடிலர் கூட்டம் இன்றைக்கு இந்தியாவிலே குறிப்பாக தமிழ்நாட்டிலே அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா இந்தத் திட்டத்தை சேதுசமுத்திரத் திட்டத்தை வேண்டுமென்று வலியுறுத்தி போர்க்குரல் கொடுத்தபோது ஆமாம், இந்தத் திட்டம் வேண்டுமென்று சொன்னவர்கள் இன்றைக்கு வேண்டாமென்று சொல்வதற்குக் காரணம் இந்தத் திட்டம் வந்தால் சோனியா காந்திக்குப் புகழ் வந்துவிடும், இந்தத் திட்டம் வந்தால் மன்மோகன் சிங்கிற்குப் புகழ் வந்து விடும், இந்தத் திட்டம் வந்தால் கருணாநிதிக்குப் பெயர் வந்துவிடும் என்கின்ற நல்ல (?) பொறாமை உள்ளம் இவர்களெல்லாம் காந்தாரிகளாக மாறி அந்தத் திட்டத்திற்கு அணைபோட எண்ணுகிறார்கள்.

ஆனால் நான் சொல்கின்றேன், கடைசித் தமிழன் உள்ள வரை அந்தத் திட்டத்திற்காக போராடுவான்– வாதாடுவான் அந்தத் திட்டத்திற்காக தன்னை ஒப்படைத்துக் கொள்வான் என்பதை மாத்திரம் அந்தச் சூளுரையை மாத்திரம் இந்த மாநாடு போன்ற பொதுக் கூட்டத்தில் – பொதுவிழாவில் உங்களுக்கு எடுத்துச் சொல்லி நம்முடைய திட்டங்கள் – அரசின் செயல்திட்டங்கள், நலத்திட்டங்கள் இவற்றைப் பற்றியெல்லாம் நம்முடைய அமைச்சர் பெருமக்களும், நண்பர்களும் இங்கே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் (ஒலிபெருக்கி நின்றது) ஒலிபெருக்கிக்கு தடங்கல் வந்ததுபோல சேதுசமுத்திரத் திட்டத்திற்கும் இடையில் தடங்கல் வந்துள்ளது. மீண்டும் இப்போது ஒலிபெருக்கி வந்துள்ளது. சேது சமுத்திரத் திட்டம் என்ற இனிய திட்டமும் மீண்டும் வந்தது என்ற தென்றலோடு கலந்த இனிய செய்தியும் நம்முடைய இதயங்களில் வீசும் என்ற அந்த நம்பிக்கையோடு உங்களிடம் இருந்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.



## கடந்த ஓராண்டு கால கழக அரசு 11 நிறுவனங்களுடன் 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டில் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் மூலம் 1 இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளது




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் அறிவிப்பு.

திருப்பெரும்புதூர் கெபாரோ பொறியியல் கம்பெனியின் அலுவலகங்களைத் திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தருணத்தில் சுவராஜ்பால் அவர்கள் இங்கே இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் தமிழகத்தின் நலனில் மிகவும் நாட்டம் கொண்டவராவார்.

### 1,500 தொழிலாளர்களுக்கு வேலை

இந்தத் திட்டத்தை விரைவாக அமல் நடத்தியமைக்காக கெபாரோ நிறுவனத்தைப் பாராட்டுகிறேன். கெபாரோ நிருவாகம் மேலும் இன்னொரு திட்டத்தை மோட்டார் தொழில் உதிரிபாகங்கள் தயாரிப்புக்காக ஒரகடம் பகுதியில் அமைக்கவிருக்கிறது. அதற்காக ரூ.300 கோடி முதலீடு செய்யவிருக்கிறது. இந்த இரண்டாவது திட்டத்திற்காக கெபாரோ நிறுவனம் தமிழக அரசுடன் 8.3.2007 அன்று ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒரகடம் திட்டம் 2008–ஆம் ஆண்டு பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றப்பட உள்ளது. இந்த ஒரகடம் திட்டமும், திருப்பெரும்புதூர் நிறுவனமும் சேர்ந்து சுமார் 1,500 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எங்களது அரசு மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில், தொழில் வளர்ச்சியைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. "சிப்காட்" வளாகத்தில் கெபாரோ நிறுவனம் அதன் உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்க முன்வந்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை பகுதியில் அவர்கள் கேட்டிருந்த 20 ஏக்கர் நிலம் சிப்காட்

நிறுவனத்தால் அளிக்கப்பட்டுள்ளது. இந்த முன் முயற்சிக்காக கெபாரோ நிறுவனத்தைப் பாராட்டுகிறேன். அரசு அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்த முன் முயற்சிக்காக அளிக்கும்.

எங்களது அரசு கடந்த 2006–ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கெபாரோ உள்பட 11 நிறுவனங்களுடன் 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டுக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இந்த பதினோறு திட்டங்களும் ஒரு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் என்று நம்பப்படுகிறது. மேலும் பல திட்டங்கள் பேச்சுவார்த்தையில் உள்ளன. வருகின்ற மாதங்களில் நாங்கள் இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் பல்வேறு முதலீட்டுத் திட்டங்களை அறிவிக்க இருக்கிறோம்.

**திட்டங்கள் விரைந்து நிறைவேற்றம்**

நாங்கள் வெறுமனே புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதுடன் நிற்கமாட்டோம். எங்களது அரசு அந்தத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு அழுத்தம் கொடுக்கிறது. அரசின் ஒற்றைச்சாளர முறை துரிதமாக்கப்பட்டுள்ளது. எங்களது அரசின் இந்தச் செயலூக்கம் கொண்ட அணுகுமுறையை எடுத்துக்கூற நான் கீழ்க்கண்டவற்றை உதாரணங்களாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாங்கள் **7.6.2006** அன்று அமெரிக்காவின் "மோட்டோரோலோ" நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். அவர்கள் அவர்களுடைய திருப்பெரும்புதூர் ஆலையிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாகவே உற்பத்தியைத் தொடங்கிவிட்டார்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

**14.9.2006** அன்று அமெரிக்காவின் 'டெல்' நிறுவனத்துடன் கம்ப்யூட்டர் பாகங்களைத் தயாரிக்க ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். அவர்கள் வணிக ரீதியான உற்பத்தியை 2007–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கிவிட்டார்கள்.

**19.9.2006** அன்று நாங்கள் தொழில் ரீதியான பின்தங்கிய பகுதியான செய்யார் என்ற இடத்தில் காலணி உற்பத்தித் தொழிற்சாலையைத் துவக்க "குரோத் – லிங்க் ஓவர்சீஸ்" லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். இந்தத் திட்டத்தின் மூலம் 15,000 பேர்களுக்கு, மிகப் பெரும்பாலும் கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தத் திட்டம் கட்டுமானப் பணியில் மிக முன்னேறிய நிலையில் இருக்கிறது. வரும் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதவாக்கில் உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**10.11.2006** அன்று நாங்கள் மின் அணுவியல் பொருட்களை மிக அதிக அளவில் உற்பத்தி செய்யும் கொரியா நாட்டைச் சேர்ந்த "சாம்சங்" நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். அவர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை 2007–ஆம் ஆண்டு 6–ஆம் தேதி வணிக ரீதியில் உற்பத்தி செய்யத் துவங்கிவிட்டார்கள் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**உலகத்தரத்தில் உள்கட்டமைப்பு வசதிகள்**

நாம் மாநிலத்தின் மேலும் தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் 2007–ஆம் ஆண்டுக்கான புதிய தொழிற் கொள்கையை வெளியிடப் போகிறோம் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கொள்கை பரந்த அளவிலான ஆலோசனைக்குப் பிறகு உருவாக்கப்பட்டது.

தொழில் அமைப்புகள் மற்றும் என் தலைமையிலான தொழில் அமைப்புகளின் தலைவர்களது ஆலோசனையிலும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்தக் கொள்கை அனைத்துப் பிரிவினரின் நலன்களையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. எங்களது கவனம் தொழில்களின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு உலகத் தரத்திலான நவீன

இதன் தொடர்ச்சி 45ஆம் பக்கத்தில்





# எனக்குத் தெரிந்ததெல்லாம் தமிழ்நாட்டு வளர்ச்சிதான்

...தமிழ்நாடு ...
...லைஞர் அவர்களின் ...

ன்று சேலத்திலே நடைபெற்றுக் கொண்டிருப்பது ஒரு அரசு விழாவா? அல்லது வழக்கம் போல் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் நடத்திக் காட்டுகின்ற ஒரு அரசியல் மாநாடா? என்பது எனக்கும் புரியவில்லை, உங்களுக்கும் புரிந்திருக்க நியாயம் இல்லை, பலர் வியப்புறும் வண்ணமும், சுப்புலட்சுமி போன்றவர்கள் பொறாமைப்படுகின்ற வகையிலும், இந்த விழா நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

உள்ளபடியே இந்த விழாவில் ஒரு கோடி ரூபாயை சேலம் மாவட்ட தி.மு.கழகம் சார்பாக தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் கழக முன்னணியினர் பலரை கலந்துகொண்டு பெரியார் வழியில் ஆய்வு நடத்த, அண்ணா வழியில் ஆய்வு நடத்த ஒரு ஏற்பாட்டை அந்த ஒரு கோடி ரூபாயை முதலீடாகக் கொண்டு, வருகின்ற வட்டியிலிருந்து நடத்தவேண்டும் என்று கூறி அதை பெரியார் பல்கலைக்கழகத்திற்கு என் வாயிலாக இன்றைய தினம் வழங்கியிருக்கின்றார்.

இந்த மக்கள் நல்வாழ்வு நிதியளிப்பு விழா மாநாட்டில் இது மற்றொரு நிதியளிப்பு விழாவாகும். ஒன்று மக்கள் பிரச்சினைக்காக நடைபெற்ற நிதியளிப்பு விழா, அவர்களுடைய பொருளாதாரத் துறையில் அவர்களுடைய சமுதாயத் துறையிலே, அவர்கள் மேலோங்கி நிற்பதற்கு வாழ்வதற்கு வழியமைப்பதற்கு நடைபெற்ற நிதியளிப்பு விழா, என்னிடத்திலே வழங்கி பெரியார் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அந்த அறக்கட்டளைக்காக நிதியளிப்பு விழா, இப்பொழுது இருக்கின்ற மக்கள் பிரச்சினைக்காக அல்ல, இப்பொழுது வாழுகின்ற மக்களுக்காக அல்ல. எதிர்காலத்திலே, அதாவது வருங்காலத்திலே வாழப்போகிற மக்களுக்காக, இளஞ்செல்வங்களுக்காக, அவர்களுக்கு எத்தகைய பகுத்தறிவு நீரூற்றி அவர்களையெல்லாம். பசுமையாக வளர்க்க வேண்டும் என்பதற்காக அடிகோலுகின்ற ஆக்கப் பூர்வமான ஏற்பாடுகள் அது என்பதை நான் இங்கே உறுதிப்படுத்திக் கொள்கிறேன்.

தம்பி வீரபாண்டி ஆறுமுகம் இப்படிப்பட்ட ஒரு ஆழமான முயற்சியிலே இன்றைக்கு ஈடுபட்டு அதை நிறைவேற்றியிருக்கிறார் என்பதை எண்ணும்போது நான் மற்ற நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஆடம்பரத்திற்கு, ஆக்கப்பூர்வமற்ற வேலைகளுக்கு ஆரவாரம் என்று மாத்திரம் இடம் அளித்து பணத்தையோ அல்லது உழைப்பையோ செலவிடுவதைவிட எதிர்காலத் தலைமுறையை வாழவைக்க, இருண்டு கிடக்கின்ற சமுதாயத்தை விளக்கேற்றி வைத்து நடமாடச் செய்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இவர்களுடைய வழியிலே நடமாடச் செய்ய நாம் நம்முடைய உழைப்பை, நம்முடைய முயற்சியை, நம்முடைய அறிவை, ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு இந்த நாள் ஒரு தூண்டுதலாக இருக்கும் என்றும், அந்த ஊக்க உணர்வை தம்பி வீரபாண்டி ஆறுமுகம் இன்றைக்குச் செய்து காட்டியிருக்கின்ற இந்தக் காரியத்தின் மூலம் அனைவரும் பெற வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதாவது எனக்கு என் பெயரால் அறக்கட்டளைகள் அமைத்து அதிலே ஆய்வரங்கங்கள் நடத்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை. பொதுவாக ஆய்வு அரங்கங்கள் நடத்தப்பட்டு அந்த மன்றங்களிலே பல்வேறு விஷயங்கள் அலசி ஆராயப்பட்டு, வாழ்ந்த தமிழன் வீழ்ந்தது ஏன்? அந்த வீழ்ந்த தமிழனை மறுபடியும் வாழவைப்பது எவ்வாறு என்ற இவைகளுக்கெல்லாம் விடை காணுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்த இன்றைக்கு நாம் கொடியேற்றியிருக்கிறோம். அந்தக் கொடி சேலத்திலே ஏற்றுவது மிகமிகப் பொருத்தமான ஒன்று என்பதிலே இருவேறு கருத்துக்கு இடமில்லை.

திராவிட இயக்கம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறது தமிழகத்தில். இது திராவிட இயக்கத்தின் ஆட்சி என்று ஒத்துக்கொள்ளாதவர்கள் சிலபேர் இருக்கிறார்கள். இந்த அரசை " மைனாரிட்டி அரசு" என்றும், இது எண்ணிக்கையிலே குறைந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற காரணத்தால் ஏளனத்திற்கு உரியதாக "மைனாரிட்டி அரசு" என்று அழைக்கப்படக்கூடிய அரசு என்று இன்றைக்கும் எழுதுகிறார்கள், பேசுகிறார்கள், அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

### அருமையான பிரகடனம்

நான் கூட சட்டசபையிலே சொன்னேன். மைனாரிட்டி அரசுதான், அதை விரைவிலே நிரூபிப்போம் என்று சொன்னேன், இன்றைக்கு நம்முடைய கோ.க.மணி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். மற்றவர்களும் சொன்னார்கள். ஒரு அருமையான பிரகடனத்தை செய்துவிட்டு முதலமைச்சர் இங்கே வந்திருக்கிறார் என்று பாராட்டினார்கள். அவரைப் போலவே பல தலைவர்கள் நேற்றைய தினம் நான் வெளியிட்ட பிரகடனத்தை இன்றைக்குப் பாராட்டியிருக்கின்றார்கள்.

நேற்றைக்கு வரிசை வரிசையாக இஸ்லாமியப் பெரியோர்களும், கிறித்தவப் பெரியோர்களும் என் இல்லம் நாடிவந்து உள்ளம் திறந்து உவகை பொங்க என்னை வாழ்த்தியிருக்கின்றார்கள். எதற்குத் தெரியுமா? சொல்லித் தெரியவேண்டியதில்லை உங்களுக்கே தெரியும்.

நீண்ட நாட்களாக இருந்த வந்த ஒரு கோரிக்கையை இன்னும் சொல்லப்போனால் அன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சி ஆண்டபோது, நீதிக் கட்சியினுடைய ஆட்சி நடைபெற்ற போது எந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அன்றைக்கு இருந்ததோ, அது இடையிலே கவிழ்ந்து போய் மாறிப்போய், இருட்டடிப்புச் செய்யப்பட்டு இல்லாமல் போனதோ அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் படிப்பில், வேலைவாய்ப்பில் இஸ்லாமியர்களுக்கு எவ்வளவு இடம், பிராமணர்களுக்கு எத்தனை இடம், பிராமணர்கள் அல்லாதாருக்கு எத்தனை இடம், கிறிஸ்தவர்களுக்கு எத்தனை இடம், ஆதிதிராவிடர்களுக்கு எத்தனை இடம் என்ற நிலை ஜஸ்டிஸ் கட்சி ஆண்டபோது எத்தனை இடங்கள் இருந்ததோ அந்த இடம் ஏன் இருந்தது, எப்படி இருந்தது, எந்த வகையிலே பிரிக்கப்பட்டு இருந்தது என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்து இடையிலே அதற்கு வந்த ஆபத்து என்ன, யாரால் வந்தது, எந்த நீதிமன்றத்தால் வந்தது, அந்த ஆபத்தை எதிர்த்து, காத்து இன்றைக்கு மறுபடியும் நம்மிடத்திலே அதனுடைய மூலப்பொருளை வழங்கியது யார்? அந்த மூலப்பொருளை பயன்படுத்திக் கொண்டு இன்றைக்கு நாம் பெற்றிருக்கின்ற வெற்றியினுடைய ஒரு பகுதிதான் இஸ்லாமியர்களுக்கு கிறித்தவர்களுக்கு இரண்டு சமுதாயத்தினருக்கும் சேர்த்து 7 சதவிகிதம் கல்வியில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு என்பதாகும்.

இப்பொழுது புரிகிறது அல்லவா? நம்மை" மைனாரிட்டி அரசு" என்று சொன்னார்களே இஸ்லாமியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் மைனாரிட்டி சமுதாயம் என்று ஒரு பெயரே உண்டு. அந்த மைனாரிட்டி சமுதாயத்திற்காகப் பாடுபட்டு அவர்களுக்காக இன்றைக்கு இடஒதுக்கீடு செய்திருக்கிறோம் அல்லவா, அதனால்தான் நாம் மைனாரிட்டி அரசு என்பதற்கு மிகமிகப் பொருத்தமானோம். இந்தப் பெயரிட்டு அழைத்தவர்களுக்கு எங்களுடைய தாயார் தகப்பனார்கூட எங்களுக்கு இந்த பொருத்தமான பெயரை வைத்ததில்லை. இவர்கள் இந்தப் பொருத்தமான பெயரை "மைனாரிட்டி அரசு" என்று அழைத்தற்காக அவர்களுக்கு நாம் இந்த மாபெரும் மக்கள் வெள்ளத்திலிருந்து அவர்கள் இருக்கும் திக்கு நோக்கி நன்றி கூறிக்கொள்கிறேன். எங்கு இருக்கிறார்களோ தெரியாது? இருந்தாலும் அந்த திக்கு நோக்கி நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.



[illegible]

இந்த இயக்கம், இந்த அரசு, இந்த அரசை நடத்துகின்ற இந்தக் கட்சி, தோழமைக் கட்சிகளுடைய உதவியோடு அவர்களுடைய ஆதரவோடு தேர்தலில் நின்று வென்று அவர்களும் நாங்களும் இணைந்து இந்த அரசை உருவாக்கி ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு காலமாக நடைபெற்று வருகின்றது. இந்த ஒன்றரை ஆண்டு காலத்திலே என்னென்ன வசதிகளை மக்களுக்குச் செய்கிறோம் என்பதிலே ஒரு பகுதிதான் இங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சியினுடைய வெளிப்பாடு.

வீரபாண்டி ஆறுமுகம் எப்படியோ இவைகளையெல்லாம் சாதித்து விட்டார். இத்தனை காரியங்களை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்றெல்லாம் பொறாமைப்பட்டுப் பயனில்லை. அவரைப்போல் என்னையாரும் பிடிவாதமாக வந்து நெருக்கடி கொடுக்க வேண்டாமென்று யாருக்கும் சொல்லவில்லையே. யார் வந்தாலும் அவர்களோடு இணைந்து நானும் மக்களுக்காக அந்தத் தேவைக்காக அவர்களைப் போலவே பாடுபடத் தயாராக இருப்பவன் தான். அவர் சொன்னார், சேலம் இரும்பாலை உருக்காலை எப்படி வந்தது என்பதைச் சொன்னார். சேலம் உருக்காலை வந்த ஆண்டு நான் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஆண்டு. அந்த ஆண்டு தான் சேலம் உருக்காலை வந்தது. அது என்னுடைய கனவு அல்ல. அண்ணா கண்ட கனவுகளில் ஒன்று.சேலம் உருக்காலை.

சேது சமுத்திரத் திட்டம், நெய்வேலி நிலக்கரி இவைகளெல்லாம் அண்ணா கண்ட கனவுகள். இவைகள் எல்லாம் தமிழ்நாட்டிற்கு வருமேயானால், தமிழ்நாட்டிலே மேலும் வளம் கொழிக்கும். மேலும் தொழில்வளம் உருவாகும். மேலும் பொருளாதாரப் பூரிப்பு ஏற்படும் என்பது அண்ணாவுடைய திட்டம்.

### எழுச்சி நாள்

அதற்காகத் தான் ஜூன் மாதம் அண்ணா முதலமைச்சர் ஆகிறார் என்றால் ஜூலை மாதம் தமிழ்நாடு முழுவதும் "எழுச்சி நாள்" கொண்டாடுகிறார்கள். எதற்கு? ஒரு முதலமைச்சர் ஆட்சியின் தலைவர் எங்களைப் போன்றவர்களை யெல்லாம் அமைச்சர்களாக ஆக்கி, அருகிலே உட்காரவைத்துக் கொண்டவர். அவர் முதலமைச்சராக இருந்து அறிக்கை விடுத்து தமிழ்நாடு முழுதும் எழுச்சிநாள் கொண்டாடுங்கள் என்று அறிக்கை விடுகிறார். எதற்கு?

நெய்வேலி நிலக்கரி வேண்டும். அங்கே இரண்டாவது சுரங்கம் வெட்டப்படவேண்டும். அதைப்போலவே சேலத்தில் உருக்காலை வேண்டும், அதைப் போலவே சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகம் போன்ற திட்டங்கள் வேண்டும். இவைகளுக்காக எழுச்சிநாள் கொண்டாடுவோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தாலும் பரவாயில்லை. ஆட்சிக்கு வந்தது மாத்திரம் எங்களுக்கு நிம்மதியைக் கொடுக்கக் கூடிய ஒன்றல்ல. அதுவே எங்களுடைய கனவல்ல. ஆட்சிக்கு வந்திருப்பதே நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்து கேட்ட கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றிக் கொள்ளத்தான் என்று தான் "எழுச்சி நாள்" கொண்டாடச் சொன்னார்.

அந்த "எழுச்சி நாள்" கொண்டாடினோம். தம்பி ஆறுமுகம் சொன்னதைப்போல் அண்ணா மறைந்த பிறகு டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்களுடைய மாநாடு – இன்னும் சொல்லப்போனால் எல்லா மாநில முதலமைச்சர்களும் கலந்துகொண்ட தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம். அந்தக் கூட்டத்தில் தமிழகத்தின் சார்பாக அப்போதுதான் முதலமைச்சராக ஆகியிருக்கிற நான், என்னோடு நண்பர், அமைச்சர் மதியழகனும் சென்று கலந்து கொள்கிறோம். அங்கே வரைவு ஏடுகள் தரப்படுகின்றன. இந்த ஐந்தாண்டு என்னென்னத் திட்டங்கள் என்று. ஒவ்வொரு மாநிலத்திலும் என்னென்னத் திட்டங்கள் வகுக்கப்படவிருக்கின்றன என்ற வரைவு ஏடுகள் தரப்படுகின்றன.

### இரண்டு கோரிக்கைகள்

தமிழ்நாட்டை புரட்டிப் பார்க்கிறேன். அதில் ஏதேதோ திட்டங்களெல்லாம். சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தைக் காணவில்லை, சேலம் தொழிற்சாலையைக் காணவில்லை. வரிசையாக ஒவ்வொரு முதலமைச்சரிடமும் கேட்டு வருகிறார்கள். என் வரிசை வருகிறது. என்னைப் பார்க்கிறார்கள். நான் எழுந்து எங்களுடைய சேலம் திட்டம் இல்லாத இந்த ஐந்தாண்டுத் திட்ட வரைவை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராகயில்லை என்று சொல்லிவிட்டு வெளியே வருகிறேன்.

நான் அப்போது முதலமைச்சர் வேலைக்கும் புதிது. அந்தக் கூட்டத்திற்கும் புதிது. அப்போது தான் சி.சுப்பிரமணியம் சொன்னார். இப்படியெல்லாம் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வெளிநடப்பு செய்யக் கூடாது. அது மரபு அல்ல என்று சொன்னார். எனக்கு "டெல்லி மரபு" எல்லாம் அப்போது தெரியாது. இப்போதல்லவா டெல்லி மரபு தெரிகிறது. நாடாளுமன்றத்தையே நடத்தவிடாமல் செய்கிறார்களே. அது அல்லவா டெல்லி மரபு இப்பொழுது. எனக்கு இந்த மரபெல்லாம் தெரியாதய்யா, எனக்குத் தெரிந்ததெல்லாம் தமிழ்நாட்டு வளர்ச்சி தான் அந்த வளர்ச்சியிலே ஒன்றாக நான் சேலத்தைச் சொல்வேன் என்று சொன்னேன்.

ஆனால், அந்த நாளில் நான் எடுத்துரைத்த கோரிக்கை இரண்டு. ஒன்று சேலம். மற்றொன்று



வங்கிகளை தேசியமயம் ஆக்கவேண்டும் என்பது. அப்போது பிரதமர் இந்திராகாந்தி துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய். இந்திராகாந்தி அம்மையார் நான் சொல்வதை புரிந்து கொண்டு அதை வரவேற்பதைப் போல் பேசினார். ஆனால் உறுதியளிக்கவில்லை. நான் சொன்னதை இந்திராகாந்தியை விட தெளிவாகப் புரிந்து கொண்ட மொரார்ஜி தேசாய், வங்கிகளை தேசியமயமாக ஆக்கமுடியாது. இதெல்லாம் வீண் கற்பனை. வங்கிகளை தேசியமயமாக்கினால் இந்தியா சொர்க்கலோகமாக ஆகிவிடுமா என்று கேட்டார். இது அன்றைக்கு நடந்தது.

### சேலம் தொழிற்சாலை

ஆனால் அடுத்த வாரம் எனக்கு டெல்லியில் பிரதமரிடமிருந்து அழைப்பு வந்தது. என்ன அழைப்பு தெரியுமா? சேலம் தொழிற்சாலைக்கு நாங்கள் அனுமதி கொடுக்கிறோம். அதைப்பற்றி பேச டெல்லிக்கு வா என்று அழைப்பு வந்தது. டெல்லிக்குச் சென்றேன். அப்போது நம்முடைய அருமை நண்பர் ராஜாராம் அவர்களும், அங்கேயிருந்தார். இருவரும் இந்திராகாந்தி அம்மையாரைச் சந்தித்துப் பேசினோம். உடனடியாக அந்த அனுமதிக் கடிதத்தை அம்மையார் என்னிடம் கொடுத்தார். 'நீங்கள் வந்து திட்டத்தைத் தொடங்கி வைக்கவேண்டும்' என்று கேட்டேன், அதற்கும் வந்தார், தொடங்கி வைத்தார். அதுதான் இப்பொழுது உருக்காலையாக மாற்றப்பட வேண்டும் என்ற நம்முடைய அடுத்த கோரிக்கைக்கு இலக்காயிருக்கின்ற சேலம் தொழிற்சாலை.

நாங்கள் பல நேரங்களில் நானும் தம்பி ஆறுமுகமும் மற்றவர்களும் அந்த வழியாகச் சென்றிருக்கின்றோம். பார்த்திருக்கின்றோம். இந்தப் பகுதியே இன்றைக்கு புதுக்கோலம் கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கின்றோம். அதற்கு முன்பும் பார்த்திருக்கின்றோம், அந்தத் தொழிற்சாலை இருந்த இடத்தை, இப்பொழுது இருக்கிற இடத்தைப் பார்க்கிறோம். தொழிற்சாலை வந்ததற்கே இவ்வளவு பெரியமாற்றம் சேலத்திலே ஏற்பட்டிருக்கிறது. சேலத்திலே வேலைவாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சேலத்திலே ஒரு புது வளம் குலுங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு பொருளாதார மேன்மை உருவாகியிருக்கிறது. அது இன்னும் நேர்த்தி ஆக்கப்பட்டால் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடிகிறது.

ஆகவே ஒரு மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தேவைகள் நிறைவு செய்யப்பட்டாலும், அதனை ஆராய்ந்து அதற்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் சேலத்தினுடைய இரும்புத் தொழிற்சாலை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். அதைப்போல சேலத்திலே மருத்துவமனை. இந்த மருத்துவமனை தம்பி ஆறுமுகம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போலவும் ஏடுகளிலே வெளிவந்திருக்கின்ற செய்திகளைப் போலவும், விளம்பரங்களில் வந்திருக்கின்ற தகவல்களைப் போலவும். அந்த மருத்துவமனை நவீனமாக, மிகத் தூய்மையாக உருவாக விருக்கிறது. அதற்கு மாநில அரசும் ஒரு பகுதி பங்கினை அளிக்கிறது. மத்திய அரசும் பெரும்பகுதி நிதி தருகிறது. இரண்டு அரசும் சேர்ந்து அந்த மருத்துவமனையை இங்கே உருவாக்குகிறார்கள் என்பதை நாம் பார்க்கும் பொழுது பிறகு மீண்டும் மீண்டும் என்று சொல்வது கூடத் தவறு. அப்பொழுதும் எனக்கு அண்ணாவின் நினைவுதான் வந்தது. வராத நாளில்லை, இருந்தாலும் சிறப்பாக இந்தச் செய்தியை படிக்கிறபோது அண்ணாவின் நினைவு வந்தது.

### அண்ணாவின் பொன்மொழிகள்

அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் காஞ்சி பத்திரிக்கையில் ஒரு கட்டுரை எழுதினார். அந்த கட்டுரையினுடைய தாத்பரியம் என்னவென்றால்:

"நாம் நீண்ட காலமாக மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநில சுயாட்சியென்றால் மத்திய அரசுக்கு எதிரானதல்ல. இந்தியா முழுமையும் இருக்கின்ற மாநிலங்கள் கூட்டாட்சி அமைப்பில் உருவாகி அது இந்தியாவினுடைய இறையாண்மையை ஒப்புக்கொண்டதாக கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஏற்படையதாக ஆட்சியை அமைக்கவேண்டும். இதுதான் தம்பி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கையினுடைய அர்த்தம்" என்று அண்ணா சொல்லிவிட்டுச் சொல்லுகிறார்,

"அதற்காக தம்பீ, இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் சொன்னதைப் போல நான் மத்திய அரசோடு மோதிக் கொள்ளமாட்டேன். மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து நல்ல கருத்துக்களை ஆராய்ந்து மக்களுக்குத் தேவையானவற்றை யோசித்து இருவரும் சேர்ந்து மக்களுக்குப் பாடுபட வேண்டும். மோதுதல் கூடாது மோதுகின்ற போக்கை நாம் என்றைக்கும் கடைப்பிடிப்பவர்கள் அல்ல. ஆகவே மத்திய மாநில உறவுகள் என்பது மோதுதல் இல்லாமல் இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை"

அண்ணா அதிலே அழகாகக் குறிப்பிடுகிறார். அந்த வேதவாக்கைப் போன்ற அண்ணாவின் பொன்மொழிகள், இன்றளவும் என்னுடைய உள்ளத்திலே பதிந்து, எனக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன.

### மருத்துவமனை

அதனால் தான் மோதுதல் இல்லாமல் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். மாநில அரசு, மத்திய அரசு இரண்டுக்கும் இடையிலே எந்தவிதமான கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், அந்தக் கருத்து வேறுபாடுகளை அறநெறியில், அறவழியில், சாத்வீகமான முறையில், ஜனநாயக வழியில் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக போர்க் குணத்தைக் காட்டலாம். சேலத்திலே இந்த ரயில்வே நிலையத்திற்காக போர்க் குணத்தை நீங்கள் காட்டவில்லையா? அதைப்போல! அதனால் வெற்றி பெறவில்லையா? அதைப்போல்! அந்த உரிமைகளை நிலைநாட்டலாம். அதற்காக மாநில அரசு, மத்திய அரசுக்கு எதிர்ப்பாகத்தான் இருக்கவேண்டும் என்றல்ல. மோதிக்கொள்ளாமல், காரியங்களை இருவரும் சேர்ந்து சாதிக்கலாம். அதற்கு அடையாளமாகத் தான் இங்கே மருத்துவமனைவரை, மத்திய அரசின் நிதியைக் கொண்டும், மாநில அரசு நிதியைக் கொண்டும், இன்னும் சொல்லப்போனால், தம்பி ஆறுமுகம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல மாநிலத்தின் மூலமாகத் தரப்படுகின்ற பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தை இந்த நிலம், நிதி இவைகளைச் சேர்த்து மத்திய, மாநில அரசுகள் எப்படி இந்தத் திறப்புவிழா அல்லது இந்தத் தொடக்கவிழா ஒரு மருத்துவமனைக்காக நடத்தப்படுகிறதோ அதை நாம் மறந்துவிடக்கூடாது.

அந்த நிலையிலே தான் மத்திய, மாநில அரசுகளுடைய போக்கிலும், நிருவாகத்திலும் மக்கள் பிரச்சினையை அணுகுகின்ற முறையிலும் இருந்திட வேண்டும் என்பது என்னுடைய ஆசை.அந்த ஆசை நிறைவேறுகின்ற வகையிலே தான் இங்கே தம்பி ஆறுமுகம் எடுத்துக்காட்டியதைப்போல நம்முடைய மருத்துவமனைக்கும் மத்திய நிதியும், மாநில நிதியும் சேர்த்து இரண்டுபேரும் சேர்ந்து இதைச் செய்திருக்கிறோம். அதனால் தான் மத்திய அரசினுடைய சுகாதார அமைச்சர் அன்புமணியும் இதில் கலந்து கொள்வார் என்று நான் எதிர்ப்பார்த்தேன். நம்முடைய அமைச்சர்களும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அன்புமணிக்கு உடல் நலமில்லாத காரணத்தால் அவர் வரமுடியவில்லை என்று எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அது நேற்றைக்கு எனக்குக் கிடைத்தது. அவர் வரவில்லை என்றாலும் கூட பலபேர் எதிர்பார்த்தார்கள். அன்புமணி வரவில்லையா? கோ.க.மணியும் வரமாட்டார். எந்த மணியும் வரமாட்டார்கள் பாருங்கள், பாருங்கள். சேலத்து விழா என்னாகிறது. அவ்வளவு தான் "படார்" பா.ம.க. –தி.மு.க. "படார்" என்று பத்திரிக்கைகளெல்லாம் பேனாவை வாள்களாக ஆக்கிக் கொண்டு, சாட்டைகளாக ஆக்கிக்கொண்டு தயாராகயிருந்தார்கள்– பாவம் அவர்களுடைய வாயிலே மண் விழுந்தது. அப்படியொரு நிகழ்ச்சி அவர்கள் எதிர்பார்த்ததைப் போல நடைபெறவில்லை. நாம் எதிர்பாத்ததைப் போலத் தான் நடந்திருக்கிறது.

### வாக்குறுதிகள் நிறைவேற்றம்

எங்களுக்குள்ளே ஆயிரமிருக்கலாம், எங்களுக்குள்ளே பல தகராறுகள் இருக்கலாம், சண்டைகள் இருக்கலாம். ஆனால், நீ வந்து நுழைய நாங்கள் இடம் தரமாட்டோம். நீ என்பது, கட்சிகளை அல்ல. நீ என்பது வஞ்சகம், சூது, பொறாமை, சூழ்ச்சி இவைகள் வந்து நுழைய நாங்கள் இடம் தர மாட்டோம். நாங்கள், நாங்களாகவே இருப்போம். நாங்கள் எங்களைக் காப்பாற்றிக்கொள்ள கற்றிருக்கிறோம். நாங்கள் எதிரி யார்? நண்பர் யார்? என்பதையும் புரிந்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய மூலக்கொள்கையே தமிழ்நாட்டிற்கு ஒரு நல்லாட்சி வேண்டும் என்பது தான். ஒரு நல்லாட்சி வேண்டும், இருக்கிற ஆட்சியை மாற்றிவிட்டு ஒரு புது ஆட்சி கொண்டுவர வேண்டும். அது பொன்னான ஆட்சியாக இருக்க வேண்டும். அது நல்லாட்சியாக இருக்க வேண்டும். ஊழல் ஆட்சியாக இருக்கக் கூடாது என்றுதானே நாங்கள் கூட்டணி அமைத்தோம். அந்தக் கூட்டணியினுடைய ஆட்சி தானே இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த ஆட்சியின் மூலமாக நடைபெற்ற நல்ல காரியங்கள், மக்களுக்கான சாதனைகள், மக்களுக்கான நல்ல உதவிகள், இவைகளெல்லாம் நாங்கள் தேர்தல் நேரத்திலே தேர்தல் அறிக்கையினால் இந்தியாவிலேயே ஒரு கட்சியினுடைய தேர்தல் அறிக்கை கதாநாயகனாகக் கருத்தப்படுகிறது என்று மத்தியில் உள்ளவர்களே பேசினார்களே. அப்படிப்பட்ட தேர்தல் அறிக்கையிலே என்னென்ன வாக்குறுதிகளை அளித்தோமோ அவைகளையெல்லாம் ஒன்று தவறாமல் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். சிலபேர் தேர்தல் அறிக்கையிலே சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்றார்கள். இன்றைக்கு சேது சமுத்திரம்

திட்டத்திற்கு அவர்கள் தான் முதல் எதிரிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய தேர்தல் அறிக்கைக்கும், அவர்களின் இன்றைய நடவடிக்கைக்கும் ஏதாவது சம்மந்தம் உண்டா? அன்றைக்கு சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வந்தே தீருவோம் என்று தோள்தட்டியவர்கள், வீறாப்பு பேசியவர்கள் இன்றைக்கு எங்கே போனார்கள்? நாங்கள் தான் அதைக் கண்டுபிடித்தவர்கள், சேது சமுத்திரத் திட்டத்தையே முதன் முதலிலே சொன்னவர்களே நாங்கள் தான், அதற்காக 45 மணி நேரம் நாடாளுமன்றத்திலே பேசியவர்கள் நாங்கள் தான் என்றெல்லாம் புயலென சீறினார்களே, அந்தப் புயல் போன இடம் என்ன? எங்கே போய்ச் சேர்ந்தது



அந்தப் புயல்? இப்போது யார் சொல்லுகிறோம்? நாமல்லவா? சேது சமுத்திரத் திட்டத்திற்காக தேர்தல் நேரத்து வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம், உழைத்துக் கொண்டிருக்கிறோம், அதற்கான ஆய்வுகளிலே ஈடுபட்டிருக்கிறோம். அதைத் தடுப்பதற்கு வருகின்றவர்கள் யார்? அது வேண்டுமென்று அப்போது சொன்னவர்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவோமென்று சொல்லி மக்களிடம் வாக்குப் பெற்றவர்கள், இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு எதிராக நடந்து கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் மறந்துவிடக்கூடாது. இராமர் பாலத்தைக் காட்டி 17 இலட்சம் வருஷத்திற்கு முன்பு இராமாயண காலத்தில் இராமர் பாலம் கட்டினார், அந்தப் பாலத்தை இடித்தால் நாங்கள் சும்மாவிட மாட்டோம் என்று பா.ஜ.க.வினர், புராணிகர்கள் இன்றைக்குப் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள், கூட்டம் போடுகிறார்கள், ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள், அணிவகுத்துக் கிளம்புகிறார்கள், ஆகா, ஊகு என்றெல்லாம் பேசுகிறார்கள், நான் அவர்களைக் கேட்கிறேன்,17 இலட்சம் வருடங்களுக்கு முன்பு இராமாயணம் நடந்ததாகச் சொல்கிறீர்கள், அதிலே இராமர் என்பது ஒரு அவதாரமே அல்ல, இராமர் என்று ஒருவர் இல்லையென்று மத்திய சர்க்கார் சார்பிலேயே அது ஒரு கற்பனைக் கதாபாத்திரம் என்று உச்ச நீதிமன்றத்திலே எழுதிக் கொடுத்து விட்டு, நேற்றைக்கு எழுதிக் கொடுத்து, இன்றைக்கு அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள் என்றால்– ஆட்சி கிடக்கட்டும், கேவலம் ஆட்சி, நாம் ஏற்றுக்கொண்ட பகுத்தறிவு என்ன ஆவது? நாம் ஏற்றுக் கொண்ட சுயமரியாதைக் கொள்கை என்ன ஆவது? அந்தத் தன்மான உணர்ச்சி என்ன ஆவது? நேற்று வரையில் இராமாயணம் ஒரு கற்பனை என்று சொன்னவர்கள். சொன்னதற்கு ஆதாரம் தந்தவர் சாதாரணமானவர் அல்ல, பண்டித ஜவகர்லால் நேரு. நேருவே சொன்னார் இராமாயணம் நடந்த கதையல்ல, இராமாயணப் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடைபெற்ற போராட்டத்தை வைத்து எழுதப்பட்ட ஒரு கற்பனை என்று பண்டித நேருவே சொன்னார். அந்த நேருவை இன்றைக்குத் தூக்கி எறிந்து விட்டு, இராமர் இருந்தார் என்றும், அவர் பாலம் கட்டினார் என்றும் அந்தப் பாலத்தை இடிக்கக் கூடாதென்றும் சொல்கிறார்கள் நேற்று என்னிடம் ஒருவர் சந்தித்தே பேசினார். கடவுள் எல்லாம் இருக்கட்டும், இராமர் எல்லாம் இருக்கட்டும் லெட்சுமணன் எல்லாம் இருக்கட்டும், அந்தப் பாலப் அணுகுண்டு தயாரிக்கின்ற ஒப்பற்ற உலோகத்தை அடக்கிக் கொண்டிருக்கின்ற பாலம், அதை இடிக்கக் கூடாது, அது இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தியாவைக் காப்பாற்றும் என்று சொன்னார்.



நான் சொன்னேன், நாங்கள் நாளை முதல் இந்தப் பச்சை விட்டுவிடுகிறோம், நீங்கள் மாத்திரம் ஒரு ட்டம் போட்டு, இந்த உண்மையை அங்கே சால்லுங்கள், நாங்கள் இராமர் பெயரைப் யன்படுத்துவது, அந்தப் பாலத்தின் மீதுள்ள க்தியினால் அல்ல, அதிலே தோரியம் இருக்கிறது. அது அணுகுண்டு தயாரிக்கப்பயன்படுவது, அது ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தியாவைக் காப்பாற்றும், அந்தத் இராமருக்காக இராமன் பாலம் அல்ல, அந்தத் தோரியத்திற்காகத் தான் இராமர் பாலம் என்ற உண்மையை நீங்கள் ஊரறிய ஒரு கூட்டத்திலே உரைத்தால், மறுநாளே நாங்கள் உங்களிடத்திலே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, உங்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன், முடியுமா? என்று கேட்டேன்.

நாங்கள் கட்சி நடத்த வேண்டாமா? என்று அவர் சொன்னார். அவர்கள் கட்சி நடத்த வேண்டுமாம், பா.ஜ.க.வை நடத்த வேண்டுமாம், இந்து மகா சபையை நடத்த வேண்டுமாம், அதற்கு நாம் தான் இளிச்சவாயர்களாம். தி.மு.கவும், பா.ம.கவும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் – இந்தக் கட்சிகள் தான் இளிச்சவாய் கட்சிகளாம். நாமெல்லாம் ஏமாறவேண்டுமாம். இவர்கள் எப்படியோ அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாம். போரை ஆரம்பித்து விட்டார்கள், முடிக்கத் தெரியாமல் விழிக்கிறார்கள். ஆகவே நம்மிடம் வந்து பேரம் பேசுகிறார்கள்.

## சிறந்த திட்டம்

இது நாட்டைக் கெடுக்கக் கூடிய, நாட்டின் வளத்தைக் கெடுக்கக் கூடிய ஒரு பெரிய பொருளாதார விஷயத்தைப் புரிந்துகொள்ளாத, புத்திசாலித்தன மற்றவர்களுடைய கேலிக்கூத்து, எவ்வளவு காலமாகச் சொல்லி வருகிறோம்? இந்தச் சேது சமுத்திரத் திட்டம் மாத்திரம் நிறைவேறினால், கப்பல் போக்குவரத்து இலங்கையைச் சுற்றி வரத்தேவையில்லை. இப்போது இலங்கையைச் சுற்றிக்கொண்டு தான் கப்பல் போகிறது. இலங்கையைச் சுற்றிக்கொண்டு தான் கப்பல் பயணம் செய்ய 500 மைல் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கான பொருளாதாரச் செலவு எவ்வளவு? இந்தப் பாதை அமைத்து விட்டால் குறுக்கே போகலாம். இலங்கைத் தீவைச் சுற்றிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே நம்முடைய பயணச் செலவும் குறைவு, தூரமும் குறைவு, சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார ரீதியிலே சிறந்த திட்டம் என்று வல்லுனர்கள், விஞ்ஞானிகள், பொருளாதார மேதைகள் அத்தனை பேரும் அறிவித்த பிறகு கடவுள் பெயரைச் சொல்லி சொல்லுகிறார்கள்.

அதே அடிப்படையில் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் முன்னாள் முதல் அமைச்சரும், தேர்தல் நேரத்திலே தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக சேதுசமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்று எழுதி வாக்களித்தவருமான ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்திலே இராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்று வழக்கு போட்டிருக்கிறார். இவர்களுடைய கட்சிக்குப் பெயர் அண்ணாவின் பெயர்! அண்ணா, உனக்காக நாங்கள் வெட்கப்படுகிறோம். உனக்காக நாங்கள் அழுகிறோம், உனக்காக நாங்கள் துயரப்படுகிறோம், உனக்காக நாங்கள் முக்காடு போட்டுக் கொள்கிறோம். நாங்கள் எல்லாம் உயிரோடு இருக்கும் போது, உன்பெயரைச் சொல்லி உன்னை ராமருக்கு அடிமையாக ஆக்குகிறார்களே என்பதை எண்ணி நாங்கள் வெட்கப்படுகிறோம்.

"கம்பரசம்" எழுதிய அண்ணாவே – இராமாயண ஆராய்ச்சி" எழுதிய பெரியாரே, உங்கள் பெயர்களை எப்படியெல்லாம் இன்றைக்கு களங்கப்படுத்துகிறார்கள், அவர்களும் ஒரு கட்சி நடத்துகிறார்கள், நாங்களும் இருக்கிறோம் உயிரோடு. உன்னுடைய தம்பிமார்கள், பெரியாரின் தொண்டர்கள் என்று பெயர் சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

இதையெல்லாம் நான் இந்தப் பெரிய விழாவிலே அரசியலாக ஆக்குகிறேன் என்று யாரும் கருதக்கூடாது. இந்தச் சமுதாயம் – நம்முடைய இனத்திற்காகப் பேசப்படுகிற பேச்சு. இங்கேதம்பி அறுமுகம் ஒரு கோடி ரூபாய் கொடுத்து ஆய்வு நடத்தப்போகிறோம் என்று சொன்னாரே, அப்படி நடத்துகின்ற ஆய்வுகளிலே இதுவும் ஒரு ஆய்வு தான், இந்த ஆய்வின் வெளிப்பாடுதான். அதைத் தான் நான் இங்கே சொல்லுகிறேன்.

ஆகவே நாம் திருந்துவோம், நம்முடைய நாட்டைத் திருத்துவதற்கு முன்பு. நம்முடைய நாட்டு மக்களைத் திருத்துவோம், நம்முடைய நாட்டை வல்லரசுகளில் ஒன்றாக ஆக்க வேண்டுமேயானால், மக்களை வீரர்களாக ஆக்க வேண்டும், விவேகிகளாக ஆக்க வேண்டும், விஞ்ஞான உலகிலே அவர்களை உலவ விட வேண்டும். இப்படிப்பட்ட தவறான தத்துவார்த்தங்களுக்கெல்லாம் அவர்களை தாசர்களாக ஆக்காமல் பாதுகாப்போம். அந்த உறுதியை இது போன்ற விழாக்களிலே, சேலத்திலே நாம் எடுத்துக் கொண்டால், சேலத்திலே எடுக்கின்ற உறுதி, மாறாத உறுதியாக, மலை போன்ற உறுதியாக, யாரும் வெல்ல முடியாத உறுதியாக, அசைக்க முடியாத உறுதியாக இருக்கும் என்று சொல்லி, இவ்வளவு பெரியவாய்ப்பை எனக்குஏற்படுத்திக் கொடுத்த என்னுடைய அருமைத் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திற்கும் உங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்..

சேலம் மாநகரில் 14.9.2007 அன்று நடைபெற்ற
அதிநவீன சிறப்பு மருத்துவமனை, தகவல்
தொழில்நுட்பப் பூங்கா, பெரியார் பல்கலைக்கழக
கலை அறிவியல் கல்லூரி (மேட்டூர்), மேட்டூர்
பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆகியவற்றின்
அடிக்கல் நாட்டுவிழா மற்றும் நலத்திட்ட
உதவிகள் வழங்கும் விழாவில்
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
அவர்கள் ஆற்றிய உரை



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள், புதுடெல்லியில் இந்தியா டுடே சார்பில் நடைபெற்ற ஸ்டேட் ஆப் ஸ்டேட் கான்கலேவ்–2007 நிகழ்ச்சியில் "நுகர்வோர் சந்தை மற்றும் முதலீடுகளில் முன்னேறிய மாநிலமாக" தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முதலமைச்சர் சார்பாக பெற்ற விருதுகளைக் காண்பித்தார்.(17.9.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில், தமிழக அரசின் சார்பில் சிப்காட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் என்.கோவிந்தன் – கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் சார்பில் அதன் நிருவாக இயக்குநர் திரு.சுனில் பஹிலாஜனிக்கும், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. தமிழக அரசின் தொழில்துறைச் செயலாளர் திரு.சக்திகாந்த தாஸ்,இ.ஆ.ப., உடனிருந்தார். (12.9.2007)



36ஆம் பக்கத்தின் தொடர்ச்சி



உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதாகும்.

சாலைக் கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட்டு வருகிறது. நாங்கள் மேலும் மேம்பட்ட தொடர்புகளை உருவாக்கிக் கொடுப்பதற்காக கோயம்பேடு – மதுரவாயல் – சுங்குவார்சத்திரம் நெடுஞ்சாலையை ஆறு வழிச்சாலையாக மாற்ற மத்திய அரசுடனும், தேசிய நெடுஞ்சாலைக் கழகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

இந்தப் பகுதிகளில் மேம்பாடு என்பது, உள்ளூர் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என்று நாங்கள் உறுதியாக எதிர்பார்க்கிறோம். அவர்கள் இந்த வெற்றி சகாப்தத்தின் பகுதியாக இருந்து, இந்த வசதிகளால் கிடைக்கும் புதிய வேலைவாய்ப்புகளின் ஆதாயங்களைப் பெற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

எனவே நான் கெபாரோ மற்றும் புதிய உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைக்கும் அனைத்துத் தொழிற்சாலைகளும், உள்ளூர் வேலை வாய்ப்புகளை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய தேர்ந்தெடுத் தமைக்காக நான் கெபாரோ நிறுவனத்தை மீண்டும் பாராட்டுகிறேன். உலகம் முழுவதும் இருந்து பல்வேறு நிறுவனங்கள், இங்கே முதலீடு செய்து நீண்டகால பயன்பெற்றது போல் கெபாரோ நிறுவனமும் தமிழ்நாட்டில் முதலீடு செய்ததற்காக நான் அவர்களை மீண்டும் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மகுடத்தில் மேலும் ஒரு அணிகலனாக கெபாரோ பரிணமிக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, முனைவர் க.பொன்முடி, கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன் மற்றும் ஆ.கிருஷ்ணசாமி, எம்.பி., டி.யசோதா, எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சித் தலைவர் தா.துரைசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

*திருப்பெரும்புதூர் அருகே சுங்குவார் சத்திரத்தில் ரூ.300 கோடி மதிப்பிலான கெபாரோ நிறுவனத்தின் கார் உதிரிபாகங்கள் தொழிற்சாலையை 4.10.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர்* ***கலைஞர்*** *அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரை.*



# தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி அளவு
# ரூ.20 ஆயிரம் கோடியைத் தாண்டிவிட்டது

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி**
அவர்களின் உரை

**செ**ன்னை நந்தம்பாக்கத்தில் 'கனெக்ட் – 2007' எனும் தலைப்பில் 17.9.2007 அன்று நடைபெற்ற நிகழ்வில் கூட்டத் தொடரைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :-

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்பது தான் எப்போதுமே எனது தாரகமந்திரமாக இருந்து வந்துள்ளது.

சரியாக ஓராண்டுக்கு முன்னால் 'கனெக்ட் – 2006' என்ற தலைப்பில் நடந்த நிகழ்வில் கலந்துகொண்டபோது, அறிவால் உந்தப்பட்ட அமைப்பை உருவாக்கியும், தொழில் முனைப்பை முடுக்கிவிட்டும், 2011ஆம் ஆண்டுவாக்கில் இந்தியா தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் துறையில் 25 விழுக்காடு உற்பத்திப் பங்கினை அடையும் வகையில் சமூகரீதியில் இணைந்த வளர்ச்சியை மேம்படுத்தி தமிழ்நாடு தெற்காசியாவின் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கேந்திரமாக உருவாகும் என்ற தொலைநோக்குத் திட்டம் பற்றிப் பேசினேன்.

இந்தத் தொலைநோக்குத் திட்டத்தை வென்றெடுப்பதில் நாங்கள் தொய்வின்றி முன்னேறி வருகிறோம் என்பதை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தகவல்களும் அதை உறுதிப்படுத்துகின்றன. தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதி அளவு ரூபாய் இருபதாயிரம் கோடியைத் தாண்டிவிட்டது. இது கடந்த ஆண்டை விட 45 சதவீதம் அதிகமாகும். மாநிலம் முழுவதும் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை தங்களது செயல்பாட்டை – சென்னையில் மட்டுமின்றி மாநிலத்தின் இதரப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி வருகின்றன.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ஏற்றுமதி அளவு அதிகமாக இருக்கும் என்றுநான் உறுதியாக நம்புகிறேன். தற்போது ஏற்றுமதிக்காக விருதுகள்







பெற்றுள்ள மென்பொருள் நிறுவனங்களை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

மென்பொருளில் மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளதுடன், தமிழ்நாட்டில் மின்னணுவியல் வன்பொருள் உற்பத்தித் துறையும் வளர்ந்து வருகிறது.

இந்த மென்பொருள் – வன்பொருள் இணைப்பு உலகத்தில் தனிச் சிறப்பு உடையது. நமக்கான இலக்கை நாம் அடைய முடியும் என்ற உறுதியான நம்பிக்கையை இது அளிக்கிறது.

### சிறப்புப் பொருளாதார மண்டலம்

'கனெக்ட் – 2006' நிகழ்வில் பங்கேற்ற உங்களில் பலருக்கு, கடந்த ஆண்டு எனது உரையில் என்ன கூறினேன் என்பது நினைவிருக்கும். அதை நினைவுபடுத்தி இப்போது எடுத்துக் கூறுகிறேன்.

"தகவல் மற்றும் தொடர்புத் தொழில் நுட்பமானது, (ICT) இதுவரை தொடாதவர்களைத் தொடுவதற்கும், அணுகப்படாதவர்களை அணுகுவதற்கும், சமுதாயத்தில் இதுவரையில் விலக்கி வைக்கப்பட்டிருந்தவர்களை இணைந்த வளர்ச்சிக்குள் கொண்டு வர உகந்த வாய்ப்புகளை வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்று அப்போது கூறியிருந்தேன்.

இந்த நம்பிக்கைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் நாங்கள் இரு முனை உத்திகளை உருவாக்கியுள்ளோம். ஒருபுறம், கோவை, மதுரை, சேலம், ஒசூர், நெல்லை ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான (ITES) சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்து பூகோள ரீதியிலான இணைப்பைக் கொண்டு வருகிறோம்.

மறுபுறம், இந்த மாநிலத்தில் உள்ள இளைஞர்கள் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் சேருவதற்கு உதவும் வகையில் தனிச் சிறப்புடன் கூடிய திறமை வளர்ச்சிக்கான முன் முயற்சிகளைத் தொடங்குகிறோம்.

தமிழ்நாடு தகவல் தொடர்பு, தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் மற்றும் நிறைவு செய்யும் பள்ளி ஆகியவை, உருவாகி வரும் பல்வேறு முயற்சிகளில் இரண்டாகும். திறமை மேம்பாடு என்பது எனது அரசின் முன்னுரிமையாக உள்ளது. இவற்றைக் கொண்டு மாநிலம் முழுவதும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம். இந்த முன் முயற்சிகளில் செயலாக்கத்துடன் பங்கு பெறும்படி இந்தியத் தொழில் கூட்டமைப்பினரையும் (CII) மற்றும் இங்குள்ள அனைவரையும் வரவேற்கிறேன்.




## தொழிற்கல்விக்கு சிறப்பு நடவடிக்கை

நாம் அனைவருமாகச் சேர்ந்து, வேலைகள் கிடைப்பது சில உயர்தர நிறுவனங்கள் அல்லது முன்னேறிய குழுக்களைச் சார்ந்தவர்கள் போன்றோருக்கு மட்டுமின்றி அனைவருக்கும் வெளிப்படையான இணைந்த வளர்ச்சிக்கான தொரு மாதிரியை உருவாக்குவோம்.

இந்த வளர்ச்சி வேகத்தைத் தக்க வைத்துக்கொள்ள, கட்டமைப்பு வசதியை வலுப்படுத்துவதற்குப் பெருமளவு முதலீடுகள் தேவை என்பதை நான் அறிவேன். தமிழ்நாட்டில் பொதுவாக தொழில் வளர்ச்சிக்கும், குறிப்பாக தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவ உலகத்தரத்திலான கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு எங்களது அரசு கடமைப் பட்டுள்ளது.

அதே நேரத்தில், மாநிலத்திலுள்ள மனிதவள ஆதாரங்கள் மேலும் வலுப்படுத்தப்படவேண்டும் என்பதையும் நான் உணர்ந்துள்ளேன். என்னுடைய முன்முயற்சியால், மத்திய அரசு சென்னைக்கு அருகில் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி முறைக்கான இந்திய தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை அமைத்து வருகிறது. மேலும் மதுரையில் கூடுதலாக ஒரு இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி.) நிறுவனமும், திருச்சியில் இந்திய அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனமும், (ஐ.ஐ.எஸ்.ஈ.ஆ.) கோவையில் இந்திய நிருவாகவியல் கல்வி நிறுவனமும் (ஐஐஎம்) அமைக்கும்படி மத்திய அரசை நான் கேட்டுக் கொண்டுள்ளேன். மாநிலத்தில் தொழிற்கல்வி முறையை வலுப்படுத்துவதற்கு சிறப்பு நடவடிக்கைகளை எங்களது அரசு எடுத்துள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் தகுதி வாய்ந்த பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்களின் திறமையை மேம்படுத்த பயிற்சி மிகவும் தேவையானதாகும். மாணவர்களுக்கும் தொழில்களுக்கும் பயனளிக்கும் வகையில் பெரிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பயிற்சி நிறுவனங்களை அமைப்பதில் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (CII) முன்னணி வகிக்க முடியும். மாநில மொழி



கணினியியல் துறையில் ஏற்பட்டுள்ள முக்கியத்துவம் வாய்ந்ததொரு வளர்ச்சியைப் பற்றி எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

## தமிழுக்குப் புதிய கணினி முறை

கடந்த ஆண்டு கனெக்ட் – 2006 நிகழ்வின் போது தமிழ் கணினியியலில் புதிய தரங்களைக் கொண்டு வர வேண்டிய தேவை பற்றிய பரிந்துரைகளை தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அளித்தது. இந்தத் துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழுக்குப் புதிய கணினி முறை உருவாக்கப்பட்டு வருகிறது என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வார்த்தைகளைவிட செயல் உரத்து ஒலிக்கும் என்பார்கள். இதுவரையில் எங்களது நடவடிக்கைகள் முன்னேறிச் செல்ல வேண்டும் என்கிற எங்களது மனஉறுதியை எடுத்துக் காட்டியுள்ளன. இவற்றின் பயன்கள் மிகவும் திருப்திகரமாக இருப்பினும், இந்தப் பெருமையில் மனநிறைவு அடைந்து நாங்கள் வாளா திருக்கவில்லை. நமது பயணம் தொடர்கிறது.

பட்டினி, தேவை, வேலையின்மை மற்றும் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்ட தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு இன்னமும் நாங்கள் நெடுந்தூரம் செல்ல வேண்டியுள்ளது. நாம் அனைவரும் இணைந்து தமிழ்நாட்டையும் தமிழக மக்களையும் அனைத்துத் துறைகளிலும் முதன்மை நிலைக்குக் கொண்டு செல்வோம்.

தமிழகத்தில், மோசர் பேர் நிறுவனம் ரூபாய் 2 ஆயிரம் கோடி முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அதன் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் தீபக்பூரி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிறைவாக இந்த கனெக்ட் – 2007 கருத்தரங்கை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

※ ※ ※

## ஆதிதிராவிடர் நலன்

- *அரசுப் பள்ளிகள், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில், பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும், குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறைவாகவும் உள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவ, மாணவிகளில் மாவட்டம் ஒன்றுக்கு 10 பேர் வீதம் 30 மாவட்டங்களிலிருந்து 300 மாணவ / மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்றுள்ள தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு மாணவ/மாணவிக்கு இரண்டு வருடங்களுக்கு ரூ.56,000 வீதம் 300 மாணவ / மாணவிகளுக்கு ரூ.168 இலட்சம் செலவு மேற்கொள்ள அரசு முடிவு செய்து இத்திட்டத்தை நடைமுறைபடுத்தி வருகிறது.*
- *துப்புரவுத் தொழில் பணியாளர்களுக்கு சுயதொழில் போன்ற மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு "தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம்" அமைத்துள்ளது.*
- *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதி மாணவ/மாணவியருக்கு போர்வை வழங்க ரூ.112 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் 1,06,055 மாணவ / மாணவிகள் பயன் பெற உள்ளனர்.*

செய்தியாளர் கூட்டத்தில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களின் அறிவிப்பு (21.9.2007)

## அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள்

**மு. கருணாநிதி**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

### கதர்த் தொழிலாளருக்குக் கைகொடுப்பீர்!

அண்ணல் காந்தியடிகளின் எண்ணப்படி தமிழகத்தில் உள்ள கிராமப்புற மக்களின் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறது.

அண்ணல் காந்தியடிகள் அறிமுகம் செய்த கதர்த் துணிகளின் உற்பத்தியையும், பயன்பாட்டினையும் அதிகரித்து கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பினைப் பெருக்கி, அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்திடவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பெரிதும் பாடுபட்டு வருகிறது.

மேலும், கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப் பொருள்களையும், இதர வசதிகளையும் பயன்படுத்திப் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்திடவும் உதவுகிறது.

கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான கைவினைஞர்களின் வாழ்க்கைக்குத் துணை நிற்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து அனைத்து கதர்த் துணி இரகங்களுக்கும் ஆண்டு முழுதும் வழங்கி வரும் 30 விழுக்காடு தள்ளுபடியினைப் பயன்படுத்திக் கதர்த் துணிகளை அதிக அளவில் வாங்கிப் பயன்படுத்திக் கதர்த் தொழிலாளருக்குக் கைகொடுப்பீர் என மாணவ, மாணவியர் அரசு ஊழியர்கள், ஆலைத் தொழிலாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நன்னாளில் அன்புடன் வேண்டுகிறேன்.

மு. கருணாநிதி

*வாழ்த்துவோம் வாழ்த்துவோம் காந்தியடிகளை வாழ்த்துவோம்!!*
*உடுத்துவோம் உடுத்துவோம் கதர் ஆடையை உடுத்துவோம்!!*



## கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு
# உத்தமர் காந்தி ஊராட்சி விருது
## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்



கிராம ஊராட்சிகளுடைய பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு, அவற்றின் செயல்பாடுகளில் போட்டியுணர்வை ஏற்படுத்தி துரிதப்படுத்தும் நோக்கத்துடன், அவை மேலும் சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்திட, கிராம ஊராட்சிகளின் சிறப்பான செயல்பாட்டின் அடிப்படையில், அவை மேற்கொண்டுள்ள புதுமையான முயற்சிகளைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் கிராம ஊராட்சிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுத் தொகையாக ரூபாய் 5 இலட்சம், கேடயம் ஆகியவையும், ஊராட்சித் தலைவர்களுக்கு அவர்களின் தனிநபர் திறன் அடிப்படையில் பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும் என்று 11.8.2006–அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

இந்த மாநில அளவிலான விருது 2001–2006–ஆம் ஆண்டு வரையிலான கிராம ஊராட்சிகளின் சிறப்பான செயல்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் என்று அரசு ஆணையிட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கிராம சுயாட்சியை வலியுறுத்திய காந்தியடிகள் பெயரினை நினைவூட்டும் வகையில் இந்த விருதிற்கு "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" என்று பெயர் சூட்டியுள்ளார்.

மாநில அளவில் சிறப்பான முறையில், புதுமையான திட்டங்களை முன் மாதிரியாகக் கொள்ளத் தக்க வகையில் செயல்படுத்தி சாதனை நிகழ்த்தியுள்ள 124 கிராம ஊராட்சிகள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் மூலம் பரிந்துரைகள் பெறப்பட்டன. இவற்றிலிருந்து 46 கிராம ஊராட்சிகளை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், தலைமையில் அமைக்கப்பட்ட குழு தேர்வு செய்தது.

இந்த 46 கிராம ஊராட்சிகளிலும், ஊரக வளர்ச்சி (பயிற்சி) இயக்குநர், தலைமையிலான குழுவினர் நேரடியாக ஆய்வு செய்து 2006–2007 ஆண்டிற்கான உத்தமர் காந்தி ஊராட்சி விருது பெறுவதற்குத் தகுதியுடைய 15 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தனர்.

விருது பெறுவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 15 கிராம ஊராட்சிகளில், 8 ஊராட்சிகளில் கடந்த முறை ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர்களே தற்போதும் தலைவராக உள்ளனர். இவர்களுக்கும், இதர 7 கிராம ஊராட்சிகளின் முன்னாள் மற்றும் தற்போதைய தலைவர்கள் 14 பேருக்கும் ஆக மொத்தம் 22 தலைவர்கள் 11–10–2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை, கேடயம், பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பின்வரும் ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது.

இராமநாதபுரம், மைக்கேல்பட்டினம் ஊராட்சி–திருமதி சே. சேசுமேரி, சேலம், சின்னனூர் ஊராட்சி– ஏ. சேகர் திருவாரூர், கீழத்திருப்பாலக்குடி ஊராட்சி – தி.மு. மதிவாணன், கன்னியாகுமரி, திக்கணங்கோடு ஊராட்சி – எஸ். அருளானந்த ஜார்ஜ், திருச்சி, வாளாடி ஊராட்சி – செ. ஜெயச்சந்திரன், நாமக்கல், காடாச்சநல்லூர் ஊராட்சி– கே.எம். முனியப்பன், காஞ்சிபுரம், பாப்பநல்லூர் ஊராட்சி– திருமதி ப. கற்பகம், திண்டுக்கல், கொ. கீரனூர் ஊராட்சி– ஆ.மு. நாட்டுதுரை, கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும்.

பரிசுத் தொகை மற்றும் கேடயம் ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பின் வரும் ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. கோயம்புத்தூர், ஒடந்துரை ஊராட்சி, எஸ். லிங்கம்மாள், ஈரோடு, திண்டல் ஊராட்சி, கு. மணிமேகலை சிவகங்கை, நாலுகோட்டை ஊராட்சி, க. ப. இராஜேஸ்வரி, வேலூர், காட்டுப் புதூர் ஊராட்சி, க. விஸ்வநாதன், தேனி, லெட்சுமிபுரம் ஊராட்சி, வீ.ல.கி. ஜெயபாலன், கடலூர், எம். கொளக்குடி ஊராட்சி, கே. பாபுராஜன், விழுப்புரம், ஜக்கம்பேட்டை ஊராட்சி, கே. கம்சலா,

மேலும், சிறப்பாகச் செயல்பட்டமைக்காக பதக்கம் மற்றும் நற்சான்றிதழ் ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பின்வரும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. கோயம்புத்தூர், ஒடந்துரை, ஊராட்சி, ர. சண்முகம், ஈரோடு, திண்டல் ஊராட்சி, தி.செ. குமாரசாமி, சிவகங்கை, நாலுகோட்டை ஊராட்சி, என்.ஒ.வி.எஸ்.ராமநாதன், வேலூர், காட்டுப்புதூர் ஊராட்சி, அ. சந்திரிகா, தேனி, லெட்சுமிபுரம் ஊராட்சி, பி. ஞானமணி, கடலூர், எம். கொளக்குடி ஊராட்சி, பா. கலையரசி, விழுப்புரம், ஜக்கம்பேட்டை ஊராட்சி, கே.பிரேம்குமார், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்ட இந்த கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் 22 பேருக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துகளைத் தெரிவித்து தேநீர் விருந்து அளித்தார்.

* * *



# பொதுப்பணியில் எந்தப் பொறுப்பானாலும் மக்களுக்காற்ற வேண்டிய தொண்டினை ஆற்றுகின்ற மனப்பக்குவத்தை எல்லோரும் பெற வேண்டும்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர். மு. கருணாநிதி** அவர்கள் உரை.





**கா**வலர்களுக்கென சுமார் 900 வீடுகள் அமைக்கப்பட்டு, அதனைத் திறந்து வைக்கின்ற அரிய பணியினை நான் பெறுகின்ற வாய்ப்பினை வழங்கிய காவல் துறையினருக்கு என்னுடைய நன்றியை, நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நல்லரசுக்கு அடையாளம்**

ஒரு அரசில் எந்தத் துறையானாலும், தொடர் பணிகள் இடையிலே விட்டுப்போகாமல் நடைபெற வேண்டுமென்பது நியதி. அதுதான் ஒரு அரசுக்குரிய நியாயம், முறை. ஏற்கெனவே தி.மு.கழக அரசு பதவிப் பொறுப்பிலே இருந்த போது, அனுமதிக்கப்பட்ட திட்டங்கள், அடுத்து வந்த அரசினால் கைவிடப்பட்டன என்றாலுங்கூட, இந்த அரசைப் பொறுத்தவரையில் நல்லவைகள் எதுவாக இருந்தாலும், அதை யார் அனுமதித்திருந்தாலும், யார் அதற்கு ஒப்புதல் கொடுத்திருந்தாலும், அவர்கள் கொடுத்த ஒப்புதலை நாம் எதற்காக நிறைவேற்ற வேண்டுமென்று இல்லாமல், அந்த ஒப்புதலை மதித்து, யார் அந்தப் பணிகளுக்கு, பயன்களைப் பெறுவதற்கு உரியவர்களோ அவர்களிடத்திலே அந்த நன்மைகளை ஒப்படைப்பதுதான் ஒரு நல்லரசுக்கு அடையாளம் என்ற அந்த வகையில், கடந்த காலத்திலே 2003இல் அனுமதிக்கப்பட்ட சில காரியங்களையும் இந்த அரசு செய்திருக்கிறது. அதிலே ஒன்று தான் இன்றைக்கு இங்கே திறந்து வைக்கப் பட்டிருக்கின்ற இந்த வீடுகள். திறந்து வைத்த காரணத்தாலேயே, இவைகளையெல்லாம் நானே கட்டிக் கொடுத்தேன் என்று காவலர்களும் எண்ணமாட்டார்கள், நீங்களும் எண்ணத் தேவையில்லை, நானும் அப்படி எண்ணிக் கொள்பவனல்ல. சிலர் அப்படி எண்ணிக் கொள்ள வேண்டுமென்று கருதினால், அதற்கு வழி விடக் கூடியவனும் அல்ல நான்.

காவலர்களுடைய பணி என்பது நாட்டிலே நடைபெறுகின்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பது – தடுப்பது இனி நடைபெறாமல் அவர்களைத் தண்டிப்பதற்கேற்ற பொறுப்புக்கு மாத்திரம்தான் அனுமதிக்கப்பட்டவர்கள். இதற்கு மாத்திரம்தான் நாங்கள் ஊதியம் பெறுகிறோம், மற்ற நீதிமுறைகளை, நெறிமுறைகளைக் கையாளுவது, அதற்கேற்ற வகையில் நடந்து கொள்வது என்பது மாத்திரமல்ல. அவர்களுக்கு ஒரு அரசில் தாங்கள் இந்தப் பொறுப்புகள் எங்களுக்கு உரியவைகள் என்று யார் சொன்னாலும் அவைகளை ஏற்க முடியாதென்று அரசுத் துறையிலே இருக்கின்ற யாரும் சொல்லக் கூடாது.



## சமூகத் தொண்டர்கள்

எல்லா காரியங்களையும் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய எல்லாப் பணிகளையும் இந்தப் பணிக்கு என்று நாம் விடப்பட்டிருக்கிறோம், அடுத்த பணிக்குச் செல்லக் கூடாது என்றில்லாமல் பொதுப்பணியை அனைவரும் ஏற்று, ஆற்றி மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். நான் காவல் துறையைச் சேர்ந்தவன், திருட்டை மாத்திரம்தான் கண்டுபிடிப்பேன், கொலையை மாத்திரம்தான் கண்டுபிடிப்பேன், கொள்ளை அடிப்பவர்களை மாத்திரம் தான் பிடிப்பேன், அவர்களைத் தான் கைது செய்வேன் என்றில்லாமல், சமுதாயத்தின் தேவைகள் அனைத்தையும் பொறுப்போடு கவனிக்கின்ற அந்தப் பணியையும் காவலர்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டவன். அந்த எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னை காவல்துறை நண்பர்கள் நடந்து காட்டியிருக்கிறார்கள். உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், திடீரென்று சென்னையிலே குப்பைகூளங்கள் கோபுரம் போல் உயர்ந்து விட்டன. இதை நான் பத்திரிகைகளிலே பார்த்துத் திடுக்கிட்டேன். குப்பை வீடுகள் கோபுரங்களாக உயர வேண்டும் என்று "பராசக்தி"யில் வசனம் எழுதினேன். ஆனால் இன்றைக்கு குப்பைகளே கோபுரங்களாக உயர்ந்து நிற்கிறதே, என்ன செய்வது என்ற வருத்தத்தோடு, நான் அந்த வருத்தத்தை மாற்றிக் கொள்கின்ற அந்தக் கணத்திற்கு முன்பே சென்னை காவல் துறையிலே உள்ள நண்பர்கள், அவர்கள் காவலர்களாக இல்லாமல், தங்களை சமூகத் தொண்டர்களாக ஆக்கிக் கொண்டு, சென்னை மாநகரத்திலே அவர்களே அந்தக் குப்பைகளையெல்லாம் அகற்றிய அந்தக் காட்சியை நான் தொலைக்காட்சிகள் மூலமாகக் கண்டேன், கேள்விப்பட்டேன். அவர்களையெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு நான் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் இந்தப் பொறுப்பிலே இருக்கிறோம், இன்னொரு பொறுப்பை நாம் கவனிக்கக் கூடாது என்று இல்லாமல், பொதுவாக பொதுப்பணியில் எந்தப் பொறுப்பானாலும் மக்களுக்காற்ற வேண்டிய தொண்டினை ஆற்றுகின்ற மனப்பக்குவத்தை எல்லோரும் பெற வேண்டும். அந்த வகையில் சென்னைக் காவல் துறை நண்பர்கள் – எல்லா நண்பர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருந்ததை நான் எண்ணி எண்ணி வியப்படைகிறேன், அவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன்.

அதனால் தான் இந்தத் திறப்பு விழாவிற்கு நான் வரவேண்டுமென்று கேட்ட மாத்திரத்தில், அவர்களுக்கு சாக்குப் போக்குச் சொல்லாமல் உடனடியாக நான் இங்கே வந்து கலந்து கொண்டதற்குக் காரணமே, அந்த நன்றியை உணர்த்துவதற்காகத் தான் வந்தேன் என்பதை தெரிவித்து இப்படி நான் அடிக்கடி நன்றி கூறுகின்ற சந்தர்ப்பத்தை எனக்கு நீங்கள் அளிக்க வேண்டும். அதைப்போல பொதுமக்களும், குப்பையைப் போடுபவர்களும் அந்தச் சந்தர்ப்பத்தை அளிக்கக் கூடாது, குப்பையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், எல்லோருக்கும் கடமை இருக்கிறது, எப்படி போலீஸ்காரர்களுக்கு அந்தக் குப்பைகளை அகற்றுவதற்கான கடமை உந்தித் தள்ளியதோ, அதைப் போல அவைகள் குவியாமல் இருப்பதற்கான அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மாநகராட்சிக்கு மாத்திரமல்ல, பொதுமக்களுக்கும் இருக்கிறது. எல்லோரும் ஒத்துழைத்து நம்முடைய நகரத்தை சீர்மிகு நகரமாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, இந்த இல்லங்களில் குடி புகுவோர் நல் வாழ்வு வாழ்ந்திட என்னுடைய இனிய வாழ்த்துக்களை அவர்களுக்கெல்லாம் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
13.10.2007 அன்று சென்னை மாம்பலம் –
காவலர் குடியிருப்பு வளாகத்தை திறந்து
வைத்து ஆற்றிய உரை.

❖ ❖ ❖



# 2,82,674 அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 79 கோடியே 28 இலட்சத்து 43 ஆயிரத்து 139 ரூபாய் உதவித்தொகை



தமிழகத்தில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் நோக்கில் ஒவ்வொரு வகைத் தொழிலுக்கும் ஒரு நல வாரியம் தொடங்கப்பட்டு, அந்த நல வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் 7.8.2006 அன்று தொடங்கப்பட்டு 71 இலட்சத்து 5 ஆயிரத்து 307 விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 1 கோடியே 59 இலட்சத்து 85 ஆயிரத்து 391 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் தொடங்கப்பட்டு, அதன் மூலம் பெண் உறுப்பினர்களின் / மகள் திருமணத்திற்கு 5,000 ரூபாய் உதவித் தொகை; ஆண் உறுப்பினர்/மகன் திருமணத்திற்கு 3,000 ரூபாய் உதவித் தொகை; உறுப்பினரின் மகன்/மகளின் கல்வி வளர்ச்சிக்கு முதுகலைப் படிப்பு வரை விடுதிச் செலவுடன் படிப்பு உதவித் தொகை; கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, 60 வயதானவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் மாதம் 400 ரூபாய்; இயற்கை மரணங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய், விவசாயப் பணிகளின்போது விபத்துகளால் ஏற்படும் மரணங்களுக்கு 1 இலட்சம் ரூபாய், ஈமச் சடங்குகளுக்கு 2,500 ரூபாய் என இத்திட்டத்தின் கீழ் நிதியுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 31.8.2007 வரை மொத்தம் 1 இலட்சத்து 4 ஆயிரத்து 671 விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு 35 கோடியே 36 இலட்சத்து 71 ஆயிரத்து 509 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதுபோலவே, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியத்தில் 3 இலட்சத்து 95 ஆயிரத்து 453 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 64 ஆயிரத்து 247 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 14 கோடியே 78 இலட்சத்து 21 ஆயிரத்து 799 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியத்தில் 22 ஆயிரத்து 763 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 2 ஆயிரத்து 61 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 36 இலட்சத்து 33 ஆயிரத்து 401 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியத்தில் 15 ஆயிரத்து 621 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் ஓராயிரத்து 561 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 29 இலட்சத்து

45 ஆயிரத்து 40 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியத்தில் 9 ஆயிரத்து 754 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 1,522 பணியாளர் களின் குடும்பங்களுக்கு 24 இலட்சத்து 26 ஆயிரத்து 795 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியத்தில் 1 இலட்சத்து 49 ஆயிரத்து 874 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 25 ஆயிரத்து 691 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 4 கோடியே 90 இலட்சத்து 27 ஆயிரத்து 351 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தில் 22 ஆயிரத்து 300 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 1,177 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 23 இலட்சத்து 27 ஆயிரத்து 160 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தில் 14 ஆயிரத்து 840 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 395 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 7 இலட்சத்து 20 ஆயிரத்து 100 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியத்தில் 78 ஆயிரத்து 59 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 15 ஆயிரத்து 818 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 3 கோடியே 2 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியத்தில் 3 ஆயிரத்து 168 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 340 பணியாளர் களின் குடும்பங்களுக்கு 6 இலட்சத்து 7 ஆயிரத்து 38 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொற்கொல்லர் நலவாரியத்தில் 5 ஆயிரத்து 481 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 364 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 5 இலட்சத்து 67 ஆயிரத்து 124 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தில் 3 ஆயிரத்து 313 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 302 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 6 இலட்சத்து 7 ஆயிரத்து 192 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நலவாரியத்தில் 47 ஆயிரத்து 170 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களின் 2 ஆயிரத்து 214 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 40 இலட்சத்து 29 ஆயிரத்து 330 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 31.8.2007 வரை 4 இலட்சத்து 46 ஆயிரத்து 864 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களின் 62 ஆயிரத்து 226 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 19 கோடியே 41 இலட்சத்து 30 ஆயிரத்து 625 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

ஆக விவசாயத் தொழிலாளர் நல வாரியம், உடல் உழைப்புத் தொழிலாளர் நலவாரியம் முதலான 13 அமைப்பு சாராத் தொழிலாளர் நலவாரியங்கள், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் ஆகிய அனைத்து வாரியங்கள் மூலமும் 13.5.2006இல் இந்த அரசு அமைந்த பிறகு 31.8.2007 வரை ஏறத்தாழ 15 மாதங்களில் 1 கோடியே 72 இலட்சத்து ஓராயிரத்து 312 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில், 2 இலட்சத்து 82 ஆயிரத்து 674 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு மொத்தம் 79 கோடியே 28 இலட்சத்து 43 ஆயிரத்து 139 ரூபாய் பல்வேறு இனங்களின் கீழ் உதவித் தொகைகளாக வழங்கப்பட்டு அமைப்பு சாரா தொழிலாளர்களின் நல வாழ்வுக்கும், வள வாழ்வுக்கும் அளப்பரிய உதவிகளை ஆற்றியுள்ளது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு.



# காமன்வெல்த் மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழக விளையாட்டு வீரர்களுக்கு 1 கோடியே 31 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுகள் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வழங்கினார்



தமிழகம் விளையாட்டுத் துறையில் முன்னோடி மாநிலமாக உயர்ந்து உலகப்புகழ் பெற வேண்டும் என்ற நோக்கில் தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் ஊக்கப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுகிறது. அத்திட்டத்தின்படி ஒலிம்பிக் போட்டி, காமன்வெல்த் போட்டி, ஆசிய விளையாட்டுப் போட்டி, தெற்காசிய விளையாட்டுப் போட்டி போன்ற பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துவரும் தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மேலும் பல வெற்றிகளைப் பெறுவதற்கு ஊக்கம் அளித்திடும் வகையில் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

அந்த வகையில், அண்மையில் மெல்போர்னில் நடைபெற்ற 18ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளிலும், இலங்கையில் நடைபெற்ற 10ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பதக்கங்களைப் பெற்றுச் சாதனைகள் படைத்துள்ள 28 வீரர்களுக்கும், 10 வீராங்கனைகளுக்கும் மொத்தம் 1 கோடியே 31 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுத்தொகை ஏற்கெனவே தமிழக அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 17 வீரர்களுக்கும், 11 வீராங்கனைகளுக்கும் மொத்தம் 96 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5.10.2007 அன்று வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்.

# பார்வையற்ற மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் விலக்களித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை



பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர், தங்களது 15–அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 26.9.2007 முதல் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், மாண்புமிகு சமுகநலத் துறை அமைச்சர் டாக்டர். பூங்கோதை அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட பார்வையற்றவர்களை 29.9.2007 அன்று காலை நேரில் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.9.2007 அன்று சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க இருப்பதாகவும், எனவே போராட்டத்தை உடனே கைவிடுமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் சங்கப் பிரதிநிதிகளை கேட்டுக்கொண்டார்.

இதனை ஏற்று, பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் போராட்டத்தை 29.9.2007 அன்று கைவிடுவதாக அறிவித்தனர்.

30.9.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டனர்.

பார்வையற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் வாசிப்பாளர் உதவித் தொகையை உயர்த்துவதற்கும், பி.எட். வகுப்புகளில் 7 அரசுக் கல்லூரிகளில் மொத்த 35 இடங்கள் பார்வையற்றவர்களுக்கு 2008ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு நீட்டித்து வழங்கவும், அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் கல்விக் கட்டண விலக்கு, தேர்வுக் கட்டண விலக்கு மற்றும் தேர்வு எழுத ஒரு மணி நேரம் கூடுதலாக ஒதுக்கக் கோருதல் சம்பந்தமாக ஏற்கெனவே உள்ள அரசாணையை அனைத்து பல்கலைக் கழகங்களும், உடனடியாகப் பின்பற்றவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மேலும், பட்டதாரி ஆசிரியர் மொத்தப் பணியிடங்களில் இரண்டு சதவிகிதம் பார்வையற்றோருக்கு வழங்குவது சம்பந்தமாகவும், சிறப்பு நிகழ்வாக பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் பார்வையற்றோர்களுக்கு வழங்குவது சம்பந்தமாகவும் பள்ளிக் கல்வித் துறையுடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கட்டணச் சலுகை வழங்குவது சம்பந்தமாக போக்குவரத்துத் துறையுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அறிவித்தார்கள். மேலும், மற்ற கோரிக்கைகளை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்குமென்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தச் சந்திப்பின்போது மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்கள், நிதித்துறைச் செயலாளர், சமூகநலத் துறை செயலாளர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் ஆகியோர் உடன் இருந்தனர்.



# 10, 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் சாதனை படைத்த 12 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ-மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகள், பாராட்டுக்கள்

## ஐ.ஏ.எஸ் முதன்மைத் தேர்வுக்குச் செல்லும் 5 மாணவ - மாணவிகளுக்கு தலா ரூ.25,000 ஊக்க உதவித் தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வழங்கினார்



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து அரசுத் தேர்வுகள் இயக்ககம் 2007 மார்ச்சுத் திங்களில் நடத்திய 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி திருவண்ணாமலை அ.வைஷ்ணவி, மாணவர் விருதுநகர் கு.சுகதேவ், பழங்குடி இன வகுப்பைச் சேர்ந்த மாணவி நாமக்கல் ந.ஜனனி, மாணவர் விழுப்புரம் இரா.விஜய்ராம்குமார், கிறித்துவ ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி வேலூர் பிரியங்கா விக்டர், மாணவர் நாகப்பட்டினம் டி.எம்.ஏ. ஜெயபாலன் ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதமும்,

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி நாமக்கல் ஆ.ஸ்ரீநித்யா, மாணவர் பா.சுவீர்மன், பழங்குடி இன வகுப்பைச் சேர்ந்த மாணவி சேலம் மு.சுகாசினி, மாணவர் நாமக்கல் ஜே.ச. சந்தோஷ், கிறித்துவ ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி திருச்சி ஜோ. இக்னேசியஸ் நான்சி, மாணவர் விழுப்புரம் ஜே.ஜோபிரவின்குமார் ஆகியோருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதமும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 27.9.2007 அன்று பரிசுத் தொகைகளை வழங்கிப் பாராட்டினார்.

மேலும், ஐ.ஏ.எஸ். பதவிக்கான முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதவிருக்கும் ஆதிதிராவிட, பழங்குடியின வகுப்பைச் சார்ந்த 100 இளைஞர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் சேலம் எம். பூங்கொடி, சென்னை கே. சபரி ராஜ்குமார், தூத்துக்குடி ஏ.கனகராஜ், மதுரை ஜி. வீரபாண்டியன், மதுரை என். நந்தினிப் பிரியா ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தலா ரூ.25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. தமிழரசி, செயலாளர் திரு. சி. முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப., இயக்குநர் திரு. தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் முனைவர் சிவசூரியன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

# சென்னை இராணிமேரி கல்லூரியில் கலைஞர் வளாகம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்



மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் கல்வித் துறை மானியக் கோரிக்கை கொள்கை முடிவாக சென்னை இராணிமேரி கல்லூரியில் போதுமான வகுப்பறை இல்லாத குறையினைக் களையும் பொருட்டு ரூ.2.5 கோடியில் புதிய கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து அரசாணை எண்.273/ உயர் கல்வித்துறை (டி1), நாள் 6.8.2007, ரூ.2.50 கோடியில் "டாக்டர் கலைஞர் கட்டடத் தொகுதி" என்ற பெயரில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இக்கட்டடமானது கான்கிரீட் தூண்களால் (Framed Structure) தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள் உள்ளதாக உருவாக்கப்பட உள்ளது. ஒவ்வொரு தளத்திலும் கட்டப்பட உள்ள கட்டடத்தின் அளவுகள் விவரம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தரைத்தளம் 828 ச.மீ. (8,908 ச. அடிகள்) இத்தளத்தில் ஐந்து வகுப்பறைகள், நூலகம், அலுவலக அறை மற்றும் அலுவலர்கள் அறை அமைய உள்ளது. முதல் தளம் 780 ச.மீ (98,392 ச.அடிகள்) கல்லூரி நிருவாக அலுவலகம், முதல்வர் அறை, தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம், தலைவர் அறை, கருத்தரங்குக் கூடம் மற்றும் வகுப்பறைகள் அமைய உள்ளது.

இரண்டாம் தளம் 780 ச.மீ. (8,392 ச. அடிகள்) இரண்டாம் தளம் முழுவதும் வகுப்பறைகள் அமைய உள்ளது.

இக்கட்டடத்தின் வகுப்பறைகள் மற்றும் நடைவழி ஆகியவற்றிற்கு இராஜஸ்தான் கற்கள் மற்றும் செராமிக் ஓடுகளால் தரை பதிக்கப்படும். சன்னல்கள் அலுமினியத்தால் அமைக்கப்படும்.

இக்கட்டடத்திற்கு தேவைப்படும் மின்சாரம், சுகாதாரம், தண்ணீர் மற்றும் அனைத்து வசதிகளும் செய்யப்படும். இக்கட்டடத்தின் முகப்புத் தோற்றம் திராவிடப் பராம்பரிய கலைநயத்துடன் விளங்கும்.

சென்னை, இராணி மேரி கல்லூரியில் 11.10.2007 அன்று நடைபெற்ற விழாவில் 'கலைஞர் வளாகம்' புதிய கட்டடத்திற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர். க.பொன்முடி, மற்றும் உயர்கல்வித்துறைச் செயலாளர், கல்லூரி முதல்வர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ✶



# அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,618 ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை



## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு

தமிழகத்தில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,618 ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்று திண்டிவனத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 21.9.2007 அன்று நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. க.பொன்முடி, மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணை அமைச்சர் திரு. க.வேங்கடபதி, ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் திரு. அசோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., இயக்குநர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசுச் செயலாளர் திரு. தீனபந்து இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிருவாக இயக்குநர் திரு.ஸ்வரண்சிங், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர் கோபால் இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு. பிரஜேந்திர நவ்தீப், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசியதாவது:

விழுப்புரத்தில் கடந்த மார்ச் திங்கள் கூட்டம் நடத்தினோம். தற்போது திண்டிவனத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தி, திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்றிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தி உள்ளோம்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் 10 மாவட்டங்களில் பணி நடைபெற்று வருகிறது. அதில் விழுப்புரம் மாவட்டத்தில் 74 விழுக்காடு பணிகள் முடிவுற்றது. இப்பணிகளுக்காக ரூ.166 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.120 கோடி அளவிலான பணிகள் சிறப்பாக நடைபெற்று உள்ளது.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள 12,618 ஊராட்சிகளின் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், விழுப்புரம் மாவட்டத்தில் 7,550 பணிகள் எடுக்கப்பட்டு, அதில் 5,339 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,000 பணிகள் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும்.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில், திருவெண்ணைநல்லூர், கோட்டகுப்பம் மற்றும் மரக்காணம் ஆகிய பேரூராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 9 கோடியே 92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண விழுப்புரம் மாவட்டம் 2 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதற்கான பணியாளர்களும் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் சார்பாக இதுவரை 650 திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது.

கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை போன்ற பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். விழுப்புரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு, அடுத்த வாரம் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

செஞ்சி, விழுப்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஓராண்டிற்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். விழுப்புரத்தில் வணிக வளாகம், பூங்கா அமைப்பதுபோன்ற பணிகள் விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்" இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.



## ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியருக்கு விமான பணிப்பெண் பயிற்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் 2006–2007 ஆம் ஆண்டில் 100 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியருக்கு விமான பணிப்பெண் பயிற்சி அளிக்க ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டு பயிற்சி நடைபெற்று வருகின்றது. இப்பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி அவர்கள் 8.10.2007 அன்று ஆய்வு செய்தார். அங்கு பயிற்சி பெறும் மாணவிகளுடன் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார். பயிற்சி பெறும் மாணவிகள் இப்பயிற்சி பயனுள்ளதாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள். இப்பயிற்சி பெறும் அனைத்துப் பெண்களுக்கும் வேலை பெற்றுத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிற்சி அளிக்கும் நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டார். ★



# பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை செயல்முறைக் கையேடு

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட்டார்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 2007–08 ஆம் ஆண்டு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க அனைத்துப் பேரூராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது குறித்து, "பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை – செயல்முறை கையேடு" எனும் நூல் பேரூராட்சி நிருவாகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அறிவியல் முறையில் திடக்கழிவுகளைக் கையாளுதல் மற்றும் மேலாண்மை முறைகளை நெறிப்படுத்த பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், பேரூராட்சிப் பொறியாளர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய விதிமுறைகளுக்கேற்ப திடக்கழிவு பதனீடு மற்றும் புதைக்களம் தேர்வு செய்தல், வீட்டுக்கு வீடு மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்தல் மற்றும்

"பேரூராட்சிகளில் தற்போது செயல்பாட்டில் உள்ள அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் இதரத் திட்டங்கள் மூலம் மேம்பாடும் அடையும் இந்த வேளையில், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி முறைகளைப் பின்பற்றி, தூய்மையுள்ள பேரூராட்சியே நம் பேரூராட்சி என்பதனை உறுதி செய்திட வேண்டும்."

மறுசுழற்சிக்கான வழி முறைகள், திடக்கழிவு மேலாண்மை கையாளுதல் மற்றும் மேலாண்மை விதிகள் 2000இன் செயல் இலக்குகள், அறிக்கை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் போன்றவைகள் குறித்த விவரங்கள் அடங்கியுள்ளன.

மேலும், இத்திட்டம் தொடர்பான புகைப்படங்களுடன் கூடிய மாதிரிகள், செய்யக்கூடிய மற்றும் செய்யக் கூடாத வழிமுறைகள், இத்திட்டத்தில் உபயோகிக்கும் கருவிகள் மற்றும் உபகரணங்களில் பயன்பாடுகள், பல்வேறு செயலாக்க வழிவகைகள், மாதிரி புதைக்களம் போன்ற விவரங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வீட்டுக்கு வீடு குப்பைகளைத் தரம் பிரித்து சேகரிக்கும் முறையினை இந்நிதி ஆண்டு முதல் நடைமுறைப் படுத்துதல் பேரூராட்சிகளின் தலையாய கடமையாகும். இதனை ஊக்கப்படுத்தும் விதமாக பணியாளர்களுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும், குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கும் போதிய பயிற்சி அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக, இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி முறைகள் மிகவும் உபயோகமாக அமையும். இந்த செயல்முறைக் கையேடு அனைத்துப் பேரூராட்சி செயல் அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் பொதுநல ஆர்வலர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

பேரூராட்சிகளில் தற்போது செயல்பாட்டில் உள்ள அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் இதரத் திட்டங்கள் மூலம் மேம்பாடு அடையும் இந்த வேளையில், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி முறைகளைப் பின்பற்றி, தூய்மையுள்ள பேரூராட்சியே நம் பேரூராட்சி என்பதனை உறுதி செய்திட வேண்டும்.

இந்நூல் வெளியீட்டினை காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த அச்சரப்பாக்கம், மாங்காடு, பெருங்களத்தூர், செம்பாக்கம், மாமல்லபுரம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி, போரூர் மற்றும் மீஞ்சூர் பேரூராட்சிகளின் மன்றத் தலைவர்கள் அனைத்துப் பேரூராட்சி மன்றத் தலைவர்கள் சார்பாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர்.கே.கோபால்,இ.ஆ.ப., மற்றும் பேரூராட்சிகளின் இயக்கக அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

* * *





# சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் கண்கவர் புதிய அதிநவீன குளிர்சாதனப் பேருந்துகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 17.9.2007 அன்று, மத்திய புறநகர் பேருந்து நிலையத்தில் உள்ள கோயம்பேட்டில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் புதிய அதிநவீன குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வைத்தும், புதிய பேருந்துகள் மற்றும் புதிய வழித் தடங்கள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தும், பயணச்சீட்டு வழங்கும் கையடக்க மின்னணு கருவியினை அறிமுகப்படுத்தியும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் உடனடி தளம் வழிப்பதிவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தும், போக்குவரத்துத் துறையில் புதிய எல்.பி.ஜி. ஆட்டோக்களுக்கான அனுமதிச் சீட்டு வழங்கியும் மற்றும் கணினி தேர்வு மூலம் பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்கும் சிறப்புத் திட்டத்தினையும் தொடங்கி வைத்தார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தலைமை வகித்தார். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி முன்னிலை வகித்தார். போக்குவரத்துத்துறை செயலாளர் திரு.தேவேந்திரநாத் சாரங்கி மற்றும் நிருவாக இயக்குநர் திரு.இரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் உடனிருந்தனர்.

நவீனத் தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப் பட்டிருந்த பேருந்துகள். எழிலுற ஊர்ந்து சென்ற காட்சி அனைவரையும் கவர்ந்தது.



# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பல்வேறு நிலைகளில் பணி நியமனங்கள்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை 26.9.2007 அன்று வழங்கினார்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், குடிநீர்த் திட்டங்களையும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களையும் விரைவாகச் செயல்படுத்திட, காலியாக உள்ள பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று 12.4.2007 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப் பட்டது.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அலுவலக பணிகளையும், களப் பணிகளையும் விரைவுப்படுத்திட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, காலி பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, இரண்டாவது கட்டமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறைகளின்படி தகுதி வாய்ந்த ஓட்டுநர் உரிமம் பெற்று, கீழ்நிலைப் பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்கள் 17 நபர்களுக்கு ஓட்டுநர் பணி நியமனமும், உரிய தகுதி உள்ள இளங்கலைப் பட்டம் பெற்று கீழ்நிலைப் பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்கள் 36 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனமும், உதவியாளராகப் பதவி உயர்வு பெற உரிய தகுதிகள் பெற்ற இளநிலை உதவியாளர் / தட்டச்சர் 95 நபர்களுக்கும் / 3ஆம் நிலை சுருக்கெழுத்து தட்டச்சர்கள் 23 நபர்களுக்கு உதவியாளராகப் பணி மாற்றல் முறை ஆணைகளும் 26.9.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் முந்தைய ஆட்சியில் பல ஆண்டுகளாக முடக்கி வைக்கப்பட்டிருந்த பணி நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் சலுகைகளை கழக அரசு பதவியேற்ற பின்பு மீண்டும் வழங்கிட ஆணையிட்டதன் பயனாக இந்த பணி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியின்போது, நகராட்சி நிருவாகத் துறைச் செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. ஸ்வரண்சிங், வாரியப் பொறியியல் இயக்குநர் திரு.பி.கே. நடேசன் மற்றும் வாரிய உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், 2006ஆம் ஆண்டு முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், குறுகிய காலத்தில் பணியாளர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டன. அதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் 858 தொகுப்பூதியப் பணியாளர்கள் கால முறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். 173 மதிப்பூதியப் பணியாளர்களின் வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி முதலிய வரைமுறைகளை தளர்த்தி தொகுப்பூதியப் பணியாளர்களாக மாற்றி உத்தரவிடப்பட்டது.

20 ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 54 ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. 10 ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 33 ஊர்தி ஓட்டுநர்களுக்கு தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டது. 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004–05ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை 28.8.2006லும், 2005 – 06 ஆம் ஆண்டிற்கான போனசும் மொத்தம் சுமார் 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 8,000 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.

25 ஆண்டுகள் மாசற்ற பணி முடித்த 6 அலுவலர்களுக்கு கிசான் விகாஸ் பத்திரங்கள் வழங்கப்பட்டன. ஐந்து ஆண்டு காலமாகப் பதவி உயர்வுகள் வழங்கப்படாதிருந்த பல பிரிவு பணியாளர்களுக்கும், பொறியாளர்களுக்கும் விதிமுறைகளின்படி 432 நாட்களில் 528 நபர்களுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டது.

புதிதாக 19 உதவிப் பொறியாளர்கள் நியமனம் மற்றும் கீழ்நிலைப் பதவிகளில் பணியாற்றி பொறியியல் பட்டம் பெற்ற 67 நபர்களுக்கு உதவிப் பொறியாளராகப் பணி நியமன ஆணை 23.7.2007 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டங்கள் தோறும் ஆய்வுகள் மேற்கொண்டு, பணிகள் செவ்வனே துரிதமாக நடைபெற ஆணைகள் வழங்கியதற்கிணங்க, மாபெரும் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைத் துரிதமாகச் செயல்படுத்திட இரண்டு வட்ட அலுவலகங்கள் மற்றும் நான்கு கோட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டது.

இதைப்போல ஊரகக் குடிநீர்த் திட்ட வேலைகள் துரிதமாகச் செயல்படுத்திட திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டிலும் இரு ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்டங்கள் புதியதாக உருவாக்கப்பட்டது. இப்புதிய வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் உருவாக்கப்பட்டதால் மேலும் பொறியாளர்களுக்கும் மற்றும் பணியாளர் களுக்கும் பதவி உயர்வு பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



## தமிழக சதுரங்க விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்துக்கு ரூ.25 இலட்சம் ஊக்கத்தொகை

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு

தமிழ்நாட்டைச் சார்ந்த சதுரங்க விளையாட்டு வீரர் திரு.விஸ்வநாதன் ஆனந்த், 2007 செப்டம்பர் மாதம் மெக்சிகோவில் நடைபெற்ற உலக சதுரங்க விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று இரண்டாவது முறையாக உலக சதுரங்க சாம்பியன்ஷிப் பட்டம் வென்று, தமிழகத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். மிகச் சிறந்த இந்த வெற்றியைப் பாராட்டியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் அவருக்கு ஊக்கத் தொகையாக 25 இலட்சம் ரூபாய் வழங்கிட ஆணையிட்டுள்ளார்

# ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள்

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்**



சென்னை ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.9.2007 அன்று ரூ.2.40 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூபாய் 87.85 இலட்சத்திலான திட்டப் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சர்வீஸ் சாலையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 22 இலட்சத்து 60 ஆயிரத்து 770 மதிப்பிலான பூங்காவினைத் திறந்துவைத்து எழில்மிகு நீர்வீழ்ச்சியினை இயக்கி வைத்தார். இப்பூங்கா 33,100 சதுர அடி பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ளது. 160 மீட்டர் நடைபாதையும், 2,670 சதுரமீட்டர் சிறுவர் விளையாடுமிடமும், 1,070 சதுர அடியில் புல்வெளிகள், கழிப்பறை, குடிநீர் வசதிகளும் உள்ளன. வாகனங்கள் நிறுத்துவதற்கு 2,136 சதுர அடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலையில் ரூபாய் 42.60 இலட்சம் மதிப்பிலான பகுப்பாய்வுக் கூடத்தினை மாண்புமிகு அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.

இப்பகுப்பாய்வுக் கூடத்தில் ஏழை, எளிய மக்கள் பயன் பெறுவதற்காக எக்ஸ்ரே, இ.சி.ஜி., மலம், சிறுநீர் பரிசோதனைகள் மற்றும் அனைத்து வகையான இரத்தப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு சென்னையின் மேயராக இருந்தபொழுது மேற்கொண்ட சீரிய முயற்சியினால் வள்ளுவர்கோட்டம், சைதாப்பேட்டை, ஈ.வெ.ரா. சாலை, பெரம்பூர் ஆகிய இடங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பகுப்பாய்வுக் கூடங்கள், ஆய்வுக்கூடங்கள் தொடங்கப் பட்டன. பின்னர் அவை சென்ற ஆட்சியாளர்களால் மூடப்பட்டது. தற்போது மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பகுப்பாய்வுக் கூடத்தின் பயன்பாட்டிற்காக ரூபாய் 40



இலட்சம் செலவில் உபகரணங்கள், 5 இலட்சம் செலவில் மரத்தளவாடப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன

தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லேக் ஏரியா முதல் பிரதானசாலை மற்றும் 7ஆவது குறுக்குத் தெருக்களில் ரூபாய் 79.62 இலட்சம் மதிப்பிலான சிமெண்ட் கான்கிரீட் சாலை போடும் பணியினைத் தொடங்கி வைத்தார். இப்பணியின் நீளம் 383 மீட்டர். பரப்பளவு 3,903 சதுர மீட்டர் ஆகும்.

வள்ளுவர்கோட்டம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக அரிமா சங்கம் மூலம் ரூபாய் 2 இலட்சம் செலவிலான குடிநீர் சுத்திகரிப்புத் தொட்டியையும், மாதிரிப் பள்ளி சாலையில் ரூபாய் 7 இலட்சம் மதிப்பிலான உடற்பயிற்சிக் கூடத்தினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர் ஒயிட்ஸ் சாலை – வெஸ்ட் காட் சாலை சந்திப்பில் 24 எண்ணிக்கையிலான உயர் கோபுர மின்விளக்குகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இயக்கி வைத்தார். இதன் மதிப்பு ரூபாய் 5. 74 இலட்சமாகும்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மீர் பக்ஷி அலி தெருவில் 32 குடியிருப்புகளுக்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன் அவர்கள் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

இதன் பரப்பளவு 4,364 சதுர அடியும், கட்டட பரப்பளவு 6,304 சதுர அடியும், தரைத்தளத்துடன் மூன்று தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 56 இலட்சமாகும்.

தோமையப்பன் தெருவில் 60 குடியிருப்புகளுக்கான அடிக்கல் நாட்டினார். கட்டட பரப்பளவு 12,000 சதுர அடியாகும். தரைத்தளத்துடன் மூன்று தளங்கள் கட்டப்படவுள்ளன. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 1கோடியே 5 இலட்சமாகும்.

பின்னர் எல்டாம்ஸ் சாலையில் 40 எண்ணிக்கையிலான புதிய தெருவிளக்குகளை ரூபாய் 8.43 இலட்சத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இயக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் மா.சுப்பிரமணியன் அவர்கள், ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி,இ.ஆ.ப., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன், துணை மேயர் திருமதி ஆர்.சத்தியபாமா மற்றும் மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.


**100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்**

TNSC BANK

**TNSC வங்கி**

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**
233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

இணையதளம் : www.tnscbank.com


செ.ம.தொ.இ/1664/வரைகலை/2007

# நிலக்கோட்டை சிப்காட் வளாகத்தில் இரண்டு தொழில் நிறுவனங்கள் அமைக்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் முதலீட்டின் அவசியம் குறித்து அவ்வப்போது வலியுறுத்தி வருகிறார்கள். இது குறித்து அரசின் முயற்சிகளின் காரணமாக கீழ்வரும் இரண்டு நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான திண்டுக்கல்லில் அமைந்துள்ள நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் நிறுவ முன்வந்துள்ளன.

1) பென்னர் (இந்தியா) லிமிடெட்

2) கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா பி லிமிடெட்

சிப்காட் மற்றும் மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கிடையில் நிலம் ஒதுக்கீடு செய்வது, கட்டுமான வசதி மற்றும் திட்ட வசதிகள் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் 12.9.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தாகியது.

முனைவர். என்.கோவிந்தன், இ.ஆ.ப., தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சிப்காட் சார்பாகவும், திரு.எல்.ராம்குமார், தலைவர் மற்றும் இயக்குநர் பென்னர் இந்தியா லிமிடெட் சார்பாகவும் மற்றும் திரு.சுனில் பஹிலாஜனி, நிருவாக இயக்குநர் கெப்பாரோ இன்ஜினியரிங் சார்பாகவும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழக அரசின் தொழில் துறை செயலாளர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப. பங்கேற்றார்.



## தொழில் திட்டங்கள் குறித்த விவரங்கள்

1. பென்னர் (இந்தியா) லிமிடெட் நிறுவனமானது டயர், பேப்பர், சிமெண்ட், பால்பண்ணை, அக்ரோ ஜெனிடிக்ஸ் மற்றும் பிற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நடத்துகிறது. தமிழகத்தில் இந்நிறுவனம் தொழில்துறையில் சுமார் 200 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற் பூங்காவில் ஆயில் சீல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் இந்நிறுவனம் தொடங்க உள்ளது.

நவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய பெல்ட் (வி–பெல்ட், பாலி வி–பெல்ட் மற்றும் டைமிங் பெல்ட்) தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் இந்நிறுவனம் தொடங்க உள்ளது. இத்தொழிற்சாலையில் ரூ.35 கோடி முதலீடு செய்து 300 பேருக்கு (நேரடியாக 150 மற்றும் மறைமுகமாக 150) வேலை கொடுத்து ஓராண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா பி லிமிடெட் நிறுவனம் லார்ட் ஸ்வராஜ் பால் என்பவரால் 1968 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இங்கிலாந்து நாட்டின் கெபாரோ குழுமத்தைச் சேர்ந்தது. இக்குழுமம் இங்கிலாந்து, தென் அமெரிக்கா, இந்தியா, ஸ்பெயின், துபாய் போன்ற 50க்கும் மேற்பட்ட நாடுகளில் 6,000 பேர்களைப் பணியில் அமர்த்தி ஒரு பில்லியன் யூரோ வர்த்தகத்தில் ஈடுபட்டு உள்ளது. இந்தியாவில் இந்நிறுவனம் 16 தொழிற்சாலைகளை நிறுவி 1,800 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சென்னைக்கு அருகில் அமைந்துள்ள ஒரகடம் சிப்காட் தொழில் வளர்ச்சிப் பூங்காவிலும், திருப்பெரும்புதூர் தொழிற் பூங்காவிலும் தொழிற்சாலைகளை இந்நிறுவனம் தொடங்க உள்ளது.

**இந்தியாவில் இந்நிறுவனம் 16 தொழிற்சாலைகளை நிறுவி 1,800 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சென்னைக்கு அருகில் அமைந்துள்ள ஒரகடம் சிப்காட் தொழில் வளர்ச்சிப் பூங்காவிலும், திருப்பெரும்புதூர் தொழிற் பூங்காவிலும் தொழிற்சாலைகளை இந்நிறுவனம் தொடங்க உள்ளது.**

இயந்திர வில்லைகள் (Stamping Unit) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் இந்நிறுவனம் தொடங்க உள்ளது. இத்தொழிற்சாலையில் ரூ.40 கோடி முதலீடு (ரூ.25 கோடி முதல் கட்டமாகவும், ரூ.15 கோடி இரண்டாம் கட்டமாகவும்) செய்து 400 பேருக்கு (நேரடியாக 250 மற்றும் மறைமுகமாக 150) வேலைவாய்ப்பளித்து, அக்டோபர் 2009 இல் உற்பத்தியை தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

★

# சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 32 பெண் மருத்துவர்களுக்கு பணி நிரந்தர ஆணை

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.10.2007 அன்று தலைமைச் செயலகத்தில் சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் 32 பெண் மருத்துவர்களுக்கு பணி நிரந்தர ஆணைகளை வழங்கினார்.

சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்கள் மூலம் மருத்துவ சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்படுகிறது. இதற்காக சென்னை மாநகராட்சியில் 93 நகர நலவாழ்வு மையங்கள், 13 குடும்பநல அறுவை சிகிச்சை நிலையங்கள், 19 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் சைதாப்பேட்டை, பெருமாள் பேட்டையில் 24 மணி நேர அவசர மருத்துவமனை செயல்படுகிறது.

2004ஆம் ஆண்டு 32 பெண் மருத்துவர்கள் தொகுப்பூதிய முறையில் பணியமர்த்தப்பட்டனர். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பணி நிரந்தர கோரிக்கை ஏற்கப்பட்டு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி தற்போது சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையத்தில் பணிபுரியும் இந்த 32 பெண் மருத்துவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவதுடன், காலமுறை ஊதிய விகிதமான ரூ.8000–275–13500 என்ற அடிப்படையில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ள இந்த மருத்துவர்கள் பிற அரசு மருத்துவர்களைப்போல் அனைத்துப் பயன்களும் பெறுவார்கள். இந்தப் பணி நிரந்தர உத்தரவினைப் பெற்றுக் கொண்ட மருத்துவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையத்தின் மருத்துவப் பணிக்கு 32 மருத்துவர்கள், 56 செவிலியர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நியமிக்கப்பட உள்ளார்கள். இதனால் அனைத்து மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் மருத்துவர்கள் பணிபுரிவதன் மூலம் பொதுமக்களுக்கு சிறந்த முறையில் பிரசவ கவனிப்பு, குடும்பநல கருத்தடை சிகிச்சை, கருக்கலைப்பு, குழந்தைகளுக்கு தடுப்பூசி போன்ற முக்கியமான பணிகள் எவ்வித தொய்வின்றி நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., ஆணையர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) திரு.அ.மணிவேலன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



♦ ♦ ♦




தாய்கோ வங்கி

TAICO BANK

## தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.,

எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர்,
சென்னை–600 008.
தொ.பே.எண் 044–28411643, 044–28547952
மின் அஞ்சல்: taico@dataone.in/taico@vsnl.net

'தாய்கோ வங்கி' என்று அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழக அரசின் தொழில் வணிகத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது.

தமிழகம் முழுவதும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கி நன்மைகள் பல அடைவீர்!
விவரங்களுக்கு, அருகில் உள்ள
மாவட்டத் தொழில் மையம் மற்றும் தாய்கோ வங்கி கிளைகளை அணுகவும்!

தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு:
காலக்கடன், நடைமுறை மூலதனக் கடன், உண்டியல் தள்ளுபடி, வங்கி உத்திரவாதம் போன்ற வசதிகள் பெறுவீர்!

பொது மக்களுக்கு:
வீடு அடமானக் கடன், வீடு கட்டக் கடன், அதிகபற்றுக்கடன்,
அரசு பத்திரங்களின் மீது கடன், வைப்புநிதிகளின் மீது கடன், நகைக்கடன் ஆகிய கடன்களுக்கு குறைந்த வட்டியில் கடன் பெற்று பயனடைவீர்!

வைப்புத் தொகைகளுக்கு கூடுதலாக வட்டி பெறுவீர்!
முதியோரின் வைப்பு தொகைகளுக்கு 1% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

வைப்பு நிதிகளுக்கு அதிக வட்டி! கடன்களுக்கு குறைந்த வட்டி!
சிறந்த சேவை! நிறைந்த பாதுகாப்பு!

## தாய்கோ வங்கியில் முதலீடு செய்து பயனடைவீர்!

மேலும் விவரங்களுக்கு எங்கள் கிளைகளை தொடர்பு கொள்ளவும்.

[redacted]

| | ☎ | | | ☎ | |
|---|---|---|---|---|---|
| குன்னூர் | 0423 | 2206003 | நெய்வேலி * | 04142 | 268849 |
| கோவில்பட்டி | 04632 | 220547 | ஈரோடு * | 0424 | 2268024 |
| சாத்தூர் | 04562 | 260359 | அம்பத்தூர்* | 044 | 26540223 |
| மதுரை | 0452 | 2343464 | காஞ்சீபுரம் | 044 | 27223562 |
| திருச்சி | 0431 | 2462745 | திருவண்ணாமலை | 04175 | 251058 |
| சேலம் * | 0427 | 2313189 | திண்டுக்கல் | 0451 | 2433351 |
| வேலூர்* | 0416 | 2212597 | காரைக்குடி | 04565 | 233881 |
| நாகர்கோவில் | 04652 | 233741 | ஆழ்வார்பேட்டை | 044 | 24342463 |
| சேப்பாக்கம் | 044 | 28547751 | ஆத்தூர்(சேலம்) | 04282 | 242070 |
| கோயம்புத்தூர் | 0422 | 2529207 | கூடலூர்(நீலகிரி) | 04262 | 263712 |
| தஞ்சாவூர் | 04362 | 238286 | எழும்பூர் | 044 | 28411643 |
| திருநெல்வேலி * | 0462 | 2322921 | தர்மபுரி | 04342 | 266744 |
| கரூர் | 04324 | 262636 | சிவகாசி | 04562 | 276867 |
| தேனி | 04546 | 252163 | வியாசர்பாடி | 044 | 25516566 |
| நாமக்கல் | 04286 | 277616 | திருவாரூர் * | 04366 | 220090 |

* பாதுகாப்பு பெட்டக வசதி உள்ளது

செ.ம.தொ.இ/1727/வரைகலை/2007

# நகராட்சி நிருவாகத் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை



முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நேரடி நியமனங்களுக்கு 29.11.2001 முதல் ஒட்டு மொத்தத் தடை விதிக்கப்பட்டது. அரசுப் பணியின்போது இயற்கை எய்திய அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களைக் கருணை அடிப்படையில் நியமனம் செய்வதும் தடை செய்யப்பட்டது.

திராவிட முன்னேற்ற கழக அரசு மீண்டும் பதவியேற்ற பின்னர் அரசுப் பணியில் நேரடி நியமனத்திற்கு இருந்த தடையினை நீக்கியது. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது.

நகராட்சிகளில் நிரப்பப்படாமலிருந்த அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிருவாகத் துறையில் 15 மருத்துவர் பணியிடங்கள், 48 உதவிப் பொறியாளர் பணியிடங்கள், 3 நகரமைப்பு அலுவலர் பணியிடங்கள் மற்றும் 113 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.6.2007 மற்றும் 22.6.2007 ஆகிய தேதிகளில் வழங்கினார்.

மேலும், இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 25 விழுக்காடு பணியிடங்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்ய அரசு ஆணையிட்டதற்கிணங்க, நிலுவையில் இருந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 78 இளநிலை உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் பணியிடங்களுக்கு 9.8.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் நியமனத்திற்கான ஆணை சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்களுக்கு நேரில் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பணியிடைக் காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுகளிடமிருந்து 31.12.2006 வரையில் பெறப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, 18.9.2007 அன்று 26 இளநிலை உதவியாளர், 55 வருவாய் உதவியாளர், ஒரு தட்டச்சர், 4 ஓட்டுநர், 7 பணி ஆய்வர், 8 மின் கம்பி உதவியாளர் கிரேடு –II, 14 பதிவறை எழுத்தர், 24 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர், 2 சங்கிலியாள், 15 அலுவலக உதவியாளர், 12 காவலர், 12 மகப்பேறு ஆயா உள்ளிட்ட 180 பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் போது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, நகராட்சி நிருவாக இணை ஆணையர் வே.க.சண்முகம் மற்றும் நகராட்சி நிருவாக கூடுதல் இயக்குநர் வெ. பிச்சை மற்றும் நகராட்சி நிருவாகத் துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

நகராட்சிகளில் நிரப்பப்படாமல் உள்ள அனைத்துப் பணியிடங்களையும் அந்தந்த நகராட்சியின் நியமனக் குழுவின் மூலம் தொடர்ந்து பூர்த்தி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ★



# பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகத் திகழும் தமிழக அரசின் செய்தித்துறை

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி** அவர்களின் உரை



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள்
புதுடெல்லியில் 19.9.2007 அன்று நடைபெற்ற
மாநில செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்

மாண்புமிகு மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்களே, மாநில செய்தித்துறை அமைச்சர்களே, அரசுச் செயலாளர்களே, நண்பர்களே,

இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை ஏற்பாடு செய்துள்ள 26ஆவது மாநில செய்தித்துறை அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதில் நான் மிகவும் பெருமையடைகிறேன். தமிழ்நாட்டில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழிலில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, சிறப்பாகப் பணியாற்றுவதற்கு தமிழக செய்தித்துறையின் கரங்களை வலுப்படுத்தி, திறமையாக செயல்பட வைக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்வாழ்த்துக்களை இங்கு உங்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## பத்திரிகையாளர் நலன்

நான்காவது தூண் என்று அழைக்கப்படும் பத்திரிகைத் துறையினரின் நலன் காப்பதில் தமிழகம் என்றுமே முன்னோடியாக உள்ளது. 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பத்திரிகையாளர் எவரேனும் பணியிலிருக்கும் போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்திற்கு 'பத்திரிக்கையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்' கீழ், நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் அவர்களால் 1997ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, ரூ.25,000 நிதியுதவியாக வழங்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது இறந்துவிட்டால், அவர்களது குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூ.1.50 இலட்சம் என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூ.1இலட்சம் என்றும், 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலும் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூ.50 ஆயிரம் என்றும் குடும்ப நல நிதி வழங்கும் திட்டம்

நடைமுறைப்படுத்தப்படுகிறது. எனவே, ஒரு பத்திரிகையாளர் 5 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருந்தால், அவர் ஓய்வூதியத்திற்கும், குடும்ப நல நிதி வழங்கும் தகுதி பெறுகிறார்.

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தையும் தமிழகம் செயல்படுத்தி வருகிறது. ரூ.3,000 மாத ஓய்வூதியம் வழங்கி வந்ததை எங்கள் அரசு ரூ.4,000 ஆக உயர்த்தி தற்போது வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ், 73 ஓய்வுபெற்ற பத்திரிக்கையாளர்கள் பயன் பெறுகிறார்கள். பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிக்கையாளர் இயற்கை எய்தினால், அவரின் துணைவியாருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்பொழுது குடும்ப ஓய்வூதியத் தொகை மாதம் ரூ.1500 லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு வாங்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும், பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து செயல்படுத்துகின்றன.

தமிழகத்தில் திரைப்படத்துறை உலக அளவில் பெயர் பெற்றுள்ள அதிக அளவில் படம் தயாரிக்கப்படும் துறை என்பது அனைவரும் அறிந்ததே. தமிழ்நாட்டில் திரைப்படத் தொழில் பல ஆயிரக்கணக்கான உலகத் தரம் வாய்ந்த திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வேலைவாய்ப்பளிக்கும் முக்கிய தொழிலாக விளங்குவதோடு, 1,662 திரையரங்குகளையும் கொண்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற போது பல்வேறு காலங்களாக தொய்வாக இருந்த திரைப்படத்துறையை தூக்கி நிறுத்த ஒரு சூழ்நிலை இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த ஓராண்டில் முன்பு எப்போதும் இல்லாத வகையில் திரைப்படத்துறை மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. பொது மக்கள் தற்பொழுது அதிக அளவில் திரையரங்கத்திற்குச் சென்று படம் பார்க்கின்றனர். அதனால் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கானோர் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்பொழுது அதிக எண்ணிக்கையில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இந்த வெற்றிக் கதையை நான் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். இதை மற்ற மாநிலங்களும் பின்பற்றலாம்.

**திருட்டு வீடியோ தடுத்தல்**

திருட்டு வீடியோதான் திரைப்படத் தொழிலின் மிகப் பெரிய எதிரியாகக் கருதப்படுகிறது. எனவே, திருட்டு வீடியோவை இரும்புக்கரம் கொண்டு கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. திருட்டு வீடியோ தயாரிப்பில் ஈடுபடுவோரை 1982ன் சட்டம் 14ல் கீழ் தண்டிக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டு, 43 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். இச்சட்டம் மாநில அரசுகளுக்கு, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு, சட்டங்கள் இயற்ற உதவுகிறது. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ பதிவுக் கருவிகள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும், கம்பிவடத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி, திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டத்தை மீறும் குற்றவாளிகளுக்கு அபராதத் தொகை அதிகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வீடியோ திருட்டை தடுப்பதற்காக, 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம், தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு, காணொலிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு மூலமாக திரைப்படங்களைத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1952ஆம் ஆண்டு திரைப்படச் சட்டம் போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டு கையாளப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள பன்னாட்டு விமான நிலையங்களில் சுங்கத் துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, டி.வி.டி.க்கள் மற்றும் வி.சி.டி.க்கள் வெளிநாடுகளுக்குக் கடத்துவதையும், அவற்றை வெளிநாடுகளிலிருந்து கடத்தி வருவதையும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழகத்தில் திருட்டு வீடியோ நடமாட்டம் முடக்கப்பட்டுள்ளது.

மேலும், திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவில் பணியாற்றும் காவல்துறையினருக்கு சிறப்புப் பயிற்சியளிக்கப்பட்டு அவர்களுக்கு செயலாக்கம் குறித்தும் அதன் முக்கியத்துவமும் உணர்த்தப்பட்டு, அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

**திரைப்படத் தொழிலில் மறுமலர்ச்சி**

இக்கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவிருக்கும் திரைப்படத்துறை குறித்த தலைப்பினைப் பார்க்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். திரைப்படத்துறை வளர்ச்சி குறைந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் திரைப்படங்களைப் பார்ப்பது குறைந்து வருவதாலும், திரையரங்குகளில் போதிய வசதியின்மை காரணத்தினாலும், டிக்கெட்டின் அதிக விலை மற்றும் தொலைக்காட்சியின் வளர்ச்சியாலும், திரைப்படத்துறை நலிந்துவருகிறது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழில் பெயரிடப்பட்ட பழைய மற்றும் புதிய தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளித்தும், பொது இடங்களில் எடுக்கப்படும் படப்பிடிப்பிற்கான கட்டணங்களை பெருமளவில் குறைத்தும், பல்வேறு சலுகைகளை அளித்தும் ஆணையிட்டார்கள். இப்பயன்கள் பொதுமக்களுக்குச் சென்றடையும் என்ற நோக்கத்தில் இச்சலுகைகள் வழங்கப்பட்டன.

திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் மற்றும் பிலிம் சேம்பர், திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம், சென்னை மாநகரத் திரையரங்குகள் உரிமையாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புகள், திரையரங்குகளின் கட்டண விகிதங்களைக் குறைவாக விதிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டன. இச்சங்கங்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அரசு, திரையரங்குகள் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படையில் திரையரங்குகளின் கட்டணங்களை குறைந்த மற்றும் அதிக அளவுக்குள் கட்டணங்களை மாற்றியமைத்தும் மறுநிர்ணயம் செய்தும் ஆணை பிறப்பித்தது. மேலும், புதிதாக வெளியிடப்படும் திரைப்படங்களுக்குத் திரைப்படம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து முதல் இரண்டு வாரங்களுக்கு, உச்சவரம்பு ஏதுமின்றி திரையரங்கு உரிமைதாரர்கள் நுழைவுக் கட்டணங்களை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்கிற முந்தைய ஆணையையும் அரசு ரத்து செய்துள்ளது. அரசு நிர்ணயித்துள்ள அதிக அளவு கட்டணங்களுக்கும் குறைவாக ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு கட்டணத்தை நிர்ணயிக்க திரையரங்க உரிமையாளர் விரும்பினால், உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு முன்கூட்டியே அறிவிப்பு செய்து அவ்வாறு நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும், பல்வேறு வணிக அமைப்புகளைக் கொண்ட திரையரங்க உரிமையாளர்கள், சென்னை மாநகர திரைப்படம் காட்டுவோர் சங்கம் ஆகியோர் தங்களின் பல்வேறு வணிக அமைப்புகள் கொண்ட திரையரங்குகளுக்கு (Multiplex) தனியாகக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டும் எனக்கோரி முறையீடு செய்து கொண்டதன் அடிப்படையில் அவர்களுக்கு அரசு பல்வேறு வணிக அமைப்புகள் கொண்ட திரையரங்குகளுக்கு, அங்கு வழங்கப்படும் வசதிக்கேற்றவாறு நுழைவுக் கட்டணங்களை நிர்ணயித்து ஆணையிட்டது. ஒரே வளாகத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட திரையரங்குகள், வரைபடங்கள், கூடுதல் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் சீர்வளி வசதி கொண்ட குடும்ப கேளிக்கை மையங்களில் குறைந்த அளவு கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், பொதுமக்கள், குறிப்பாக நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் நுழைவுக் கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டதோடு, திரையரங்குகளில் சுகாதார சோதனைகளும் அடிக்கடி நடத்தப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணத்தை வெகுவாகக் குறைத்து ஆணையிட்டுள்ளார்கள். இன்று அதிக இடங்களில் படப்பிடிப்பு நடத்துவதற்கு மிகக் குறைந்த கட்டமாக ரூ.3000 மட்டும் ஒருநாள் படப்பிடிப்புக்கு வசூலிக்கப்படுகிறது. மேலும், தொலைக்காட்சித் தொடர்கள் படப்பிடிப்பிற்கு திரைப்படத்திற்கு உள்ள கட்டணத் தொகையில் 50 விழுக்காடு மட்டுமே கட்டணமாக வசூலிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்குவது போல் தொலைக்காட்சி நடிகர், நடிகையர் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கான விருதுகளை தமிழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. பன்னாட்டு விருதுபெறும் தமிழ் திரைப்படங்களுக்கு, அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, புதிதாக ஊக்கத் தொகை வழங்கும் திட்டமும் தற்பொழுது செயல்படுத்தப்படுகிறது. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த்திரைப்படங்களுக்கு மானியம் ரூ.7 இலட்சம் வழங்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் காரணமாக தமிழக திரைப்படத்துறை மிகப் பெரிய மாற்றத்தினை கண்டுள்ளது. திரையரங்குகளில் கூட்டம் அலை மோதுகின்றன. திரைப்படங்கள் அதிக அளவில் வணிக ரீதியில் வெற்றி பெறுகின்றன. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில் முன்பு எப்போதும் இல்லாத நம்பிக்கையுடன் செயல்படுகிறது. இந்த நம்பகத் தன்மை காரணமாக திரைப்படத்துறையினர் புதிய கோணங்களில் படமெடுக்க முனைகின்றனர். இப்பெரிய மாற்றம் உண்மையிலேயே ஒரு வரலாற்று சிறப்புமிக்க மாற்றமாகும். அதுவும் டாக்டர் கலைஞர் அரசு பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே நிகழ்ந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். தொழில்நுட்பத்திற்கேற்ப விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் திரைப்படத் தொழிலுக்கு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் தருவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை மற்றும் உத்தேசிக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு ஒத்துழைப்பதோடு இத்திட்டங்களைக் கனிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்றும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரையரங்கம் தொடர்பான சட்டங்கள் மிகவும் பழையனதாகிவிட்டன. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்றவாறு அவை மாற்றப்படாமல் அப்படியே உள்ளன. திரையரங்கம் கட்டப்படுவதற்கும், படங்கள் திரையிடுவதற்கும் உரிமம் பெரும் வழிமுறைகள் எளிமையாக இல்லை. திரைப்படத்துறைக்கு தொழில் அந்தஸ்து அளிக்கப்பட்டாலும், நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் திரையரங்கம் அமைக்க மானியமோ அல்லது வரிவிலக்கோ அளிக்கப்படவில்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. திரையரங்கம் பொதுமக்களுக்கு ஒரு பொழுதுபோக்கு அம்சமாக விளங்குவதால் அவை ஊக்கப்படுத்தப்பட வேண்டும். எனவே, திரையரங்கம் தொடர்பான சட்டங்களை எளிமைப்படுத்துவது குறித்தும் ஊக்கத் தொகை வழங்குவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு நில நிருவாக ஆணையர் தலைமையில் ஒரு குழு அமைத்து தற்பொழுது நடைமுறையில் இருந்து வரும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படம் (முறைப்படுத்துதல்) சட்டத்தினை திரைப்படத்துறையின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மாற்றியமைக்க அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிரசார் பாரதி**

பிரசார் பாரதி நிறுவனத்திற்கு பல்வேறு வரிகளிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று மத்திய அரசு கோரிக்கைகள் வைத்த வண்ணம் உள்ளது. தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி நிலையங்களுக்கு இவை மத்திய அரசுக்கு சொந்தமாக நிறுவனங்கள் என்பதால், தமிழக அரசு முக்கியமான இடங்களை ஒதுக்கித் தந்துள்ளது. தற்பொழுது இந்த இரண்டு நிறுவனங்களும் பிரசார் பாரதி கார்ப்பரேஷன் என்ற தனி அமைப்பின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. பிரசார் பாரதி கார்ப்பரேஷனின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று நிதி ஆதாரங்களை அதிக அளவில் திரட்டுவதாகும். இருந்தாலும், பிரசார் பாரதி கார்ப்பரேஷன் மாநில அரசின் பல்வேறு சலுகைகளைப் பெற்று வருகிறது.

பிரசார் பாரதி படிவம் 'D' தற்பொழுது விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே அரசுத் துறைகள் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 3 விழுக்காடு சலுகை வரி விதிப்பை அனுமதிக்க இயலாது. 1.4.2007 முதல் அந்தந்த

மாநிலத்துக்கு ஏற்றவாறு உரிய வரியை செலுத்த வேண்டும். எனவே, எங்களின் இந்த நிலையை மத்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அரசுகளின் கொள்கைகளை விளம்பரப்படுத்துவதில் பிரசார் பாரதியின் பங்கு வெகுக்குறைவாக உள்ளது. அரசு தீட்டும் திட்டங்கள் குறித்தும், நிறைவேற்றிவரும் பணிகள் பற்றியும் மக்கள் அறியும் வண்ணம், அதற்கென்று நேரம் ஒதுக்கி, பிரசார் பாரதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கோரிக்கையை ஒவ்வொரு மாநில செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டிலும் வைக்கின்றோம். எனவே, மத்திய அரசு பிரசார் பாரதி கார்ப்பரேஷன் நிறுவனத்தை மாநில அரசுகளுடன் இணைந்து பணியாற்ற அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன்**

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில் தொடர்பான பணிகளில் தமிழகம் என்றுமே முன்னோடியாக உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக அரசு கேபிள் டிவி சேவையைத் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள். சென்னையில் மல்டி சிஸ்டம் ஆபரேட்டராகவும் (MSO) மாநிலத்தின் பிற பகுதிகளில் கேபிள் டிவி ஆபரேட்டர்களாகவும் செயல்படும். இதுதொடர்பாக "அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்" என்ற நிறுவனத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

உலக அளவில் இந்தியாவை ஒரு சிறந்த திரைப்ப படப்பிடிப்புத் தளமாக முன்னேற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். தமிழகம் பல்வேறு கலை கலாச்சார மையங்களுடன், பல கடற்கரைகளையும் பல்வேறு குளிர் சூழல் இடங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. உலக அளவில் வெளிநாட்டினர் விரும்பி வந்து செல்லும் இடமாகவும் விளங்குவதால்,திரைப்படம் எடுக்கும் குழுவினரும் விரும்புவார்கள் என்பதில் அய்யமில்லை. இத்திட்டத்திற்கு தமிழக அரசு, மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்பதோடு தமிழகத்தின் புகழை உலக அளவில் விளம்பரப்படுத்த எடுக்கப்படும் எந்த நடவடிக்கைக்கும் நாங்கள் முழு ஒத்துழைப்புத் தருவோம் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் இடங்களைத் தேர்வு செய்வதில் மத்திய அரசையும், தேசிய திரைப்பட வளர்ச்சிக் குழுமமும் மாநில அரசை கலந்து அதிக இடங்களைத் தெரிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலங்களில் செய்தித்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கு இம்மாநாடு வாய்ப்பளித்தது. நம் முன்னோர்கள் இயற்றிய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள குறிக்கோளை அடைய, இம்மாநாட்டை ஒவ்வொரு ஆண்டும் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கு நாங்கள் எடுத்துக் கூறிய பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல தீர்வை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.


பூம்புகார்
தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்,
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
759, அண்ணா சாலை, சென்னை 600 002. தொலைபேசி: 28521325, 28521798

கொலுக் கண்காட்சி

புகழ்பெற்ற கலைநயமிக்க கைவினைப் பொருட்களின் அணிவகுப்பு!

வீட்டு உபயோகப் பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள் அனைத்தும் பூம்புகாரில் நிறைந்துள்ளது.

நவராத்திரி பண்டிகையினை முன்னிட்டு தமிழ்நாட்டிலுள்ள பூம்புகார் விற்பனை நிலையங்களில் அமைந்துள்ள கொலுக் கண்காட்சிக்கு வருகை தாருங்கள்.

கைவினைப் பொருட்களை வாங்கி கைவினைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்!



கொலுக் கண்காட்சி நடைபெறும் இடங்கள் :

| | |
|---|---|
| சென்னை | (28520624, 28550157) |
| திருச்சி | (2704895) |
| தஞ்சாவூர் | (230060) |
| மதுரை | (2340517) |
| திருநெல்வேலி | (2333391) |
| கோயம்புத்தூர் | (2391055) |
| சேலம் | (2214767) |
| ஈரோடு | (2254885) |

நிறுவனத்தின் இணைய தளத்தினை கண்டு களியுங்கள்.
www.tamilnaduhandicrafts.com
Visit us at: www.tn.gov.in / www.southindia.com

வெளியீட்டு ஆணை எண்.1526/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 19.09.2007







# விவசாயிகள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் மக்காச்சோளம்


தா. மனோகரன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம்


## பயன்பெற்ற விவசாயிகள் மகிழ்ச்சி

*'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'*
– என்றார் மகாகவி பாரதியார்.

ஒரு நாட்டின் உயிர் நாடியாக விளங்குவது உழவுத் தொழிலே. நமது நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மையையே தொழிலாகச் செய்து வருகின்றனர். உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உற்பத்தியைப் பெருக்கவும் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் உழவுத் தொழிலை மேம்படுத்தவும் தமிழகத்தின் உணவு உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு பெற்ற முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்குவதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிக முக்கியத்துவம் வழங்கி அதிக நிதி ஒதுக்கீடும் செய்து ஊக்கம் அளித்து வருகிறார்.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை, பொறியியல் துறை, ஆகியவை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கும் வகையில் பணப்பயிர்களாக விளங்கும் பருத்தி, கரும்பு, வாழை, மரவள்ளி ஆகியவை அதிக அளவில் பயிர் செய்வதற்கு நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அண்மைக் காலத்தில் சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் பருத்தி மற்றும் மக்காச்சோளம் ஆகியவற்றை அதிக அளவில் பயிர்செய்து வருவாய் ஈட்டுகின்றனர்.

வேளாண்மைத் துறையின் சார்பில் விவசாயிகளுக்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து செய்தி சேகரிப்பதற்காக சேலம் செய்தியாளர்கள் குழு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பயணம் செய்தது. அப்பொழுது பருத்தி மற்றும் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் கலந்துரையாடும்பொழுது குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்டக்கூடிய பணப்பயிராக மக்காச்சோளம் திகழ்கிறது என்பதை நேரில் கண்டறிய முடிந்தது.

வறுமையின் அடையாள உணவாக 'மக்காச் சோளம்' ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால் இன்றோ, அது எல்லா வகையான உணவிலும் மேலோங்கி உள்ளது. குறுகிய காலத்தில் அதிக வருவாய் ஈட்டும் பணப்பயிராகவும் உருவெடுத்துள்ளது. இதனால் நெல், பருத்தி, சாகுபடியில் ஆர்வம் காட்டிய விவசாயிகள் இப்போது மக்காச் சோளத்திற்குத் தாவி வருகின்றனர். தமிழ்நாட்டில் நெல், சோளம், கம்பு, மக்காச்சோளம் மற்றும் கேழ்வரகு ஆகியவை 27 லட்சத்து 91 ஆயிரத்து 400 எக்டேரில் பயிரிடப்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நெல் 20,50,455 எக்டேரிலும், சோளம் 3,16,274, கம்பு 81,925, மக்காச்சோளம் 2,02,830, கேழ்வரகு 40 ஆயிரத்து 367 எக்டேரிலும் பயிர் செய்யப்படுகிறது. நெல்லுக்கு அடுத்த இடத்தை சோளம் பெற்றிருப்பது மாநில



அளவிலான நிலையாக இருந்தாலும், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மேற்கு மண்டலப் பகுதியில் இப்போது நெல்லுக்கு அடுத்த இடத்தை மக்காச்சோளம் பிடித்து வருகிறது. இம்மாவட்டங்களில் கரும்பு, பருத்தி போன்றவை பரவலாக பயிரிடப்பட்டது. இந்நிலங்களும் வீரிய மக்காச்சோளம் உற்பத்திப் பகுதிகளாக மாறி வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் பருத்தி உற்பத்திக்குப் பெயர் பெற்ற பகுதியாக ஆத்தூர், பெத்தநாயக்கன் பாளையம், கெங்கவல்லி பகுதிகள் திகழ்ந்தன. இங்கு மட்டும் 20 ஆயிரம் எக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. இதில் கட்டுபடியான விலை கிடைக்காததால் குச்சிகிழங்கு (மரவள்ளிக்கிழங்கு) உற்பத்திக்கு மாறினர். இதனால் பருத்தி சாகுபடி பரப்பளவு வெறும் 300 எக்டேராக் குறைந்தது.

இதன் பின் வீரிய பி.டி.ரக பருத்திக்கு நல்ல விலை கிடைத்ததால் இப்பகுதி விவசாயிகள் பி.டி பருத்தி உற்பத்தியில் ஆர்வம் காட்டினர். இதனால் பருத்தி சாகுபடி பரப்பு மீண்டும் 24 ஆயிரம் எக்டேராக அதிகரித்தது. இப்போது எல்லா மாநில விவசாயிகளும் இதே ரக பருத்தி உற்பத்தியில் ஆர்வம் காட்டுவதால் இவற்றின் விலையில் கடுமையான சரிவு ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி வடுகத்தாம்பட்டி விவசாயிகள் திரு. ராஜமாணிக்கம் செய்தியாளர்களிடம் கூறும் பொழுது ஒரு ஏக்கரில் பி.டி. ரக பருத்தி உற்பத்தி செய்தால் கிடைக்கும் நிகர லாபம் ரூ. 13 ஆயிரம் மட்டுமே, ஆனால் இதே அளவு நிலத்தில் மக்காச்சோளம் பயிரிட்டால் கிடைக்கும் நிகரலாபம் ரூ. 14 ஆயிரம். பருத்தி பயிரிடும் காலத்தில் 2 முறை வீரிய மக்காச் சோளம் உற்பத்தி எடுத்துவிடலாம் என்பதால் லாபம் 2மடங்கு கூடுதலாக கிடைப்பதாகவும் கூறினார்.

இதே கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி திரு.சி.பி.பொன்னன் கூறும்பொழுது 100 நாட்களில் மகசூல் கிடைக்கும் மக்காச்சோளம் ஒரு ஏக்கருக்கு 3,000 கிலோ கிடைக்கிறது. 1 கிலோ ரூ. 7க்கு விற்பனை செய்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன் சேலம் மாவட்டத்தில் மக்காச்சோளம் பயிரிடும் நிலப்பரப்பு மிகவும் குறைவாக இருந்தது. கடந்த ஆண்டு 30 ஆயிரம் எக்டேரில் பயிர்செய்யப்பட்ட மக்காச்சோளம் இந்த ஆண்டு 40 ஆயிரம் எக்டேரில் பயிர்செய்யப்படுகிறது. பெரம்பலூருக்கு அடுத்து மக்காச்சோளம் உற்பத்தி அதிகம் நடைபெறும் மாவட்டமாக சேலம் மாறியுள்ளது. மேலும் இப்பயிர் எத்தகைய தட்பவெட்ப சூழ்நிலையிலும் பருவ காலம் ஏதுமின்றி வருடம் முழுவதும் பயிர் செய்யக்கூடிய பயிராக விளங்குகிறது என்று தெரிவித்தார்.

நாமக்கல், பல்லடம் பகுதியில் கோழிப்பண்ணை முக்கியத் தொழிலாக உள்ளது. கோழிகளுக்கான உணவாக மக்காச்சோளம் உள்ளது. இவை கர்நாடகம் உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. தற்போது சேலம், தருமபுரி மாவட்டங்களில் மக்காச்சோளம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுவதால் கோழிப்பண்ணைகளின் தீவனத் தேவை பூர்த்தி செய்யப்படும் நிலையில் உள்ளது. ஆகவே குறுகிய காலத்தில் பணப்பயிராக மாறிவரும் மக்காச்சோளம் விவசாயிகளின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பது உறுதி.





# கோ-ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள். படுக்கை விரிப்புகள். வேட்டி. வாசல் திரைகள். சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள். கண்கவரும் டிசைன்கள். உன்னத தரம். நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை



**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**

கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

செ.ம.தொ.இ / 602 / வரைகலை / 2007



R.N.I: No.21446/70-Regn No TN/ARD/48/06-
TN/PMG(CCR) WPP-518/06-08

# தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

நவம்பர் 2007
விலை ரூ.10/-





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மதுரை-சாத்தமங்கலத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தைத் திறந்துவைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர். (30.10.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மதுரை, விளாச்சேரியில், பரிதிமாற்கலைஞர் நினைவில்லத்தைத் திறந்துவைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர் (31.10.2007)


# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
ஐப்பசி - கார்த்திகை நவம்பர் 2007
மலர் : 39 இதழ் : 5

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியீடுபவர்
**முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்
**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்
**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்
**க.இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வி.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்
**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்
**தி.வெபியார் சாக்ரடீஸ்**

கணினி வடிவமைப்பு
**அ.மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர்.பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழை திருத்துபவர்
**ஜி. சந்தானம்**

சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தானமிழ்தம் என்றுணரற் பாற்று**

உலகத்தை வாழவைப்பது மழையாக அமைந்திருப்பதால். அதுவே அமிழ்தம் எனப்படுகிறது.

- கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


❖ இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே அழிக்க முடியாத இடத்தை. மறைக்க முடியாத ஒரு இடத்தைப் பெற்றவர் தேவர் திருமகனாவார் ..... 2
❖ மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் மணிமண்டபம் மற்றும் திருவுருவச்சிலையைத் திறந்துவைத்து. அவர்தம் மரபுரிமையருக்கு பணி நியமன ஆணை வழங்கினார் ..... 8
❖ பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார் ..... 11
❖ கருமம் ஒன்றே கண்ணாயினார் என்ற பொன்மொழிக்கேற்ப நடந்து கொள்வீர்களேயானால் மற்றவர்களையும் நடக்கச் சொல்வீர்களேயானால். அது நாட்டை வெகுவாக உயர்த்தும். நம் எதிர்காலத்தை உயர்த்தும்! ..... 14
❖ இந்த நாள் சட்டப்பேரவையில் ஒரு பொன்னாள். சமூக நீதி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான நாள் - சட்டமன்ற உரை ..... 18
❖ பகைவராலும் புகழப்பட்ட மாவீரர்கள் சின்ன மருது - பெரிய மருது - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ..... 21
❖ தமிழக அரசின் புதிய தொழில் கொள்கை - 2007 ..... 27
❖ டெல்லி-மும்பை தொழில் முற்றம் போல சென்னை - பெங்களூரு தொழில் முற்றத்தை ஏற்படுத்துவீர்! -மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் ..... 30
❖ ஒன்றரை ஆண்டுக் காலத்தில் பல அரிய சாதனைகளை பலரும் அறியக்கூடிய சாதனைகளை நாம் நிறைவேற்றியிருக்கிறோம் - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ..... 31
❖ 3ஆவது கட்டமாக வழங்கிட 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்திட அரசு முடிவு ..... 34
❖ தூத்துக்குடி மாவட்டம் - உடன்குடியில் 1.600 மெகாவாட் திறன்கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம் ..... 35
❖ புதிய தொழிற்சாலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்குவதை உறுதி செய்கிறோம் ..... 45
❖ **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**
□ அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஒளித்தோற்ற கலந்தாய்வு ..... 52
□ நாமக்கல் மாவட்டத்திற்கு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு ..... 54
❖ கலைஞர் அவர்களின் அரசு கொடுத்த வாக்குறுதிகளை தவறாமல் நிறைவேற்றி வருகிறது - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உரை ..... 65


**அட்டைப் பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை :* மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புதிய தொழிற்கொள்கையை (2007) வெளியிட. மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர்.க.அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார். (5.11.2007)

*நான்காம் பக்க அட்டை :* பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டார். (30.10.2007)



# இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே அழிக்க முடியாத இடத்தை, மறைக்க முடியாத ஒரு இடத்தைப் பெற்றவர் தேவர் திருமகனாவார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

"பசும்பொன் என்பது தேவர் அவர்கள் பிறந்த ஊர் என்று சொல்லப்படுகிறது அல்ல. பசும்பொன் என்பது தேவர் அவர்களுடைய உள்ளத்தை குறிப்பிடுகிற ஒரு சொல்லாகும். அத்தகைய உள்ளத்திற்கு சொந்தக்காரரான தேவர் திருமகனார் அவர்களுக்கு நாம் நூற்றாண்டு விழா நடத்துகின்றோம். ஒரு கட்சியின் சார்பாக – ஆளுங்கட்சியின் சார்பாக எடுக்கின்ற விழா என்று கொள்ளாமல் – ஆளுங்கட்சி அல்லாதவர்களும் எல்லாக் கட்சியிலே உள்ளவர்களும் இணைந்து – இணைந்து நடத்த முடியாவிட்டாலும் கூட அவரவர்கள் தங்களுடைய அன்பை, மரியாதையை, பாசத்தை வெளிப்படுத்துகின்ற வகையில்





இன்றைய தினம் இந்த நூற்றாண்டு விழாவிலே பங்குபெற்று தங்களுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தேவர் திருமகனாருக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்துநடைபெறுகின்ற அரசு இதுஎன்ற காரணத்தால் இந்த அரசின் சார்பாக அத்தகைய எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நிருவாகிகளையும், நண்பர்களையும் நான் வாழ்த்த, பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த விழாவிலே எனக்கு முன்னால் பேசிய நம்முடைய நண்பர்கள் வரதராஜன் அவர்களும், கோ.க.மணி அவர்களும் குறிப்பிட்டதைப்போல் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கலந்துகொண்டு உரையாற்ற வேண்டிய காங்கிரஸ் கட்சியினுடைய தமிழகத் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள் வர இயலாத எதிர்பாராத ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். நேற்று காலையிலே 10.30 அல்லது 11 மணி அளவிலே கூட சென்னையிலே அண்ணா அறிவாலயத்திலே நடைபெற்ற திருமண விழாவிலே நானும் அவரும் கலந்துகொண்டு அந்த விழாவிலே இங்கே பயணமாகின்ற செய்தியை என்னிடத்திலே குறிப்பிட்டார். மாலையிலே எனக்கு கிடைத்த தகவல் அவர் இவ்வாறு தாக்கப்பட்டிருக்கிறார், குத்தப்பட்டிருக்கிறார், ஒரு பயங்கரமான தாக்குதலில் இருந்து தப்பியிருக்கிறார் என்ற செய்தி எனக்கு கிடைத்தது. உடனடியாக ஏற்ற அரசு உதவிகளை அவருடைய உயிரைக் காப்பாற்றுகின்ற அளவிற்கு மருத்துவர்களைக் கொண்டும், அவருடைய உயிரைப் போக்கடிப்பதற்கு முயன்றவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு காவல்துறை உடனடியாக செயல்பட வேண்டும் என்றும் அவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லிவிட்டு காலையிலே நானும் நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்களும், கோ.க.மணி அவர்களும் மருத்துவமனைக்கு நேரில் சென்று அவரை நலம் விசாரித்துவிட்டு இங்கே வருகிறோம். அவர் விரைவில் முழு நலம் பெற வேண்டுமென்று இந்தக் கூட்டத்திலே இருக்கின்ற அத்தனைபேர் சார்பிலும் என்னுடைய விழைவைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த வன்முறை கண்டிக்கத்தக்கது. இரவு நேரத்திலே பயணம் செய்து கொண்டிருந்த ஒருவர் திடீரென்று கார் வழிமறிக்கப்பட்டு தாக்கப்படுகிறார் என்றால் அது உள்ளபடியே எந்த விழாவிற்காக





நாமெல்லாம் இங்கே குழுமியிருக்கிறோமோ, எந்த சமுதாயத்தினுடைய ஒற்றுமை ஓங்க வேண்டும் என்று இன்றைக்கு முழக்கமிடுகிறோமோ, அந்த முழக்கத்திற்கு எதிராக நம்முடைய குறிக்கோளுக்கு மாறாக நடைபெற்றுவிட்ட ஒன்று. அதை வன்மையாக அரசின் சார்பிலும், நான் சார்ந்துள்ள என்னுடைய தலைமையில் உள்ள தி.மு.கழகத்தின் சார்பிலும் நம்முடைய கூட்டணிக் கட்சித் தலைவர்களுடைய சார்பிலும் கண்டிக்க கடமைப்பட்டிருக்கின்றேன். விரைவில் அதற்கான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு உரிய தண்டனை பெறுவார்கள் என்ற நம்பிக்கையை நான் இந்த விழாவிலே அளிக்கின்றேன்.

மறைந்தும் மறையாத பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களுடைய நூற்றாண்டு விழா இது. இங்கே பேசிய போது இந்த மண்டபத்தை எழுப்பியதற்கு காரணமே கலைஞர்தான் என்று சொன்னார்கள். மதுரையிலே இருக்கின்ற தேவர் சிலை கலைஞரால்தான் வைக்கப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் அந்த விளம்பரங்களைத் தேடிக்கொள்வதற்காக இங்கே வரவில்லை. சிலை வைத்தால் போதாது. அந்த சிலைக்கு உரிய உருவத்திற்கு சொந்தக்காரர் என்ன உள்ளத்தோடு பாடுபட்டாரோ, எந்த வகையில் நாட்டிற்கு, சமுதாயத்திற்கு உழைத்தாரோ அந்த வகையிலே நாமும் உழைத்தால்தான் அந்தப் பாதையில் நாம் நடந்தால்தான் சிலை வைப்பதற்கும், அவரது பெயரால் நினைவுச் சின்னங்களை எழுப்புவதற்கும் பொருள் உண்டு என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

**ப**சும்பொன் தேவர் திருமகனார் நூற்றாண்டை முன்னிட்டு அவரது பிறந்த நாளான 30.10.2007 க்கு முன்பு தென் மாவட்டங்களில் வாழுகின்ற சில சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட குழு மோதல்களைத் (Group Clashes) தொடந்து பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கான சட்டப்பூர்வமான உரிய நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப் படுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார். கொலை, கற்பழிப்புபோன்ற வழக்குகள் தவிர பிற வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இந்த உத்தரவு பொருந்தும்.

அனைத்து சமூகத்தினரிடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தின் அடையாளமாக இதனை எடுத்துக் கொண்டு அனைத்துத் தரப்பினரும் சமத்துவ நோக்குடன் ஒற்றுமையும் அமைதியும் காத்திட முன் வர வேண்டுமெனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரை மாநகரத்திலே ஒரு மாபெரும் சிலை அவருக்காக வைக்கப்பட்டது. அந்தச் சிலையை திறந்து வைப்பதற்கு இந்திய குடியரசுத் தலைவர் வி.வி.கிரி அவர்களே வந்தார்கள். உங்களுக்குத் தெரியும். அப்பொழுது கிரி அவர்கள் தேவர் அவர்களைப் பற்றி பாராட்டிய அந்த உரை இன்றைக்கும் நம்முடைய காதுகளில் ஒலித்து கருத்திலே நிறைந்திருக்கக்கூடிய உரையாகும். இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே அழிக்கமுடியாத இடத்தை, மறைக்கமுடியாத ஒரு இடத்தைப் பெற்றவர் தேவர் திருமகனாவார்கள். குறைந்த வயதுதான், 55 ஆண்டுகள்தான் வாழ்ந்தார் என்றாலும் அந்த 55 ஆண்டு வாழ்க்கையும் 100 ஆண்டுகளில் ஒரு மனிதன் செய்ய வேண்டிய அத்தகைய அருமையான செயல்களை செய்து பேறும் புகழும் பெற்றுத் திகழ்ந்தவர் தேவர் திருமகன் என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய தேவர் இன்று இல்லையென்றாலும் அவர் இருக்கிறார், அவருடைய கொள்கைகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவருடைய எண்ணம் பலிக்க நாமெல்லாம் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்வதுதான். இந்த நல்ல நாளில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமாக சூளுரை என்பதை சொல்ல விரும்புகின்றேன்.

இங்கே பேசிய தலைவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய வரதராஜன் அவர்கள் பேசும்போது மாணவர்களுக்கு அவர்களுடைய விடுதிகளிலே தரப்படுகின்ற தொகை மிகக் குறைவு. அதைக் கொஞ்சம் அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டார். தேவர் திருமகனுடைய நூற்றாண்டு விழா தினத்தையொட்டி நீங்கள் அடையாளமாக இதைச் செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இப்பொழுது கொடுக்கக்கூடிய தொகை எவ்வளவு இருந்தது அல்லது எவ்வளவு உயர்த்தப்பட்டது என்ற கணக்கை தெரிந்து கொண்டால் அவர்களுடைய கோரிக்கையையொட்டி நாம் ஆய்ந்து நடவடிக்கை எடுக்க வழி பிறக்கும்.

பள்ளி மாணவர்களுக்கெல்லாம் விடுதிகளில் மாதம் ஒன்றுக்கு, ஒருவருக்கு 300 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது இந்த ஆட்சியில் ஏற்கெனவே அது 400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை நான் நினைவூட்ட விரும்புகின்றேன்.

கல்லூரி மாணவர்களுக்கு முன்பு 400 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்பொழுது அவர்களுக்கு 500 ரூபாய் வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய் இவைபோன்ற சில்லறைச் செலவுகளுக்காக பள்ளி மாணவர்களுக்காக ஏற்கெனவே 15 ரூபாய் வழங்கப்பட்டது. இப்பொழுது அது உயர்த்தப்பட்டு 25 ரூபாய் வழங்கப்படுகிறது. கல்லூரி மாணவர்களுக்கு சோப்பு, எண்ணெய் போன்றவைகளுக்கு ஏற்கெனவே 25 ரூபாய் வழங்கப்பட்டது. இப்பொழுது 35 ரூபாய் வழங்கப்படுகிறது. ஒரு பெரிய விழாவில் ஒரு பெரிய தலைவருக்காக நடைபெறுகிற இந்த நூற்றாண்டு விழாவில் இந்தியாவிலே உள்ள ஒரு பெரியக் கட்சிகளிலே ஒருவரான நம்முடைய வரதராஜன் அவர்கள் ஒரு கோரிக்கையாக அதை வைத்தபிறகு நான் அதைப்பற்றி எதுவுமே சொல்லாமல் போனால் எதையும் அலட்சியப்படுத்தாமல், எதையும் மரியாதையோடு அணுகுகின்ற அந்த அணுகுமுறைக்கு சொந்தக்காரரான



பசும்பொன் தேவர் அவர்களுடைய விழாவில், அவருடைய குணாதிசயங்களுக்கு மாறாக நான் நடந்து கொண்டேன் என்ற பெயர் எனக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகவும், வரதராஜன் அவர்களுடைய கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்வதற்காகவும் வருகிற நிதி நிலை அறிக்கையில் அவர் குறிப்பிட்ட கோரிக்கையை எண்ணிப்பார்த்து இன்னும் இரண்டொரு மாதங்களில் அந்தத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என்பதை தேவர் திருமகனுடைய நூற்றாண்டு விழாவிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மற்றொன்று, இப்பொழுது இந்த விழாவையொட்டி என்னென்ன காரியங்கள் தமிழக அரசால் நடத்தப்பட்டிருக்கிறது என்பதை சொல்ல



விரும்புகின்றேன். இங்கே நம்முடைய பரிதி இளம்வழுதி வாங்கி படித்துப் பார்த்து வெளியிலே சொல்லியிருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக யாரோ சொன்னார் என்ற கோபத்திலே கொஞ்சம் அவரும் கோபித்துக் கொண்டார். இது ஒருவருக்கொருவர் கோபத்தைக் காட்டுகின்ற விழா அல்ல. எல்லோரும் ஏகோபித்து, எல்லோரும் ஒரே உணர்வோடு காலையிலே நாம் வேறுபட்டவர்களாக இருந்தாலும் மாலையிலே அத்தனை பேரும் ஒன்று. ஒரே சமுதாய நல்லிணக்கம் கொண்டவர்கள் என்ற அந்த நிலையில் நாம் பணியாற்ற வேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்வதற்காகவாவது இந்த விழா பயன்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

சிலர் சொல்லியிருக்கிறார்கள் "நாங்கள் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கினோம். கருணாநிதி என்ன ஒதுக்கினார்" என்று கேட்டுள்ளார்கள். எனக்கு இந்த "ஒதுக்குதல்" எல்லாம் தெரியாது. மூன்று கோடி ரூபாய் ஒதுக்கினோம் என்ற செய்தியை பத்திரிகைகளிலே பார்த்து விட்டு, நான் உடனடியாக நம்முடைய தலைமைச் செயலகத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு தலைமைச்செயலாளர், நிதித்துறைச் செயலாளர் மற்றும் எல்லா செயலாளர்களிடத்திலும் தொடர்பு கொண்டு கேட்டேன். மூன்று கோடி ரூபாய் இதற்கு முன்பு இருந்த ஆட்சியாளர்கள் பசும்பொன் தேவர் விழாவிற்காகவோ, திட்டங்களுக்காகவோ ஒதுக்கினார்களா என்று. மூன்று பைசா கூட யாரும் ஒதுக்கவில்லை என்று சொன்னார்கள். அவசரத்திலே சொல்லியிருக்கக்கூடும் அல்லது ஆர்வத்திலே சொல்லியிருக்கக்கூடும் என்று நான் இதை பொருட்படுத்தவில்லை. ஆனால் நாளைக்கு கணக்கு இடிக்கும் அல்லவா? இப்படி மூன்று கோடி ஒதுக்கினார்கள் என்று நாளைய தினம் ஆடிட் செய்கின்றவர்கள் அந்த மூன்று கோடி என்ன ஆயிற்று என்று கேட்டால், நானல்லவா பதில் சொல்லவேண்டும். ஆகவே இப்பொழுதே எச்சரிக்கையாக சொல்லிவைக்கின்றேன். யாரும் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கவில்லை. நம்முடைய இந்த ஆட்சியிலேதான். இந்த விழாவையொட்டி நிதி ஒதுக்கப்பட்டு – செய்யப்பட்ட காரியங்களை நான் இங்கே பட்டியலிட விரும்புகிறேன்.

நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப்போல், நெல்லை மாவட்டத்தில் மேலநீலிதநல்லூர், இராமநாதபுரம்



மாவட்டத்தில் கமுதி, மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி ஆகிய இந்த மூன்று இடங்களில் பசும்பொன் தேவருடைய திருப்பெயரால் மூன்று கல்லூரிகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மதுரை மாநகரில் இருக்கின்றவற்றை சொன்னார்கள். மதுரை ஆண்டாள்புரம் அருகே தொழிற்சங்கத்தோடு தேவர் அவர்களுக்கு எவ்வளவு தொடர்பு இருந்தது. அந்தத் தொழிலாளர்கள் அடக்குமுறைக்கு ஆளானபோது அவர்களை விடுவிக்க வேண்டுமென்பதற்காக, அவர் எத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டார் என்பதற்கு அடையாளமாகத்தான் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மதுரையிலே ஆண்டாள்புரத்திற்கு அருகே அவர் கைது செய்யப்பட்டார் என்பதை நினைவாகக் கொண்டு மதுரை ஆண்டாள்புரம் அருகே உள்ள மேம்பாலத்திற்கு "முத்துராமலிங்கத் தேவர் பாலம்" என்று பெயர் சூட்டியவனும் நான்தான்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் தேவர் திருமகன் திருப்பெயரால் மாணவச் செல்வங்களுக்கு உதவிட 25 இலட்ச ரூபாய் முதலீட்டில் ஒரு அறக்கட்டளையும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நூற்றாண்டு விழாவையொட்டி 10 இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் செலவில் பசும்பொன் தேவர் அவர்களுடைய இல்லம் புதுப்பிக்கப்பட்டது.

9 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் நூற்றாண்டு விழா வளைவு கட்டப்பட்டுள்ளது.

9 இலட்ச ரூபாய் செலவில் புகைப்படக் கண்காட்சிக் கூடம் கட்டப்பட்டுள்ளது.

3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் அணையா விளக்கு அவருடைய நினைவிடத்திற்குப் பக்கத்திலே அமைக்கப்பட்டுள்ளது.

4 இலட்ச ரூபாய் செலவில் நூலகக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

5 இலட்ச ரூபாய் செலவில் தலை முடி இறக்கும் கூடம் கட்டப்பட்டுள்ளது.

9 இலட்ச ரூபாய் செலவில் வருகின்ற ஆண், பெண்களுக்கும் தனித்தனியே கழிப்பிட வசதிகளும் – தண்ணீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5 இலட்ச ரூபாய் செலவில் அவர்கள் கொண்டு வருகின்ற பால் குடங்களை வைக்கின்ற மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இன்னொரு 5 இலட்ச ரூபாய் செலவில் முளைப்பாரி மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இத்தனையும் இந்த விழாவிற்கு வருகின்றவர்கள் – நினைவிடத்திற்கு வருகின்றவர்களின் வசதிக்காக –



இந்த அரசின் சார்பாக செய்யப்பட்டிருக்கிறது. இவைகளையன்னியில் ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 64 இலட்ச ரூபாய் செலவில் கமுதி முதுகுளத்தூர் சாலையிலிருந்து மருதங்கநல்லூர் கிராமம் வழியாக பசும்பொன்னுக்கு ஏறத்தாழ 5 கிலோ மீட்டருக்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது.

28 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் பசும் பொன் கிராமத்திலிருந்து கமுதிக்குச் செல்லும் ஏறத்தாழ இரண்டரை கிலோ மீட்டர் தூரத்திற்கு மாற்றுச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் பசும் பொன் தேவர் திருமகனார் நினைவிடத்தைச் சுற்றியிருந்த கல் சாலை தார்ச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

41 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் நினைவிடத்திற்கு முன்பாக வாழ்ந்து வந்த 73 ஆதிதிராவிட மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளோடு கூடிய புதிய குடியிருப்புக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளை நாம் நேரில் காணலாம்.

புதியதாகக் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிட குடியிருப்புகளில் 5 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் சிமெண்ட் சாலையும், ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவில் தெருவிளக்குகளும், ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் குடிநீர் வசதியும் ஆக மொத்தம் 2 கோடியே 5 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பசும்பொன் கிராமத்தில் இந்த நூற்றாண்டு விழாவையொட்டி பல்வேறு காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதனை நான் இந்த விழாவிலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகளையன்னியில், இதற்கு முன்பு இங்கு வைக்கப்பட்ட கோரிக்கை மாத்திரமல்ல; ஏடுகளிலே வெளிவந்திருக்கின்ற கோரிக்கை – நான் மதுரைக்கு வரும்பொழுதெல்லாம் என்னிடத்திலே சொல்லப்படுகின்ற கோரிக்கைகளில் முக்கியமான ஒரு கோரிக்கை மதுரை விமான நிலையத்திற்கு தேவருடைய பெயர் வைக்க வேண்டும் என்பதாகும். அதை நான் வைக்க முடியாது. காரணம் விமான நிலையம் மத்திய சர்க்காருக்கு தொடர்புடையது. ஒரு மாநில சர்க்கார் சார்பாக அந்தப் பெயர் வைக்க முடியாது. ஆனால், மத்திய சர்க்காரை கேட்டுக்கொண்டு – கேட்கிற விதத்திலே கேட்டு அதைப் பெற முடியும்.

வி.பி.சிங் ஒரு முறை நம்முடைய சென்னை மாநகரத்தில் ஒரு விழாவிற்கு வந்திருந்தபோது அங்கே தான் கேட்டேன். சென்னை விமான நிலையத்தில் ஒரு புறத்திலே உள்ள ஒரு விமான நிலையத்திற்கு அறிஞர் அண்ணா பெயரும். இன்னொரு விமான நிலையத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரும் வைக்க வேண்டும் என்று நான் கூட்டத்திலே வேண்டுகோள் விடுத்தேன். விழா மேடையிலிருந்து வி.பி.சிங் கீழே இறங்கி அங்கே தன்னுடைய செயலாளரிடத்திலே இருந்த தொலைபேசியை வாங்கி டெல்லிக்கு பேசினார். ஐந்து நிமிடத்தில் நான் இருந்த மேடைக்கு வந்தார். "கருணாநிதி சொன்னதைப்போல காமராஜர் பெயர் ஒரு விமான நிலையத்திற்கும், அறிஞர் அண்ணா பெயர் இன்னொரு விமான நிலையத்திற்கும் வைக்கப்படும்" என்று வி.பி.சிங் அவர்கள் அன்றைய தினம் வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பு இன்றைக்கு காமராஜர் விமான நிலையமாக, அண்ணா விமான நிலையமாக சென்னையில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைப்போல இதை மேடையிலே சொல்வதற்கு வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், உங்களுடைய கருத்துக்களை – உங்களுடைய எண்ணங்களை கடிதம் மூலமாக – விரைவிலே நான் டெல்லி சென்றால் நேரிலே சந்திக்கின்ற நேரத்திலும், அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி முத்துராமலிங்கத் தேவருடைய பெயரால் மதுரை விமான நிலையம் திகழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என்று இன்றைய இந்த விழா அடையாளமாக எடுத்துக் கூறி காலையிலேயிருந்து உங்களையெல்லாம் மிகுந்த உற்சாகத்தோடும் – மிகுந்த விறுவிறுப்போடும் நீங்கள் எங்களை வரவேற்று வாழ்த்தி தேவர் பெருமகனார் இடத்திலே வைத்திருக்கின்ற அன்பையும் வெளிப்படுத்திய உங்களுடைய மனப்பான்மைக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து இந்த அளவில் தேவர் புகழ் வாழ்க என்றுரைத்து விடைபெறுகிறேன்''.

30.10.2007 அன்று,

பசும்பொன்னில் நடைபெற்ற

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நூற்றாண்டு விழாவில்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்

ஆற்றிய உரை

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் மணிமண்டபம் மற்றும் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்து, அவர்தம் மரபுரிமையருக்கு பணி நியமன ஆணை வழங்கினார்





தமிழக அரசின் சார்பில் மதுரை, சாத்தமங்கலத்தில் கட்டப்பட்டுள்ள மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் திறப்பு விழாவும், அவரது திருவுருவச்சிலை திறப்பு விழாவும் 30.10.2007 அன்று மாலை நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபத்தைத் திறந்து வைத்தார்.

முன்னதாக விழாவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்களும் மற்றும் மாவட்ட ஆட்சியர், காவல்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் வரவேற்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மணிமண்டபத்தைத் திறந்து வைத்து உட்பகுதியில் அமைக்கப்பட்டு இருந்த – தேவநேயப்





பாவாணர் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை நினைவுபடுத்திடும் புகைப்படங்களைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து தேவநேயப் பாவாணரின் திருவுருவச்சிலையினைத் திறந்து வைத்து, பாவாணரின் பேத்தி திருமதி. பரிபூரிணம் அவர்களுக்கு மணிமண்டபக் காப்பாளர் பணி நியமன ஆணையை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாவாணர் – பரிதிமாற் கலைஞர் ஆகியோரது சிலைகளை வடித்த சிற்பி திரு.கிஷோர் நாகப்பாவிற்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

## மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

- ★ 1902 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7 ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயிலில் பாவாணர் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் தேவநேசன் என்பதாகும்.
- ★ இவரது பெற்றோர் திரு.ஞானமுத்தனார் – திருமதி.பரிபூரணம் அம்மையார்.
- ★ இவர் தமது ஐந்தாவது அகவையிலேயே தந்தையாரையும் பின்னர் தாயாரையும் இழந்ததால் தனது தமக்கையின் அரவணைப்பில் வளர்ந்தார்.
- ★ சோழபுரம் விடையூழியப் பள்ளியில் (Mission School) தொடக்கக் கல்வியும், ஆம்பூர் மிசௌரி நல்லஞ்சல் உலுத்திரன் விடையூழிய நடுநிலைப் பள்ளியில் (Misoury Evangelical Luthern Mission Middle School) 8ஆம் வகுப்பு வரையிலும், பாளையங்கோட்டை திருச்சபை விடையூழியக் கழக உயர் நிலைப்பள்ளியில் (Church Mission Society High School) பதினோராம் வகுப்பு வரையிலும் பயின்று தேறினார்.
- ★ 1919 இல் சீயோன் மலை நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி, முறையான ஆசிரியர் பயிற்சியும் பெற்றார்.
- ★ 1922 இல் ஆம்பூர் மிசௌரி நல்லஞ்சல் உலுத்திரன் விடையூழிய நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.
- ★ 1924 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வு எழுதி வெற்றி பெற்றார்.
- ★ 1925 இல் சென்னை கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.
- ★ 1926 இல் திருநெல்வேலித் தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம் நடத்திய தனித்தமிழ்ப் புலவர் தேர்வு எழுதி வென்றார். சென்னை பெரம்பூரில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்,
- ★ 1928 இல் மன்னார்குடியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார்– மனைவி எசுத்தர் அம்மையார் மறைந்தார்.



- ★ 1930 இல் நேசமணி அம்மையாரை மணந்தார்.
- ★ 1934 இல் திருச்சியில் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.
- ★ 1943 இல் சென்னை, மண்ணடியில் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.
- ★ 1944 இல் சேலம் நகராண்மைக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி பின்னர் பேராசிரியரானார்.
- ★ 1949இல் தனித்தமிழியக்கத் தந்தை மறைமலை யடிகள் அவர்கள் பாவாணர் சொல்லாராய்ச்சியில் ஒப்பற்ற தனித்திறமை படைத்தவர் எனச் சான்றிதழ் வழங்கினார்.
- ★ 1952 இல் முதுகலைப் பட்டம் (M.A.) பெற்றார்.
- ★ 1955 இல் தந்தை பெரியார் தலைமையில் நடந்த சேலம் தமிழ்ப் பேரவை விழாவில் "திராவிட மொழி நூல் ஞாயிறு" எனும் பட்டம் பாவாணர்க்கு வழங்கப்பெற்றது.
- ★ 1956 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியாராய்ச்சித் துறைத் தலைவராக (Reader) அமர்த்தப்பட்டார்.
- ★ 1960 இல் பாவாணரின் ஆட்சித்துறைக் கலைச் சொல்லாக்கம் குறித்துப் பாராட்டித் தமிழக அரசின் செப்புப்பட்டயம் வழங்கப்பெற்றது.
- ★ 1963 இல் சிறப்பாசிரியராகப் பாவாணர் பெயர் தாங்கிய 'தென்மொழி' இதழ் வெளிவந்தது. பாவாணரின் துணைவியார் நேசமணி அம்மையார் மறைந்தார்.
- ★ 1974 இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித்திட்ட இயக்ககத்தின் இயக்குநராகப் பாவாணர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நியமித்தார்.
- ★ 1979 இல் பாவாணருக்குச் "செந்தமிழ்ச் செல்வர்" எனும் விருதைத் தமிழக அரசு வழங்கியது.
- ★ 1981 இல் மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" எனும் தலைப்பில் பாவாணர் உரையாற்றினார்.
- ★ 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 16 ஆம் நாள் பாவாணர் இயற்கை எய்தினார்.

**பாவாணர் படைத்த நூல்களுள் சில...**

- ★ ஒப்பியன் மொழிநூல்
- ★ தமிழ் வரலாறு
- ★ இயற்றமிழ் இலக்கணம்
- ★ வடமொழி வரலாறு
- ★ தமிழர் சரித்திரச் சுருக்கம்
- ★ திருக்குறள் தமிழ் மரபுரை
- ★ திரவிடத் தாய்
- ★ தமிழர் வரலாறு
- ★ சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
- ★ தமிழர் மதம்
- ★ தமிழர் திருமணம்
- ★ தமிழிலக்கிய வரலாறு

1996 இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாவாணரின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் தம் மரபுரிமையருக்கு ரூ.20 இலட்சம் வழங்கிச் சிறப்பித்தார். (7.9.1996)

- ★ 2002 இல் பாவாணரின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு கொண்டாடிச் சிறப்பித்தது.
- ★ 2006 இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாவாணர் நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டார். (18.2.2006)
- ★ தமிழக அரசின் சார்பில் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள பாவாணர் மணிமண்டபத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.10.2007 அன்று திறந்துவைத்தார். ★



# பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்



தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்று முதன் முதலாகக் குரல் கொடுத்து வரலாற்றில் இடம் பெற்றவர் பரிதிமாற் கலைஞர். தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாக சூரிய நாராயண சாஸ்திரி என்ற தனது பெயரை பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக் கொண்டவர். இவர் மதுரையை அடுத்த விளாச்சேரியில் பிறந்து, வாழ்ந்து மறைந்தார்.

அவரது நினைவாகவும் அவரது தமிழ்ப் பற்றை போற்றும் முகமாகவும் அவர் வாழ்ந்த பழமையான வீட்டைப் புதுப்பித்து நினைவு இல்லமாக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார். அதன்படி அந்த வீட்டை தமிழக அரசு வாங்கி, ரூ.8 இலட்சம் செலவில் புதுப்பித்தது. நினைவு இல்லத்தின் நுழைவு வாயிலில் பரிதிமாற் கலைஞரின் மார்பளவு வெண்கலச் சிலை அமைக்கப்பட்டது.






பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பரிதிமாற் கலைஞரின் நினைவு இல்லத்தை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 31.10.2007 அன்று திறந்துவைத்தார். பின்னர் வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள பரிதிமாற் கலைஞரின் மார்பளவு வெண்கலச் சிலையையும் அவர் திறந்து வைத்தார். நினைவு இல்லத்தில் பரிதிமாற்கலைஞரின் வரலாற்றுக் குறிப்புகள், அரிய புகைப்படங்கள் ஆகியவற்றை பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வையாளர்கள் புத்தகத்தில் ‘‘தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோர குரல் கொடுத்த முதல் தமிழன் பரிதிமாற் கலைஞர் புகழ் வாழ்க’’ என எழுதி கையெழுத்திட்டார்.

விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு பரிதிமாற் கலைஞரின் வாரிசுதாரர்கள் பொன்னாடை அணிவித்தனர். மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி, திரு. துரை முருகன், திரு.பரிதி இளம்வழுதி, திரு.தங்கம் தென்னரசு, திரு.மைதீன்கான், திருமதி. தமிழரசி, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. து. இராசேந்திரன் இ.ஆ.ப., செய்தித்துறை இயக்குநர் முனைவர். ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.எஸ்.ஜவஹர், இ.ஆ.ப., உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நம் அன்னை மொழியாம் அருந்தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவிக்கவேண்டும் என்று முதற்குரல் கொடுத்தவர் தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர். சூரியநாராயண சாஸ்திரி தமிழ் மீது கொண்ட தணியாத ஈடுபாட்டின் காரணமாகப் பரிதிமாற் கலைஞர் எனத் தனித்தமிழில் புனைபெயர் வைத்துக்கொண்டார்.

திராவிடமொழியான தமிழின் மீது பற்றுக் கொண்டு அதன் பெருமையை உலகிற்கு உணர்த்துவதை உயரிய குறிக்கோளாகக் கொண்ட பரிதிமாற் கலைஞரை ‘திராவிட சாஸ்திரி’ எனத் தலைசிறந்த தமிழறிஞரும் பெரும்புலவருமான சி.வை.தாமோதரம் பிள்ளை குறிப்பிடுகிறார்.

அகப்பொருளும், அதன் துறைகளும், புறப்பொருளும், அதன் துறைகளும் இவ்விருவகைப் பொருள்களின் இயைபுகளும் வடமொழியில் காணக்கிடைத்தற்கரிய தனித்தமிழ் விவிலியங்களாகும் என்பது தமிழ் இலக்கியங்களைப் பற்றிய பரிதிமாற் கலைஞரின் உயரிய மதிப்பீடு.

### பரிதிமாற் கலைஞர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

★ 1870 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 6ஆம் நாள் மதுரை மாவட்டம், விளாச்சேரி எனும் ஊரில் பரிதிமாற் கலைஞர் பிறந்தார்.

★ தந்தையார் பெயர் திரு.கோவிந்த சிவனார்; தாயார் பெயர் திருமதி.இலட்சுமி அம்மாள்.

★ சபாபதி முதலியார் என்ற தமிழறிஞரிடம் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தமிழ் கற்றார்.

★ இளமை முதலே இலக்கண இலக்கியங்களைத் தணியாத ஈடுபாட்டுடன் கற்று வந்தார்.

★ ஆங்கிலம் மற்றும் தத்துவ நூல்களையும் கற்றுத் தேர்ந்தார்.





1892 ஆம் ஆண்டு இளங்கலை (பி.ஏ.) தேர்வில், தமிழிலும் வேதாந்தத் தத்துவக் கல்வியிலும் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றார்.

கல்லூரியில் படிக்கும்போதே விவேக சிந்தாமணி எனும் இதழில் கட்டுரைகளை எழுதினார்.

இவர் காலத்தில் தமிழில் நாடக இலக்கண நூல்கள் இல்லாதிருந்த குறையைப் போக்கும் வகையில் ‘நாடகவியல்’ எனும் இலக்கண நூலை எழுதி வெளியிட்டார். மேலும்,

தமிழ்மொழியின் வரலாறு.

தமிழ்ப்புலவர் சரித்திரம்.

தமிழ் வியாசங்கள்.

மதிவாணன்.

ரூபாவதி.

கலாவதி.

மான விஜயம்.

தனிப்பாசுரத் தொகை.

பாவலர் விருந்து.

– என நூல்கள் பலவற்றைப் படைத்துத் தமிழுக்கு வளம் சேர்த்தார்.

சென்னைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலிருந்து தமிழ் நீக்கப்பட்டபோது அதை மீண்டும் சேர்க்கப் போராடினார்.

★ பல்லாற்றானும் தமிழுக்குப் பெருமை சேர்த்த பரிதிமாற் கலைஞர், தமது 33ஆம் வயதில் 1903ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 2ஆம் நாள் இயற்கை எய்தினார்.

### பரிதிமாற் கலைஞரின் நினைவாக....

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இடைவிடாத பெரும் முயற்சியால் பரிதிமாற் கலைஞர் விரும்பியவாறு 17.9.2004 அன்று தமிழைச் “செம்மொழி” என்று மத்திய அரசு ஏற்று அறிவித்தது.

★ பரிதிமாற் கலைஞர் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத் தொகையாக ரூ.15 இலட்சத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2.12.2006 அன்று வழங்கினார்கள்.

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க மத்திய அரசு பரிதிமாற் கலைஞர் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலையை 17.8.2007 அன்று வெளியிட்டுச் சிறப்பித்தது.

★ மதுரை விளாச்சேரியில் உள்ள பரிதிமாற் கலைஞரின் இல்லம் நினைவில்லமாக ஆக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அவரது திருக்கரங்களால் 31.10.2007 அன்று திறந்து வைக்கப் பெற்றது. ★

## கருமம் ஒன்றே கண்ணாயினார் என்ற பொன்மொழிக்கேற்ப நடந்து கொள்வீர்களேயானால் மற்றவர்களையும் நடக்கச் சொல்வீர்களேயானால், அது நாட்டை வெகுவாக உயர்த்தும், நம் எதிர்காலத்தை உயர்த்தும்!




*சென்னையில், 22-10-2007 அன்று, பொதுப்பணித்துறையில் கருணை அடிப்படையில் புதிய பணி நியமன ஆணைகளை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்* **கலைஞர் மு. கருணாநிதி** *அவர்கள் ஆற்றிய உரை*

சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு மிக முக்கியமான ஒரு மசோதாவை நான் பேரவையிலே அறிமுகம் செய்து விட்டு அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பின் இடையில் தற்போது உங்களின் முன்னால் அமர்ந்திருக்கின்றேன். முக்கியமான மசோதா என்று குறிப்பிட்டேன். சட்டமாக இருக்கின்ற அந்த மசோதா சிறுபான்மைச் சமுதாயத்தினருக்கு இட ஒதுக்கீடு – கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இட ஒதுக்கீடு என்ற அந்த மசோதா நீண்டகாலக் கனவாக இருந்து இன்றைக்கு நிறைவேறுகிறது. அதை நிறைவேற்றச் செல்கின்ற என்னை இங்கே தாமதிக்க விடமாட்டீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

தம்பி துரைமுருகன் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக தான் இருப்பதை பெருமிதத்தோடு குறிப்பிட்டு, இந்தப் பொதுப்பணித் துறையிலே தான் நம்முடைய முதல் அமைச்சரும் முதன் முதலாக அமைச்சராக இருந்தார் என்றார். நான் அமைச்சராக வருவதற்கு முன்பே பொதுப்பணியிலே ஈடுபட்ட காரணத்தினால்தான்,



அறிஞர் அண்ணா அவர்கள் என்னை நீ பொதுப்பணி அமைச்சராக இரு என்று ஆணையிட்டார்கள். நாங்கள் நான்கைந்து பேர் அண்ணா அவர்கள் முன்னிலையில் அமர்ந்திருந்தபோது, அவர்கள் விரலால் சுட்டிக் காட்டி, இன்னின்னார் இன்னின்ன அமைச்சர்கள் என்று குறிப்பிட்ட போது, நீ பொதுப்பணி என்று சொன்னார்கள். அதில் இரண்டு பொருள் உண்டு என்று எனக்கு அப்போதே தெரியும். எனவே, எனக்குப் பொதுப்பணி என்பது புதுப்பணி அல்ல, பழைய பணி தான், அந்தப் பொதுப்பணித் துறையில் இன்றைக்கு புதுப்பணி ஆற்றுவதற்காக பலருக்கு நியமன ஆணை வழங்குகின்ற விழாவிலே கலந்து கொள்வது மெத்தப் பூரிப்பை எனக்கு வழங்குகின்றது.

### தேர்தலில் உறுதிமொழி

தமிழ்நாட்டில் பணி நியமன ஆணை வழங்குகின்ற விழாவா ? இது வேறு மாநிலங்களிலே ஆச்சரியத்தோடு கேட்கப்படுகின்ற ஒரு கேள்வியாகக் கூட இருக்கலாம். நாம் இந்த ஆட்சியை இடையிலே இழந்து மீண்டும் தொடருகின்ற ஒரு நிலை வந்த பிறகு, அந்தக் கேள்விக்கு இந்தியாவிலே எங்கும் இடமில்லை என்றே கருதுகிறேன். பணிகளில் யாரும் அமரக் கூடாதென்பதற்காக சட்டங்கள் நிறைவேற்றுகின்ற மாநிலங்களும் உண்டு. நம்முடைய மாநிலத்திற்கே அந்த அனுபவம் கடந்த காலத்திலே உண்டு. இப்போது பணி நியமனத்திற்கான ஆணை வழங்குகின்றோம் என்றால், இதை இப்போது ஒரு மண்டபத்திலே அமர்ந்து விழா எடுத்து கொண்டாடினால் மாத்திரம் போதாது, இதை புராணீகர்களின் கூற்றுப்படி ஒரு உற்சவமாகவே நம்முடைய பணிக்கு வருகின்றவர்கள் கொண்டாட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு புதுமை, ஒரு புது யுகம் இன்றைக்கு தமிழகத்திலே உருவாகி இருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

நான் நீண்ட நேரம் இங்கே உரையாற்ற வேண்டுமென்று முதலில் கருதினேன். தேதி கொடுக்கும்போது இந்த முழு நாள் பொதுப்பணித் துறை விழாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது, என்னுடைய நாள் குறிப்பில். ஆனால் திடீரென்று சட்டப்பேரவை இன்று தொடர்ந்து நடைபெறும், நடைபெற வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் விரும்பிய காரணத்தால், எதிர்க்கட்சிகளுடைய குரலுக்கு, கருத்துக்கு மதிப்பளித்துப் பழக்கப்பட்ட நாங்கள், ஒரு நாள் சட்டமன்றம் நீடித்தாலும் பரவாயில்லை என்று நீடித்து இன்றைக்கு முக்கியமான மசோதாக்களை நிறைவேற்றுகின்ற வாய்ப்பை நாங்களும் பெற்று, தமிழ் மக்களும் பெற்றிருக்கிறார்கள். அதனால் தான் காலையிலே கூட நான் தம்பி துரைமுருகனைக் கேட்டுக் கொண்டேன், இதை மாலையிலே மாற்றி வைத்தால் எனக்கு நீண்ட நேரம் இவர்களிடையே பேச வேண்டுமென்ற விருப்பமிருக்கிறது, அதுவும் நிறைவேறுமே என்று சொன்னேன். அவர் சரி என்று தலையசைக்கவில்லை, ஆனால் இங்கே வந்து கடற்கரை காமராஜர் சாலை திரும்பிய பிறகு தான், அந்த யோசனையை சிந்தித்துப் பார்க்கலாமா என்று கேட்டார். பாதி வழியிலே சிந்திக்க வேண்டாம், பிறகு சிந்தித்துக் கொள்வோம் என்று அது இன்னொரு நாளைக்கு ஒத்தி வைக்கப் பட்டிருக்கிறது.

### இடுக்கண் தராத அரசு

நியமன ஆணைகள் வழங்கப்படுவது நம்முடைய தமிழக அரசில் ஒரு புதுமை தான். வேலை கொடு, வேலைவாய்ப்பு வழங்கு என்ற ஒரு முழக்கம் ஒரு புறத்திலே கேட்டுக் கொண்டிருக்கிறது. நாங்கள் இந்தத் தேர்தலிலே கடந்த ஆண்டுக்கு முதல் ஆண்டு ஈடுபட்டபோதே, தேர்தல் அறிக்கையிலே ஒரு உறுதிமொழி அளித்திருந்தோம். நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் வேலைவாய்ப்பு தாராளமாக வழங்கப்படும் என்று உறுதிமொழி அளித்திருந்தோம். அந்த உறுதி மொழிக்கேற்ப இது வரையிலே இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு நேரடியாக அதிலே ஒரு பகுதி நபர்களுக்கு வழங்க முடியாவிட்டாலுங்கூட, வேலைவாய்ப்பை உடனடியாக கையிலே தர முடியாத, இயலாத நிலையில் அவர் களுக்கெல்லாம் மாதந்தோறும் ஒரு உதவித் தொகையாக ஒரு மாற்று ஏற்பாடாக வழங்கிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் அமைச்சர்கள், நான் உட்பட அத்தனை பேரும் தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று அந்த உதவித் தொகையை வழங்கி வருகிறோம். ஆனால் உதவித்தொகை மாத்திரம்



போதுமா என்றால் போதாது. அவர்களுக்கு வேலை நிரந்தரமாக வேண்டும். அந்தப் பணி உறுதி செய்யப்பட்டதாக அமைய வேண்டுமென்ற வகையிலே தான் நேற்றைய தினம் நடைபெற்ற இள நிலை ஆசிரியர்கள் சங்கத்தின் மாநாட்டிலே கூட ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியாக தொகுப்பூதியம் பெற்று வந்தவர்களுக்கெல்லாம் கால முறை ஊதியம் என்று மாற்றப்பட்டு அது ஊதியமே இல்லை என்று சொல்வதை விட, தொகுப்பூதியம் என்று சொல்வது அவர்களை இழிவுபடுத்துகின்ற ஒன்று என்ற நிலைமையில் நேற்றைக்கு ஒரு அருமையான காட்சியை வள்ளுவர் கோட்டத்தில் நான் கண்டேன். அங்கே குழுமியிருந்த ஆசிரியப் பெருமக்கள் இளநிலை ஆசிரியர்கள் என்ற நிலைமையிலே இருந்தவர்கள் எல்லாம் நேற்று வள்ளுவர் கோட்ட விழாவிற்குப் பிறகு அவர்கள் எல்லாம் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றச் சங்கம் என்கிற பெயரால் ஒரு சங்கத்தின் உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். அவர்களுடைய அக மகிழ்வை நேற்று தெரிவித்துக் கொண்டார்கள். வள்ளுவர் கோட்டமே நேற்று பொங்கி வழிந்தது. அப்படிப்பட்ட பூரிப்பை அவர்கள் முகத்திலே என்னால் காண முடிந்தது.

அதே பூரிப்பை உங்கள் முகத்திலே நேரடியாக தெளிவாகக் காண முடியாவிட்டாலும், உங்கள் உள்ளத்திலே இருக்கின்ற பூரிப்பை என்னால் உணர முடிகிறது. "இடுக்கண் வருங்கால் நகுக" என்று அய்யன் வள்ளுவப் பெருமான் சொன்னார். இடுக்கணே இல்லாமல் இருக்கும்போது, புன்னகை புரிந்தால் என்ன என்று இடுக்கண் இல்லாத அரசு, இடுக்கண் தராத அரசு – அந்த அரசின் நிழலில் வாழ்கிறோம் என்ற நிலைமையிலே தான் நேற்றும், இன்றும் நீங்கள் கலந்து கொள்கின்ற காட்சியை நான் காணுகிறேன். பூரிப்படைகிறேன்.

இந்த விழாவில் இன்றையதினம் மாத்திரம் 569 உதவிப் பொறியாளர்களின் புதிய நியமனங்கள் – 1,056 தினக் கூலிப் பணியாளர்களின் நிரந்தர நியமனங்கள் – 52 கருணை அடிப்படையிலான நியமனங்கள் – கடந்த ஆட்சியிலே கருணையே இல்லை என்றார் தம்பி துரைமுருகன் – கருணையே பெயராக வந்துவிட்ட பிறகு எப்படி இந்த ஆட்சியிலே கருணை இல்லாமல் இருக்க முடியும் ?

**மீண்டும் கருணை இல்லம்**

கிருபானந்தவாரியார் தி.மு.க. ஆட்சியிலே மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலயத்தில்



சிறுவர்களுக்காக ஒரு அமைப்பை, அந்த ஆலயத்தினுடைய பாதுகாப்பில் – அந்த ஆலயத்தின் உதவியோடு அவர்கள் படிக்க, உண்ண, உறங்க, ஓய்வு கொள்ள, விளையாட ஒரு இடம் வேண்டுமென்று இல்லங்களை அமைத்த போது, அதற்கு என்ன பெயர் வைக்கலாமென்று யோசித்த போது, நான் அன்பு இல்லம் என்று வைக்கலாம், இளைஞர் இல்லம் என்று வைக்கலாம் என்று சொன்னேன். ஆனால் அதைத் திறந்து வைக்க வந்த வாரியார் அவர்கள், இல்லையில்லை, அதற்கு கருணை இல்லம் என்று பெயர் வைக்கிறேன் என்று அவர் அந்தப் பெயரைச் சூட்டி னார். அவர் நல்ல எண்ணத்தோடு தான் சூட்டினார். ஆனால், கருணை என்ற பெயரே இருக்கக் கூடாது என்றுபிறகு ஆட்சிக்கு வந்தவர்கள், அந்தப் பெயரை அறவே எடுத்து விட்டார்கள். இப்போது கருணை அந்த ஆலயத்திலும் இல்லை, அந்த ஆலயத்தினுடைய சொல்லாகவும் இல்லை, இல்லமாகவும் இல்லை. மீண்டும் அந்தக் கருணை இல்லங்கள் திறக்கப்படும், தொடங்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நல்ல விழாவிலே நீங்கள் அடைகின்ற மகிழ்ச்சியோடு இதையும் சேர்த்து அடையலாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

52 பேருக்கு கருணை அடிப்படையிலான நியமனங்கள் இன்று வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இன்றைக்கு மாத்திரம் இந்த விழாவின் மூலம் பொதுப்பணித் துறையின் வாயிலாக 1,677 இளைஞர்களுக்கு தமிழக அரசில் நிரந்தரப் பணி ஆணைகள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு புள்ளி விவரத்தை உங்களிடம் படிக்க விரும்புகிறேன்.

13–5–2006 அன்று இந்தப் புதிய அரசு அமைந்தது, ஐந்தாவது முறையாக நான் முதல்வர் பொறுப்பையேற்ற அரசு. 2006ஆம் ஆண்டு பொதுப்பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் 449 உதவிப் பொறியாளர்கள் பணி இடங்களும், கட்டமைப்புப் பிரிவின்கீழ் 120 உதவிப் பொறியாளர்கள் பணி இடங்களும், ஆக மொத்தம் 569 உதவிப் பொறியாளர்களின் பணி இடங்கள் காலியாக இருந்தன. அவற்றை நிரப்பிட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கேட்டுக் கொள்ளப்பட்டு, அதன் மூலம் தேர்வு செய்யப்பட்ட 569 உதவிப் பொறியாளர்களுக்கு இன்று பணி நியமன ஆணைகள் வழங்கப்படுகின்றன.

**நம்முடைய பெருமையை உயர்த்தும்**

பொதுப்பணித் துறையின் வரலாற்றில் 72ஆம் ஆண்டு முதல் இது வரை மொத்தம் 2,873 உதவிப் பொறியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 1,953 உதவிப் பொறியாளர்கள் இந்த அரசு காலத்தில் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற வரலாற்றுப் பெருமையை இன்றைய விழாவில் எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்த ஆட்சிக் காலத்தில் 1,953 உதவிப் பொறியாளர்கள். ஆனால் பத்தாண்டு கால கடந்த கால ஆட்சியில் பொதுப்பணித் துறையில் நியமிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களின் எண்ணிக்கை 15.

இப்படி இந்த எண்ணிக்கையினுடைய அளவு – எங்களுடைய எண்ணத்தின் அளவைச் சுட்டிக்காட்டுகிறது என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இந்தத் துறை எவ்வளவு தேவையான துறை, எந்த அளவிற்கு முக்கியமானது, எந்த அளவிற்கு மக்களோடு பின்னிப் பிணைந்த துறை என்பதையெல்லாம் நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்களே அறிவீர்கள். அப்படிப்பட்ட இந்தத் துறையின் வளர்ச்சியில், இந்தத் துறை பெறுகின்ற வலிவும், பொலிவும் நாட்டினுடைய வளத்தை, வலிவை அடையாளம் காட்டக் கூடியவைகள் ஆகும். அதனால்தான் தம்பி துரைமுருகன் உங்களுக்கு அறிவுரை என்று ஒன்றைச் சொன்னார். அதை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்று அவரும் கேட்டுக் கொண்டார். அவர் முன் மொழிந்ததை நானும் வழிமொழி கின்றேன். கருமம் ஒன்றே கண்ணாயினார் என்கின்ற அந்தப் பழமொழிக்கு, பொன்மொழிக்கேற்ப நடந்து கொள்வீர்களே யானால், மற்றவர்களையும் நடக்கச் செய்வீர்களேயானால், மற்றவர்கள் நடக்கிறார்களா என்று கண்காணிப்பீர்களேயானால், இந்த மூன்றும் சேர்ந்து நாட்டை வெகுவாக உயர்த்தும், நம்மை உயர்த்தும், நம்முடைய பெருமையை உயர்த்தும், நம்முடைய ஆட்சியை உயர்த்தும், நம்முடைய எதிர்காலத்தை உயர்த்தும் என்று சொல்லி இந்தப் பணி நியமனம் பெறுகின்ற அனைவரையும் வாழ்த்தி, வரவேற்று மகிழ்ந்து பாராட்டி அமைகிறேன்''.



# இந்த நாள் சட்டப்பேரவையில் ஒரு பொன்னாள், சமூக நீதி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான நாள்


**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**


சட்டப்பேரவையில் 22.10.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிறித்துவ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு வழங்கிட வகைசெய்யும் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ்வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்ட முன் வடிவு எதிர்ப்பு எதுவுமின்றி ஒருமனதாக நிறைவேறியது.

இந்த சட்டமுன்வடிவின் மீது சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ் (காங்கிரஸ்), திரு. கோ.க.மணி (பா.ம.க.), செல்வி. பாலபாரதி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்), திரு. ராமசாமி (இந்திய கம்யூனிஸ்ட்), திரு.செல்வம் (விடுதலைச் சிறுத்தைகள்), திரு. அப்துல் பாசித் (இந்திய யூனியன் முஸ்லிம் லீக்) ஆகியோர் பேசினார்கள்.

இந்தச் சட்ட முன் வடிவு மீது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:—

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டுமென கோருகிறேன். இதைத் தொடர்ந்து நெடுநாள் நம்முடைய எதிர்பார்ப்பாக இருந்த ஒரு பெரிய பரிசை இன்றைக்குப்பெற்ற மகிழ்ச்சியில் இங்கே உரையாற்றிய கட்சித் தலைவர்களுடைய உணர்வுகளோடு என்னுடைய உணர்வையும் இணைத்து பாராட்டுரை, வாழ்த்துரை வழங்கிய அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியை எதிர்பார்த்து இந்த நிலை எடுக்கப்படவில்லை என்பதையெல்லாம் நீங்களெல்லாம் நன்றாக அறிவீர்கள். ஒரு உரிமையை நிலைநாட்டுவதற்காக எடுத்த முயற்சியில் ஜனநாயகத்தினுடைய ஒப்புதலை இன்றைக்கு நாம் பெற்றிருக்கின்றோம். எதிர்ப்பில்லாமல் எந்த நல்ல காரியமும் நடைபெறுவதில்லை என்பது வரலாறு.

ஒரு ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலகட்டத்தில் இந்த சமூகநீதிக்கான வித்து ஊன்றப்பட்டது என்பதும் அதனுடைய விளைவாக சமுதாயத்திலே ஏற்பட்ட மறுமலர்ச்சி புறக்கணிக்கப்பட்ட மக்கள், மூலையிலே தள்ளப்பட்ட மக்கள், படிப்பறிவு அவர்களுக்குத் தேவையில்லை என்று விரட்டப்பட்ட மக்கள், இவர்கள் சார்பாக எழுந்த குரல், அந்தக் குரல் வலுவாகி அதன் காரணமாக நடேசனார் போன்றவர்கள், நாயர் போன்றவர்கள், தியாகராயர் போன்றவர்கள் புரிந்த போர் முழக்கத்தின் காரணமாக எழுந்த அந்த உணர்ச்சியினுடைய விளைவுதான் இன்றைக்கு இந்த அவையிலே பூத்துக் குலுங்கி நம்மையெல்லாம் பூரிப்புக் கொள்ள செய்திருக்கின்ற ஒன்றாகும்.

ஆனால் இதற்கு இடைக்காலத்திலே எத்தனை எத்தனை சோதனைகள், எத்தனை எத்தனை வேதனைகளை நாம் சந்திக்க நேரிட்டது என்பதை விரிவாக இங்கே விளக்கத் தேவையில்லை. இன்னமும்கூட அந்தக் கட்டத்திலே இருந்து நாம் முழுமையாக தாண்டிவிடவில்லை. இன்னமும் உச்ச நீதி மன்றம் வரையில் நம்முடைய உரிமைகள் என்ன ஆகும் என்பது கேள்விக்குறியாக இருப்பதை நாம் மறந்துவிடவில்லை.

இங்கே இதனை வரவேற்றுப் பேசிய மாண்புமிகு கட்சியின் தலைவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல் முழுமை பெற்றுவிடவில்லை, நம்முடைய கோரிக்கை முழுமையாக நிறைவேறிவிடவில்லை. இன்னமும் சில தேவைகள், கோரிக்கைகள் அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற ஆதங்கங்கள், இன்னமும் நிறைவேற்ற முன்வரவில்லையே என்ற சலிப்புகள் இவைகளெல்லாம் நாட்டில், சமுதாயத்தில் இருக்கின்றன.

இதற்கிடையில் நம்மால் முடிந்ததைச் செய்வோம் என்பதற்காகத்தான் இதைத் துணிந்து இந்த அரசு, எந்த வகையில் இதைச் செய்ய வேண்டும் என்பதை யோசித்து அந்த முடிவை இன்றைக்கு சட்ட முன்வடிவாக இங்கே கொண்டு வந்து உங்களுடைய அன்பான ஆதரவை பெற்றிருக்கிறது. உள்ளபடியே இந்த நாள் நம்முடைய சட்டப்பேரவையினுடைய வரலாற்றில் ஒரு பொன்னாள். சமூக நீதி வரலாற்றில் ஒரு புரட்சிகரமான நாள்.

இந்தச் சமுதாயம் எழுந்து நடமாட முடியாமல், அடியெடுத்து வைக்க முடியாமல் ஆயிரம் தடைகள், குறுக்கீடுகள், முன்னால் இருந்து தள்ளுகின்றவர்கள், பின்னால் இருந்து இழுப்பவர்கள், பக்கத்திலே இருந்து உதைப்பவர்கள் என்று இப்படிப் பல நரக வேதனைகளுக்கிடையே ஆட்பட்டு, அடிமைப்பட்டு, உனக்கு உன்னுடைய தலையிலே எழுதியது இதுதான் என்று சபிக்கப்பட்ட ஒரு நிலையிலே உள்ள — பொட்டுப்பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாக, நாம் இங்கு வாழ வேண்டும் என்ற ஒரு நிலையிலே அமைந்த சமுதாயமாகத்தான் இருந்தது.

இதை இன்றைக்கு உணர்ச்சியுள்ள சமுதாயமாக ஆக்கிய பெருமைக்குரிய தலைவர்களையெல்லாம் — அவர்கள் இன்றைக்கு கல்லறைகளாக ஆகியிருக்கிறார்கள் என்று இருந்தாலும்கூட, இங்கிருந்தவாறு அந்தக் கல்லறைகளை நோக்கி நாம் தொழுவோம், வணங்குவோம், நன்றி காட்டுவோம். நீங்கள் பாடுபடாவிட்டால் எங்களுக்கு விழிப்பு வந்திருக்குமா? எங்களுக்கு வேலை கிடைத்திருக்குமா? எங்களுக்கு வாழ்விலே விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்குமா? —என்றெல்லாம் இந்தக் கேள்விகளை நாம் அந்தக் கல்லறைகளை நோக்கி இன்றைக்கு கண்கலங்க கேட்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

எந்த ஒரு அரசியல் கட்சியும் இந்தக் காரியத்துக்காக நெஞ்சை நிமிர்த்தி இதை நான்தான் செய்தேன் என்று சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இதை யார் செய்தார்கள் என்பதை விளக்கவேண்டிய நிலையும் இன்றைக்கு இல்லை. மனம் என்ற ஒன்று இருக்குமேயானால், உணர்வு என்ற ஒன்று இருக்குமேயானால் நாம் இந்த நாட்டிலே எப்படி பாதிக்கப்பட்டோம், எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தப்பட்டோம் என்ற பழைய நினைவுகள் அவர்களுடைய நெஞ்சிலே நிழலாடுமேயானால் அவர்கள் அறிவார்கள். இதற்கெல்லாம், இந்த விடியலுக்கெல்லாம் யார் காரணம் என்பதை அவர்கள் அறிவார்கள்.

> “*இந்த வெற்றி பெறுவதற்கு நம்மால் முடிந்தது என்றால் நாம் அத்தனை கட்டங்களை மீறி — நீதிமன்றங்கள், வீதிமன்றங்கள் அத்தனையிலும் எடுத்துச் சொன்ன அந்த உண்மைகளை மாண்புகளும் ஏற்றுக்கொண்டார்கள், மக்களும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி ஏற்றுக்கொண்டவர்கள்தான் இன்று இந்த வெற்றியை நாம் பெற்றிருக்கின்றோம்.*”

அந்த உணர்வுகளைத் தட்டி எழுப்பிய உத்தமத் தலைவர்களுக்கு அவர்கள் இருக்கும்—இருந்த திக்கை நோக்கி, அவர்களுடைய கல்லறைகள் இருக்கும் திக்கை நோக்கி நாம் நம்முடைய நன்றி கலந்த வணக்கத்தை இன்றைக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்றையத் தலைவர்களிலே நான் இங்கே வரிசைப்படுத்த வேண்டுமேயானால் ஒன்று இரண்டு தலைவர்களுடைய பெயர்கள் விடுபட்டு விடக்கூடும், அதனால் நான் எல்லோரும் ஒருமித்தக் குரலில் ஆதரவை நல்கி தீர்மானத்தை ஒரு முக்கியமான சட்டத்தை, சட்ட முன்வடிவை நிறைவேற்றுகின்ற நேரத்தில் யாருடைய உள்ளத்திலும் சிறு கிலேசமும் வரக்கூடாது என்கின்ற அந்த உணர்வோடு இன்று இருக்கிற இதே நிலை என்றென்றும் நம்முடைய உள்ளத்திலே இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அவர்களைப் பற்றி விபரமாக சொல்ல விரும்பவில்லை.

அவைகளையெல்லாம் நாம் தாண்டி இன்றைக்கு வந்திருக்கின்றோம். இன்றைக்கு இந்தப் பெருமையைப் பெற்றிருக்கின்றோம் – இந்தப் பயனை அடைந்திருக்கின்றோம். ஆனால் இந்தப் பயனை அடைவதற்கு நாம் நீந்தி வந்த காட்டாறுகள் போன்ற பாதைகள் எவ்வளவு, எவ்வளவு, எவ்வளவு என்பதை எண்ணிப் பார்த்தால்தான் தெரியும். எல்லோரும் வந்திருக்கிறோம். ஆனால் சில பேர் வரவில்லை என்று ஆதங்கப்பட்டார்கள். விளைந்த நெல்லை, அறுத்த நெல்லை, களத்துமேட்டிலே குவித்ததை காண வேண்டும் என்கின்ற ஆசை உழுதவனுக்கு, உழைத்தவனுக்கு, அந்த வரப்பிலே இருந்து கண்காணித்தவனுக்கு, களை எடுத்தவனுக்குத்தான் இருக்க முடியுமே தவிர எல்லோருக்கும் இருக்க முடியாது.

அவர்களின் பிரதிநிதிகளாகத்தான் இங்கே நாம் வீற்றிருக்கின்றோம். அதனால்தான் நமக்கு இதனுடைய கஷ்டம் தெரிகிறது. பாடுபட்டவனுக்குத்தான் கிடைத்தப் பலனுடைய அருமைத் தெரியும். அந்தப் பலனைப் பெற நாம் சிந்திய வியர்வை – ஏன் சில நேரங்களில் கொட்டிய ரத்தம் இவைகளெல்லாம் சாதாரணமானவைகள் அல்ல. அத்தகைய நிலையைப் பொருத்துத்தான் இந்த வெகுமதியை இன்றைக்கு நாம் பெற்றிருக்கின்றோம்.

ஒரு சட்ட முன்வடிவு – இதற்கு இவ்வளவு நேரம் – இத்தனை தலைவர்கள் – இவ்வளவு நெகிழ்ச்சியோடு உணர்ச்சிகரமாக எல்லாம் பேச வேண்டுமா என்றெல்லாம் நாளைக்கு பேசக் கூடியவர்கள் எல்லாம் நாட்டில் இருப்பார் கள். அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட முடியாது. கவலைப்படாத காரணத்தால்தான் இன்றைக்கு நாம் வெற்றிகளை அடுக்கடுக்காக பெற்றுவிட முடிகிறது. இந்த வெற்றி பெறுவதற்கு நம்மால் முடிந்தது என்றால் நாம் அத்தனை கட்டங்களை மீறி – நீதிமன்றங்கள், வீதிமன்றங்கள் அத்தனையிலும் எடுத்துச் சொன்ன அந்த உண்மைகளை மாண்புகளும் ஏற்றுக்கொண்டார்கள், மக்களும் ஏற்றுக்கொண்டார்கள். அப்படி ஏற்றுக்கொண்ட வர்கள்தான் இன்று இந்த வெற்றியை நாம் பெற்றிருக்கின்றோம்.

இன்னும் பல வெற்றிகளுக்கு இந்த வெற்றி அடிப்படையாக அமைய வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்போது இங்கே சொன்னார், எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டீர்களே, நாங்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது என்று சொன்னார். நான் அப்படி சொல்வதற்கு காரணம், எனக்குப் பிறகும் அவர்கள் எல்லாம் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நான் சொல்கின்றேன். நாங்கள் செய்வதற்கு என்ன இருக்கிறது என்று அங்கலாய்த்தார்கள். நான் சொல்லுகின்றேன், எல்லாவற்றையும் நாங்கள் செய்து முடித்துவிடவில்லை, நாம் செய்து முடித்துவிடவில்லை. நாம் இன்னும் செய்ய வேண்டியது ஏராளம் இருக்கின்றது.

நாம் சிலையை செய்துவிட்டோம். உருவத்தை அமைத்து விட்டோம். அதை வைக்க வேண்டிய இடத்திலே ஒரு பீடத்தை அமைத்துவிட்டோம். ஆனால் எந்தச் சிலையைச் செய்தாலும் அந்தச் சிற்பி கடைசியாக அந்தச் சிலையிலே அவன் அழகூட்டுவது அதனுடைய கண்ணைத் திறப்பதுதான். இன்னும் தமிழகத்தினுடைய கண் சரியாகத் திறக்கப்படவில்லை. அந்தக் கண்ணைத் திறக்கின்ற காரியத்தை செய்து முடிக்கிற வரையில், அந்தக் கண் திறக்கப்படுகிற வரையில் சிலை முழுமையாக ஆகி விட்டது என்று கூற முடியாது. அந்தச் சிலையை முழுமையாக ஆக்குகின்ற முயற்சியிலே நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த அருமையான முடிவை நாம் எடுப்பதற்கு உதவிய ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களுக்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் புகழேந்தி, வேலுச்சாமி, பொன்னாடு மற்றும் பூங்கோதை செல்லத்துரை, பேராசிரியர் வி.சுந்தரம் இவர்களுக்கெல்லாம் நான் இந்த அவையின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவ்வப்பொழுது இதிலே சந்தேகம் வந்து இதற்கு ஏதாவது குறுக்கீடு வருமோ, சட்ட சம்மதம் கிடைக்குமா ? என்றெல்லாம் நாங்கள் அச்சமுற்ற நேரத்தில் எங்களுக்கு முழு உதவியையும் தைரியத்தையும் ஊட்டியவர் நண்பர் நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் என்பதை மறக்க முடியாது. எல்லாக் கட்சியினுடைய தலைவர்களும் – சமூகநீதிக் காவலர்களாக இருக்கின்ற எல்லாத் தலைவர்களும் அளித்த ஆதரவும் இந்த உணர்வை ஊட்டுகின்ற பத்திரிகையாளர்கள் எழுதிய தலையங்கங்களும், கட்டுரைகளும் எங்களுக்கு மேலும் மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தி அந்த நம்பிக்கை இன்றைக்கு வெற்றிக்கனியாக கிடைத்திருக்கிறது. நம்பிக்கை ஊட்டியவர்களுக்கும் ஆதரவு தந்தவர்களுக்கும் அரிய யோசனைகளை இடையிடையே வழங்கியவர்களுக்கும் நான் இந்த அவையின் சார்பாக என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டு இதனை நிறைவேற்றிக்கொடுத்துள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களுக்கும் அளித்த ஆதரவுக்கும் மீண்டும் மீண்டும் நன்றியினை வழங்கி சமூக நீதிக்காக தொடர்ந்து பாடுபட இன்றைக்கு நாம் சபதம் எடுத்துக்கொள்வோம் என்று கூறி இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.”





# பகைவராலும் புகழப்பட்ட மாவீரர்கள் சின்ன மருது - பெரிய மருது

**மதுரையில் மருதுபாண்டியர் சிலைகளைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புகழாரம்**

மதுரையில் 31.10.2007 அன்று மருதுபாண்டியர் சகோதரர்களின் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:–

“மதுரையில் நடைபெறுகின்ற இந்த மகத்தான திருவிழாவில் மருதுபாண்டியர் களுடைய சிலைகளைத் திறந்து வைக்கின்ற அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக இந்த வாய்ப்பினை வழங்கிய சிலை அமைப்புக்குழுவினருக்கு என்னுடைய நன்றியை, வணக்கத்தை, வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த விழாவுக்கு வருவதற்கு முன்பு அருகிலே உள்ள விளாச்சேரி என்ற சின்னஞ்சிறிய கிராமத்திற்குச் சென்று வந்தேன். சென்றதற்கான காரணத்தை நீங்கள் ஏடுகளில் கண்டிருப்பீர்கள். நம்முடைய தாய்மொழி தமிழுக்கு செம்மொழி என்ற தகுதி தேவை என்பதற்காகக் குரல் கொடுத்து சரியாகச் சொல்ல வேண்டுமேயானால், முதல் குரல் கொடுத்து – நூறாண்டு காலத்திற்கு முன்பே குரல் கொடுத்து, அதற்காக வாதாடி, போராடி எடுத்துச் சொல்ல வேண்டிய சான்றுகளையெல்லாம் எடுத்துச் சொல்லி அந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக – நம்முடைய



ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே அதனை மத்தியிலே பிரதமரிடத்திலே அமைச்சர்களிடத்திலே, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவியார் திருமதி. சோனியா காந்தி அவர்களிடத்திலே வலியுறுத்திச் சொன்னதன் காரணமாக – செம்மொழி என்ற தகுதி வந்தது. அதற்கு மூலக் காரணமாக – வித்தாக – வழிகாட்டியாக இருந்த பெருமை யாருக்கு உரியது என்பதைப் பார்க்கும்போது – திருப்பரங்குன்றத்திற்கு மிக அண்மையில் உள்ள விளாச்சேரி கிராமத்தைச் சேர்ந்த சூரியநாராயண சாஸ்திரி அவர்கள்தான் அதற்கான கொடியேற்றத்தை நடத்தியவர்கள்.

### பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம்

தன்னுடைய பெயரையே தனித்தமிழ்ப் பெயராக மாற்றிக் கொள்ள வேண்டுமென்று – ‘சூரிய’ என்பதை, ‘பரிதி’ என்றும், ‘நாராயண’ என்பதை ‘மால்’ என்றும், ‘சாஸ்திரி’ என்பதை, ‘கலைஞர்’ என்றும் மாற்றிக் கொண்டு – “பரிதிமாற் கலைஞர்” என்று தமிழ்ச் சமுதாயத்துக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு – அந்த தனித்தமிழ்க் கொடியை ஏற்றி வைத்தவருடைய இல்லத்தைப் புதுப்பித்து நினைவுச் சின்னமாக அமைத்து – ஏற்கெனவே சில மாதங்களுக்கு முன்பு அவர் எழுதிய நூல்களை எல்லாம் நாட்டுடைமையாக ஆக்கி அந்தக் குடும்பத்தினரை எல்லாம் அழைத்து அவர்களுக்கு மரியாதை செய்து, பரிசு வழங்கி, அந்தக் குடும்ப நிதியை அவர்கள் பெற்றுக் கொண்டு குதூகலமாகத் திரும்பிய காட்சியையும் – இன்றைய தினம் அவருடைய பெயரால் அமைந்துள்ள அந்த நிகழ்ச்சியையும் – அந்த நிகழ்ச்சியில் அவருக்காக அமைக்கப்பட்ட சிலையையும் அந்த ஊரே திரண்டு வந்து கண்டு வணங்கி, மகிழ்ந்து கழக அரசை வாழ்த்திச் சென்ற அந்த மாட்சி என்னுடைய மனதிலே நிலை பெற்றிருக்கிற நேரத்தில் மற்றொரு சித்திரமாக இந்தக் கூட்டம், இந்த விழா அமைந்திருப்பதை நான் காணுகின்றேன்.

### தமிழ் மக்கள் கடல்

மருதுபாண்டியர்களுக்கு சிலை அமைக்க வேண்டுமென்ற ஒரு ஆதங்கம் – ஒரு விருப்பம் இந்த வட்டாரத்திலே உள்ள குறிப்பிட்ட சமுதாயத்திலே உள்ள பெரியவர்களுடைய ஆசை – இவைகளெல்லாம் படிப்படியாக எனக்கு நினைவூட்டப்பட்டு அதிலும் குறிப்பாக என்னுடைய தம்பி பொன்.முத்துராமலிங்கம் அவர்கள் என்னைக் காணுகிற நேரத்திலெல்லாம் இதைப் பற்றி எடுத்துச் சொல்லி, இதற்காக தேதி பெற்று – இன்றைக்கு இந்த விழா மதுரையில் சித்திரைத் திருவிழா போல, இந்தச் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நான் பக்கத்திலே உள்ள பெரியவரைக் கேட்டேன், “எதிரே இருப்பதுதான் கூட்டமா? இந்தப் பகுதியிலே இருப்பவர்களெல்லாம் இவ்விழாவிற்கு வந்த கூட்டத்தாரா?” என்று கேட்டபோது, “ஆமாம். அங்கே



இருப்பவர்களும் இந்தக் கூட்டத்திற்கு வந்தவர்கள்தான் என்று அவர் வியப்போடு சொன்னார். இது ஒரு குளக்ககரையிலே நடைபெறுகிற கூட்டம் என்பதை முதலிலேயே குறிப்பிட்டார்கள். மருதுபாண்டியர்களுக்கு மிக மிக பழக்கமான ஒரு இடத்தில் நடைபெறுகிற கூட்டம் என்று சொன்னார்கள். இது குளம் என்பது உண்மையானால், குளத்திற்குப் பக்கத்திலே ஒரு கடலும் இன்றைக்கு உருவாகி இருக்கிறது. அதுதான் ‘மனிதக் கடல்’, ‘தமிழ் மக்களுடைய கடல்’ என்று சொன்னால் அது மிக மிகப் பொருத்தமான ஒன்றாகும். இந்தக் கடலில் பல முத்துக்கள் சிதறின.

### மருது சகோதரர்கள் பற்றி ஆங்கிலேயத் தளபதியின் கருத்து

உரையாற்றியவர்கள் அத்தனை பேரும் மருது பாண்டியர்களின் மாண்பினை, மாவீரத்தை அவர்கள் அரசோச்சிய திறமையை, ஆற்றலை எடுத்துரைத்தார்கள். மருது பாண்டியர்களை எதிர்த்து நின்ற வெள்ளைக்காரன் கூட அவர் விரோதமாக இருந்தாலுங்கூட, எதிர்முனையிலே இருந்து போரிட்டாலுங்கூட, ஜேம்ஸ் வெல்ஷ் என்ற ஒரு வெள்ளைக்காரத் தளபதி மருது பாண்டியர்களைப் பற்றி என்ன எழுதினார் என்பது மிகச் சுவையான ஒன்றாகும். சின்னமருது, பெரியமருது என்ற இந்த இருவரில் அந்த ஆங்கிலேயத் தளபதி ஜேம்ஸ் வெல்ஷ் என்பவர் குறிப்பிடுகிறார்.

முதலில் மருதுபாண்டியர்களுக்கு அந்த ஆங்கிலேயத் தளபதி நண்பராக இருந்தவர், பிறகு அவர்களுக்கு நாடு பிடிக்கும் ஆசை வந்து விட்டது என்ற காரணத்தால், அவர்களை எதிர்க்கின்ற அந்தக் கொள்கை முடிவை மருது பாண்டியர்கள் எடுத்து போர்க்களத்தில் நின்றபோது, அப்போதும் அவர்கள் நம்மை எதிர்த்துப் போரிடுகிறார்களே என்பதற்காக, பொல்லாங்கு பேசவில்லை, உண்மையை மறைக்கவில்லை, அந்த ஆங்கிலேயத் தளபதி சொல்லுகிறார். “ராணுவ நினைவுகள்” என்ற ஒரு நூல் எழுதுகிறார் அந்த ஜேம்ஸ் வெல்ஷ் என்ற ஆங்கிலேயத் தளபதி. அதிலே சொல்லுகிறார் :

“Of the two Murdoos, the elder brother was called “wella” or “Velli Murdoo” but he had nothing to do with the management of the country. He was a great sportsman and gave up his whole time to hunting and shooting. Being a man of uncommon stature and strength, his chief delight was to encounter the monsters of the woods, and it was even said that he could bend a common Arcot rupee with his fingers”

(“மருது இருவரில்” “வெள்ளை” அல்லது “வெள்ளி மருது” என அழைக்கப்பட்ட மூத்தவர் நாட்டு நிருவாகத்தில் ஈடுபடவில்லை; அவர் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்; முழு நேரத்தையும் வேட்டையாடுவதிலும், துப்பாக்கிச் சுடுவதிலும் செலவிட்டார். சராசரி மனிதர்போல் இல்லாமல் வலிமையான மரங்களுக்கு நடுவில் விலங்குகளை வேட்டையாடுவதில் பெரிதும் மகிழ்ந்தார்; ஆற்காட்டின், ஒரு ரூபாய் பணத்தைத் தமது விரல்களாலேயே எளிதில் வளைக்கும் ஆற்றல் கொண்டவராகவும் விளங்கினார்”)

அதாவது பெரிய மருது வேட்டையாடுவதில் தான் விருப்பம் உள்ளவர். தன்னுடைய தேச நிருவாகத்தில் அவ்வளவாக கவனம் செலுத்தாவிட்டாலுங்கூட, அவருடைய பலமும் அவருடைய தோற்றமும், அவருடைய சாயலும், அவருடைய நடவடிக்கையும் போற்றத்தக்கவை என்று கூறிவிட்டு அவருடைய வலிமையைப் பற்றிச் சொல்லும்போது, அந்தக் காலத்தில் ஆற்காட்டு ரூபாய் நாணயம் மிகவும் அழுத்தமானது. அதை ஒடிக்கவோ, வளைக்கவோ முடியாது. அந்த ஆற்காட்டு நாணயத்தைச் சொல்லி, அந்த வெள்ளைக்காரத் தளபதி, பெரிய மருது எவ்வளவு வலிவு வாய்ந்தவர் என்பதற்கு எடுத்துக்காட்டு ஆற்காட்டு ரூபாய் நாணயத்தை ஒரு விரலால் வளைத்துக் காட்டுவார் என்று அவருடைய வீரத்தை அன்றைக்கு அவர் விளக்குகிறார்.

அதைப் போலவே சின்ன மருதுவைப் பற்றியும், அவர் எழுதும்போது,

“The Cheena Murdoo was the ostensible sovereign of an extensive and fertile country and his general residence was at SHEREWALE. (சிறு வயல்) Though of a dark complexion, as was a portly handsome affable man of the kindest manners and *most easy access*”;

வெளிப்படையான தோற்றமுள்ள ஒரு பரந்த வளமிக்க நாட்டிற்குச் சின்ன மருது அதிபதியாக இருந்தார். அவரது பொதுவான இருப்பிடம் சிறுவயலாகும். அவர் கருத்த மேனியாய் காண்பதற்கழகாய், பழகுவதற்குப் பண்பாளராய், இரக்க குணங்கள் கொண்ட இனியவராய், எவரும் எளிதில் சந்திக்கக் கூடியவராய் விளங்கினார் என்று தன்னுடைய பகைவரைப் பற்றி பாராட்டுச் சொன்ன ஒரு பரங்கித் துரை அன்றைக்கு எவ்வளவு மதிப்பும் மரியாதையும் மருது சகோதரர்கள் மீது வைத்திருந்தார்கள் என்பதற்கு இதை விட வேறு எடுத்துக்காட்டுத் தேவையில்லை. இப்படி பகைவராலும் பாராட்டப்பட்ட, போற்றப்பட்ட, புகழப்பட்ட மாவீரர்களுக்குத்தான் மதுரையம்பதியில் இன்றைக்கு நாம் இந்த அழகான சிலைகளை வைத்திருக்கிறோம்.

இந்தச் சிலைகளை வைத்திருக்கின்ற நேரத்தில் சில கோரிக்கைகளை நம்முடைய நண்பர்கள் குறிப்பாக விழாத்



தலைமையேற்றிருக்கின்ற தம்பி பொன். முத்துராமலிங்கம் முன்மொழிந்து, அதை வழிமொழிந்து கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். இந்தச் சமுதாயத்திற்கு இன்றைக்கு மூன்றாகவோ நான்காவோ பிரித்துச் சொல்லப்படுகின்ற இந்தச் சமுதாயங்களை ஒரே சமுதாயமாக ஒரே இனமாக ஆக்க வேண்டும், அப்படி அழைத்து அதற்குத் தேவையான அனைத்தையும் செய்ய வேண்டும் என்பது இந்தத் கோரிக்கைகளின் தாத்பரியம்.

நான் நிறைய பேச வேண்டும், அதற்கு நேரம் இல்லை என்றாலுங் கூட ஒரு முக்கியமான கோரிக்கையை என் முன்னால் வைத்து விட்ட காரணத்தினால், அதைப்பற்றி நான் இங்கே விரிவாகச் சொல்ல வேண்டியிருக்கின்றது.

முத்துராமலிங்கம் அவர்கள் தேதி கேட்க வந்த போதே இந்தக் கோரிக்கையைப் பற்றிச் சொல்லியிருக்கலாம், தேதி உறுதியாக்கப்பட்ட பிறகாவது சொல்லியிருக்கலாம், நேற்றும் இன்றும் என்னைச் சந்தித்தார், சந்தித்த போதாவது சொல்லியிருக்கலாம். "மாலை 5 மணிக்கெல்லாம் வந்து விடுங்கள் அண்ணா" என்று நேரம் சொல்வதற்காக வந்தார், அப்போதாவது சொல்லியிருக்கலாம். அப்போதெல்லாம் சொல்லாமல், மேடையில் வைத்துக் கொண்டு சொல்வதற்கு காரணம், உங்களையும் என்னையும் இதிலே சிக்க வைக்க வேண்டும் என்ற அபாரமான ராஜ தந்திரத்தை அவர் பயன்படுத்திச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் நான் அவருக்குச் சொல்லுவேன், நினைவூட்டுவேன். இரண்டு நாட்களாக இந்தச் செய்தி பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கிறது. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் பத்திரிகையாளர்களிடத்திலே சொன்னதாக நான் செய்தி பார்த்தேன். பேசியதாகவும் செய்தி படித்தேன். தான் இந்த மூன்று சமுதாயங்களையும் ஒன்று சேர்த்து கள்ளர், மறவர், அகம்படியர் என்ற மூன்று சமுதாயங்களையும் ஒன்று சேர்த்து கள்ளர், மறவர், அகம்படியர் என்ற மூன்று சமுதாயங்களையும் ஒன்று சேர்த்து "தேவர் இனம்" என்று ஆணை பிறப்பித்ததாகவும், ஆனால் இந்தக் கருணாநிதி அதைக் கிடப்பிலே போட்டு விட்டான் என்றும் சொல்லியிருக்கிறார்.

இதைப்பற்றி காலையிலே கூட பத்திரிகையாளர்கள் என்னிடம் கேட்டார்கள். நான் அதற்குப் பதிலளித்திருக்கிறேன். அந்தப் பத்திரிகையாளர் கூட்டத்திற்கு பொன்.முத்துராமலிங்கம் வரவில்லை. ஏனென்றால் விழா வேலையிலே இருந்த காரணத்தினால். என்ன கேள்வி கேட்டார்கள் என்றால்,

"முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று பேசும்போது முக்குலத்தோர் மூன்று பிரிவாக இருந்ததை இணைத்து நான் ஆட்சியில் இருந்து போது உத்தரவு பிறப்பித்திருந்தேன். ஆனால் அதை தற்போது கிடப்பில் போட்டு விட்டதாகச் சொல்லியிருக்கிறாரே?"

என்பது கேள்வி.



இதற்கு நான் சொன்ன பதில், அதையும் படிக்கிறேன்,

"நல்ல வேளை, ரத்து செய்து விட்டதாகச் சொல்லவில்லை அல்லவா? கிடப்பில் போட்டு விட்டதாகத்தான் சொல்லியிருக்கிறார். அதில் இருந்து என்ன புரிகிறது? அந்த மூன்று சமூகத்தினரும் – தேவர் இனம் என்று சொல்லிக் கொள்வதற்கு அதிலே ஒரு சிலர் சில மாறுபாடான கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள் என்பதால் அதைப் பற்றி மேலும் சிந்திக்க, மேலும் ஆலோசனை செய்து முடிவெடுக்கத்தான் பொறுத்திருக்கிறோமே தவிர, அந்த முடிவை எடுப்பதற்கு எந்தவிதமான தயக்கமும் எனக்குக் கிடையாது" என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

எனவே ஒவ்வொரு சமுதாயத்தினரும், நாம் கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். ஏதாவது ஒரு இதிலே சேருகின்ற சமுதாயம், இப்படியாகி விடக் கூடாது, இரண்டு குழந்தைகள் தெருவில் நின்று கொண்டு "என் வீட்டிலிருந்து கொஞ்சம் உமி கொண்டு வருகிறேன், உன் வீட்டிலிருந்து கொஞ்சம் அவல் கொண்டு வா, இரண்டையும் ஒன்றாகப் போட்டு ஊதி ஊதிச் சாப்பிடலாம்" என்று சொன்னால் இதிலே உமி கொண்டு வருகின்ற குழந்தைக்குத்தான் இலாபம், அவல் கொண்டு வருபவருக்கு இலாபம் இல்லை. வருகின்ற இலாபம் சமமாக இருக்க வேண்டும், ஒருவருக்கு அதிகம், ஒருவருக்கு குறைவு என்ற நிலையில் அந்தக் கூட்டோ, மூன்று இனமும், மூன்று சமுதாயமும் ஒன்று சேருகின்ற நிலையோ கூடாது. சேர்ந்தால் எல்லோருக்கும் சமம்தான், அந்தச் சமத்துவ நிலை வந்தால்தான், அப்படிச் சேருவதிலே ஆதாயம் இருக்க முடியும். அந்த ஆதாயம் வராதென்று சில பேர் வாதிடுகிறார்கள். சில பேர் வரும் என்று சொல்கிறார்கள். நான் எதை நம்புவது என்று முடிவெடுப்பதற்கு முன்பு, மறுபடியும் அவர்களையெல்லாம் அழைத்து வைத்துப் பேசி இப்படிச் செய்தால், எல்லா சமுதாயமும் சமத்துவமாக நன்மைகளைப் பெற முடியுமா என்றால், பெற முடியும் என்றால் நான் இந்தச் சிலை திறப்பு விழாவிலே உங்களுக்கு உறுதி அளிக்கிறேன், நிச்சயமாக இந்த இனத்தை ஒரே இனமாக நான் அறிவிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

**அரசாணை பிறப்பித்தால் மட்டும் போதாது! நடைமுறைப்படுத்த வேண்டும்!**

ஆனால் ஜெயலலிதாவைப் போல அரசாணை பிறப்பித்தால் மாத்திரம் போதாது. ஆங்கிலத்தில் சொல்வார்கள், ஒரு ஆணை பிறப்பித்தால் அதை "Implement" செய்யவேண்டும், அதை நடைமுறைப்படுத்த வேண்டும். இவர்கள் ஆணை பிறப்பித்தது எந்தத் தேதியில்? அவர்கள் ஆட்சியிலே இருந்த போது ஆணை பிறப்பித்திருக்கலாம். ஆணை பிறப்பித்த பிறகு ஏதாவது அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை எடுத்தார்களா? நடைமுறைப்படுத்த ஏதாவது ஒரு கோடாவது கிழித்தார்களா? கிடையாது. நாங்கள் அந்த ஆணை சரியான ஆணைதான், எல்லோரும் ஒத்துக் கொள்கிறோம் என்று கள்ளர், மறவர், அகம்படியர் இந்த மூன்று சமுதாயத்தாரும் ஒத்துக் கொள்வார்களேயானால், நான் மறுநாளே தேவர் இனம் ஒரே இனம் என்று அறிவிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதை மருதுபாண்டியர் சிலை திறப்பு விழாவிலே உங்களுக்கு உறுதிபடக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட, எல்லோரும் ஒத்துக் கொள்ளக் கூடிய நான் சொன்ன இந்த மூன்று சமுதாயங்களும் ஒத்துக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும், அப்படி உருவானால் அது எனக்கும் சுலபம், ஆணை பிறப்பிக்க. ஆணை பிறப்பிக்கப்பட்டால் இந்தச் சமுதாயங்களுக்கும் இலாபம், பெருத்த ஆதாயம் நிச்சயமாகக் கிடைக்கும்.

**மருதுபாண்டியர்களின் புகழ்**

மருதுபாண்டியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சமூகத்திற்கு எப்படியெல்லாம் பணியாற்றினார்கள். எப்படியெல்லாம் தொண்டாற்றினார்கள், எந்த அளவிற்கு ஈவு இரக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பது அவர்களுடைய வரலாற்றைப் படிக்கின்ற அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். மருதுபாண்டியர்கள் இந்த மண்ணிலே உலவியர்கள், இந்த மண்ணின் மணம் மருது பாண்டியர்கள் சிந்திய ரத்தத்தால் ஒரே நாளில் திருப்பத்தூர் தூக்கு மேடையில் ஐநூறு பேர் சிந்திய ரத்தம் – ஐநூறு பேருடைய உயிரை வெள்ளைக்காரன் ஒரே நாளில் பறித்தானே, அப்படி தியாக பூமி இந்த மதுரை மாவட்டம் ஆனாலும், சிவகங்கை மாவட்டமானாலும் மருது பாண்டியர்களுடைய கடைசி மூச்சால் நிரம்பிய மாவட்டம்.

அப்படிப்பட்ட மாவட்டத்தில் வீரம் விளைவித்த அந்தத் தீரர்களுடைய பெயரால் ஒரு விழாவை நடத்தி அவர்களுடைய மிக அருமையான சிலைகளை, வீரம் கொப்பளிக்கின்ற சிலைகளை நிலைநாட்டிய தம்பி முத்துராமலிங்கம் அவர்களுக்கும், குழுவினருக்கும் இந்த விழாவிலே வந்து உரையாற்றிய நம்முடைய தமிழ்ச் சான்றோர்களுக்கும், ஆன்றோர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து இந்தச் சமுதாயத்திற்கு இன்று நேற்றல்ல, பல ஆண்டுக் காலமாகப் பணி புரிந்து வருகின்ற நான் தொடர்ந்து அந்தப் பணியை ஆற்றுவேன் என்ற சூளுரையை இந்த மேடையிலே தெரிவித்து வாழ்க மருது பாண்டியர்களின் புகழ் என்று கூறி விடைபெறுகிறேன்".

* * *



சென்னைக்கு வருகைபுரிந்த மேதகு குடியரசு தலைவர் திருமதி. **பிரதீபா பாட்டீல்** அவர்களை
மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா,**
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** மற்றும் மத்திய, மாநில அமைச்சர்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். (02.11.2007)




பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 119 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு,
சென்னை - கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின்
திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்ட புகைப்படத்திற்கு
மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள்,
மலர் தூவி மரியாதை செலுத்தினார். அருகில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உள்ளனர். (14.11.2007)





# தமிழக அரசின் புதிய தொழில் கொள்கை - 2007

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்

“உற்பத்தித் துறையில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும்; தமிழகத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைச் சர்வதேசச் சந்தையில் தரத்திலும் விலையிலும் போட்டியிடக்கூடிய அளவுக்கு மேம்படுத்தவும்; அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும்; மாநிலத்தின் பல்வேறு பகுதிகள் தொழில் துறையில் வளர்ச்சியடையவும்; மாநிலத்திலுள்ள தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளைக் கலந்தாலோசித்து ஒரு புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்படும்” – எனத் தமிழக அரசு ஏற்கெனவே அறிவித்திருந்தது.

அந்த அறிவிப்பின்படி, தமிழகத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறிவதற்குரிய வழிமுறைகளை நிர்ணயிப்பதற்காக தொழில் துறைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றும், அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட சிறப்புத் தொழில் முனைப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, அக்குழுக்களின் துணைகொண்டு தமிழகத்தில் உள்ள பல்வேறு தொழிற்கூட்டமைப்புகள் மற்றும் வர்த்தகசபை ஆகியவற்றுடன் விரிவான முறையில் கலந்தாய்வு செய்து அவற்றின் அடிப்படையில் புதிய வரைவுத் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டது.



இந்த வரைவுத் தொழில் கொள்கையை அமைச்சர்கள் அளவிலான குழு விரிவாக விவாதித்து வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், வடிவமைக்கப்பட்டுள்ள "புதிய தொழில் கொள்கை – 2007"–ஐ மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 5.11.2007 அன்று வெளியிட்டார். அதனை மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்

**புதிய தொழில் கொள்கை 2007 –இன் குறிக்கோள்கள் பின்வருமாறு :–**

- 2011 ஆம் ஆண்டிற்குள் 20 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்; மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் தயாரிப்புத் துறையின் தற்போதைய பங்களிப்பு 21 சதவீதம் என்பதை 27 சதவீதமாக உயர்த்துதல்;
- முதலீட்டாளர்களைக் கவரும் முதன்மை முதலீட்டு மையமாகத் தமிழகத்தை உருவாக்குதல்; உலகளாவிய பொருள் வழங்கீட்டுத் தொடர்களுடன், உள்நாட்டுத் தொழிற்பகுதிகளை ஒருங்கிணைக்க உதவுதல்;
- திறன்மிக்க தொழிலகக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்; மனித வளத்தையும் அறிவாற்றல் முதலீட்டையும் உலகத் தரத்திற்கு மேம்படுத்துதல்.

ஆகிய குறிக்கோள்களை அடைவதற்கேற்ற உத்திகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழி முறைகளை விளக்கமாக இப்புதிய தொழிற்கொள்கை எடுத்துரைக்கிறது.

இக்கொள்கைக்கேற்ற செயல்முறை உத்திகளின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- சென்னைக்கு அப்பாலும் தொழில் பூங்காக்கள் அமைவதற்கு ஊக்கமும், உதவிகளும் அளித்தல்; அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்காகத் தொழிலில் பின்தங்கிய வட்டாரங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்தல்;
- தொழில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் தனியார்துறை முதலீடுகளைக் கொண்டுவர பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் கூட்டுமுயற்சிகளை ஏற்படுத்துதல்; உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஊக்குதவிகள் அளித்தல்; சிப்காட் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் அல்லது தனியார் மேம்பாட்டாளர்கள் அமைக்கும் தொழில் பூங்காக்களைச் சமமாக நடத்துதல்;
- முதல் கட்டமாக, சென்னை–மணலி–எண்ணூர் மற்றும் செங்கல்பட்டு–திருப்பெரும்புதூர்–இராணிப்பேட்டை பகுதிகளை தொழிலகச் சிறப்புப் பகுதிகளாக உருவாக்குதல்; அடுத்த கட்டமாக, மதுரை தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் – சேலம் பகுதிகளை மேம்படுத்தப்படுதல்;
- வளர்ந்த நாடுகளில் உள்ள அறிவியல் பூங்காக்களைப் போன்று நுண்ணிய உயர்தொழில் நுட்பப் பூங்காக்கள் சிப்காட் நிறுவனத்தினால் உருவாக்கப்படுதல்;
- உயிரி அறிவியல் புதுமைத்திட்ட நிதி ஒன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படுதல்;
- பயிற்சி பெற்ற பணியாளர்களின் தேவை தொழில்களுக்கு அதிகரித்து வருவதை நிறைவு செய்யும் பொருட்டும், மக்களுக்கான வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டும் மனித ஆற்றல் மற்றும் தொழில் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல்;



- தொழிற்பயிற்சி தர மேம்பாட்டுத்திட்டம் ஒன்று தொடங்கப்படும். தொழிற்சாலைகள் – கல்வி நிறுவனங்கள் இடையேயான தொடர்புகளை மேம்படுத்துதல்;
- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிருவகிக்கும் ஒரு மூல நிதியின் மூலம் தமிழ்நாடு தொழில்நுட்ப மற்றும் எரிசக்தி பயன்பாட்டுத் திறன்களை உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்;
- மாநிலத்தில் ஏற்கெனவே அமையப் பெற்றுள்ள தொழிற் பிரிவுகளின் விரிவாக்கத் திட்டங்களுக்கு ஊக்கச்சலுகைகள் வழங்குவதற்காக அவற்றைப் புதிய தொழிற் பிரிவுகளுக்கு இணையாகக் கருதுதல்; தமிழ்நாட்டில் ஏற்கெனவே அமையப்பெற்று 10 ஆண்டு காலத்திற்கும் மேலாகச் செயற்பட்டு வரும் தொழிற் பிரிவுகள் அமைக்கின்ற விரிவாக்கத் திட்டங்களுக்குக் கூடுதல் சலுகைகள் அளித்தல்;
- நேரடி வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுவதற்கும், முதலீட்டின் அளவிற்கும் உட்பட்டு, முதலீட்டுக்குப் பிந்தைய மானியமாக அளிக்கப்படுகின்ற மூலதன மானியமும், மின்சார வரி விலக்கும் அளித்தல்;
- முதலீடு செய்யும் நிறுவனங்கள் சமுதாய மற்றும் சமூக வளர்ச்சி நடவடிக்கைகளில் பங்கு கொள்வதை ஊக்கப்படுத்துதல்; அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றி உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் முதலீட்டு நிறுவனங்களுக்குக் கூடுதல் ஊக்குதவிகள் அளித்தல்;
- வித்தியாசமான திறமைகள் கொண்டவர்களைப் பணிகளில் அமர்த்தும் தொழிற்சாலைகளுக்கு ஊக்கமளித்தல்;
- விவசாயிகளின் வருவாயைப் பெருக்க உதவும் வகையில் ஒரு புதிய உயிரி அறிவியல் கொள்கை, ஜவுளித் தொழிற்சாலைகளுக்கான ஒருங்கிணைந்த கொள்கை, மது தயாரிப்புக் கொள்கை ஆகியவை அறிவித்தல்;
- ஓரளவு செயல்திறம் உடையவர்களுக்கும், செயல்திறம் இல்லாதவர்களுக்கும் பெரிய அளவிலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான மதிப்புக் கூட்டு நடவடிக்கைகளுக்காக வேளாண் பொருளாதார மண்டலங்கள் மற்றும் வேளாண் உற்பத்திப் பொருட்கள் பதப்படுத்தும் அமைப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல்;
- உற்பத்தித் தொழில்களுக்குத் தொழில் கொள்கையின் கீழ் வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் வேளாண் தொழில்கள், வேளாண் இயந்திரங்கள், நுண்ணிய பாசனத்திற்கான வேளாண் சாதனங்கள் தயாரிப்புத் தொழில்களுக்கும் விரிவு படுத்துதல்;
- தொழிற்சாலை அமைப்புகளுடன் கூட்டு முயற்சி வாயிலாக பன்னாட்டுக் கண்காட்சி மற்றும் மாநாட்டு மையங்களை அமைத்தல்;
- அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகைகளைப் புதிய மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்கும் வழங்குதல்;
- சுய சான்றளிப்பு மற்றும் தொகுப்பு ஆண்டு விவர அறிக்கைகள் வாயிலாக விதிமுறைகளைத் தளர்த்தி எளிமைப்படுத்துதல்;
- மதிப்புக் கூட்டு வரி செலுத்துதல் மற்றும் விவர அறிக்கைகளை மின்னணு முறையில் தாக்கல் செய்யும் முறையை அறிமுகப் படுத்துதல்;
- மின்னணு வன்பொருள், ஜவுளி, தோல், மோட்டார் வாகனம் போன்ற தொழில்களில் ஏற்றுமதி மேம்பாட்டிற்குச் சிறப்புக் கவனம் செலுத்துதல்;
- ஆபத்து நிறைந்த Red வகைத் தொழிற் சாலைகள், ஓரளவு ஆபத்து உள்ள Orange வகைத் தொழிற்சாலைகள், ஆபத்து இல்லாத Green வகைத் தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்குத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் விரைவாகவும் குறித்த காலத்திலும், சுற்றுச் சூழல் தொடர்புடைய அனுமதிகள் வழங்குதல்.



# டெல்லி-மும்பை தொழில் முற்றம் போல சென்னை-பெங்களூரு தொழில் முற்றத்தை ஏற்படுத்துவீர் !

**மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம்**

**மா**ண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாடு தற்போது உற்பத்தித் துறையிலும், தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் சேவைத் துறைகளிலும் மிகப் பெருமளவு முதலீடுகளை ஈர்த்து வருகிறது. நோக்கியா, டெல், சாம்சங், மோடோரோலா, ஃபளெக்ஸ்ட்ரானிக்ஸ், ஹுண்டாய், ஃபோர்ட், மஹிந்த்ரா, ரெனால்ட், நிஸ்ஸான், செயின்ட் கோபய்ன்ஸ் போன்ற உலகளாவிய நிறுவனங்கள் மிகப்பெரிய அளவில் உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைக்க சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளன. பல சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் மாநிலத்தில் உருவாகி வருகின்றன. இந்த முதலீடுகளில் பல சென்னைக்கும் திருப்பெரும்புதூருக்கும் இடையிலுள்ள முற்றத்தில் ஏற்பட்டு வருகின்றன.

எனவே எங்களது அரசு சென்னை – திருப்பெரும்புதூர் – இராணிப்பேட்டை பகுதியை ஒரு சிறப்புத் திறன் தொழில் முற்றமாக வளர்த்தெடுக்க முடிவு செய்துள்ளது. இந்த முற்றம் வழியாக தொழிற்பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், ஒருங்கிணைந்த நகரியங்கள் போன்றவற்றை அமைப்பது எங்களது தொலைநோக்குப் பார்வையாகும். எங்களுடைய குறிக்கோள் உலகளாவிய போட்டித்திறன் கொண்ட கட்டமைப்பு வசதிகளை வழங்குவதும், இணைந்த, கணிசமாக தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதும் ஆகும்.

இந்த வளர்ச்சியின் போக்கு மெதுவாக இராணிப்பேட்டைக்கு அப்பால் பெங்களூரை நோக்கிச் செல்லும் தேசிய நெடுஞ்சாலைக்கு நகரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். இவ்வாறு, மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள டெல்லி – மும்பை தொழில் முற்றம்போல சென்னை – பெங்களூரு முற்றத்தை சிறப்புத்திறன் தொழில் முற்றமாக வளர்த்தெடுக்க மிகப்பெரும் வாய்ப்பு உள்ளது.

நாட்டிலுள்ள அனைத்துப் பகுதிகளும் சம அளவில் வளர்ச்சி என்ற கோட்பாட்டிற்கு, டெல்லி – மும்பை முற்றம் வளர்த்தெடுக்கப்படும்போதே சென்னை – பெங்களூரு முற்றத்தையும் வளர்த்தெடுக்க அவசர நடவடிக்கைகள் தேவை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

தொழில்களின் இருப்பு, திறமைவாய்ந்த மனிதசக்தி மற்றும் இதர அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் என்ற பல முக்கியமாக வலிமைகள் சென்னை மற்றும் பெங்களூருக்கு இடையிலான முற்றத்தில் ஏற்கெனவே இருக்கின்றன.

இத்தகைய முற்றம் சென்னை மற்றும் பெங்களூரு நகரங்களின் வலிமைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சென்னையிலும், பெங்களூரிலும் உள்ள பன்னாட்டு விமான நிலையங்கள் மற்றும் சென்னையிலுள்ள இரு பெரும் துறைமுகங்கள் ஆகியவை இந்த முற்றத்தின் வளர்ச்சிக்கு மேலும் பங்களிப்பைச் செலுத்தும்.

மேற்கூறிய காரணங்களால், டெல்லி – மும்பை தொழில் முற்றம் போல சென்னை – பெங்களூரு சிறப்புத் திறன் தொழில் முற்றத்தை வளர்த்தெடுக்கும் அறிவிப்பினைச் செய்யுமாறு நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பாக உங்களிடமிருந்து விரைவில் சாதகமான பதிலை நான் கோரலாமா? ★





# ஒன்றரை ஆண்டுக் காலத்தில் பல அரிய சாதனைகளை பலரும் அறியக்கூடிய சாதனைகளை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

சென்னை வள்ளுவர்கோட்டத்தில்
**21.10.2007** அன்று தமிழ்நாடு இளநிலை
ஆசிரியர் பேரவை நடத்திய
நன்றி அறிவிப்பு மாநில மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரை.

**மு**தன் முதலாக வள்ளுவர் கோட்டத்தில் நன்றி அறிவிப்பு என்ற ஒரு சொற்றொடரை – சுவை மிக்கச் சொற்றொடரை நான் தொடக்கத்தில் குறிப்பிட்டதைப் போல என் இதயம் மகிழ்கின்ற அளவுக்குப் பயன்படுத்தி ஒரு மாநாடு கூட்ட முன் வந்த உங்களுடைய பரந்த உள்ளத்தை, நன்றி கலந்த உள்ளத்தை, நான் பாராட்ட, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநாட்டிற்கான தேதியை தம்பி பொன்முடியிடத்திலே அளித்திருந்தேன் என்றாலும், இன்று (21.10.2007) பிற்பகல் இந்த மாநாட்டிற்கு வர முடியுமா என்று கேள்வி எழுகிற அளவிற்கு உடல் நலிவுற்று, இருந்தாலுங்கூட, சில வார ஏடுகளுக்கு வேலை தந்து விடக் கூடாது என்பதற்காக என் தலைவர் எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றுரைத்த அந்த மொழியை இதயத்திலே பதிய வைத்துக் கொண்டு உங்களைக் கண்டால் உடல்நிலை அல்ல, எல்லா நிலையும் சரியாகிவிடும் என்ற நம்பிக்கையோடு உங்கள் முன்னால் வந்து அமர்ந்திருக்கிறேன்.

இந்த வள்ளுவர்கோட்டம் நிரம்பி வழிகின்ற காட்சியை காணுகிறேன். **1330** குறள்களையும் அதற்குரிய பொருள்களின் உரையோடு ஒரே நேரத்தில் காண்பதைப் போன்ற காட்சி உங்களையெல்லாம் காணுகின்ற நேரத்தில் என் மனக்கண்களுக்குத் தெரிகிறது.



வள்ளுவர்கோட்டம் ஒரு வரலாற்றை உள்ளடக்கியது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த வள்ளுவர்கோட்டத்தை நம்முடைய ஆட்சி தொடங்கிய சிறிய காலத்திற்கெல்லாம் இந்த இடத்தில் வெயிலில், மழையில், புயலில் இப்படி பல்வேறு பருவ நிலை கோளாறுகளையெல்லாம் சமாளித்து தாங்கிக்கொண்டு இதே பணியாற்றிய பாட்டாளிகளிடத்தில், சிற்பிகளிடத்தில் அவர்களுடைய திறமையையெல்லாம் வெளிப்படுத்துகின்ற வகையிலே வேண்டுகோள் விடுத்து, இன்று தமிழகத்திற்கு வருகின்ற வெளியூர்க்காரர்கள், வெளிநாட்டுக்காரர்கள் பார்க்கின்ற சுற்றுலா இடங்களிலே ஒன்றாக இந்தக் கோட்டம் அமைந்திருப்பதை நாம் பெருமையோடு எண்ணி மகிழ்ச்சியடைகின்றோம். அத்தகைய வள்ளுவர் கோட்டத்தில் குழுமியிருக்கின்ற நீங்கள் நிறைந்த மகிழ்ச்சியோடு நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அமர்ந்திருக்கின்ற காட்சியை என்னால் காணமுடிகிறது.

**நன்றி தெரிவிக்கின்ற வாய்ப்பு**

உங்களுடைய அமைப்பின் பெயர் மாத்திரம் அல்ல இன்றைக்கு மாற்றப்பட்டிருப்பது – இளநிலை ஆசிரியர் பேரவை என்பது தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் என்று இன்று மாறியிருப்பது போலவே உங்களுக்கு தொகுப்பூதியம் என்ற பெயரிலே இருந்த சம்பளம், காலமுறை ஊதியம் என்றும் மாறியிருக்கின்ற உங்களுடைய அளவிலா வற்புறுத்தலின் காரணமாக, உங்களுடைய கோரிக்கையில் இருந்த அழுத்தத்தின் காரணமாக எல்லாவற்றையும்விட சிறப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், நியாயத்தின் காரணமாக காலமுறை ஊதியம் என்று மாற்றப்பட்டுள்ள சூழ்நிலையில் அதற்கான மகிழ்ச்சியையும், அந்த மகிழ்ச்சியினூடே கலந்து பொங்கி வருகின்ற நன்றியையும் நீங்கள் இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

“அப்பாடா நன்றி தெரிவித்தீர்களே” – அதற்கொரு நன்றி என்று நான் நன்றி தெரிவிக்கிற ஒரு வாய்ப்பை அளித்தமைக்காக ஒரு நன்றி.

நீங்கள் இங்கே உரையாற்றிய நிருவாகிகள், மாநாடு நடத்துவோர், தலைமை வகிப்போர், முன்னிலை ஏற்றிருப்போர், வரவேற்புரையாற்றியவர் என்று அத்தனை பேரும், தமிழக அரசின் கல்வித்துறையை சிலாகித்துப் பேசினீர்கள், பாராட்டினீர்கள். உயர்கல்வித்துறை அமைச்சரையும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரையும் வெகுவாகப் புகழ்ந்து பேசினீர்கள். நான் சாதாரணமாக இருவரை இந்த இரு துறைகளுக்கும் நியமிக்கவில்லை. முதலமைச்சருடைய பொறுப்பு–துறைகளுக்கான அமைச்சர்களை நியமிப்பது என்றாலுங்கூட, இதிலே ஒரு துறைக்கு தங்கத்தையும் ஒரு துறைக்கு பொன்னையும் நியமித்திருப்பதற்குக் காரணம், ஒரு பெரிய துறை, கல்வித்துறை, அந்தத் துறையில் உங்களோடு இருந்து அனுபவங்களைப் பெற்று, உங்களுடைய தேவைகள் எவைகளாக இருக்கும் என்பதை அறிந்துள்ளவர் களைத்தான் இந்த அரசின் கல்வித்துறைகளின் அமைச்சர்களாக நாம் பெற்றிருக்கிறோம்.

**பட்ஜெட்டைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்**

இல்லாவிட்டால் முதலமைச்சரிடத்திலே தேதி வாங்கிக் கொடுப்பதும், அவர்கள் உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு வலியுறுத்துவதும் அவர்கள் அந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு விழா எடுப்பவர்களும் அவர்களே, உங்களை ஊக்கப்படுத்துகின்ற நிலை இருக்கிறது என்றால் இப்படிப்பட்ட ஒரு உணர்வு–ஒருமித்த உணர்வு நம்முடைய அரசில் எல்லாத் துறைகளிலும் இருக்கின்ற அமைச்சர்களுக்கும் எனக்கும் இடையிலே இருக்கின்றது. அப்படியிருக்கின்ற காரணத்தினால்தான் இந்த ஒன்றரை ஆண்டுக்காலத்தில் பல அரிய சாதனைகளை பலரும் – அறியக்கூடிய சாதனைகளை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இன்னும் நிறைவேற்றுகின்ற வாய்ப்பையும் நீங்கள் அளிப்பீர்கள், நிறைவேற்றுவோம்.

இங்கே பெற்றுள்ள இந்த நன்மைகளையெல்லாம், பெற்றுள்ள இந்தச் சாதகங்களையெல்லாம் இன்றைக்கு பெற்றதாக இல்லாமல், கடந்த காலத்திலிருந்து கணக்கிட்டு



வழங்கவேண்டும் என்று நீங்கள் இங்கே சொல்லாமலேயே, நீங்கள் சொல்லியதாக பொன்முடி இங்கே சொன்னார். அது உண்மையோ, உண்மைக்கு மாறானதோ எனக்குத் தெரியாது. எதுவாக இருந்தாலும் அதை அறிவிப்பதற்கு உகந்த நேரம் அல்ல இது. பஞ்சாங்கத்தைப் பார்த்து அந்த நேரத்தை கணிக்கமாட்டேன். பட்ஜெட்டைப் பார்த்து அந்த நேரத்தை கணிப்பேன். நீங்களும் பட்ஜெட்டைப் பார்த்து தெரிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த கால அரசு எப்படி இருந்தது? இப்போது எப்படியிருக்கிறது இந்த அரசு? என்று வேறுபாடுகளை, முரண்பாடுகளை நம்முடைய அமைச்சர்கள் இருவரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். சொல்ல வேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டு மக்கள் அதை அனுபவரீதியாக இன்றைக்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். வரவேற்புரையாற்றிய திருமதி அகிலா அவர்கள் பேசும்போது வீட்டு உலையிலே கொதிக்கின்ற அரிசியின் விலை என்ன? என்று சொன்ன போது நீண்ட நேரம் கைதட்டினீர்கள். அரிசி கொதிக்கிறது, அதே நேரத்தில் எரிச்சல் உள்ளவர்களின் இதயமும் கொதிக்கிறது. அப்படி கொதிக்கிற காரணத்தால்தான் அவர்கள் எல்லாம் அரிசியை மலிவான விலைக்கு வாங்கினாலுங்கூட, அரிசி விலையைக் குறை என்று ஒரு போராட்டம் நடத்துவதற்கு தயாராக இருக்கிறார்கள்.

**அந்த உணர்வு வென்றே தீரும்**

இந்த அரசுக்கு ஏதாவது ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டும், சிக்கலை ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டம் வகுத்துக் கொண்டு காரியங்கள் நடைபெறுகின்றன. என்ன திட்டம் வகுத்தாலும், எத்தகைய தந்திரோபாயமான சூழ்ச்சிகள், மாய்மாலங்கள் நடத்தப்பட்டாலும், தெளிவு பெற்றவர்கள் ஒரு மாநிலத்தில், ஒரு நாட்டில் பெருகி வருவார்களேயானால், அந்தத் தெளிவு நிச்சயமாக நல்ல தீர்ப்பை நியாயப்பூர்வமாக யாருக்கு வழங்க வேண்டுமோ அவர்களுக்கு வழங்கும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் எங்களுக்கு நிரம்ப இருக்கின்றது. அதனால் நான் தொடர்ந்து பணியாற்றுவேன் என்று உங்களுக்குச் சொன்னால், நான் என்னுடைய பதவியை விடாமல் பற்றிக் கொண்டேயிருப்பேன் என்று அர்த்தமல்ல. நான் என்பது என்னை ஆளாக்கிய அண்ணா அவர்கள் உருவாக்கிய இயக்கம். அந்த இயக்கம் என்பது தமிழ்நாட்டு மக்களுடைய இரத்த நாளங்களில், நரம்பு மண்டலங்களில், குருதிச் சுழற்சியில் ஓடிக் கொண்டிருக்கின்ற துடிப்பு – அந்த உயிர்த் துடிப்பு அணையாமல் இருக்கின்ற வரையில், அடங்காமல் இருக்கின்ற வரையில் அந்த உணர்வை யாரும் கிள்ளி எறிந்து விட முடியாது, அந்த உணர்வு வென்றே தீரும், தொடர்ந்து வென்றே தீரும்.

நீங்கள் உங்களுக்காக ஒரு ஆட்சி வேண்டுமென்று விரும்பினீர்கள், கருதினீர்கள், எதிர்பார்த்தீர்கள், திட்டமிட்டீர்கள். அந்த ஆட்சியை இன்றைக்கு அமைத்து அழகு பார்க்கிறீர்கள். நானோ இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்களோ, அமைச்சர்களாக தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற ஆசையினால் அல்ல, இந்த நாட்டுத் தமிழர்கள் சாதாரண, சாமான்ய மக்களுடைய பிரதிநிதிகள், இந்த நாட்டிற்காக உழைக்கின்ற உள்ளம் படைத்தவர்கள், பாட்டாளிகளின் துயரத்தை அறிந்தவர்கள், உழவர்களுடைய உழைப்பின் மேன்மையைப் புரிந்தவர்கள் – அவர்களை வாழ வைக்க அவர்களுடைய குடும்பங்கள் குதூகலமாக இருக்க பொதுவாக தமிழகம் வளம்பெற, பெற்றிருக்கின்ற வளத்தை விட இன்னும் பலமடங்கு அதிக வளம் பெற திட்டங்கள் தீட்ட, அந்தத் திட்டங்கள் நிறைவேறுகிற நேரத்திலே தீயோர் இடையிலே புகுந்து அதைக் கெடுக்காமல் பார்த்துக் கொள்ள, தடுத்திட இவ்வளவு காரியங்களையும் நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற அல்லது ஆட்சியிலே அமர்ந்திருக்கின்ற எங்களால், சில பேரால் மாத்திரம் நிறைவேற்றி விட முடியுமென்று எண்ணாதீர்கள். நீங்கள் எல்லாம் எங்களுக்கு கை கொடுத்தால்தான் நீங்கள் எல்லாம் எங்களுக்கு பக்க பலமாக இருந்தால்தான், இன்னும் சொல்லப்போனால் நான் சொல்கிறேன் – நான் நீங்கள் என்று ஆசிரிய சமுதாயத்தை மாத்திரமல்ல, இந்த மண்டபத்திலே அமர்ந்திருக்கிற உங்களை மாத்திரமல்ல, எங்களோடு இருக்கின்ற – யார் யார் தங்களைத் தமிழர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் – யார் யார் இந்தத் தமிழ் நிலத்திற்குச் சொந்தக்காரர்களோ அவர்கள் எல்லாம் – யார் யார் தமிழ் நாற்றாக இருந்து, பயிராக வளர்ந்து இன்றைக்கு பக்குவப் பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் தங்களுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி–பகுத்தறிவு என்றாலே பகுத்து அறிவதுதான் – அறிவு என்பது வேறு – பகுத்தறிவு என்பது வேறு – அறிவு என்பது ஒரு உணர்வு – பகுத்தறிவு என்பது அந்த உணர்வைப் பகுத்துப் பார்த்து எது சரி, எது சரியல்ல என்ற முடிவுக்கு வருவதுதான், அதை உணர்த்துவதுதான் பகுத்தறிவு – அந்தப் பகுத்தறிவை நமக்குப் பால பாடமாகச் சொல்லிக் கொடுத்தவர்தான் நம்முடைய தந்தை பெரியார்.

அந்தப் பால பாடத்தை மறவாமல், நாம் எல்லாம் யார் என்ற கேள்விக்கு பதிலை நம்முடைய மனதிலே பதிய வைத்துக் கொண்டு ஜனநாயகத்தைக் காப்பாற்ற, ஜனநாயகத்திலே தான் நல்லரசுகளை உருவாக்க முடியும் என்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய அந்த பொன்மொழியை நிலைநாட்ட, இந்த அரசை நீங்கள் காப்பாற்ற வேண்டும், பாதுகாக்க வேண்டும் – மன்னிக்க வேண்டும், நான் உங்களிடத்தில் எங்களுக்காகப் பாதுகாப்பு கேட்கவில்லை, நமக்கும் பாதுகாப்பு நாம்தான் தரவேண்டும் என்பதை வலியுறுத்தி எடுத்துச் சொல்லி, உங்களுடைய கோரிக்கைகள், உங்களுடைய ஆசைகள் இன்னும் நிறைவேற வேண்டுமென்று கருதுகின்ற எண்ணங்கள் இவைகள் எல்லாம் உரிய நேரத்தில் நிச்சயமாக நிறைவேறும். இது ஆரூடமும் அல்ல, உங்களுக்கு நான் தெரிவிக்கின்ற அறிவுரையும் அல்ல, நீங்கள் இடுகின்ற கட்டளைகளை நிறைவேற்றுகின்ற இடத்தில் நாங்கள் இருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுகின்ற உண்மை என்று கூறி விடைபெறுகிறேன். ★

# 3ஆவது கட்டமாக வழங்கிட 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்திட அரசு முடிவு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவின் முன்னிலையில், 15.10.2007 அன்று 30 இலட்சம் 14 அங்குல வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிப் பெட்டிகள் திறக்கப்பெற்றன. முதல் நிலை ஆய்வுக்குப் பின் ஒப்பந்தப்புள்ளி அளித்த 22 நிறுவனங்களும் அடுத்தகட்டமான தொழில்நுட்ப மதிப்பீடு நிலைக்குத் தகுதி பெற்றதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் குழு முடிவு செய்தது.

தொழில்நுட்ப மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி முழுவதும் நிறைவு செய்த 17 நிறுவனங்கள் அடுத்தகட்டமான விலைப்புள்ளிகளைத் திறக்கும் கட்டத்திற்கு (Price Bid) தகுதிபெற்றன. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்யாத ஐந்து நிறுவனங்கள் நிராகரிக்கப்பட்டன.

18.10.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் சட்டமன்றப் பிரதிநிதிகள் குழு தலைமைச் செயலகத்தில் மீண்டும் கூடியது. அக்கூட்டத்தில் தகுதிபெற்ற 17 ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகள் மாண்புமிகு முதலமைச்சர், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகளின் குழு உறுப்பினர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்பட்டன. குறைந்தபட்ச விலைப்புள்ளியான ரூ.2,197 ஐ அளித்த திருவாளர்கள் வீடியோகான் நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி தொலைக்காட்சிப் பெட்டிக்கான இறுதி விலையை நிர்ணயம் செய்தபின் மற்ற ஒப்பந்தக்காரர்களிடம் இறுதி விலைப்புள்ளிக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்க ஒப்புதல் பெற்று எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு கொள்முதல் செய்யலாம் என்பது குறித்து அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யலாம் என்றும், இக்கூட்டம் 19.10.2007 அன்று நடத்தப்படலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 19.10.2007 அன்று இக்குழுவின் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் (தி.மு.க.), சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு.டி.சுதர்சனம் (காங்கிரஸ்), திரு.கோ.க.மணி (பா.ம.க), திரு.வை.சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), திரு.சி. கோவிந்தசாமி, (இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்), திரு.கு.செல்வம் (விடுதலைச் சிறுத்தைகள்) மற்றும் திரு.மு.ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வாண்டு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்காகப் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கடந்த ஆண்டை விட குறைவாக இருப்பதால், அரசுக்கு ரூ.162.90 கோடி சேமிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சேமிப்பையும் பயன்படுத்தி மொத்தம் 34,25,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது. ★



# தூத்துக்குடி மாவட்டம் - உடன்குடியில் 1,600 மெகாவாட் திறன்கொண்ட புதிய மின் உற்பத்தி நிலையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** - மாண்புமிகு மத்திய அமைச்சர் **சந்தோஷ் மோகன்தேவ்** முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

அதிகரித்து வரும் மின் தேவையை ஈடுகட்டுவதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியம், பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து ஒவ்வொன்றும் 800 மெகாவாட் திறனுடைய இரண்டு அலகுகள் கொண்ட 1,600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் புதிய மின் உற்பத்தி நிலையத்தைத் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி கிராமத்தில் நிறுவிடத் திட்டமிட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு மத்திய கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத்துறை அமைச்சர் திரு.சந்தோஷ் மோகன்தேவ் அவர்கள்,



மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா.வீராசாமி, அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் பாரத மிகுமின் நிறுவனத்திற்கும் இடையில் இப்புதிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 26.10.2007 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., பாரத மிகுமின் நிறுவனத்தின் தலைவர் திரு. அசோக் கே.பூரி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்தியாவில் 210 மெகாவாட் திறனுள்ள மின் உற்பத்தி இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டில் தூத்துக்குடியில்தான் முதன் முதலாகத் தமிழ்நாடு மின்சார வாரியம் மேம்பட்ட உற்பத்தித் திறனுடைய உயர் தொழில் நுட்பத்தை மின் உற்பத்தியில் கையாளத் தொடங்கியது. அதேபோன்று, தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம் உயர் நுண்திறன் தொழில்நுட்பம் (Super Critical Technology) கொண்ட 800 மெகாவாட் திறனுடைய மின் உற்பத்தித் திட்டத்தை முதன் முதலாக நிறுவ உள்ளது. இத்திட்டத்தில் உயர் நுண்திறன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்; இதனால் நிலத்தேவையும் குறையும்; காற்று மாசுபடுதலும் குறைந்து, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்; தூய்மை மேம்பாட்டு இயக்க அமைப்பின் (Clean Development Mechanism) கீழ் இத்திட்டத்திற்குக் கரிப் பொருள் சேமிப்பு (Carbon Credit) வசதியும் கிடைக்கும். அனைத்து வகையிலும் சிறப்பு வாய்ந்த இத்திட்டம் 2011ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.

இத்திட்டம் உடன்குடி கிராமத்தில் 938 ஏக்கர் பரப்புள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் அமையும். கடற்கரையை ஒட்டியே இத்திட்டம் அமையவுள்ளதால், இதன் அருகிலேயே நிலக்கரியைக் கையாளுவதற்குத் தேவையான துறைமுகம் (Jetty) ஒன்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான குளிர்நீர் கடலிலிருந்தும், பதனிடாத நீர் கடல் நீரை நன்னீராக்கும் நிலையத்தின் மூலமும் பெறப்படும்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஆர்.சத்பதி,இ.ஆ.ப., தொழில் துறைச் செயலாளர் திரு.ஏ.சக்திகாந்ததாஸ், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., மத்திய அரசின் கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் செயலாளர் திரு.ஆர்.சி.பாண்டா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் **மு.கருணாநிதி** அவர்களிடம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்ட இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சிக்கான பங்குத்தொகை ரூபாய் 1.71 கோடியினை மாண்புமிகு சுற்றுலா மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள், வழங்கினார். (12.11.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள். சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இருதய அறுவை சிகிச்சைக்கான நிதியையும், மாணவ - மாணவிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளையும் 14.11.07 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள். வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் உடனுள்ளார்.






# நதிகள் இணைப்பு எப்படி இந்தியாவின் ஒற்றுமைக்கு பலமானதோ, ஒற்றுமைக்குத் தேவையானதோ, அதைப்போல இந்த இருப்புப் பாதைகளின் இணைப்பும், இந்திய ஒற்றுமைக்குத் தேவையானது, அத்தியாவசியமானது

சேலம் மாநகரில்
1.11.2007 அன்று நடைபெற்ற
சேலம் ரயில்வே கோட்டத் தொடக்க விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்.
ரயில்வே கோட்டத்தைத் தொடங்கிவைத்து
ஆற்றிய விழாப் பேருரை

தொகுப்பு :
த. மனோகரன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

சேலத்தில் நடைபெறுகின்ற இந்த விழா—மன்னிக்க வேண்டும், விழா அல்ல மாநாடு, இந்த மாநாட்டில் நம்முடைய புகை வண்டித்தொடர் அகில இந்திய அமைச்சர் என்னுடைய அருமை நண்பர் லல்லுபிரசாத் அவர்களும் இணை அமைச்சர் அன்புக்குரிய நண்பர் வேலு அவர்களும் கலந்து கொண்டு இந்த விழா சிறப்பை, நம் விழிகளை அள்ளுகின்ற அளவிற்கு எம்மொழியில் இதனை சிறப்பிப்பது என்று திகைக்கின்ற அளவிற்கு அவ்வளவு விமரிசையாக வியக்கத்தக்க வண்ணம் இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சேலத்தில் இதுபோன்றதொரு பெரிய திட்டம் வரவேண்டும் என்பதற்காக இன்று நேற்றல்ல அறுபதாண்டு காலமாக நாம் முறையீடு வைத்திருக்கிறோம். இதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் இந்தியாவின் பிரதமராக சில காலம் திரு.தேவகவுடா அவர்கள் இருந்த பொழுது சேலத்திற்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருந்தார். அந்த நேரத்தில் அவரிடத்தில் இந்தத்

திட்டத்தைப் பற்றி நினைவூட்டச் சொல்லி தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் மற்றும் இந்த வட்டாரத்திலே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் என்னை அரித்தெடுத்தார்கள். நான், "இப்பொழுது தேவையில்லை, பிறகு சொல்கிறேன்" என்று குறிப்பிட்டும் அவர்கள் கேட்டபாடில்லை. ஏனென்றால் நான் சொன்னால் எப்படி காவேரிப் பிரச்சினைக்கு "ஆம், ஆம்" என்று தேவகவுடா அவர்கள் தலையசைத்து விட்டு, பிறகு அதை இல்லை என்ற முடிவை அறிவித்தாரோ அதைப்போலத்தான் இதுவும்




ஆகும் என்பதால் பிறகு கேட்டுக்கொள்ளலாம் என்று சொன்னேன். அவர்கள் விட்டபாடில்லை. நான் கேட்டேன். அவர் மேடையிலேயே, "கருணாநிதி இப்படி ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். அந்த சேலம் திட்டம் நிறைவேற்றப்படும்" என்று உறுதி அளித்தார். சில உறுதிகள் காற்றிலே பறந்து போகும். அதைப்போல அந்த உறுதியும் காற்றிலே பறந்து போயிற்று. அது பறந்து போன காரணத்தினால்தான் அதற்குப் பிறகு நாம் எடுத்த அதிதீவிர முயற்சிகள், நம்மவர்களே பொறுப்பிலே அமரக்கூடிய நிலை; அந்த நிலையினால் ஏற்பட்ட வெற்றியாக இன்றைக்கு சேலத்தை தனி ரயில்வே கோட்டமாக உருவாக்குகின்ற ஒரு உன்னதமான நிலை வாய்த்திருக்கின்றது. இந்த நிலை வாய்த்திட நம்மோடு துணை நின்ற தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் நம்முடைய அணியிலே இருந்து பாடுபட்ட அத்தனை பேருக்கும், நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்த அத்தனை பேருக்கும், சட்டமன்றத்திலே குரல் கொடுத்த அத்தனை பேருக்கும், இன்றளவும் அதற்காக மேலும் மேலும் பல வளர்ச்சித் திட்டங்களை இதோடு இணைக்க வேண்டும் என்று விரும்புகின்ற மருத்துவர் அய்யா போன்றவர்களுக்கும் நான் உங்கள் அத்தனை பேருடைய சார்பாக, சேலம் மாவட்ட மக்கள் சார்பாக, தமிழக மக்களின் சார்பாக, நன்றியினை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

## அண்ணா அவர்களின் கருத்து

நம்முடைய ஆட்சி தமிழகத்திலே அமைந்த பிறகு என்று மாத்திரம் சொல்ல மாட்டேன். நாற்பது இடங்களில் நாடாளுமன்றத்தில் நம்முடைய அணியைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்று அங்கே அமைச்சர் பொறுப்புகள் பல வற்றை ஏற்கின்ற நிலை ஏற்பட்டபிறகு–இந்த சேலம் திட்டம் உட்பட நமக்கு மத்திய அரசு மூலமாக கிடைத்திருக்கின்ற நன்மைகளையெல்லாம் ஒரு கணம் எண்ணிப்பார்க்க வேண்டும்.






மத்திய அரசும் மாநில அரசும் ஒன்றோடொன்று முரண்படாமல் இணைந்து செல்லுமேயானால் பல நன்மைகளைப் பெற முடியும். 1967ஆம் ஆண்டு தி.மு.கழகம் தமிழகத்தில் ஆட்சி அமைத்த நேரத்தில் பேறறிஞர் அண்ணா அவர்கள், "தம்பிக்கு" எழுதிய மடலில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "நாம் நியாயமான காரணங்களுக்காக மத்தியிலே உள்ளவர்களிடத்தில் குரல் கொடுக்கலாம் ; ஏன் பாராட்டக்கூடச் செய்யலாம். ஆனால் மோதிக்கொள்கின்ற நிலைக் கூடாது. மாநில அரசும்–மத்திய அரசும் மோதிக்கொள்ளாமல் இருந்தால் மக்களுக்கு பல காரியங்களைச் செய்ய முடியும்" என்று அண்ணா அவர்கள் அந்த ஏட்டிலே தீட்டியிருந்தார்கள். அதுபோல நாம் இன்று நடத்துவது புகைவண்டித் தொடர் விழா. அதனால் உதாரணம் அப்படியே சொல்கிறேன். இரண்டு தண்டவாளங்கள் இணைந்து ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் இருக்கின்ற காரணத்தினால் தான் ரயில் ஒழுங்காகப் போக முடிகிறது. அதைப்போல மாநில அரசும், மத்திய அரசும் இரண்டு தண்டவாளங்களாக இருக்குமேயானால் இப்படிப்பட்ட அரிய வெற்றிகளையெல்லாம் நாம் பெற முடியும். இந்திய நாட்டு மக்களுடைய பயணம் சுலபமாக அமையும், அவர்கள் விரும்பியதைப் போல அமையும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் இருக்க முடியும் என்று நான் கருதவில்லை.

## பல வெற்றிகளைப் பெறமுடியும்

அதைப்போலவே தமிழ்நாட்டிலே நாம் காட்டுகின்ற ஒற்றுமை; ஒரு புகைவண்டித் தொடரிலே இருக்கின்ற வண்டிகளைப்போல, பெட்டிகளைப்போல நாம் இன்றைக்கு இருக்கின்றோம். இந்தப் பெட்டிகளிலே ஒரு பெட்டி தவறினாலும் ஒரு பெட்டி தண்டவாளத்திலே இருந்து இறங்கினாலும் அந்த ஒரு பெட்டியோடு மாத்திரமல்ல, மற்ற பெட்டிகளையும் அது இழுத்துக் கொண்டு தண்டவாளத்தை விட்டு இறங்க நேரிடும். அதற்கு இடங்கொடுக்காமல் நாம் இந்த ரயில் பெட்டிகளை இழுத்துச் செல்லுவோம். இந்த ரயில் பெட்டிகளை இணைத்த இந்த ரயிலை நாம் நடத்திக் கொண்டிருப்போம். இந்த புகைவண்டித்தொடர் தன்னுடைய பயணத்தை நடத்தட்டும். இது என்றைக்கு கவிழும், என்றைக்கு இது கீழே விழும், எந்தப் பாலத்திலே விழும், எந்த வெள்ளத்திலே சிக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற பலபேர் நாட்டிலே இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் இடம் தராமல் அவர்களுடைய முகத்திலே கரியைப் பூசி நம்முடைய பயணம் தொடருமேயானால், இதைப் போன்ற இன்னும் பல வெற்றிகளை இந்தத் தமிழகம் பெற முடியும். நம்மால் பெற்றுத் தரமுடியும் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் அளிக்கிறேன்.

## இருப்புப் பாதைகளின் இணைப்பு

நம்முடைய மருத்துவர் அய்யா அவர்கள் சொன்னார்கள்; அங்கும் இங்கும் இணைப்புகள் வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு நம்முடைய லல்லு அவர்கள் பதிலளித்தார்கள். லல்லுவும் நம்முடைய வேலு அவர்களும் தமிழகத்திலே ஆற்றிவருகின்ற இந்த புகை வண்டித்தொடர் பணி இருக்கின்றதே, அதை நான் இன்றைக்கு ஏதோ இந்த விழாவிற்காகச் சொல்லவில்லை, அவரைத் தனியாக பார்க்கின்ற நேரத்திலும் சொல்லியிருக்கின்றேன். டாக்டரிடத்திலும் சொல்லியிருக்கின்றேன். தம்பி



அன்புமணியிடத்திலும் சொல்லியிருக்கின்றேன், அப்படி புகழக்கூடிய அளவிற்கு நம்முடைய வேலு அவர்கள் இந்த ரயில்வே துறை பணியை அவ்வளவு செம்மையாக சீராக கவனித்து வருகின்றார். அப்படிப்பட்ட பணி மேலும் சிறக்கும். நாம் இங்கே வைத்த கோரிக்கைகளெல்லாம், இன்றில்லாவிட்டால் நாளை – நாளை தவறினால் மறுநாள் நிறைவேறும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் லல்லு அவர்கள் இங்கே சொன்னார்கள் – என்னென்ன பெரிய பெரிய நகரத்தையெல்லாம், மாநகரத்தையெல்லாம் இணைக்கிறேன் பார் என்று இங்கே சொன்னார்கள். அந்த இணைப்பைத்தான் நம்முடைய டாக்டர் அவர்கள் இங்கே முதலிலே தொட்டுக்காட்டினார்கள். நான் எண்ணுகின்றேன். நதிகளுடைய இணைப்பு இந்தியாவிலே விரைவிலே ஏற்படுகிறதோ இல்லையோ லல்லு அவர்களுடைய திறமையினால், இந்த இருப்புப் பாதைகளின் இணைப்பு விரைவிலே நிறைவேறி "இந்தியா ஒன்று"– என்ற இந்தியாவின் ஒற்றுமையை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையை நிச்சயமாக உருவாக்குவோம் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

## தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி

நதிகள் இணைப்பு எப்படி இந்தியாவின் ஒற்றுமைக்கு பலமானதோ, ஒற்றுமைக்குத் தேவையானதோ அதைப்போல இந்த இருப்புப்பாதைகளின் இணைப்பும் இந்திய ஒற்றுமைக்குத் தேவையானது, அத்தியாவசியமானது, இன்றியமையாதது. எனவே நதிகளை இணைக்க கொஞ்சம் நாளாகலாம். அதற்கு முதலிலே இருப்புப் பாதைகளை இணையுங்கள், அதற்கு இன்னும் ஒரு திடமான உறுதி வேண்டும். அந்த உறுதியை – லல்லு பிரசாத் அவர்களைப் பொறுத்தவரையில் வேறெங்கும் சென்று தேடி வாங்க வேண்டியதில்லை. அவரே உறுதியின் உருவம் என்ற காரணத்தால் அதை நிச்சயமாக நடத்திக் காட்டுவார் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் நன்றிக்கு உரியவர்கள். தமிழ் நாட்டு மக்கள் எப்படி நன்றிக்கு உரியவர்கள் என்றால், இங்கே நம்முடைய டாக்டர் அய்யா அவர்கள் சொன்னதைப் போல் நன்றி செலுத்த வேண்டியது எனக்கல்ல, அல்லது மேடையிலே அமர்ந்திருக்கின்ற தோழமைக்கட்சிகளுடைய தலைவர்களுக்கல்ல, ரயில்வே அமைச்சருக்கல்ல, துணை அமைச்சருக்கல்ல – இணையமைச்சருக்கல்ல, எங்களையெல்லாம் அந்த இடத்திலே உட்கார வைத்து வேலை வாங்குகின்றீர்களே அந்த தமிழ்நாட்டு மக்களாகிய உங்களுக்குத்தான் நாங்கள் நன்றி செலுத்த வேண்டும். அந்த நன்றியை அடிக்கடி செலுத்தி – தமிழகம் வளம் பெற, தமிழகம் வாழ்வு பெற, தமிழகம் நலம் பெற வழிகாட்டுங்கள் என்று இந்த நல்ல நேரத்தில் உங்கள் அத்தனை பேரையும் வேண்டிக்கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன்''.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்,
புதிதாகக் கட்டப்படவுள்ள சட்டமன்றப் பேரவைக்கான
மாதிரி கட்டட வடிவமைப்புகளை தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார்.(29.10.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் தமிழக அரசிற்கும், பாரத மிகுமின் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்வின்போது மாண்புமிகு மத்திய கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. சந்தோஷ் மோகன் தேவ், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி மற்றும் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர். (26.10.2007)



மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சார்பாக,
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
ஆளுநர் மாளிகைக்கு நேரில் சென்று, பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்.
உடன் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி அவர்கள் உள்ளார். (21.10.2007)



சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தமிழ்நாடு இளநிலை ஆசிரியர் பேரவை சார்பில் நடைபெற்ற
தொகுப்பூதிய முறையை அடியோடு ரத்து செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு
நன்றி தெரிவிக்கும் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பங்கேற்று விழாப் பேருரையாற்றினார்கள். (21.10.2007)





மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
தலைமைச்செயலகத்தில், போக்குவரத்துறை ஆணையர் திரு.சி.பி.சிங், இ.ஆ.ப., அவர்கள் உள்ளிட்ட
போக்குவரத்துறை இணை மற்றும் துணை ஆணையர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.
உடன் மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் உள்ளார்.(17.10.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
சென்னை மாதவரம் காவல் நிலையத்தைத் திறந்துவைத்தார்.(24.10.2007)



சென்னையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் நான்காம் கட்ட தொடக்க விழாவில், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கி, வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெறும் இளைஞர்களுக்கு குறுகிய கால வேலைக்கான திறன் எய்தும் பயிற்சி திட்டத்தினை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.(26 .10.2007)



சென்னையில் தாட்கோ சார்பில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி அவர்கள் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கனிமொழி அவர்கள் இந்திய குடிமைப்பணி முதன்மைத் தேர்வு எழுதும் இளைஞர்களுக்கு நிதி உதவிகள் மற்றும் விமானப் பணிப்பெண் பயிற்சிப் பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.(19.10.2007)



# புதிய தொழிற்சாலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்குவதை உறுதி செய்கிறோம்




"சாம்சங் இந்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி நிலையத்தை இங்கு தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்தின் வளர்ச்சியினுடைய பல்வேறு கட்டங்களை உங்களது கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு (2006) நவம்பர் மாதம்10ஆம் தேதியன்று சாம்சங் நிறுவனம் தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த இடத்தில் கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டு (2007) பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதியன்று துவங்கியது. இன்றைக்கு இந்தத் தொழிற்சாலை தொடங்கப்படுகிறது. இவையனைத்தும் ஓராண்டு காலத்திற்குள் நடந்து விட்டது.

**தொழிற்சாலைகள் விரைவில் உற்பத்தியை தொடங்குவதை உறுதி செய்கிறது கழக அரசு!**

நாங்கள் பிரச்சினைகளைத் தொடர்ந்து கவனித்து புதிய தொழிற்சாலைகள் விரைவில் உற்பத்தியைத் தொடங்குவதை உறுதி செய்கிறோம் என்பதைக் காட்டுவதற்காகத்தான் இதை நான் குறிப்பாக குறிப்பிடுகிறேன். அரசின் ஒற்றைச் சாளர முறையின் மூலமாக பல்வேறு அமைப்புகள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. இது தொழில் நிறுவனங்களுக்கு விரைவான ஒப்புதல்கள் கிடைக்க உதவுகிறது. நீங்கள் இதைக் குறித்துக் கொண்டு இந்தச் செய்தியை இந்தியாவில் முதலீடு செய்ய ஆலோசித்து வரும் கொரியாவில் உள்ள இதர தொழில் நிறுவனங்கள் அனைத்திற்கும் பரப்ப வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்கு இங்கு ஏற்பட்டுள்ள முதல் நேரடி அனுபவம், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அவர்கள் தங்களது மனத்தை தயார்படுத்திக் கொள்ளத் தேவையான உத்தரவாதத்தையும், நம்பிக்கையையும் அளிக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

**இயற்கையான கூட்டாளி நாடுகள் இந்தியாவும் கொரியாவும்!**

முற்கால தமிழ் அரசாட்சிகளுக்கும் தூரக்கிழக்கு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளன. கொரியாவின் புத்த மதப் பாரம்பரியத்தின் வேர்களை இந்தியாவில் காணலாம். இப்படி இந்தியாவும், கொரியாவும் இயற்கையான கூட்டாளி நாடுகளாக கலாச்சார ஒற்றுமையை பெருமளவு பகிர்ந்து கொள்கின்றன. 'தந்தை', 'தாய்' ஆகியவற்றிற்கு கொரிய மொழியிலும், தமிழ் மொழியிலும் ஒரே மாதிரியான வார்த்தைகள் உள்ளன என்று அறிகிறேன்.

கொரியா விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு பிரகாசமான உதாரணமாகத் திகழ்கிறது. கடந்த 40

ஆண்டுகளாக 75 சதவீதத்துக்கு மேல் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைக் கண்டுள்ளதால் கொரியா 'ஹான் நிதி மீதான அற்புதம்' என்று சரியாகவே அழைக்கப் படுகிறது.

போஸ்கோ, யுண்டாய், சாம்சங், எல்.ஜி. போன்ற பிரமாண்டமான தொழில் நிறுவனங்களை அது படைத்துள்ளது. சொல்லப்போனால், இன்று இந்தியாவில் இந்த நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் பெயர்கள் வீடுகளில் புழக்கத்திற்கு வந்துவிட்டன.

சாம்சங் நிறுவனம் 57 நாடுகளில் தொழிற்சாலை களுடனும், உலக அளவில் 57 மில்லியன் (5700 கோடி) டாலர் விற்பனையுடனும் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனமாக வளர்ந்துள்ளது என்று அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். திரும்பெரும்புதூர், 'சிப்காட்'டிலுள்ள தொழிற்சாலையில் இந்த நிறுவனம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எல்சிடி தொலைக்காட்சிப் பெட்டிகளையும் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது என்று அறிகிறேன். இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு 10 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், மூன்று இலட்சம் எல்.சி.டி தொலைக்காட்சிப் பெட்டிகளையும் உற்பத்தி செய்யும் திறன் பெற்றதாக இருக்கும். இந்த ஆண்டு இறுதிவாக்கில் முற்றிலும் தானியங்கி துவைக்கும் இயந்திரங்கள் உற்பத்தியைத் தொடங்கவும் திட்டமிட்டு வருகிறது. அதன் பிறகு விரைவில் இந்தத் தொழிற்சாலையில் குளிர்பதனப் பெட்டி (ரெப்ரிஜிரேட்டர்), குளிர்சாதனம் (ஏர்கண்டிஷனர்) போன்ற இதர வீட்டு உபயோகப் பொருட்களின் உற்பத்தியைத் துவங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் சாம்சங் நிறுவனம்!**

இதுவரையில் சென்னைத் தொழிற்சாலை சாம்சங் நிறுவனம் சுமார் 120 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. 2011 ஆம் ஆண்டு வரையில் 400 கோடி ரூபாய் வரை முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது.

இந்த தொழிற்சாலையின் உற்பத்தியில் ஒரு பகுதி இதர நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டாலும் இந்தியச் சந்தைக்கு உற்பத்தி செய்வதுதான் அதன் பிரதான நோக்கமாக இருக்கும் என்று அறிகிறேன். திருப்பெரும்புதூரில் உள்ள சிப்காட் உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சாம்சங் நிறுவனத்திற்கு நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியிலிருந்து ஏற்றுமதியை பெருமளவு அதிகரிக்கும் என்பதால் இந்த சிறப்பு பொருளாதார மண்டலத்திலும் தொழிற்சாலை அமைப்பதை வேகப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில், நாங்கள் சமீபத்தில் புதிய தொழிற்கொள்கை 2007–ஐ வெளியிட்டுள்ளோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் கொள்கையினால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 350 கோடி ரூபாய்க்கு மேலும், இதர அனைத்து மாவட்டங்களில் 250 கோடி ரூபாய்க்கு மேலும் முதலீடு செய்யும் தொழில் நிறுவனங்கள் கட்டமைக்கப்பட்ட உதவித் திட்டத்திற்கு தகுதி பெறும். மின்னணுவியல் வன்பொருள் தொழிற்சாலைகளில் முதலீடு செய்யப்படுவதை மேம்படுத்தும் வகையில், இந்த உச்ச வரம்பு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் தகுதி வாய்ந்த நிலையான சொத்துக்களில் முதலீடு 250 கோடியாகவும், இதர மாவட்டங்களில் 150 கோடியாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மனிதவளம் மற்றும் திறமை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் கழக அரசின் தொழிற் கொள்கை**

இத்தகைய உயர் தொழில் நுட்பத் தொழில்களுக்கு திறமையான தொழிலாளர்கள் கிடைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், இந்தக் கொள்கை மனிதவளம் மற்றும் திறமை வளர்ச்சிக்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கிறது தொழில் பயிற்சி நிறுவனங்களில் (ஐ.டி.ஐ) கட்டமைப்பை மேம்படுத்தவும் இந்த கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் தொழிற்சாலைகளில் உடனடி வேலை வாய்ப்பு பெறும் வகையில் பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தை சரிப்படுத்தி சரியான பாடங்களை வழங்கவும் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு முன் முயற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

*இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலகம் முழுவதும் உள்ள மக்களின் வாழ்க்கைகளில் உணரப்படும் என்றும், இந்தத் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள மக்கள் நல்ல முன்னேற்றத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் காண்பார்கள் என்றும் நம்புகிறேன்.*





தொடர்புகளைப் பொறுத்த மட்டில், திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதிகளுக்கு ரயில் இணைப்பை வழங்கும் படி மத்திய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சாலைகள் மேம்பாடு குறித்தும் பேசி வருகிறோம்.

தொழில் நிறுவனங்களுக்கு அவற்றின் உற்பத்தி தொழிற்சாலைகளைச் சுற்றியுள்ள சமுதாயத்திற்கும், சமூகத்திற்கும் ஆற்ற வேண்டிய பொறுப்புகள் உள்ளன என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன். தற்சமயம் இந்த நிறுவனம் 285 ஊழியர்களை நியமனம் செய்துள்ளது. திட்டம் 2011–ஆம் ஆண்டு முழுமையாக முடிவடையும் போது, 2500 பேர் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று நம்புகிறேன். இவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் தமிழ்நாட்டை குறிப்பாக காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள். இத்தகைய முதலீட்டு நிறுவனங்கள் உள்ளூர் வாசிகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுத்தாலும், இடஒதுக்கீடு பற்றிய அரசின் கொள்கையைக் கடைபிடித்தாலும் மேலும் கூடுதலாக ஊக்க சலுகைகள் வழங்கப்படும் என்று எங்களது கொள்கையில் நாங்கள் அருகிலுள்ள சமுதாயம் பயன்பெறும் வகையில் சுகாதாரம், கல்வி வசதிகளை மேம்படுத்துவதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

**கொரிய நிறுவனங்களின் திறமைக்குச் சான்றாகத் திகழுகிறது –சாம்சங்!**

தமிழ்நாட்டில் இங்கு முதலீடு செய்ய முடிவு எடுத்ததற்காக மீண்டும் சாம்சங் நிறுவனத்தைப் பாராட்டுகிறேன். இந்தத் தொழிற்சாலையை இவ்வளவு விரைவில் அமைத்தததற்காகவும் பாராட்டுகிறேன். இத்தகைய வெற்றிகரமான கொரிய நிறுவனங்களின் திறமைக்கு இது சாட்சியாகத் திகழ்கிறது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலகம் முழுவதும் உள்ள மக்களின் வாழ்க்கைகளில் உணரப்படும் என்றும், இந்தத் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள மக்கள் நல்ல முன்னேற்றத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் காண்பார்கள் என்றும் நம்புகிறேன்".

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
திருப்பெரும்புதூர் – சிப்காட் வளாகத்தில்
சாம்சங் தொழிற்சாலையை 13.11.2007 அன்று
தொடங்கி வைத்து ஆற்றிய உரை

* * *

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 23.10.2007 அன்று தலைமைச் செயலகத்தில் வருவாய்த் துறை மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, தலைமைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் ஆகியவற்றின் மேலாண்மை இயக்குநர்கள் ஆகியோருடன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளின் தற்போதைய நிலைமையைப் பற்றியும், அவற்றில் பாதுகாப்பாகத் தங்கியிருப்பதற்கேற்ற வழிமுறைகளைப் பற்றியும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கண்காணிப்பில் வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்று வாரிய அலுவலர்கள், கட்டடப்பணியில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து இரண்டு வாரியங்களின் கட்டுப்பாட்டிலும் உள்ள வீடுகள் அனைத்தையும் நுணுக்கமாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் ஒருமாத காலத்திற்குள் ஆய்வு செய்து அவற்றில் குடியிருப்பதற்குத் தகுதியற்ற – பாதுகாப்பில்லாத வீடுகளைக் கண்டறிந்து அவற்றை இடித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுவதென்று முடிவு செய்யப்பட்டது.

### புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை

பாதுகாப்பற்ற வீடுகளில் குடியிருப்பவர்களை வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்லுமாறு அறிவுறுத்துவதென்றும், அவர்கள் அங்கிருந்து குடிபெயர்ந்து செல்லவும், செல்லும் இடங்களில் வாடகை செலுத்தவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசு சார்பில் எட்டாயிரம் ரூபாய் கருணைத் தொகையாக வழங்குவதென்றும், குடிபெயர்ந்து செல்லும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியே புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பாதுகாப்பற்ற உறுதியற்ற கட்டடங்களை இடித்துவிட்டு அந்தந்த இடங்களிலேயே புதிய அடுக்கு மாடிக் குடியிருப்புகளைத் தரமான முறையில் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி ஓராண்டு காலத்திற்குள் கட்டிமுடிப்பதென்றும் குடிபெயர்ந்தவர்களை மீண்டும் அந்தந்த இடங்களிலேயே தவணை முறையில் புதிய வீடுகளை ஒதுக்கீடு செய்து குடியமர்த்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.



**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தரமற்ற வீடுகளுக்குப் பதிலாக, புதிய வீடுகளைக் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆணை!**





## திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளுக்கு வழங்கப்படும் அரசு மானியத் தொகை 75 இலட்சம் ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாயாக உயர்வு!

தமிழ்நாடு இந்துசமய அறநிலையத் துறையின் உயர்நிலைக்குழுக் கூட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 17.10.2007 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசுவாமி அடிகளார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ஏ.எஸ்.பொன்னம்மாள், தொழிலதிபர் திரு.கருமுத்துக்கண்ணன், தொழிலதிபர் திரு.எஸ்.வி.பாலசுப்பிரமணியம் மற்றும் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய ஆதீனங்களின் பிரதிநிதிகளும், திருவரங்கம் ஆண்டவன் சுவாமிகளின் பிரதிநிதி ஆகியோரும், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான காலியாக உள்ள நிலங்களையும், மனைகளையும் திருக்கோயில்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டும் வகையில் பயன்படுத்துவது குறித்தும், கோயில் நிலங்கள் மற்றும் மனைகள் தொடர்பான வழக்குகளை விரைவுபடுத்துவது குறித்தும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றில் குடியிருப்போர்களுக்கான நியாய வாடகை மற்றும் மூன்று ஆண்டுகளுக்கொருமுறை பொதுவாகச் செய்யப்படும் வாடகை உயர்வு ஆகியவற்றைச் சீரமைப்பது பற்றியும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான வயது முதிர்ந்த மற்றும் உடல் நலம் குன்றிய யானைகளை வனத்துறையிடம் ஒப்படைத்து அரசின் செலவிலேயே பராமரிப்பது பற்றியும், திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளுக்கு வழங்கப்படும் அரசு மானியத் தொகையை 75 இலட்சம் ரூபாயிலிருந்து மூன்று கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கவும் கூட்டத்தில் விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

## தமிழ்நாடு சமூகச் சீர்திருத்தக் குழு அமைப்பு

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை–23.10.2007**



"சமூகச் சீர்திருத்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆலோசனைகளை அரசுக்கு வழங்க உருவாக்கப்பட்ட தமிழ்நாடு சமூகச் சீர்திருத்தக் குழுவில் பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் தலைவராகவும்; உறுப்பினர்களாக தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், அருள்தந்தை வின்செண்ட் சின்னதுரை, வண்ணை தேவகி, திருப்பூர் அல்தாப், திருவாரூர் திருவிடம், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், எஸ்.வெங்கடேசன், பாசறை செல்வராஜ், ஜி.இராமகிருஷ்ணன், பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன், கலி.பூங்குன்றன், சட்டமன்ற உறுப்பினர் டி.ரவிக்குமார், புதுக்கோட்டை விஜயா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்

# 2007-2008ஆம் ஆண்டின் ரூ.1959.63 கோடி கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை



தமிழக சட்டப்பேரவையில் 2007–2008ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவை முன் வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள் 18.10.2007 அன்று பேசியதாவது :

"2007–2008ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1,959.63 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் ரூபாய் 1,253.99 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையை ரூபாய் 705.64 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2007–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 23ஆம் நாளன்று 2007–2008ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று 'புதுப்பணிகள்' குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2007–2008 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ் நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்படும் உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடுசெய்யப்படும்.



**புதிய மின் உற்பத்தித் திட்டங்கள்**

ஏழைக் குடும்பங்களுக்கு 2007–2008ஆம் ஆண்டில் கூடுதலாக மூன்று இலட்சம் இலவச எரிவாயு இணைப்புகளுடன் கூடிய இலவச எரி வாயு அடுப்புகள் வழங்குவதற்கான அரசு ரூபாய் 60 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை மானியக் கோரிக்கை எண்.13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூபாய் 140 கோடி பங்கு மூலதன உதவி வழங்குவதற்கு அரசு கருதியுள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 14–எரி சக்தித் துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் மகப்பேறு உதவிக்கான கூடுதல் நிதியொதுக்கமாக ரூபாய் 80 கோடி வழங்க அரசு அனுமதித்துள்ளது. மானியக் கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 80 கோடி சேர்க்கப் பட்டுள்ளது.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்தப்படுவதற்காக 2007–2008ஆம் ஆண்டுக்கு அரசு ரூபாய் 109 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை' என்பதன் கீழ் ரூபாய் 109 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

**மீண்டும் நமக்கு நாமே திட்டம்**

நமக்கு நாமே திட்டத்தை 2007–2008 ஆம் ஆண்டில் மீண்டும் நடைமுறைப் படுத்துவதற்காக அரசு ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளது. மானியக் கோரிக்கை எண்.42– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்பதன் கீழ் ரூபாய் 50 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப் பட்டுள்ளது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் திருமண நிதி உதவிக்கான கூடுதல் ஒதுக்கீடாக மானியக் கோரிக்கை எண்.45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூபாய் 40 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் ஆகியோருக்கு மீதமிருந்த 60 சதவீத ஊதியக்குழுவின் நிலுவைத் தொகைக்கு, பொது வருங்கால வைப்புநிதி கணக்குகளுக்கு வழங்கப்படுவது போல வட்டித் தொகை அளிப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது. அதற்கான 'கடன் செலவுகள்' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 358 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.''

228655

# அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மேற்கொண்ட ஒளித்தோற்ற கலந்தாய்வு




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கையின் போது பேரூராட்சிகளின் வளர்ச்சியினை ஊக்குவிக்க புதியதொரு திட்டமாக அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை அறிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 3.9.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் மாமல்லபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்ற சீரிய திட்டமாகும். இத்திட்டத்தினால் பேரூராட்சிகள் புதுப்பொலிவுப் பெற்று அனைத்து வகையிலும் மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் செயலாக்கத்தினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர்



அவர்கள் தலைமைச் செயலகத்தில் 27.10.2007 அன்று தேசிய தகவலியல் மையத்தின் ஒளித்தோற்ற அரங்கத்திலிருந்து கோவை, ஈரோடு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

தேசிய தகவலியல் மையத்தில் உள்ள ஒளித்தோற்ற கலந்தாய்வு வசதியினைப் பயன்படுத்தி மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணிகளின் முன்னேற்றத்தினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூர்ந்தாய்வு செய்து அறிவுரைகள் வழங்கியது அமைச்சக அளவில் இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.நீரஜ் மித்தல்,இ.ஆ.ப., ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. த.உதயச்சந்திரன், இ.ஆ.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஷன் சோங்காம் ஜடக் சிரு, இ.ஆ.ப., மற்றும் மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள், மாவட்ட அலுவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் ஆகியோர்களுடன் இத்திட்டத்தினை செயல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். தஞ்சை மாவட்டத்தின் சார்பில் திட்ட அலுவலர் இராஜாமணி மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் பங்கேற்றனர்.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளுக்கு பேரூராட்சிகளின் இயக்குநர் நிருவாக அனுமதி அளித்துள்ள நிலையில் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்ட விவரம், பணிகள் தொடங்கப்பட்ட விவரம் மற்றும் பிறதுறை திட்டப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள், பேரூராட்சிகளில் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பேரூராட்சிகளை தூய்மை மற்றும் பசுமைபடுத்தும் வகையிலும், குப்பை கூளங்கள் இல்லாத பேரூராட்சிகளாக மாற்ற நடத்தப்பட்ட முகாம்கள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும் முன்னோடி சிறப்புத் திட்டங்கள் பற்றியும் விரிவாக ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கப்பட்டது.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 2007–2008ஆம் ஆண்டு 140 பேரூராட்சிகளில் ரூ.70 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைந்து ரூ.85 கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் ஈரோடு மாவட்டத்திலுள்ள 14 பேரூராட்சிகளில் 236 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.7.21 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைந்து மொத்தம் ரூ.15.85 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 13 பேரூராட்சிகளில் 112 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.6.27 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.9.46 கோடி மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 6 பேரூராட்சிகளில் 46 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.3.09 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.13.92 கோடி மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 14 பேரூராட்சிகளில் 95 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.6.65 கோடி மதிப்பீட்டிலும், பிறதுறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து மொத்தம் ரூ.12.95 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்டச் செயலாக்கத்தில் சிமெண்ட் பயன்படுத்துவதில் உள்ள களப் பிரச்சினைகளை மற்றும் குளங்கள் பராமரிப்புத் தொடர்பான பணிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். இதுபோன்ற ஒளித்தோற்ற கலந்தாய்வுக் கூட்டங்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களிடமும் மாதம் இருமுறை தாம் நடத்த திட்டமிட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த கலந்தாய்வின் போது, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு.க.தீனபந்து, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., இணை இயக்குனர் திரு.எம்.மதிவாணன் மற்றும் இயக்கக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்திற்கு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை

தொகுப்பு :
**கி. கண்ணதாசன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாமக்கல் மாவட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தேர்தல் வாக்குறுதியிலும் அதனைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கையிலும் உறுதியளித்தபடி, படிப்பு முடித்து, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் சிரமத்தை போக்கிடும் வகையில், அவர்களில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 150 ரூபாயும், பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 200 ரூபாயும், இளங்கலைப் பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் 300 ரூபாயும், உதவித்தொகை வழங்கும் புதிய திட்டம் தலைவர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி, முதற் கட்டமாக 11.11.2006 அன்று திருச்சியிலும், இரண்டாம் கட்டமாக 24.2.2007 அன்று கோவையிலும், மூன்றாம் கட்டமாக 29.7.2007 அன்று சென்னையிலும் தலைவர் கலைஞர் அவர்களால்



தொடங்கி வைக்கப்பட்டு, இதுவரை மொத்தம் 3 இலட்சத்து 38 ஆயிரம் இளைஞர்களுக்கு மொத்தம் ரூபாய் 55 கோடியே 51 இலட்சத்து 87 ஆயிரத்து 700 மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதே தினங்களில் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இன்றைய தினம் நான்காவது கட்டமாக, 3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மொத்தம் ரூபாய் 22 கோடியே 47 இலட்சத்து 82 ஆயிரத்து 860 மதிப்பிலான உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள்.

அதன் தொடர்ச்சியாக, தமிழகம் முழுவதும் இதுபோன்ற விழாக்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு வேலைவாய்ப்பற்ற இளைஞர் களுக்கு உதவித்தொகைகளை வழங்குகிறார்கள். நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் முதற்கட்டமாக 11.11.2006 அன்று நாமக்கல்லில் 6,527 நபர்களுக்கும், இரண்டாம் கட்டமாக 28.2.2007 அன்று காளப்பநாய்க்கன்பட்டியில் 8,223 நபர்களுக்கும், மூன்றாம் கட்டமாக 29.7.2007 அன்று ராசிபுரத்தில் 9,444 நபர்களுக்கும் ஆகமொத்தம் இதுவரை 24 ஆயிரத்து 194 படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ரூபாய் 1 கோடியே 49 இலட்சத்து 66 ஆயிரத்து 250 மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் நான்காவது கட்டமாக மொத்தம் 10 ஆயிரத்து 958 படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மொத்தம் ரூபாய் 63 இலட்சத்து 70 ஆயிரத்து 800 மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

அதில் இன்றைய தினம் நடைபெறும் இவ்விழாவில் நான்காவது கட்டமாக படித்து வேலைவாய்ப்பற்ற 1,081 இளைஞர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 24 ஆயிரத்து 300 மதிப்பில் உதவித்தொகையாக இங்கே வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தொழில் துறையும், அதனைச் சார்ந்த பல்வேறு துறைகளும், வேகமான வளர்ச்சியைப் பெற்று வருகின்றன. இதனால் கூடுதல் வேலைவாய்ப்பிற்கான சூழ்நிலை உருவாகி உள்ளது. தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அரசு வழங்கும் நிதியுதவி திட்டத்தின் கீழ், பயன் பெறுவது மட்டுமின்றி வேலைவாய்ப்பும் பெறுவதற்கேற்றவாறு அவர்களது திறமைகளை மேம்படுத்தும் வகையில், பயிற்சிகள் அளிக்கப்படும். இந்தப் பயிற்சிகள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாக மொத்தம் 50 ஆயிரம் இளைஞர்களுக்கு இந்த நிதியாண்டில் அளிக்கப்படும். இதற்காக அரசு 8 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பின் அடிப்படையில் கடந்த 6.7.2007 அன்று ரூபாய் 8 கோடி ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டது. மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 11 தொழில்நுட்ப குறுகிய கால பாடத் திட்டத்தின்படி வேலைவாய்ப்பற்ற அரசின் உதவித்தொகை பெறுகின்ற மற்றும் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள 50 ஆயிரம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க பாடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் சேருவதற்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி 10ஆம் வகுப்பு தேர்ச்சியாகும். பயிற்சி பெறுபவர்கள் 40 வயதிற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடியினத்தை பொறுத்தவரை 45 வயதிற்குட்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இந்தப் பயிற்சிகள் 56 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 1 அடிப்படை பயிற்சி மையத்திலும் ஆக 57 மையங்களில் நடத்தப்படும். பயிற்சி நிறைவில் மாநில வாழ்வியல் பயிற்சிக் குழுமத்தின் மூலம் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிக்குத் தேர்வு பெறுகின்ற இளைஞர்கள் விருப்பத்திற்கேற்ப தொழிற்பயிற்சி நிலையத்திலுள்ள கட்டமைப்பு வசதிக்கேற்ப தொழில்நுட்பப் பாடத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

இன்றைய தினம் இந்த விழாவில் மாநில அளவில் செயல்படுத்தப்படவுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான குறுகிய கால பணித்திறன் எய்தும் பயிற்சித் திட்டமானது துவக்கி வைக்கப் பட்டுள்ளது. இவ்விழாவில் 20 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிக்கான ஆணை வழங்கப்பட்டு, இத்திட்டம் துவக்கி வைக்கப்படுகிறது. இன்றைய தினம் இந்த விழாவில், மொத்தம் 8 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கட்டடப் பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில், ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலக கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது தவிர, கொல்லிமலையில், ரூபாய் 25 இலட்சம் மதிப்பில் பொன்விழா கிராம சுய






வேலைவாய்ப்புத் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பல்நோக்குப் பயிற்சி மையக் கட்டடமும் மற்றும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் ரூபாய் 48 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும், பொதுப்பணித் துறையின் மூலம் நபார்டு நிதி உதவியுடன் திருச்செங்கோடு வட்டத்தில் தண்ணீர்ப் பந்தல் பாளையம் ஊராட்சி, நாமக்கல் வட்டம், செல்லப்பம்பட்டி, கொந்தளம், சிந்தளாந்தூர், குப்பண்டம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கான வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், கழிப்பறை கட்டடங்கள், குடிநீர் வசதி பணிகள் என மொத்தம் 64 வகுப்பறை கட்டடங்கள், 3 அறிவியல் ஆய்வகங்கள், 17 கழிப்பறை கட்டடங்கள், 5 குடிநீர் வசதிக்கான அமைப்புகள் ஆகியவை மொத்தம் ரூபாய் 2 கோடியே 74 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டவை இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், ராசிபுரம் வட்டம், ஆர். புதுப்பட்டி, நாமக்கல் மற்றும் பரமத்தியில் கால்நடை மருந்தகங்களுக்கான சிகிச்சை அரங்கம், அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் மருத்துவமனைக் கட்டடம் ஆகியவற்றிற்கான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன. நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடப்பணி நிறைவுற்று இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இன்றைய தினம் இந்த விழாவிலே நெடுஞ்சாலைத்துறையின் மூலம் முத்துக்காப்பட்டி, கொல்லிமலை அடிவாரம் வரையிலான சாலையில் புதியதாக கட்டப்படவுள்ள ரூபாய் 1 கோடியே 36 இலட்சம் மதிப்பிலான பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இது தவிர, பொதுப்பணித்துறையின் மூலம் திருச்செங்கோட்டில் ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டடம், மாணிக்கம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 55 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள 30 படுக்கைகள் கொண்ட கட்டடம் மற்றும் அறுவை சிகிச்சை அரங்கப் பணி, நாமக்கல் அரசு மருத்துவமனையில் சுமார் ரூபாய் 2 கோடியே 25 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள கட்டடப் பணி, சேந்தமங்கலம் அரசு மருத்துவமனையில் சுமார் ரூபாய் 55 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள புதிய கட்டடப் பணிகள், பழைய கட்டடங்களைப் பழுதுபார்க்கும் பணிகள், ராசிபுரம் அரசு மருத்துவமனையில் ரூபாய் 1 கோடியே 8 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப் படவுள்ள பழைய கட்டடங்களை பழுது பார்க்கும் பணி மற்றும் புதிய கட்டடப் பணிகள், ராசிபுரம், வெண்ணந்தூர் அரசு மருத்துவமனையில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள பழுது நீக்கம் மற்றும் விரிவாக்கப் பணிகள், திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள 200 படுக்கை வசதியுடைய பேறு கால பிரிவு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடப் பணிகள் மற்றும் பழுது நீக்கப்பணிகள், குமாரபாளையம் அரசு மருத்துவமனையில், சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய கட்டுமாணப் பணிகள் மற்றும் பழுது நீக்கப் பணிகள், பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் சுமார் 72 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம், சமையல் கூடப் பணி, பழுது நீக்கம் மற்றும் விரிவாக்கப் பணிகள், மேலும் பள்ளிப்பாளையம் அரசு மருத்துவமனையில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள பழுது நீக்கம் மற்றும் விரிவாக்கப் பணிகள் என மொத்தம்



ரூபாய் 9 கோடியே 60 இலட்சம் மதிப்பிலான 11 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த விழாவில் பல்வேறு அரசு துறைகளின் மூலம் 14 ஆயிரத்து 625 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 6 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

வருவாய்த்துறை மூலம் 2,950 பயனாளிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டி, 1,800 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, 1,052 பயனாளிகளுக்கு முதியோர் உதவி மற்றும் நலிந்தோர் உதவித் தொகை வழங்கப்படுகின்றன. இவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் ஒரு கோடியே 53 இலட்சமாகும்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் 750 பேருக்கு பொருளாதார நடவடிக்கைகளுக்காக, மானியம் மற்றும் வங்கிக் கடனாக ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் வழங்கப்படுகிறது. மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 25 சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 375 உறுப்பினர்களுக்கு சுழல் நிதி மானியம் மற்றும் வங்கிக் கடனாக ரூபாய் 1 கோடி வழங்கப் படுகிறது.

மாவட்ட வேலைவாய்ப்புத் துறையின் மூலம் 1,081 வேலை இல்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகையாக ரூபாய் 6 இலட்சத்து 30 ஆயிரம் வழங்கப்படுகிறது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 20 பயனாளிகளுக்கு சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 500 கர்ப்பிணி தாய்மார்களுக்கு உதவித் தொகை ரூபாய் 30 இலட்சம் வழங்கப்படுகிறது. கல்வி உதவித் தொகையான 1,899 மாணவ, மாணவியர்களுக்கு சுமார் 34 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. வங்கிகள் மூலம் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் 100 பேருக்கு சுமார் 2 கோடி ரூபாய் கடன் உதவியாக வழங்கப்படுகிறது. விவசாயத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக 3,125 மாணவ மாணவியர்களுக்கு 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் சிறுபான்மையினர் நல பொருளாதார மேம்பாட்டுக் கடனாக 255 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 15 இலட்சம் கடனுதவியாக அளிக்கப்படுகிறது. இவை தவிர தொழிலாளர் நலத்துறை மூலம் 141 நல வாரிய உறுப்பினர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், தாட்கோ மூலம் 225 சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 200 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல், ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலம் உபகரணங்கள் வழங்குதல், வனத்துறை மூலம் கறவை மாடுகள் வழங்குதல் என மொத்தம் இந்த விழாவிலேயே 14 ஆயிரத்து 825 பயனாளிகளுக்கு சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் சுமார் ரூபாய் 2,536 கோடி செலவில், ஒரு மாபெரும் திட்டமான அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை 5 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 2,540 கிராம ஊராட்சிகளில் 508 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டிலும் 2,534 கிராம ஊராட்சிகளில் 507 கோடி ரூபாய் செலவில் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 331 கிராம ஊராட்சிகளில் கடந்த நிதியாண்டில் 66 கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்காக ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூபாய் 20 இலட்சம் வீதம் 66 கிராம ஊராட்சிகளுக்கும் மொத்தம் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஊரக வளர்ச்சித் துறையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்ியது போன்று பேரூராட்சிகளில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு சிறப்புதிட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3.9.2007 அன்று மாமல்லபுரத்தில் துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள 561 பேரூராட்சிகளிலும் சுமார் ரூபாய் 280 கோடி செலவில் இத்திட்டத்தை 4 ஆண்டுகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி, சாலை மற்றும் பாலங்கள் அமைத்தல் தொகையாக நிலுவையில் உள்ள மொத்தம் ரூ.760 கோடி தள்ளுபடி செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ராசிபுரம் நகராட்சியில்

நிலுவையாக இருந்த ரூபாய் 7 கோடியே 17 இலட்சம் அசல் தொகையும் மற்றும் ரூபாய் 8 கோடியே 42 இலட்சம் வட்டித் தொகையும் சேர்த்து ரூபாய் 15 கோடியே 59 இலட்சம் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. தெரு விளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், சுய உதவிக் குழுக்களுக்கு பணிக்கூடம் அமைத்தல், அங்காடி வளாகம், சுகாதார வளாகம் அமைத்தல் மற்றும் உட்கட்டமைப்புப் பணிகள் போன்றவை எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

நாமக்கல் மாவட்டத்தில் மொத்தமுள்ள 19 பேரூராட்சிகளிலும் இந்த ஆண்டு ஆர். புதுப்பட்டி, பட்டணம், காளப்பநாய்க்கன்பட்டி, சீராப்பள்ளி ஆகிய 4 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இதற்கான ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தலா ரூபாய் 50 இலட்சம் வீதம் 3 பேரூராட்சி களுக்கும் மொத்தம் 2 கோடி மதிப்பில் பணிகள் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் நாமக்கல் மாவட்டத்திற்கு பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசுகள் பங்காக மொத்தம் ரூபாய் 2 கோடியே 78 இலட்சத்து 37 ஆயிரத்தை ஒதுக்கீடு செய்து அதில் முதல் தவணையாக ரூபாய் 1 கோடியே 39 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் விடுவித்துள்ளது.

மேலும் இம்மாவட்டத்திலுள்ள மொத்தமுள்ள சுய உதவிக் குழுக்களில் இதுவரை 3,039 சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதியும், 1,087 சுய உதவிக் குழுக்க ளுக்கு பொருளாதாரக் கடனும் வழங்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக் குழுக்களில் செயல்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் இந்த அரசு குழு உறுப்பினர்களுக்கான பயிற்சித் தொகை ரூபாய் 45 ஆக உயர்த்தி உள்ளது.

சுழல் நிதி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான மானியத்தினை அதிக எண்ணிக்கையிலான குழுக்களுக்கு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. சிறந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் நாமக்கல் மாவட்டத்திலுள்ள ரங்கப்பநாய்க்கன்பாளையம் மகளிர் சுய உதவிக் குழு அதனுடைய சிறந்த செயல்பாட்டின் அடிப்படையில் மாநில அளவிலான விருதினைப் பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கு கடந்த 25.9.2007 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் 50 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இதைத் தவிர மாவட்ட அளவில் ஒரு கூட்டமைப்புக்கும் 3 சுயஉதவிக் குழுக்களுக்கும் பரிசுத் தொகை வழங்கிடவும் அரசு உத்தரவிட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களில் சிறந்த செயல்பாட்டினை ஊக்குவித்திட அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு குழு உறுப்பினர்கள் சிறப்பாகச் செயல்பட்டு தங்கள் குடும்ப நிலையினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.



அதன் பின்னர், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த கள விளம்பரக் கண்காட்சியை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

*நாமக்கலில் 26.10.2007 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் நான்காம் கட்டத் துவக்க விழா, வேலைவாய்ப்பற்ற உதவித் தொகை பெறும் இளைஞர்களுக்கு குறுகிய கால வேலைக்கான திறன் எய்தும் பயிற்சித் திட்டம் துவக்க விழா, தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு உதவித்தொகை வழங்கும் விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.*



# சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம். சொல்லாததையும் செய்து கொண்டிருப்பது தான் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு



தொகுப்பு:
**கி. கண்ணதாசன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர்

**மா**ண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசுகையில், இன்று பொள்ளாச்சி நகரத்தில் ஒரு சிறப்பான விழா நடைபெற்று கொண்டிருக்கிறது. 78 கோடியே 23 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழா, அதேபோல் ரூபாய் 34 கோடியே 87 இலட்சத்து 49 ஆயிரம் மதிப்பீட்டிலே திறப்பு விழா நிகழ்ச்சி, நலத்திட்ட உதவிகளை பொறுத்தவரையிலே 5 கோடியே 99 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே நலத்திட்ட உதவிகள் ஆக இந்த மூன்று விழாக்களுக்கு மொத்தமாக மதிப்பீடு கணக்கு பார்த்தால் 120 கோடியே 80 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே அடிக்கல் நாட்டு வழா, திறப்பு விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. இப்படி மூன்று விழாக்களை இணைத்து ஒரு முப்பெரும் விழாவாக மிகுந்த எழுச்சியோடு நாம் எல்லாம் பெருமைப்படத் தக்க வகையில் இந்த விழா நடைபெற்று கொண்டிருக்கிறது. அடிக்கல் நாட்டு விழாவினை பொறுத்தவரையிலே நான் குறிப்பிட்டு சொல்ல வேண்டும் என்று சொன்னால் இந்த பொள்ளாச்சி நகரத்தில் ஒரு கூடுதல் பேருந்து நிலையம் உருவாக்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்து அந்த வகையிலே இந்த நிகழ்ச்சி நடைபெற்று கொண்டிருக்க கூடிய இந்த பேருந்து நிலையத்திற்கு எதிர்புறம் இருக்க கூடிய காவல்துறை மற்றும் வருவாய் துறைக்கு சொந்தமாக இருக்க கூடிய 1.8 ஏக்கர் நிலத்தில் இந்த புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. அதற்காக 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகளும் தயாரிக்கப்பட்டு, அந்த பணிகள் தொடங்கப்பட்டு அதைத் தொடர்ந்து இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த பேருந்து நிலையத்தை பொறுத்தவரையில் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்படுகிறது என்று சொன்னால் இந்த பணி வேகவேகமாக நடைபெற்று வருகிற 30.9.2008க்குள் இந்த பணியை முழுமையாக முடித்து அதை மக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. ஆக அதற்கு இன்றைக்கு இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்படுகிறது. அதேபோல் குடிநீர் விரிவாக்க திட்டம் பொள்ளாச்சி நகரத்தை ஒட்டியிருக்க கூடிய விரிவாக்க

பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக அதாவது வருகிற 2035ஆம் ஆண்டு நாம் எதிர்பார்க்க கூடிய மக்கள் தொகையை அடிப்படையாக கணக்கெடுத்து அந்த வகையிலே இந்த நான்காவது குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த திட்டத்திற்கு 9 கோடியே 30 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் அந்த திட்டத்திற்காக மதிப்பீடு உருவாக்கப்பட்டு, அந்த பணி தொடங்க அதற்குரிய அடிக்கல் நாட்டு விழா. இந்த திட்டம் முடிவடைகிற நேரத்தில் பொள்ளாச்சி நகரத்தில் இருக்க கூடிய நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கக் கூடிய அந்த வாய்ப்பை நாம் பெற்றிட முடியும். ஆக இந்த திட்டமும் வரக்கூடிய 30.9.2008க்குள் முடிக்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்து இன்றைக்கு அதனுடைய அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றிருக்கிறது. அதேபோல் கூடுதல் பள்ளி கட்டிடம் கோட்டூர் சாலையிலே 10.30 ஏக்கர் பரப்பிலே நகராட்சிக்கு சொந்தமாக இருக்க சுடிய கூடுதல் கட்டிடங்களை அமைத்திட நம்முடைய அரசு முடிவு செய்து 3 கோடியே 62 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்படவிருக்கும் மேல்நிலைப் பள்ளிகளுக்குரிய அடிக்கல் நாட்டு விழா இன்றைக்கு நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த பணியும் வருகிற 30.8.2008க்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டு அந்த பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அதேபோல் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஆக அதனுடைய அடிக்கல் நாட்டு விழாவும் இன்றைக்கு அந்த விழாவிலே நடைபெற்று கொண்டிருக்கிறது. ரூ.62 கோடியே 9 இலட்சத்து 97 ஆயிரம் மதிப்பீட்டிலே 6 துணை மின் நிலையங்களுக்கு இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்படுகிறது. அதைத் தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலையம் 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட மதுக்கரை ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக அடிக்கல் நாட்டு பணியும் இந்த விழாவிலே நடந்திருக்கிறது. அதேபோல் அங்கன்வாடி கட்டிடம் நம்முடைய ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் சம்பூர்ணா கிராம ரோஜ்கார் யோஜனா என்கிற திட்டத்தின் கீழ் செஞ்சுவாடி பகுதியிலே ரூ.2 இலட்சம் மதிப்பீட்டிலே அமைக்கப்படவிருக்க கூடிய அங்கன்வாடி கட்டிடத்திற்கு இந்த விழாவிலேஅடிக்கல் நாட்டப்படுகிறது. ஆக மொத்தம் 78 கோடியே 23 இலட்சத்து 86 ஆயிரம் மதிப்பீட்டிலே 49 பணிகளுக்கு இந்த விழாவின் மூலமாக அடிக்கல் நாட்டப்படுகிறது.

அதேபோல் திறப்பு விழா நான் விவரித்து கூற விரும்பவில்லை. காரணம் நேரமில்லை. எனவே சிலவற்றை நான் தலைப்புச் செய்திகளாக உங்களிடத்திலே கோடிட்டு காட்ட விரும்புகிறேன். அன்னூர் ஒன்றியத்தில் 25 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், அவிநாசி ஒன்றியத்தில் 31 இலட்சத்து ஓராயிரம் ரூபாய் மதிப்பீட்டில், திருப்பூர் ஒன்றியத்தில் 31 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், பல்லடம் ஒன்றியத்தில் 3 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில், சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கிணத்துக்கடவு பகுதியிலே 1 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், பொள்ளாச்சி(தெற்கு) ஒன்றியத்தில் 2 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், மடத்துக்குளம் ஒன்றியத்திலே 13 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், குடிமங்கலம் ஒன்றியத்தில் 3 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், உடுமலைப்பேட்டை ஒன்றியத்தில் 7 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஆக மொத்தம் 1 கோடியே 26 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டிருக்க கூடிய 35 குடிநர் திட்டப்பணிகள் இன்றைய தினம் மக்களுடைய பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் துணை மின் நிலையங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பிலே 29 கோடியே 64 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே காரணம் பேட்டை, காளிவேலாம்பட்டி, நேதாஜி அப்ரேல், மின்கோயில்பாளையம், கணியூர் அந்த பகுதியிலே அமைக்கப்பட்டுள்ள 5 துணை மின் நிலையங்கள் இன்றைய தினம் மக்களுடைய பயன்பாட்டிற்காக அர்பணிக்கப்படுகிறது. அதேபோல் பல்வேறு துறைகளின் சார்பில் புதிதாக கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறையின் சார்பில் இப்படி பல துறைகளின் சார்பிலே கட்டப்பட்டிருக்க கூடிய கட்டிடங்களுடைய திறப்பு விழா, அதேபோல் பள்ளிக் கட்டிடங்கள் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் சார்பில் ரூ.1கோடியே 5 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டப்பட்டிருக்க கூடிய 20 பள்ளி கட்டிடங்கள் இன்றைக்கு இந்த விழாவிலே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக காரமடை, மதுக்கரை, பெரியநாயக்கன்பாளையம், சர்க்கார் சாமக்குளம், ஆனைமலை, குடிமங்கலம், பொள்ளாச்சி(தெற்கு) மற்றும் வடக்கு, உடுமலைப்பேட்டை, அன்னூர், சூலூர்., சுல்தான்பேட்டை, திருப்பூர் ஒன்றியங்களில் 64 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்டி முடிக்கப்பட்டிருக்க கூடிய 32 கட்டிடப் பணிகளும், அதேபோல் பேரூராட்சியின் சார்பிலே கட்டப்பட்டிருக்க கூடிய வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியிலே அலுவலக



கட்டிடமும், அதேபோல் காளப்பட்டி பேரூராட்சியில் 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சரவணம்பட்டி பேரூராட்சியிலே 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டிருக்க கூடிய பூங்காக்கள், அன்னூர் பேரூராட்சியில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிற நியாய விலைக் கட்டிடங்கள் இப்படி பல கட்டிடங்கள் இந்த விழாவின் மூலமாக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஒன்றரை ஆண்டு காலமாக உங்களுடைய அன்பை பெற்று ஆதரவை பெற்று உங்களுடைய நம்பிக்கைக்கு உரிய வகையில் ஆட்சிப் பொறுப்பேற்ற தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்திருக்க கூடிய திட்டங்கள் தேர்தல் நேரத்தில் எடுத்துச் சொன்ன வாக்குறுதிகள், உறுதிமொழிகள் அவை எல்லாம் இன்றைக்கு எந்த அளவிற்கு காப்பாற்றப்படுகிறது நிறைவேற்றப்படுகிறது என்பதை தயவு செய்து நீங்கள் உணர்ந்திட வேண்டும். இன்றைக்கு கிராம சக்தி மையம் என்கிற பெயரிலே ஒரு சிறப்பான திட்டம் இந்த விழாவிலே குறிப்பாக தமிழ்நாட்டிலேயே இந்த கோவை மாவட்டத்திலே தான் இது முதல் மாவட்டமாக இந்த நிகழ்ச்சியை தொடங்கி இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். அதற்காக எனது பாராட்டுக்களை, வாழ்த்துக்களை நமது ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்பிகிறேன். நான் அவர்களோடு தொடர்பு கொண்டு உங்களுக்கு முன்னால் பேசுகிற நேரத்திலே அங்கிருக்க கூடிய மகளிர் சுய உதவிக் குழுக்களை சார்ந்திருக்க கூடிய சகோதரிகளை நான் கேட்டேன் உங்களுடைய கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எந்த அளவிற்கு நடைபெறுகிறது. அந்த திட்டத்தினுடைய பயனை மக்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்களா? என்று நான் கேட்ட போது மகிழ்ச்சியோடு அவர்கள் சொன்னார்கள். அது தான் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் நிறைவேற்றப்படக் கூடிய அனைத்து கிராம அண்ண மறுமலர்ச்சித் திட்டம் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் இன்றைக்கு 12,618 கிராம ஊராட்சிகள் இருக்கிறது. இந்த 12,618 கிராம ஊராட்சிகளுக்கு அந்த கிராமங்களில் இருக்க கூடிய மக்களுடைய அடிப்படை பிரச்சனைகளை தீர்த்து வைக்க வேண்டும். எனவே தான் 5 ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கிராமங்களை தேர்தெடுத்து இந்த திட்டம் ஐந்தே ஆண்டிற்குள்ளாக அனைத்து கிராமங்களிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து எங்களுக்கு ஆணையிட்டு அவருடைய அறிவுரைகளை, ஆலோசனைகளை பெற்று நாம் ஆட்சிக்கு வந்த உடனே அந்த திட்டத்தை நிறைவேற்ற தொடங்கினோம். ஆக அந்த வகையிலே கடந்த 2006–2007ல் கோவை மாவட்டத்தை பொறுத்தவரையில் 389 ஊராட்சிகளில் 82 ஊராட்சிகள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டு அதில் 3367 பணிகளில் 3188 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மிச்சம் இருக்க கூடிய பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விரைவில் முடிக்கப்படும் என்று தனது வரவேற்புரையில் தெரிவித்தார்கள். அதேபோல் 2007–2008ல் 81 கிராமங்களில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு 1121 பணிகளில் 725 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ஆக இந்த பணிகளை குறித்து கூட இங்கே எப்படி இங்கிருந்து மாவட்டத்தில் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுவினருடன் எப்படி உரையாற்றினோமோ அதேபோல் 10,15 நாட்களுக்கு முன்னர் என்னுடைய துறை செயலாளர்களுடன் சென்னையிலிருந்து கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஒளித்தோற்ற கலந்தாய்வு மூலம் துறையின் சார்பிலே அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பணிகள் மற்றும் துறையின் சார்பில் என்னென்ன பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது, அந்த பணிகளை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். கோவையை பொறுத்தவரையில் 52 பேரூராட்சிகளில் தென்கரை, தளி, செட்டிபாளையம், கணியூர், சமத்தூர், கோட்டூர், தாளியூர், குமரலிங்கம், வேட்டைக்காரன்புதூர், ஒடையகுளம், பூளுவப்பட்டி, சங்கரராமநல்லூர், ஆலாந்துறை ஆகிய 13 பேரூராட்சிகளில் நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது. தேர்தல் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 கிலோ அரிசி ரூ.2க்கு என்று அறிவித்தார்கள். விவசாய கூட்டுறவு கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அதெல்லாம் தற்போது நடைமுறைப் படுதப்பட்டுள்ளது. சத்துணவுடன் வாரம் 3 முட்டை வழங்கப்பட்டு வருகிறது. இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று அறிவித்து யார் யாருக்கு எல்லாம் வண்ணத்தொலைக்காட்சி பெட்டி இல்லையோ அவர்களுக்கு எல்லாம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இப்படி சொல்லும் பொழுது இங்கு இருக்கிற தாய்மார்களுக்கு சந்தேகம் வருகிறது. அறிவிக்கின்ற திட்டங்கள் எல்லாம் செயல்படுத்தப் படுகிறது. ஆனால் இந்த வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி பொறுத்தவரையிலும் தாதமமாகிறதே. பக்கத்து ஊருக்கு வந்திருச்சு நம்ம ஊருக்கு வரலையே



என்றெல்லாம் நினைப்பார்கள். அதேபோல் இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி ஒரே நேரத்தில் வழங்குவது என்பது முடியாத ஒன்றாகும். நாங்கள் பயணம் செய்கிற போதும், கட்சி பிரமுகர்களை சந்திக்கும் போதும், மக்களை சந்தித்து பேசுகிற போதும் வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி பக்கத்து ஊருக்கு வழங்கிவிட்டார்கள். எங்களுக்கு வழங்கவில்லை என்று தாய்மார்கள் சொல்கிறார்கள். முதல்வர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட உறுதிமொழி நிச்சயமாக நிறைவேற்றப்படும். சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம். சொல்லாததையும் செய்து கொண்டிருப்பது தான் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு. இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டி மக்களுக்கு உரிய முறையாக சேர வேண்டும் என்பதற்காக குழு அமைக்கப்பட்டுள்ளது. நகரமாக இருந்தாலும், சிறிய கிராமங்களாக இருந்தாலும் சரி பயனாளிகளை அக்குழுவே தேர்வு செய்து இந்த இலவச டி.வி.யை வழங்குகிறது. இதில் எந்த வித முறைகேடும் தவறுகளும் நடந்துவிட கூடாது என்பதற்காக தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்து சட்டமன்ற கட்சித் தலைவர்களை கொண்ட குழு அமைக்கப் பட்டிருக்கிறது. 3வது முறை டெண்டரில் 32 நிறுவனங்கள் பங்கேற்றனர். அப்படி பங்கேற்ற காரணத்தினால் விலைப்பட்டியல் கூடி குறைந்துள்ளது. ஆக கடந்த முறைக்கும் இந்த முறைக்கும் ஒப்பிட்டு பார்த்தால் ஏறக்குறைய 162 கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு மிச்சப்படுத்தியிருக்கிறோம். ஆகையால் இந்த 162 கோடி ரூபாய்க்கு சேர்த்து இன்னும் 4 இலட்சம் டி.வி.யை சேர்த்து 34 இலட்சம் டி.வி வழங்கலாம் என்று முடிவு செய்துள்ளோம். இப்படி எல்லாம் எந்த வித குறைபாடுகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாக்காமல் அப்பலுக்கற்ற ஆட்சி மக்களுக்காக நடைபெற்று கொண்டிருக்கிறது. ஆகவே தான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்ள விரும்புவது இப்படிப்பட்ட ஆட்சிக்கு என்றைக்கும் உருதுணையாக இருந்திட வேண்டும். திருப்பூர் மாநகராட்சியாக அறிவிக்கப்பட உள்ளது. திருப்பூர் மாநகராட்சியாக ஆக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை இருந்தாலும் தி.மு.க அரசு ஆட்சிக்கு வந்த பிறகு உள்ளாட்சித் துறை அமைச்சர் நான் என்கிற முறையில் நம்முடைய திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கோவிந்தசாமி அவர்கள் முதல் கோரிக்கையாக திருப்பூரை மாநகராட்சியாக அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாநகராட்சியாக ஆக்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். இடையில் தேர்தல் ஆணையம் தொகுதி சீரமைப்பு பணியை மேற்கொண்டிருந்ததால் திருப்பூரை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படவில்லை. தற்பொழுது திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்படும். அதேபோல் ஈரோடு நகராட்சியும் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட உள்ளது. என உரையாற்றினார்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட புத்தகம் மற்றும் கிராம சக்தி மையம் கையேடு ஆகியவற்றை வெளியிட அதனை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

* * *





மெக்சிகோவில் நடைபெற்ற உலக சதுரங்க விளையாட்டுப் போட்டியில் இரண்டாவது முறையாக உலக சதுரங்கச் சாம்பியன் பட்டம் வென்று மகத்தான சாதனை படைத்ததற்காக, 24.10.2007 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திரு.விசுவநாதன் ஆனந்த் அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் 25 இலட்ச ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்.

## சென்னை அரசுப் பொது மருத்துவமனை மற்றும் அரசு ஸ்டான்லி மருத்துவமனைகளில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் 25.10.2007 அன்று சென்னை அரசுப் பொது மருத்துவமனை மற்றும் அரசு ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவற்றிற்கு மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் சென்று அவசர சிகிச்சைப் பிரிவு, உள்நோயாளி பிரிவு ஆகியவற்றைப் பார்வையிட்டு மருத்துவமனையைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், நோயாளிகட்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க வேண்டியதின் அவசியம் குறித்தும் வலியுறுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.



மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் உள் நோயாளிகளிடம் சிகிச்சைகள் நல்ல முறையில் அளிக்கப் படுகின்றனவா என்பது குறித்தும் நோயாளிகளிடம் நேரடியாக விசாரித்தறிந்தார். அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் தங்கும் விடுதியையும் பார்வையிட்டு அவற்றை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார். மாணவர்களுக்கு தொற்று நோய்கள் பரவாமல் இருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் மருத்துவர்களிடமும், மாணவர்களிடமும் கலந்து ஆலோசித்தார்.



# நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட ரூ.300 கோடி ஒதுக்கீடு

“நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தரவேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அதனடிப்படையில் படிப்படியாக கட்டடங்கள் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

நடப்பு நிதியாண்டில் 19 இடங்களில் ரூ.100 கோடி செலவில் கட்டடம் கட்டித்தரப்படும். மத்திய அரசின் தொலைநோக்குத் திட்டத்தின் கீழ் நீதிமன்ற கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.211 கோடியில் திட்டம் தயாரித்து அனுப்பியுள்ளோம்.

மாநில அரசு சார்பிலும் முதலமைச்சர் ரூ.3 கோடி ஒதுக்கியுள்ளார். இந்த நிதி அனைத்தும் கிடைத்ததும் எல்லா நீதிமன்றங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படும்’’. இவ்வாறு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# பணியில் இருக்கும்போது உயிரிழந்த திருக்கோயில் பணியாளர்கள் குடும்பங்களுக்கு நிதிஉதவி

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை நிருவாகத்தின் கீழ் உள்ள 25 திருக்கோயில்களில் பணியிலிருக்கும் போது, இறந்த பணியாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.75,000 வீதம் குடும்பநல நிதியுதவித் தொகை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களால் வழங்கப்பட்டது.





# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு கொடுத்த வாக்குறுதிகளைத் தவறாமல் நிறைவேற்றி வருகிறது

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் உரை**



கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையில் 28.9.2007 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சந்தோஷ்பாபு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இவ்விழாவில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதிஇளம்வழுதி அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து விழாப்பேருரையாற்றிப் பேசியதாவது: “தமிழக அரசானது ஆண்டுதோறும் தியாகிகளின் பிறந்த நாளினை நினைவு கூறத்தக்க வகையில் அன்னாரது பிறந்தநாளினை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. சுதந்திரப் போராட்ட வீரர் பகத்சிங் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் கலந்துகொண்டு அவரது உருவப்படத்தை திறந்து வைத்ததில் மிகவும் பெருமைப்படுகிறேன்.

24 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு தூக்குக் கயிற்றை அவர் முத்தமிட்டார் என்றால் அதற்குக் காரணம் அவரிடம் இருந்த சுதந்திர உணர்வுதான் எனில் மிகையாகாது. மரண தண்டனையை நிறைவேற்றக் குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்னதாகவே பகத்சிங் தூக்கிலிடப்பட்டார். தூக்கு மேடைக்கு அவரை காவலாளிகள் அழைத்தபோது, ஒரு புரட்சியாளனுடன் பேசிக்கொண்டிருக்கும் என்னை தொந்தரவு செய்யாதீர்கள்! என்று கூறியபடி லெனின் எழுதிய புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அத்தகைய தியாகத்தால்தான் அரசு அவரது நூற்றாண்டு பிறந்த நாளினை விழாவாகக் கொண்டாடுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையிலான அரசு கொடுத்த வாக்குறுதிகளை தவறாமல் நிறைவேற்றி வருகிறது. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா? எப்படி நிறைவேற்றப் போகிறார்கள்? எனப் பலர் கேட்டனர். சிலர் ஏளனமும் செய்தனர்.

தொகுப்பு: **மு.நா.கிருஷ்ணசாமி**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.



சேது சமுத்திரத் திட்டம் கொண்டு வந்தால் பொருளாதார ரீதியாக அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றமும் உருவாகும்.

அரசின் திட்டங்களை நன்கு பயன்படுத்தி அரசுக்கு என்றும் உறுதுணையாய் இருக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்".

இவர்களெல்லாம் வியக்கும் வண்ணமும், வாயடைக்கும் வண்ணமும் 15 மாதங்களில் சொன்னது, சொல்லாதது எனப் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். இம்மாவட்டத்தில் மட்டும் இதுவரை 4 ஆயிரம் பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர். அன்று முதல் இன்று வரை பல திட்டங்களை நிறைவேற்றியதன் மூலம் சிறந்த அரசாக விளங்கி வருகிறது.

இந்தியாவிலேயே தேர்தல் வாக்குறுதிகளை 100 சதவீதம் நிறைவேற்றியது தி.மு.க. அரசு மட்டுமே.

விழாவில் 1,547 பயனாளிகளுக்கு ரூ.1.97 கோடி மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த புகைப்படக் களவிளம்பரக் கண்காட்சியினை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள்.

* * *



**மா**ண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், 2.11.2007 அன்று சென்னையில், தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை சார்ந்த 1,880 அரசு மேல்நிலைப்பள்ளிகளுக்கு 118 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கணினிகளை வழங்கினார்.

*





# தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஆதிதிராவிடர் நலத்துறை

## ஆதிதிராவிடர் நலத்துறை

| வ. எண் | திட்டத்தின் பெயர் மற்றும் விவரம் | உதவி பெறுவதற்குரிய தகுதிகள் | மனுதாரர் இணைக்க வேண்டிய சான்றுகள் | தொடர்பு அலுவலரின் பதவி | துறைத் தலைமை/ தொலை பேசி/ நிகரி விவரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | சிலேட்டுகள் வழங்குதல் | ஒன்றாம் வகுப்பு மட்டும் எல்லா மாணவர்களுக்கும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் நலப்பள்ளிகள் | ஏதுமில்லை. | பள்ளி தலைமை ஆசிரியர்கள் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 2. | பாடப்புத்தகம் | 1 முதல் 12 ம் வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலப்பள்ளிகள் | ஏதுமில்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 3. | நோட்டுப்புத்தகங்கள் | 3 முதல் 10 ம் வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் (ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் நலப்பள்ளிகள்) 4 முதல் 10ம் வகுப்பு வரை பொதுப்பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர்/ மதம் மாறிய கிறித்தவர் / பழங்குடி மாணவர்கள் | சாதிச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 4. | சீருடைகள் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 1 முதல் 12 ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/ மாணவியர் அனைவருக்கும் | ஏதுமில்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 5. | சிறப்பு வழிகாட்டி (வினாவிடை) | 10 ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வு எழுதும் அனைவருக்கும் (ஆதிதிராவிடர் / பழங்குடியினர் நலப்பள்ளிகள்) | ஏதுமில்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 6. | மிதிவண்டிகள் | 11ம் வகுப்புகளில் படிக்கும் ஆதிதிராவிடர்/ மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்தவர் / பழங்குடியினர் மாணவிகள்/ மாணவர்கள் (அனைத்துப் பள்ளிகள்) | சாதிச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | விடுதி இலவச உணவு உறைவிடம் 12ம் வகுப்பு வரை அனைவருக்கும் | ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குள் இருக்க வேண்டும் பள்ளிக்கும் வீட்டிற்கும் உள்ள தூரம் 5 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். (இது மாணவிகளுக்குப் பொருந்தாது) | வருமானச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிந அலுவலர், விடுதிக் காப்பாளர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 8. | சீருடை | 12ம் வகுப்பு வரை அனைத்து மாணவர்கள் | ஏதுமில்லை. | விடுதிக் காப்பாளர் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 9. | சிறப்பு வழிக்காட்டி | 10 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ/ மாணவியர் | ஏதுமில்லை. | விடுதிக் காப்பாளர் மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 10. | 12ம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி அதாவது கல்விக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது | ஆதிதிராவிடர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் (வருமான வரம்பு இல்லை.) | சாதிச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 11. | 12ம் வகுப்புக்கு மேற்பட்ட படிப்பினை அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் கல்விக் கட்டணம் செலுத்து வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. | ஆதிதிராவிடர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் (வருமான வரம்பு இல்லை.) | சாதிச் சான்றிதழ் | கல்லூரி முதல்வர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 12. | சிறப்பு கட்டணம் 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை மற்றும் 10 ம் வகுப்பு 12ம் வகுப்பு தேர்வுக் கட்டணம் வழங்குதல் இத்தொகை நேரடியாக தலைமை ஆசிரியருக்கும் அரசுத் தேர்வுத் துறைக்கும் வழங்கப்படும் | எல்லா ஆதிதிராவிடர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் (வருமான வரம்பு இல்லை.) | சாதிச் சான்றிதழ் | சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 13. | தூய்மையற்ற தொழில்புரிவோர் குழந்தைகளுக்கு உதவித் தொகை வழங்குதல். | உலர் கழிப்பிடங்களைச் சுத்தம் செய்வோர், தெருபெருக்கும் தொழில் செய்பவர், தோல் உரிப்போர் மற்றும் தோல் பதனிடுவோர் முதலியவர்களின் குழந்தைகள். சாதி மத பேதம் இல்லை மற்றும் ஆண்டு வருமான வரம்பு இல்லை. | தொழில் சான்றிதழ் | சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. | கல்வி நிறுவனங்கள் நடத்தும் விடுதிகளில் தங்கி 6 முதல் 10 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது (மாதம் ரூ.25 முதல் ரூ.35 வரை) | அங்கீகாரம் பெற்ற தனியார் கல்வி நிறுவனங்கள் நடத்தும் விடுதி / பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.15,000/-க்குள் இருக்க வேண்டும் | சாதிச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ் | மாவட்ட ஆதிந அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 15. | மைய அரசு கல்வி உதவித்தொகை கல்லூரிக்கு செலுத்த வேண்டிய திருப்பி அளிக்கப்படாத அனைத்து கட்டணம், மற்றும் பராமரிப்புத் தொகை உதவி தொகையாக வழங்கப்படும் | 11 ம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் (இந்து) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் (ஆண்டு வருமான வரம்பு ரூ.10,000/- க்குள் இருக்க வேண்டும்) | சாதிச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்/ கல்லூரி முதல்வர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 16. | மாநில அரசின் சிறப்பு கல்வி உதவித் தொகை பள்ளி மற்றும் கல்லூரிக்கு கட்ட வேண்டிய கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதி மாணவர்களுக்கு வெளி மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகையாக வழங்கப்படும் | மைய அரசு திட்டத்தில் பயன்பெற இயலாதவர்கள், மதம் மாறிய கிறித்தவர் (ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000/க்குள் இருக்க வேண்டும்) | சாதிச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்/ கல்லூரி முதல்வர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 17. | இலவச கல்வித் திட்டம் +1 , +2 மற்றும் இளங்கலை/ அறிவியல்/ வணிகவியல் பட்டப்படிப்பு பயிலும் மாணவ/ மாணவியர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவியர்கள் கல்லூரிக்கு செலுத்த வேண்டிய சிறப்பு கட்டணம் தேர்வுக் கட்டணங்கள் வழங்கப்படும் | மேற்குறிப்பிட்ட இரு கல்வி உதவித் தொகை திட்டங்களில் பயன்பெறாதவர்கள்/ பகல் நேரக் கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு இத்திட்டத்தில் வருமான வரம்பு கிடையாது | சாதிச் சான்றிதழ் | பள்ளித் தலைமை ஆசிரியர்/ கல்லூரி முதல்வர்/ மாவட்ட ஆதிந அலுவலர் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 18. | பட்டப்படிப்பு/ பட்ட மேற்படிப்பு/ தொழில் படிப்பில் சேரும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணம், பதிவுக்கட்டணம், செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்தல் | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள் | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிந அலுவலர்/ ஆதிதிராவிடர் நல இயக்குநர் சென்னை.5 | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 19. | வெளிநாட்டில் படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை/ வெளிநாட்டில் மேல் படிப்பினை தொடரும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்குதல். | ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள், குறைந்தபட்ச தகுதிகள் (அ) ஆராய்ச்சி பட்ட மேற்படிப்பு ( FOR POST DOCTORAL) முதுநிலை பட்ட படிப்பில் முதல் வகுப்பு அல்லது 60% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பழங்குடியினருக்கு குறைந்தபட்சம் 50% தேர்ச்சி மற்றும் இரண்டாம் நிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பிஎச்டி மற்றும் ஆராய்ச்சி/ விரிவுரையாளர்/ தொழில் ஆகியவற்றில் 5 ஆண்டுகள் அனுபவம் சம்பந்தப்பட்ட துறையில் பெற்றிருத்தல் வேண்டும். | வருமானச் சான்றிதழ் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5 | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19. | வெளிநாட்டில் படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை/ வெளிநாட்டில் மேல் படிப்பினை தொடரும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்குதல். | ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள், குறைந்தபட்ச தகுதிகள் (அ) ஆராய்ச்சி பட்ட மேற்படிப்பு ( FOR POST DOCTORAL) முதுநிலை பட்ட படிப்பில் முதல் வகுப்பு அல்லது 60% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். பழங்குடியினருக்கு குறைந்தபட்சம் 50% தேர்ச்சி மற்றும் இரண்டாம் நிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பிஎச்டி மற்றும் ஆராய்ச்சி/ விரிவுரையாளர்/ தொழில் ஆகியவற்றில் 5 ஆண்டுகள் அனுபவம் சம்பந்தப்பட்ட துறையில் பெற்றிருத்தல் வேண்டும்.<br>(ஆ) ஆராய்ச்சி படிப்பிற்கு சம்பந்தப்பட்ட முதுநிலைப்பட்ட மேற்படிப்பில் முதல் வகுப்பு அல்லது 60% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் பழங்குடியினருக்கு இரண்டாம் நிலை 50% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். மேலும் கற்பித்தல்/ ஆராய்ச்சி/ தொழில்/ எம்பில் ஆகிய சம்பந்தப்பட்ட பிரிவில் இரண்டாண்டு அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். | வருமானச் சான்றிதழ் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5 | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| | | இ) பட்ட மேற்படிப்பு<br>சம்பந்தப்பட்ட பாட பிரிவில் இளநிலை பட்டம் மற்றும் முதல் வகுப்பு அல்லது 60% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். பழங்குடியினர் இரண்டாம் நிலை அல்லது 50% மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட பிரிவில் தொழில் அனுபவம் இரண்டாண்டு பெற்றிருத்தல் வேண்டும். (மாத வருமானம் ரூ.12,000 க்குள் இருத்தல் வேண்டும். வயது வரம்பு 35 க்குள்) | வருமானச் சான்றிதழ் | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5 | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 20. | **உயர்கல்வி சிறப்பு கல்வி உதவித் தொகை**<br>2002-03 முதல் கல்வி கடன் வழங்கப்பட்டதை மாற்றி மானியமாக வழங்க ஆணையிடப்பட்டது பட்ட படிப்புக்கு ரூ.6500/- பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் பட்ட படிப்புக்கு ரூ.7000/- மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் 25% கடனாகவும் 75% மானியமாகவும் மற்ற அனைத்து படிப்புகளுக்கும் மானியமாக வழங்கப்படுகிறது. | கல்லூரியுடன் இணைந்த விடுதியில் தங்கி படிக்கும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள் (பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000 க்குள் இருக்க வேண்டும்) | சாதிச் சான்றிதழ் வருமானச் சான்றிதழ் | கல்லூரி முதல்வர் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | **<u>புத்தக வங்கி</u>**<br>பொறியியல் மருத்துவம், கால்நடை மருத்துவம், வேளாண்மை, சட்டம், முதுநிலை வணிக நிருவாகம், பாலிடெக்னிக் போன்ற படிப்புகளுக்கு தேவையான பாடப்புத்தகங்கள் ஒரு செட் இரு மாணவர்களுக்கு என்ற விகிதத்தில் கல்லூரி நூலகத்தில் வாங்கி வைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் எடுத்துப் படித்து பின்னர் திரும்பிக் கொடுக்க வேண்டும். 2003–2004 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மைய அரசு போஸ்ட்மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பட்ட மேற்படிப்புகள், மருத்துவம், பொறியியல், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் இதுபோன்ற பல்கலை கழகங்கள் மேற்படிப்புக்கான கல்வி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் ஒத்த படிப்புகள்<br>1998–99ம் ஆண்டுமுதல் ஒருமாணவருக்கு ஒரு செட் புத்தகம் ரூ. 5,000/–க்கு மிகாமல் புத்த வங்கி திட்டத்தின்கீழ் பின்வரும் பாடங்களுக்கு வழங்கப்படுகிறது.<br>சட்டப்படிப்பு பி.எல், எல்.எல்.பி (3 ஆண்டுகள்) மற்றும் ஐந்து ஆண்டுகள் எல்.எல்.எம், எம்.எல். (2 ஆண்டுகள்)<br>பட்டயக் கணக்காயர் படிப்பு (இடைநிலை, இறுதிப் படிப்பு)<br>எம்.பி.ஏ இரண்டு ஆண்டு மற்றும் ஒத்த படிப்புகள்<br>பயோ சயின்ஸ் படிப்புகள் | பொறியியல், மருத்துவம், வேளாண்மை கால்நடை மருத்துவம், பாலிடெக்னிக் படிப்பு படிக்கும் மைய அரசு உதவித் தொகை பெறும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் | சாதிச் சான்றிதழ் | கல்லூரி முதல்வர்கள் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் நல அலுவலர்கள் | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 22. | **<u>ஊக்கப் பரிசுகள் மாநில அளவில்</u>**<br>அ. +2 தேர்வு ரூ.25,000/– வீதம்<br>ஆ. 10ம் வகுப்பு தேர்வு ரூ.10,000 /– வீதம் | முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர்/ ஒரு மாணவி ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய ஆதிதிராவிடர் கிருத்துவர் ஆகிய ஒவ்வொரு இனத்திலும். | சாதிச் · சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலமாக இயக்குநர் ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23. | பாடங்கள் ஒவ்வொன்றும் மாநில முதன்மை<br>+2 தேர்வு ரூ.2,000/– வீதம்<br>10 ம் வகுப்பு தேர்வு ரூ.1000/– வீதம் | மாநில அளவில் ஒவ்வொரு பாடத்திலும் அதிக மதிப்பெண் பெறும் ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு. | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலமாக இயக்குநர் ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 24. | **<u>ஊக்கப் பரிசுகள் மாவட்ட அளவில்</u>**<br>+2 தேர்வு ஒரு மாணவர் ஒரு மாணவி ரூ.3,000/– வீதம் 10 ம் வகுப்பு முதல் பரிசு ஒரு மாணவர்/ ஒரு மாணவி ரூ.1,000/– வீதம் 10 ம் வகுப்பு 2ம் பரிசு ஒரு மாணவர் ஒரு மாணவி ரூ.500/– வீதம் 10ம் வகுப்பு 3ம் பரிசு ஒரு மாணவர் ஒரு மாணவி ரூ.300/– வீதம் | முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிருத்துவர் ஒருங்கிணைந்த பட்டியல் மூலம். | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 25. | **<u>பரிசுத் தொகை திட்டம்</u>**<br>பட்டப்படிப்பு/ மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன– இத்தேர்வுகளில் உயர் மதிப்பெண் பெற்று தேர்வு பெற்ற முதல் 550 நபர்களுக்கு ரூ.2,000 முதல் ரூ.5,000 வரை பரிசாக வழங்கப்படும். | பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற்படிப்பு இறுதித் தேர்வில் 60 சதவீதம் மதிப்பெண் பெற்று தேர்வு பெற்றிருக்க வேண்டும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்கள். | சாதிச் சான்றிதழ் | இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26. | **அறிவுக்கூர்மை பரிசுத் தொகை**<br>ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் ஆகிய ஒவ்வொரு இனத்திலிருந்தும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10ம் வகுப்பு தேர்வில் முதல் இடங்களை பெற்ற இரு மாணவர் மற்றும் இரு மாணவியர்களுக்கு மேற்படிப்பைத் தொடர அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.800/– ம் மற்ற ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.960/– ம் வழங்கப்படும். | மாவட்டத்தில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற 2 மாணவர் மற்றும் 2 மாணவியர்க்கு (ஒவ்வொரு இனத்திலும்) படிப்பைத் தொடர்ந்து படிக்க வேண்டும் வருமான வரம்பு இல்லை. | சாதிச் சான்றிதழ் | இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 27. | **காந்தி நினைவுப் பரிசு**<br>ஒவ்வொரு மாவட்டத்திலும் +2 தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற இந்து ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்த ஒரு மாணவர் ஒரு மாணவிக்கு இப்பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.1,500/– அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.1,000/ வீதம் வழங்கப்படும். | +2 தேர்வில் மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்று படிப்பைத் தொடர வேண்டும். இந்து மதத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர்/ மாணவ/ மாணவி வருமான வரம்பு இல்லை. | சாதிச் சான்றிதழ் | இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 28. | **தகுதி வழிவகை பரிசு**<br>காந்தி நினைவு பரிசு போன்றே இப்பரிசும் வழங்கப்படும். | பழங்குடியினர் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் | சாதிச் சான்றிதழ் | இயக்குநர், ஆதிதிராவிடர் நலத் துறை, சென்னை.5. | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 29. | **முதலமைச்சர் தகுதி பரிசுத் தொகை**<br>பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்களில் முதல் 1000 மாணவர்கள் மற்றும் முதல் 1000 மாணவியர்களுக்கு இப்பரிசு வழங்கப்படும். | +2 தேர்வில் முதல் 1000, இடங்களுக்குள் வர வேண்டும். மேல்படிப்பை தொடர வேண்டும். தொடர்ந்து பயின்றால் மட்டும் ஆண்டுக்கு ரூ.1,500/– வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். | சாதிச் சான்றிதழ் | 2002ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 30. | ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்தி விடாமலிருக்க ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கீழ்கண்ட மாவட்டங்களில் 3 முதல் 5 வரை படிக்கும் 60,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.500/– வழங்கப்படும் | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் பெண் குழந்தைகள் 3 முதல் 5 வகுப்புகளில் படித்துக் கொண்டு இருக்க வேண்டும். | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |
| 31. | 6ம் வகுப்பு படிக்கும் 30,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ரூ.1,000 மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு வழங்குதல். இத்திட்டம் சென்னை, தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப் படுகிறது. | 6ம் வகுப்பில் படிக்கும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவிகள். | சாதிச் சான்றிதழ் | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர். | இயக்குநர், ஆதிந துறை, தொ:28594780 நிகரி:28419612 |



# தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் செயல்படுத்தும் நலத்திட்டங்கள்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் 1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதில் 38 வகையான கட்டட தொழில்களில் ஈடுபட்டுள்ள 15 முதல் 60 வயது வரை உள்ள தொழிலாளர்கள் உறுப்பினராகச் சேரலாம். இந்த வாரியத்தில் உறுப்பினராக ரூ.25 பதிவுக் கட்டணமாகவும், இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பதிவைப் புதுப்பிக்க ரூ.10 கட்டணமாக இருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றப் பின்பு இந்தக் கட்டணங்களை 1.9.2006 முதல் ரத்து செய்து விட்டது. இந்த வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்ட 8 வகையான நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

1) விபத்துக் காப்பீடுத் திட்டம் மற்றும் ஈமச்சடங்கு உதவி
2) விபத்து ஊனம்
3) இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவி
4) கல்வி உதவித்தொகை
5) திருமண உதவி
6) மகப்பேறு உதவி
7) கண் கண்ணாடி வாங்கிட உதவி
8) ஓய்வூதியம்

இந்த வாரியத்தில் 1995 முதல் 28.10.2007 வரை 16,02,158 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அதில் 1,39,148 பயனாளிகளுக்கு ரூ.46,65,81,708 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் 68,788 பயனாளிகளுக்கு ரூ.21,73,84,984 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. அதே காலத்தில் 5,13,366 தொழிலாளர்கள் வாரியத்தில் பதிவு செய்துள்ளார்கள். 2,534 தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் நிலுவைத் தொகையாக 28.10.2007 வரை ரூ.1,89,58,037 வழங்கப் பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பிரசவ கால உதவித்தொகையை 1.9.2006–முதல் ரூ.4,000த்திலிருந்து ரூ.6,000 ஆகவும், 1.7.2007 முதல் மாத ஓய்வூதியத்தினை ரூ.300 லிருந்து ரூ.400 ஆகவும் உயர்த்தியுள்ளது.

வாரியத்தில் பதிவு செய்துகொள்ளும் கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், தொழிலாளர்களின் வசதிக்காக 6 பணியாளர்களைக் கொண்ட புதிய 15 மாவட்ட அலுவலகங்கள் அண்மையில் திறக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே இயங்கிவரும் 15 மாவட்ட அலுவலகங்களுக்குக் கூடுதலாக 4 பணியாளர்களை அரசு நியமித்துள்ளது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துகொண்டுள்ள பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காகத் தமிழ்நாட்டில் சென்னை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் குழந்தைகள் காப்பகம் திறக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள கொத்தனார் (Mason) , குழாய்ப் பதிப்பவர் (Plumber), வர்ணம்பூசுபவர் (Painter), மின் அமைப்பாளர் (Electrician) மற்றும் தச்சு வேலை செய்பவர் (Carpenter) ஆகிய 5 இனங்களில் பணிபுரியும் 200 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி வழங்க, அரசு ஆணை (டி) 519, நாள் 9.7.2007–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

2007–2008 நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தைக் கணினிமயமாக்க உரிய அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது.

மாவட்ட அளவில் வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளைக் கண்காணிக்க அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் கண்காணிப்புக் குழு 1.6.2007 முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பெறப்படும் கல்வி உதவி, மகப்பேறு உதவி மற்றும் ஈம சடங்கு செலவு உதவி ஆகிய நலத்திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குதல் மற்றும் பட்டுவாடா செய்தல் ஆகிய பணிகளைத் தொழிலாளர் துறையின் மாவட்ட அளவிலான சார்நிலை அலுவலர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கி தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அரசு ஆணை உத்தரவிடப்பட்டுள்ளது.

# வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் படிவங்களை பொதுமக்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பொதுமக்களுக்கு பழகுநர் ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம் தொடர்பான பணிகள், வாகனப் பதிவு மற்றும் பெயர் மாற்றம், போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதி வழங்குதல், தகுதிச்சான்று வழங்குதல் போன்ற பணிகள் செய்து தரப்படுகின்றன.

மேற்படி பணிகளுக்கு மோட்டார் வாகனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களில் மனுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். முன்னதாக இப்படிவங்கள் அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலங்களில் இருப்பில் வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப் பட்டு வந்தது. அதன் பின்னர், இப்படிவங்களை விற்பனை செய்ய, அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் மூலமும் படிவங்கள் விற்பனை செய்யப்பட்டன.

இந்நிலையில், பொதுமக்கள் நேரடியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அணுகி இலவசமாகப் படிவங்கள் வழங்கக் கோரும்போது படிவங்கள் இருப்பில் இல்லாததால் வழங்க இயலவில்லை என்று தெரிவிக்கப் பட்டதாகப் புகார் எழுந்தது.

எனவே, பொதுமக்களுக்கு படிவங்கள் தங்குதடையின்றி இலவசமாகக் கிடைக்கச் செய்யும் பொருட்டு பின்வரும் பட்டியலில் காணும் 10 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களை உடனடியாக அச்சிட்டு வழங்க எழுதுபொருள் அச்சுத் துறைக்கு அரசு ஆணைப் பிறப்பித்தது.

1. படிவம் 1–A மருத்துவச்சான்று
2. படிவம் 2 ஓட்டுநர் பழகுநர் உரிமம் மனு
3. படிவம் 4 புதிய ஓட்டுநர் உரிமம் கோரும் மனு
4. படிவம் 9 ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மனு
5. படிவம் 29 வாகன உரிமை மாற்ற அறிவிப்பு
6. படிவம் 30 வாகன உரிமை மாற்ற மனு
7. படிவம் 34 வாகன தவணைக் கொள்முதல் ஒப்பந்த மனு
8. படிவம் 35 வாகன தவணைக் கொள்முதல் ரத்து மனு
9. படிவம் CFA வாகன தகுதிச்சான்று புதுப்பித்தல் மனு
10. படிவம் LTVA போக்குவரத்து வாகனம் ஓட்ட மேற்குறிப்பு பெற மனு (பேட்ஜ்)

இதனடிப்படையில், பழகுநர் உரிமம், புதிய ஓட்டுநர் உரிமம், தகுதிச்சான்று பெறுதல், தவணைக் கொள்முதல் ரத்து, தவணைக் கொள்முதல் ஒப்பந்தம், வாகன உரிமை மாற்றம் ஆகிய பணிகளுக்கான விண்ணப்ப படிவங்களைத் தேவையான அளவு அச்சிட்டு அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மேற்படி படிவங்களை இலவசமாகப் பெற்றுப் பயனடையலாம் என்றும், http: tn.gov.in/sta என்ற இணையதளம் மூலமும் மேற்படிப் படிவங்களைப் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது.



# மைய அரசின் 2008 ஆம் ஆண்டு கலைத்திறன் உதவித்தொகைத்திட்டம்

மைய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கிவரும் பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மையம் பாரம்பரிய இசை, ஓவியம், சிற்பம், கைவினை மற்றும் நாட்டுப்புற கலைகளில் ஈடுபடும் 10 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட இளஞ்சிறார்களின் திறமையை வளர்ப்பதற்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை 7,582 இளங்கலைஞர்களுக்கு உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது. 2008–2009ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் 5 பேர் வீதமும், துணை மாநிலங் களுக்கு 3 பேரும், ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு 10 பேரும் ஆக மொத்தம் 400 பேருக்கு உதவித்தொகை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகை ஆசான்/நிறுவனத்திற்கு அளிக்கப்படும் கட்டணத்துடன் ஆண்டுக்கு ரூ.3,600 வீதம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறும் கலைஞரின் திறன் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு முதற்கட்டமாக இரண்டாண்டுகளுக்கும், பின்னர் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கும் வகையில் பல்கலைக்கழக பட்டப்படிப்பு நிலை வரையிலும் அல்லது 20 வயது வரை உதவித்தொகை வழங்கப்படும்.

இம்மையம் 2008 – 2009 ஆம் ஆண்டிற்கான உதவித்தொகை வழங்குவதற்காக 1.7.1994 முதல் 30.6.1998 வரையிலான காலத்தில் பிறந்த தகுதிவாய்ந்த சிறார்களிடமிருந்து விண்ணப்பங் களை வரவேற்கிறது. ஏதாவது ஒரு ஆசான் அல்லது நிறுவனத்தின் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் கலைப் பயிற்சி பெறுவது விண்ணப்பிக்க அவசியமானதாகும். விண்ணப்ப படிவத்தைப் பின்வரும் முகவரிகளில் நேரிலோ/அஞ்சல் மூலமாகவோ இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

1) பண்பாட்டு ஆதாரங்கள்
மற்றும் பயிற்சி மையம்,
பிளாட்டு எண் 15 ஏ, செக்டார் – 7,
துவாரகா, புதுடெல்லி – 110075.

2) பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும்
பயிற்சி மைய வட்டார மையம்,
முதல்மாடி, பட்டுவளர்ப்புத் துறை கட்டடம்,
ஜீபிலி மலை, ஹைதராபாத்,
ஆந்திரப்பிரதேசம் – 500 033.

3) பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும்
பயிற்சி மைய வட்டார மையம்,
33 ஏ, புதிய பதேபுரா, உதப்பூர்,
இராஜஸ்தான் – 313001.

விண்ணப்பப்படிவம் இம்மையத்தின் இணையத் தளம் www.ccrtindia.gov.in ல் பெற்றுக் கொள்ளலாம்.

புதுடெல்லி பண்பாட்டு ஆதாரங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் 31.12.2007.

இவ்வுதவியைப் பெற்று வளரும் கலைஞர்கள் வளம் பெறக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# சொன்னதைச் செய்தார் கலைஞர்

## -தேர்வான கிராம நிருவாக அலுவலர்கள் நெகிழ்ச்சி

"சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

**திரு. டி.எஸ்.சுப்பிரமணியம்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல்.

என்ற அய்யன் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க ஐந்தாம் முறையாக தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், தேர்தல் நேரத்திலே கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி, ஏழை எளிய மக்கள் வாழ்வில் வழிகாட்டும் கலங்கரைவிளக்காகத் திகழ்கின்றார் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பதவியேற்ற மேடையிலேயே 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசித் திட்டம், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி, சத்துணவுடன் வாரம் 2 முறை முட்டை வழங்குதல் என ஆணையிட்டுச் செயல்படுத்தினார். பின்னர் சத்துணவுடன் வாரம் 3 முறை முட்டை வழங்கவும் ஆணையிட்டார்.

அதுமட்டுமல்ல, எது சாத்தியமில்லை என்று கூறினார்களோ அதையெல்லாம் நிறைவேற்றும் வகையில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்குதல், ஏழை எளிய குடும்பப் பெண்களுக்கு இலவசமாக எரிவாயு இணைப்புடன் அடுப்பு என பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டு இருக்கின்றார். இளைஞர்கள், எதிர்கால இந்திய நாட்டின் வழிகாட்டிகள். அவர்களின் அமைதியின்மையைத் தீர்க்க, படித்துவிட்டு வேலைவாய்ப்பற்று வீட்டில் முடங்கிக் கிடக்கும் இளைஞர்களின் எதிர்காலம் சிறப்புற, அன்றாடச் செலவிற்குக் கூட பெற்றவர்களை எதிர்பார்த்து அல்லல்பட்டு, அவமானப்பட்டு கிடக்கும் அவர்களின் பிரச்சினையை முதலில் தீர்க்க வேண்டும் என எண்ணி வேலை நியமனத் தடைச் சட்டத்தை ரத்து செய்தார். படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தினார்.



தமிழ்நாடு எங்கும் காலியாக இருந்த 2,500 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வுகள் நடத்த ஆணையிட்டு அதன் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். 2,500 பணியிடங்களுக்கு 6.25 இலட்சம் பேர் தேர்வு எழுதினார்கள். அவர்களுக்கான தேர்வு முடிவுகள் வெளியாயின.

திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி அருகே உள்ள பழைய ஆயர்குடி கிராமத்தைச் சேர்ந்த 17 பேர் தேர்வு எழுதி அனைவரும் வெற்றி பெற்றனர். அவர்களில் சிலரை நேரில் சந்தித்தோம். தங்கக்கொடி (வயது 32) என்பவர் கூறுகையில், "நான் எம்.ஏ. (டி.கோப்), படித்துள்ளேன். என்னுடைய பெற்றோர் சாதாரண விவசாயக் கூலித் தொழிலாளிகள். சிரமப்பட்டு என்னை படிக்க வச்சாங்க. நானும் எனது நண்பர்களும் படித்து விட்டு வேலை கிடைக்காமல் வேலை நியமனத்தடைச் சட்டத்தால் ரொம்பவும் மனம் நொந்து கிடந்தோம். வேலை கிடைத்தவுடன்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற உறுதியுடன் இருந்தேன். கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்து, வேலை நியமனத் தடைச் சட்டத்தை ரத்து செய்தவுடன் எங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று நம்பிக்கை மனதில் இருந்தது. பல்வேறு துறைகளிலும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தாலே போதும், மூப்பு அடிப்படையில் பணி நியமனம்



என்ற உடன் ரொம்ப சந்தோசமாக இருந்தது. அந்த நேரத்தில் தான் கிராம நிருவாக அலுவலர்கள் பணிக்காக தேர்வுகள் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டவுடன் நாங்கள் மகிழ்ந்தோம். ஆனால், 2,500 இடத்திற்கு 6.25 இலட்சம் பேர் தேர்வு எழுதுகிறார்கள் என்ற போது சற்று கலக்கமாக இருந்தது. இருந்தாலும் எங்கள் கிராமத்தில் உள்ள பட்டதாரிகள் சிலர் இணைந்து ஒற்றுமையாக விடா முயற்சியாக நன்கு படித்தோம்; தேர்வு எழுதினோம். தகுதி வாய்ந்தவர்களுக்கு நிச்சயம் வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். கலைஞர் அரசின் மீது எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. நாங்கள் எதிர்பார்த்தது நடந்தது. எங்களுடைய படிப்புக்கு வேலை கிடைத்துள்ளது. நாங்கள் இந்தப் பதவியோடு இருக்கப் போவதில்லை, இன்னும் குரூப்–1, குரூப்–2 தேர்வுகள் எழுதுவோம். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆவோம் என்ற உறுதியோடு நம்பிக்கையும் எங்களுக்கு வந்துவிட்டது. இதற்குக் காரணமான தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்" என்றார்.

திலகமணி (வயது 30) என்பவர் கூறுகையில், "நான் எம்.ஏ. (வரலாறு) படித்துள்ளேன். கடந்த 5 வருடமாக வேலை இல்லாமல் கஷ்டப்பட்டேன். எனது பெற்றோர்களும் கஷ்டப்பட்டார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அவருடைய நேர்மையான நடவடிக்கைகளினால் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த எங்களுக்கு அரசு வேலை கிடைத்துள்ளது" என்றார்.

ஜெயபிரஷ்னேவ் (வயது 32) – கலைவாணி (வயது 30) இருவரும் கணவன் மனைவி ஆவர். இருவரும் கிராம நிருவாக அலுவலருக்குத் தேர்வு பெற்றுள்ளார்கள். இவர்கள் கூறுகையில், "கடந்த 5 வருடம் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டோம். விவசாய பூமியும் வானம் பார்த்த பூமியாகும். வயது வேறு அதிகமாக அதிகமாக, எங்களுக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. அச்சூழலில் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பணி நியமனத் தடைச் சட்டத்தை ரத்து செய்து, வேலைவாய்ப்பிற்கான வயது வரம்பை 5 வருடம் தளர்த்தி மூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்ய உத்திரவிட்டது ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. கலைஞர் தந்த "வேலைவாய்ப்பற்ற இளைஞர் நிதியுதவித் திட்டம்" எங்களுக்கு மிகுந்த உதவியாக இருந்தது. ஒரு தேர்வுக்கு விண்ணப்பப் படிவம் வாங்க ரூ.200, ரூ.250 செலவாகும். தேர்வில் வெற்றி பெற நன்றாகப் படித்தோம். கிராம நிருவாக அலுவலர் தேர்வுக்குப் புத்தகம் வாங்க இந்த உதவித் தொகையைப் பயன்படுத்தினோம். முறையாகத் தேர்வு நடத்தி வசதியற்ற எங்களுக்கு வேலைவாய்ப்பு அளித்த முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று அத் தம்பதிகள் கூறினார்கள்.

இவர்கள் மட்டுமல்ல. இந்தக் கிராமத்தில் தேர்வு பெற்ற அனைத்து இளைஞர்களின் குரலும் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு கடமைப்பட்டுள்ளோம் என்ற ஒருமித்த குரலாகவே இருந்தது. இவர்களின் பெற்றோர்களை கேட்டபோது, "கால் ரூபாய் வாங்கினாலும் கவர்மெண்ட்ல சம்பளம் வாங்கணும், ஆடு மேய்ச்சா கூட கவர்மெண்ட் ஆடா பார்த்து மேய்க்கனும்னு அந்த காலத்துல பெரியவங்க பழமொழி சொல்லுவாங்க. ஆனால் இந்த காலத்தில அரசாங்க வேலையை நினைச்சு பார்க்க முடியுமா? கடந்த 5 வருடம் எங்க பிள்ளைங்க பட்ட கஷ்டம் சொல்ல முடியாதுங்க. படிச்சு வேலைக்குப் போய் சோறு போடுவாங்கன்னு பார்த்தா நாங்க அவங்களுக்கு பணம் கொடுக்கும் நிலைமை இருந்தது. ஆனால் தேர்தல் நேரத்தில் கலைஞர் சொன்ன வாக்குறுதி வீணாப் போகல்ல. சொன்னதைச் செய்தார் கலைஞர். இப்ப கோயில்ல நாங்க கடவுளைப் பார்க்கலை;



கலைஞரைத்தான் கடவுளாக நினைக்கிறோம். தேர்வு முடிவு வந்த நாளிலிருந்து எங்கள் குடும்பங்களில், கிராமத்தில் ஒரே சந்தோசம். இனி என் பொண்ணுக்கும் கல்யாணம் நடக்கும்" என்று கண்ணீர் ததும்ப அவர்கள் சொன்னபோது மனம் நெகிழ்ந்தது.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

– குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும் என்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களை அகிலமே வாழ்த்திக் கொண்டிருக்கிறது.

# 100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

TNSC BANK

**TNSC வங்கி**

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீட்டு ஆணை எண் 1654/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007 இணையதளம் : www.tnscbank.com


## மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி அமைச்சர்களின் பொறுப்புகள் மாற்றம்

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களது ஆலோசனைப்படி அமைச்சர்களின் துறைகள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

| அமைச்சர்களின் பெயர் | துறைகள் விவரம் |
|---|---|
| 1. **திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்** | மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு, மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலம்) |
| 2. **திரு.என்.சுரேஷ்ராஜன்** | சுற்றுலா மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் (சுற்றுலா, பத்திரப்பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்) |
| 3. **திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** | பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர்) |






# கோ-ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !



புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.

- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை

**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**



கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

செ.ம.தொ.இ / 602 / வரைகலை / 2007

R.N.I. No. 21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR)WPP-518/06-08

தமிழரசு



# தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

டிசம்பர் 2007
விலை ரூ.10/-





மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் 31-ஆவது மாவட்டமாக புதிய அரியலூர் மாவட்டத்தை 23.11.2007 அன்று தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு மத்திய - மாநில அமைச்சர்கள் உடன் உள்ளனர்.


# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
கார்த்திகை - மார்கழி டிசம்பர் 2007
மலர் : 39 இதழ் : 6



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க.இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**
**மாய உமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர்.பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழை திருத்துபவர்

**ஜி. சந்தானம்**



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னுஞ் செருக்கு**

பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடாமுயற்சி மேற்கொள்ளக்கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் நிகழ்ச்சிகள்


- ❖ 17 தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சைகள் செய்ய அரசு நிதியுதவி ..... 2
- ❖ திருவள்ளுவர் மாவட்டத்தில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து டிட்கோ அமைக்கும் மருத்துவ கிராமம் ..... 5
- ❖ பாடுபட முடியாமல், பாடுபடுவதற்கு உடலிலே வலுவில்லாமல் ஆதரவற்ற நிலையிலே இருக்கின்ற ஏழையெளியோருக்காக தொடங்கப்பட்ட திட்டமாகும் ..... 8
- ❖ மருத்துவத்துறையில் மகத்தான சாதனைகள் ..... 12
- ❖ மலேசியத் தமிழர்களின் துயரத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் -மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் ..... 16
- ❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் தமிழகத்தில் வியப்பூட்டும் ஆரம்ப சுகாதார நிலைய சேவைகள் ..... 27
- ❖ பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் சிறந்த மேனிலைப்பள்ளிகளில் பயில நிதியுதவி வழங்கிடும் புதிய முன்னோடித் திட்டம் ..... 33
- ❖ சிறுசிறு கிராமங்களை பட்டிதொட்டிகளை இணைக்கின்ற வகையில் ரயில் பாதைகள் அமையவேண்டும் ..... 46


**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**


- ☐ அரியலூர் மாவட்ட வளர்ச்சிக்கான திட்டங்களை அனைத்தும் நிறைவேற்றப்படும் ..... 57
- ☐ நகர்ப்புற ஏழை மக்களுக்கு ரூ.1,437.93 கோடியில் அடிப்படை வசதிகள் அளிக்கும் திட்டம் ..... 62
- ☐ சென்னை மாநகராட்சி சார்பில் 100 இளைஞர் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கினார் ..... 63
- ☐ உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் குறித்த மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரை அறிக்கைகள் ..... 65
- ☐ மணிமேகலை விருது ..... 67
- ☐ உள்ளாட்சித்துறையில் நிரப்பப்படாமல் இருந்த பணியிடங்களில் இதுவரை 15,311 பணியாளர்கள் நியமனம் ..... 70
- ❖ மிக நுணுக்கமாகவும் கடினமாகவும் உழைத்து தயாரிக்கப்படுகின்ற நகர் ஊரமைப்புத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில்தான் உண்மையான வெற்றியுள்ளது மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உரை ..... 74


*அட்டைப் பட விளக்கம்*

*முதலாம் பக்க அட்டை* : சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்பினை வழங்கினார்கள். (27.11.2007)

இரண்டாம் பக்க அட்டை : தமிழகத்தின் 31ஆவது மாவட்டமாக புதிய அரியலூர் மாவட்டத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். உடன் மாண்புமிகு மத்திய மற்றும் மாநில அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர். (23.11.2007)



# 17 தனியார் மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகள் செய்ய அரசு நிதியுதவி வழங்கும் புதிய திட்டம்

மக்களின் வாழ்க்கையில் தற்போதைய மாறிவரும் சூழ்நிலைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், நடைமுறை வாழ்க்கையில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் போன்றவை காரணமாக இதய நோயினால் பாதிக்கப்படுவோர் அதிகரித்து வருகிறார்கள். குறிப்பாக, இளம் சிறார்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

இதய நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக அரசு மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சைக்காகக் குழந்தைகள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ள விவரம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்**





கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளின் அரிய உயிர்களைக் காக்கும்பொருட்டு தற்போது காத்திருப்போர் பட்டியலில் உள்ள 12 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு உடனடியாக அறுவை சிகிச்சைகள் செய்வதற்காக, ஆண்டு வருவாய் 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாயுள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்குத் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார். அதன்படி மூடிய இதய அறுவை சிகிச்சை (Closed Heart Surgery) மேற்கொள்வதற்கு 10 ஆயிரம் ரூபாயும், சாதாரண திறந்த இதய அறுவை சிகிச்சை (Ordinary Open Heart Surgery) மேற்கொள்வதற்கு 30 ஆயிரம் ரூபாயும், கடினமான திறந்த இதய அறுவை சிகிச்சை (Complex Open Heart Surgery) மேற்கொள்வதற்கு எழுபதாயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கும் புதிய திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் 21.11.2007 அன்று கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் அவர்களும், 17 தனியார் மருத்துவமனைகளின் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டனர். இந்த ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து, அரசு மருத்துவமனைகளில் இதய அறுவைச் சிகிச்சைக்காகப் பதிவு செய்துகொண்டு காத்திருக்கும் 20 குழந்தைகளுக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள 10 தனியார் மருத்துவமனைகளுக்குத் தமிழக அரசின் சார்பில் அனுமதிகளை வழங்கி இத்திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்திட தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்து கொண்டுள்ள 17 தனியார் மருத்துவ மனைகள் விவரம் பின்வருமாறு:

(1) இராமச்சந்திரா மருத்துவமனை,
போரூர், சென்னை–116

(2) அப்பல்லோ மருத்துவமனை,
சென்னை–6.

(3) பிராண்ட்டியர் லைப்லைன் மருத்துவமனை,
சென்னை–101.

(4) ஆர்வே ஹெல்த்கேர் லிமிடெட், சென்னை–18.

(5) மெட்ராஸ் மெடிக்கல் மிஷன்,
சென்னை–37

(6) கே.ஜெ.மருத்துவமனை, சென்னை–84.

(7) சூரியா மருத்துவமனை, சென்னை–93

(8) மியாட் மருத்துவமனை, மனப்பாக்கம், சென்னை–89.

(9) லைப்–லைன் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, சென்னை–96.

(10) செட்டிநாடு மருத்துவமனை, கேளம்பாக்கம். காஞ்சிபுரம், மாவட்டம்–606103.

(11) வடமலையான் மருத்துவமனை, மதுரை–625002.

(12) அப்பல்லோ ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, மதுரை–625020.

(13) மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை–625107.

(14) பி.எஸ்.ஜி. மருத்துவமனை, கோயம்புத்தூர்–642004.

(15) ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனை, கோயம்புத்தூர்–641044.

(16) கே.ஜி.மருத்துவமனை, கோயம்புத்தூர்–641018.

(17) ஜி.குப்புசாமிநாயுடு நினைவு மருத்துவமனை, கோயம்புத்தூர்–641037.

❂ ❂ ❂

## "ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கு அவர்கள் பயிலும் பள்ளியிலேயே ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் திட்டம்" துவக்க விழா

"ஊனத்தின் தன்மை 40 சதவிகிதத்திற்கும் மற்றும் அதற்கு மேல் இருக்கும் அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் மருத்துவ குழுவின் மூலமாக மருத்துவ சான்றிதழ் மற்றும் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 4.6 இலட்சம் தேசிய அடையாள அட்டைகள் தமிழ் நாட்டில் உள்ள ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு உள்ளது. **31.3.2007 க்குள்** தகுதி உள்ள அனைவருக்கும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும். இந்த தேசிய அடையாள அட்டையின் அடிப்படையில் ஊனமுற்றோர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

ஊனமுற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் அரசு மருத்துவமனைகளுக்கு சென்று, மருத்துவ குழுவின் மூலம் மருத்துவ சான்றிதழ் பெறுவதில் சிரமம் உள்ளது. எனவே, ஊனமுற்ற மாணவ, மாணவியர்களின் சிரமத்தினை தவிர்க்கும் வகையில், அவர்கள் பயிலும் பள்ளிக்கு மாவட்ட மருத்துவக் குழு சென்று, அவர்களைப் பரிசோதித்து, அக்குழு வழங்கும் மருத்துவ சான்றின் அடிப்படையில், மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் மூலம் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டை வழங்க வேண்டும் என்ற திட்டத்தை, 15.11.2007 அன்று சிறுமலர், செவித்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப் பள்ளியில், (Little Flower Convent Higher Secondary School for the Deaf) மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இப்பள்ளியில் ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டையை இதுவரை பெறாத 43 செவித்திறன் குறையுடைய மாணவியர்களுக்கும் மற்றும் 33 பார்வையற்ற மாணவியருக்கும், ஒரே நாளில் மருத்துவ குழுவின் மூலம் பரிசோதித்து, மருத்துவ சான்றிதழும், ஊனமுற்றோருக்கான தேசிய அடையாள அட்டையும் இப்பள்ளியிலேயே உடனடியாக வழங்கப்படும். மேலும், இதே போன்று மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஊனமுற்றோர்களுக்கான தேசிய அடையாள அட்டை அவர்கள் பயிலும் பள்ளியிலேயே வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது."





## திருவள்ளூர் மாவட்டத்தில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து டிட்கோ அமைக்கும் மருத்துவ கிராமம்

இருதய அறுவை சிகிச்சைத் துறையில் முன்னோடியாகத் திகழ்பவர் டாக்டர் கே.எம்.செரியன். இவர், நாட்டிலேயே முதன்முதலில் இருதய இரத்தக் குழாய் மாற்று அறுவை சிகிச்சை, இருதய நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தை இருதய மாற்று அறுவை சிகிச்சை முதலியவற்றை செய்தவர் ஆவார். இவர், டாக்டர் கே.எம்.செரியன் ஹார்ட் பவுன்டேஷன் அமைத்து அதன் மூலமாக இருதய துறையில் சிறப்பான மருத்துவ வசதிகளுடன் கூடிய ஒரு மருத்துவமனையை பிராண்டியர் லைப்லைன் என்ற நிறுவனத்தின் பெயரில் நடத்தி வருகிறார். டாக்டர் கே.எம்.செரியன், டிட்கோவுடன் இணைந்து திருவள்ளூர் மாவட்டத்தில் "பிராண்டியர் மெடிவில்லி" என்ற பெயரில் மருத்துவ கிராம திட்டத்தை உருவாக்க உள்ளார்.

மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பிராண்டியர் லைப்லைன் மருத்துவமனையில் அனைத்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

விதமான இருதய, நுரையீரல் சார்ந்த நோய்களுக்கு முழுமையான மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை வழங்கப்படுகிறது. இங்கு பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள், சிங்கப்பூர், இலங்கை, ஈராக், சிரியா, பாலஸ்தீனம், பஹ்ரைன், பிஜி மற்றும் மலேசியா போன்ற வெளிநாடுகளில் இருந்தும் இருதய நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். பிராண்டியர் லைப்லைன் ஸ்டெம்செல் மற்றும் திசு பொறியியல் சார்ந்த



பொருள்களைத் தயாரித்துப் பயன்படுத்தும் ஆராய்ச்சியில் வெற்றிகண்டு வருகின்றது. இதற்கான ஆராய்ச்சிகள் டைசல் உயிரியல் பூங்காவில் நடைபெற்று வருகின்றது. இந்த டைசல் பூங்கா டிட்கோவால் உருவாக்கப்பட்டதாகும்.

பிராண்டியர் லைப்லைன் மற்றும் டிட்கோவால் உருவாக்கப்படவுள்ள மருத்துவ கிராமம், ஐந்து ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்பட இருக்கின்றது. இதில் 1,000 படுக்கை வசதிகளுடன் கூடிய சிறப்பான மருத்துவ வசதிகள் கொண்ட மருத்துவமனை உருவாக்கப்படவுள்ளது. மேலும், இம்மருத்துவமனையில் புணர் வாழ்வு மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதா, யோகா போன்ற மருத்துவ வசதிகளும் செயல்படவிருக்கின்றன. மேலும், மருத்துவப் பல்கலைக் கழகம், மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி செய்ய நுண்கிருமிகளற்ற பகுதிகள், ஆராய்ச்சி உயிரினங்கள் கூடம் மற்றும் ஆசிய பசிபிக் உயிர் குழுமத்துடன் இணைந்து உலக தாவரவியல் பூங்காவும் அமைக்கப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலமாக சுற்று வட்டார கிராமத்தைச் சேர்ந்த சுமார் 3,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர் என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் வடசென்னைப் பகுதி அனைத்து விதத்திலும் வளர்ச்சி அடைய ஊக்கமளிப்பதாக அமையும். ஏனெனில், மேற்கு மற்றும் தெற்கு சென்னைப் புறநகர்ப் பகுதிகளைவிட வடசென்னைப் புறநகர்ப் பகுதி குறைந்த வளர்ச்சி அடைந்துள்ளது.

இத்திட்ட மதிப்பீடு சுமார் ரூபாய் 450 கோடியாகும். இதற்காக 125 ஏக்கர் நிலத்தை இந்நிறுவனம் வாங்கியுள்ளது. கி.பி.2010 இல் உலகில் உள்ள மொத்த 18 உயிர் மருத்துவமனைகளில் ஒன்றாகவும், இந்தியாவிலேயே முதன் முதலில் அமையவிருக்கின்ற மருத்துவ அறிவியல் பூங்கா மற்றும் உயிர் மருத்துவமனை இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மருத்துவ அறிவியல் பூங்காவைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்காக மருத்துவ முகாம்களை நடத்தவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலமாக சிறந்த மருத்துவ சேவை தமிழகத்தின் பின்தங்கிய கிராமங்களுக்கும் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

இந்தத் திட்டத்திற்காக இந்திய அரசாங்கத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் நிதி ஒதுக்கியுள்ளது. இதனை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, தொழில்நுட்ப வளர்ச்சி ஆணையம் மற்றும் உடல் நல ஆராய்ச்சித் துறை மூலமாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக வழங்கப்படவுள்ளது.



21.11.2007 அன்று கூட்டுத்துறை ஒப்பந்தத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் டாக்டர் கே.எம்.செரியன், தலைவர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர், பிராண்டியர் லைப்லைன் மற்றும் திரு.இராமசுந்தரம், இ.ஆ.ப., தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர், டிட்கோ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழக மின் வாரியத் துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தலைமைச் செயலர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., தொழில் துறைச் செயலர் திரு.எம்.எப்.பரூக்கி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலர் திரு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., மற்றும் டிட்கோ செயல் இயக்குநர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர். ✶

## குப்பையிலிருந்து உரம் தயாரித்து பூங்காக்களுக்கு எருவாகப் பயன்படுத்த சென்னை மாநகராட்சி திட்டம்

சென்னை மாநகராட்சியை தற்போது குப்பையில்லா நகரமாக உருவாக்கும் முகமாக, மக்கும் குப்பையை உரமாக்க பல பகுதிகளில் 108 கட்டுமான உரநிலையங்கள் ரூ.32 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. தற்போது வீட்டுக்கு வீடு சென்று மூன்று சக்கர மிதிவண்டிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என்று சேகரிக்கப்படும் குப்பையில், மக்கும் குப்பையினை இந்த கட்டுமான உரநிலையங்களில் சேகரித்து உரமாக்கும் செயல்முறையை முதற்கட்டமாக – மண்டலம் 4இல் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உரநிலையத்திலும் சுமார் 500 கிலோ முதல் 1 டன் வரை குப்பையினை உரமாக்கலாம். இந்தத் திட்டம் பரவலாக பிற மண்டலங்களிலும் செயல்படுத்த ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

இதில் குப்பைகள் படுகைபடுகையாகக் கொட்டப்பட்டு, ஒவ்வொரு படுகையின் மீதும் சாணம் கரைத்துத் தெளிக்கப்படும். பின்னர், அதன் மீது மணல் சிறிய படுகையாகப் போடப்படும். இவ்வாறு ஒவ்வொரு படுகையாக கட்டுமானத்தின் உயரத்திற்கு குப்பை உரமாக மாற்றப்படும். குப்பைகள் சுமார் 45 முதல் 60 நாட்களுக்குள் உரமாக மாறிவிடும். இந்த உரம் தோட்டங்களுக்கும், சென்னை மாநகராட்சிப் பூங்காக்களுக்கும் பயன்படுத்தப்படும். இந்தத் திட்டத்தினால், குப்பை கொட்டும் வளாகங்களுக்குச் செல்லும் குப்பையின் அளவு வெகுவாகக் குறையும். மேலும் நிலத்திற்கு வளம் சேர்க்கும் உரமும் உருவாகும். பொதுமக்கள் இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினால் குப்பைகளை உரமாக்குவதுடன், குப்பை இல்லா நகரமாக சென்னை மாநகரை உருவாக்கமுடியும். மேலும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பொதுமக்கள் பிரித்து வழங்கினால் தூய்மையான நகராக சென்னை மாநகரை உருவாக்கலாம்.

# பாடுபட முடியாமல், பாடுபடுவதற்கு உடலிலே வலுவில்லாமல் ஆதரவற்ற நிலையிலே இருக்கின்ற ஏழையெளியோருக்காக தொடங்கப்பட்ட திட்டமாகும்

சென்னை தலைமைச் செயலகத்தில் 19.11.2007 அன்று நடைபெற்ற, **"இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின்"** தொடக்க விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை :



இன்று இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்ட தொடக்க விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு உங்களை யெல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமிதம் கொள்கின்றேன்.

நாம் கூடியிருக்கின்ற இந்த "நாமக்கல் கவிஞர் மாளிகை" என்ற பெயர் இந்த நாட்டினுடைய சுதந்திரத்திற்காக பல்வேறு விதமாக பலர் பாடுபட்டிருந்தாலுங்கூட உணர்ச்சிமிக்க கவிதைகளின் மூலமாக தன்னுடைய பங்களிப்பைச் செய்த ஒரு பெரும் பாவலருடைய பெயர் 'நாமக்கல் கவிஞர் மாளிகை' என்பதாகும்.

இங்கே நாம் கூடியிருப்பது, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட உற்ற வழிகள் எவை எவை என்பதையெல்லாம் சிந்தித்து





அதன்படி செயல்படுவதற்காக நம்மைத் தயார்படுத்திக்கொள்ள இந்த நிகழ்ச்சியிலே நாம் கூடியிருக்கின்றோம்.

முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் என்பது, பாடுபட முடியாமல், பாடுபடுவதற்கு உடலிலே வலுவில்லாமல், ஆதரவற்ற நிலையிலே இருக்கின்ற ஏழையெளியோருக்காக தொடங்கப்பட்ட திட்டமாகும். 1962 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு தமிழ்நாட்டில் வாழ்கின்ற முதியோர்களுக்கு மாதம் 20 ரூபாய் உதவித் தொகை வழங்குவது என்று அறிவிக்கப்பட்டு அது நடைமுறையிலே இருந்தது. அப்போது இந்தத் திட்டத்திற்கு இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் என்ற பெயர் இல்லை என்றாலுங்கூட இதனுடைய குறிக்கோளாக முதியோர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது என்பது இருந்தது. 20 ரூபாய்தானா என்று அலட்சியப்படுத்த முடியாது. 20 ரூபாய் வழங்கிய அந்தக் காலகட்டத்தில் பணத்தின் மதிப்பு – இன்றைய தினம் அந்த 20 ரூபாயை மாற்றி பல மடங்கு அதிகமாகத் தருகிற இந்த காலகட்டத்திலுள்ள பண மதிப்பு இவைகளை யெல்லாம் நாம் அறியாதவர்கள் அல்ல.

1957 இல், நானும் நம்முடைய நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களும், எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் சட்டசபைக்கு வந்தபோது, நிதிநிலை அறிக்கையை அன்றைய நிதியமைச்சர் சி.சுப்ரமணியம் அவர்கள் படித்த போது, "100 கோடி ரூபாய் பட்ஜெட் – சதமடிக்கப் போகிறேன்" என்று பெருமையாகச் சொன்னார். 100 கோடி ரூபாய் என்பது அந்தக் காலத்திலே – அந்த பட்ஜெட்டுக்கு அவ்வளவு பெரிய மதிப்பாக இருந்தது. இன்றைக்கு – 40 ஆயிரம் கோடி ரூபாய் – 50 ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவிற்கு நம் மாநில பட்ஜெட்டினுடைய நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கும் போது 1962இல் 20 ரூபாய் முதியோர்களுக்கு மாத ஊதியம் கொடுத்ததை நாம் சாதாரணமாகக் கருத முடியாது. அன்றுள்ள நிலையில் அது முதியோர்களுக்காகத் தரப்பட்ட உரிய நிதி என்றுதான் நாம் கொள்ள வேண்டும்.

அதற்குப் பிறகு, தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு அந்தத் தொகை உயர்த்தப்பட்டது. ஒவ்வொரு ஆட்சியிலும் அந்தத் தொகை உயர்ந்து உயர்ந்து கடந்த ஆண்டு நாங்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது 200 ரூபாய்

முதியோர்களுக்கு கொடுப்பது என்று வழங்கப்பட்டு வந்தது.

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்தத் தொகை தங்களுக்குப் போதுமானதாக இல்லை என்ற முறையீடு முதியோர்களிடமிருந்து – அந்த அமைப்புகளிடமிருந்து வந்த காரணத்தால் அதை 400 ரூபாயாக ஆக்கி, இந்த ஓராண்டு காலமாக முதியோர்களுக்கு ஓய்வூதியத் தொகை 400 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த 400 ரூபாயில் 200 ரூபாய் இந்திரா காந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டத்தின் சார்பாக மத்திய அரசால் வழங்கப்பட்டு, மீதமுள்ள 200 ரூபாயை மாநில அரசே முதியோர்களுக்காக வழங்குகின்ற ஒரு நிலை இன்றைக்கு உருவாகி இருக்கின்றது.

இந்த 400 ரூபாய் அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளில் அவர்களுடைய தேவைக்கேற்ப விரிவடையவும் கூடும். ஆனால், இது 200 ரூபாயாக இருந்து 400 ரூபாயாக ஆகியிருக்கின்றது என்ற செய்தியை மாத்திரம் உங்களுக்கு இப்போது தர விரும்புகின்றேன். நாம் தருகின்ற இந்த ரூபாயை மத்திய அரசு சிந்தித்துப் பார்த்து இந்த முதியோர் ஓய்வூதிய நிதியாக

**“நாம் தருகின்ற 400 ரூபாயில் 200 ரூபாய் நம்முடைய பணமும், 200 ரூபாய் மத்திய சர்க்கார் பணமும் இருக்கின்றது. அந்த மொத்தம் 400 ரூபாயையும் மத்திய அரசே தருகின்ற வகையில் இருந்தால் இன்னும் நலமாக இருக்கும்.”**

அவர்கள் வழங்குகின்ற நிதியிலே ஒட்டுமொத்த 400 ரூபாயையும் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அப்போதுதான் வீட்டிலே வேலையற்று, வேலையைப் பார்க்க வாய்ப்பற்று, உதவியற்று இருக்கின்ற முதியோர்களுக்கு தக்க நிவாரணமாக அது அமைய முடியும் என்பதால், இந்த நாளில் அன்னை





இந்திரா காந்தி அவர்களின் பிறந்த நாளைப் போற்றுகின்ற இந்த நல்ல நாளில், அவர்களுடைய பெயரால் நடைபெறுகின்ற இந்த ஓய்வூதிய தேசியத் திட்டத் தொடக்கத்தில் இந்த முறையீட்டை நான் மத்திய அரசுக்கு வைக்க விரும்புகின்றேன்.

நாம் தருகின்ற 400 ரூபாயில் 200 ரூபாய் நம்முடைய பணமும் 200 ரூபாய் மத்திய சர்க்கார் பணமும் இருக்கின்றது. அந்த மொத்தம் 400 ரூபாயையும் மத்திய அரசே தருகின்ற வகையில் இருந்தால் இன்னும் நலமாக இருக்கும். நம்முடைய பொருளாதார வசதிக்கும் அது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்காட்டி, தமிழ்நாட்டில் நாம் நிறைவேற்றுகின்ற பல நல்ல திட்டங்களை எல்லாம் மத்திய அரசு ஆதரித்து, வரவேற்று பாராட்டி அவர்களே இந்தத் திட்டங்களை கையிலே எடுத்துக் கொண்டு இன்றைக்கு மக்களுக்கு அந்தத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டிலே 1962ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தை இப்போது 400 ரூபாய் அளவிற்கு நாம் உயர்த்தியிருக்கின்றோம். இதற்கு வழிவகுத்த நம்முடைய இந்தியப் பேரரசுக்கு இந்த நாளில் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள உங்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்து இந்திரா காந்தி அவர்களுடைய பிறந்த நாளைப் போற்றுகின்ற நாளில் அவர்கள் விரும்பிய இந்தியாவை நிர்மாணிப்போம் என்ற உறுதியோடு விடைபெற்றுக் கொள்கிறேன். ✶

## முதியோர் உதவித்தொகைத் திட்டம்

சமூகநலத் துறையினைச் சார்ந்த முதியோர் உதவித் தொகைத் திட்டம், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் உதவித்தொகைத் திட்டம், ஆதரவற்ற விதவை உதவித் தொகைத் திட்டம், ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள் உதவித்தொகைத் திட்டம், மற்றும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் உதவித் தொகைத் திட்டம் ஆகிய திட்டங்கள் வருவாய்த் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 65 வயது பூர்த்தியடைந்த ஆதரவற்ற நிலையில் உள்ள அனைவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.400/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுவதை கருத்தில் கொண்டு மைய அரசு கடந்த 1995–ஆம் ஆண்டு தேசிய முதியோர் உதவித் தொகைத் திட்டத்தினை அறிமுகம் செய்து தனது பங்களிப்பாக ரூ.75/– வழங்கியது. மைய அரசின் உதவியோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2006–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், மைய அரசின் உதவியோடு செயல்படுத்தப்படும் முதியோர் உதவித் தொகை மற்றும் அதனைச் சார்ந்த நான்கு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வந்த ரூ.200/–ஐ ரூ.400/– ஆக 1.8.2006 முதல் உயர்த்தி வழங்கிட உத்திரவிட்டார்கள். 65 வயது நிறைவடைந்த ஆதரவற்ற முதியோர் மட்டுமே உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவார்கள். முதியோர் உதவித்தொகை பெறுவதற்கு ஆதரவற்றவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தற்போது தளர்த்தப்பட்டு 65 வயதிற்கு மேற்பட்ட வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் முதியோர் உதவித் தொகை பெற தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்பட்டிருப்பது, சிறப்பம்சமாகும்.

# மருத்துவத் துறையில் மகத்தான சாதனைகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
விளக்கம்

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மருத்துவத் துறையில் எந்தவிதமான முன்னேற்றமும் செய்யப்படவில்லை என்றும், தேர்தல் அறிக்கையிலே கூறியதைக் கூடச் செய்யவில்லை என்றும், அரசு மெத்தனமாக நடந்து வருகிறது என்றும் கூறப்பட்ட தகவல்கள் குறித்து அரசுத் துறையின் சார்பில் தரப்பட்டுள்ள விளக்கங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக எழுதுகிறேன்.

2006–இல் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,862 மருத்துவப் பணியிடங்கள் காலியாக இருந்தன. அதற்குப் பின் ஏற்பட்ட காலிப் பணியிடங்களையும் சேர்த்து இந்த ஒன்றரையாண்டில் இதுவரை 3,000 மருத்துவர்கள், தேர்வாணையம் மற்றும் வேலைவாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 1,405 மருத்துவர்கள் நவம்பர் 2006 முதல் கால முறை ஊதியத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். இதேபோல் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 2,540 செவிலியர்கள், 419 மருந்தாளு நர்கள், 280 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் முறையான ஊதிய விகிதத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக இருந்த மருத்துவம் சாரா மற்றும் அடிப்படை பணியாளர்கள் 10,000 காலிப் பணியிடங்களை நிரப்ப அனுமதி அளிக்கப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

கடந்த ஒன்றரை ஆண்டில் 2,400 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது 1,000 செவிலியர்களுக்கு நியமன ஆணை தயாராக உள்ளது. இவர்கள் விரைவில் பணியில் சேருவார்கள்.

தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 பல் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். 155 இந்திய முறை மருத்துவர்கள் (சித்தா மற்றும் யுனானி) தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட உள்ளனர். இதற்கான தேர்வு முடிந்து, நேர்காணல் நடைபெற உள்ளது. 9 ஓமியோபதி மருத்துவர்கள் மற்றும் 10 யோகா மற்றும் இயற்கை மருத்துவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.



பல ஆண்டுகளாக நகராட்சிகளில் சுகாதார அலுவலர்கள் நியமனம் செய்யப்படாமல் இருந்தனர். தற்போது தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 31 சுகாதார அலுவலர்கள் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

1992–93இல் சுகாதார ஆய்வாளர் பயிற்சி முடித்து நியமனம் செய்யப்படாமல் இருந்த 600 நபர்கள் மற்றும் காந்தி கிராமம் மற்றும் பாண்டிச்சேரி பல்கலைக்கழகங்களில் சுகாதார ஆய்வாளர் பயிற்சி முடித்தவர்களையும் சேர்த்து, இதுவரை 800 நபர்கள் தற்போது சுகாதார ஆய்வாளர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிராம சுகாதார செவிலியர் பயிற்சி முடித்த 1,100 அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் கிராம சுகாதார செவிலியர்களாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கிராம மற்றும் நகர்ப்புற மக்கள், தொற்று மற்றும் தொற்றாத நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து மேல் சிகிச்சை அளிக்கும் பொருட்டு கொண்டுவரப்பட்ட மகத்தான திட்டம் "வருமுன் காப்போம்" திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் 2006–2007 மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுகளில் 9,000 முகாம்கள் நடத்த ஆணையிடப்பட்டு, இதுவரை 4,491 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களினால் பயனடைந்தோரின் எண்ணிக்கை 47,26,944 ஆகும்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் வியக்கும் வண்ணம் கருவிலே இருக்கும் குழந்தைக்கும் உணவு அளிக்கும் உன்னதத் திட்டமாக, ஏழை கர்ப்பிணிகள் பயன்பெறும் வகையில் "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்" மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஒவ்வொருவருக்கும் 6,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த 2006–2007 ஆம் ஆண்டில் 2,41,095 கர்ப்பிணிப் பெண்களுக்கு 100 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த நடப்பாண்டில் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை 2,48,908 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 118.95 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

24 மணி நேர பிரசவ சேவைத் திட்டம் 2006 வரை 180 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டம் மேலும் 820 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு தற்போது 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமல்படுத்தப்படுகிறது. இதனால் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் பிரசவங்கள் பெருமளவில் உயர்ந்துள்ளன. தனியார் மருத்துவமனைகளில் நடந்து வந்த பிரசவங்களின் எண்ணிக்கையும், வீட்டிலேயே நடந்த பிரசவங்களின் எண்ணிக்கையும் குறைந்து தற்போது அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நிகழும் பிரசவங்கள் கணிசமாக உயர்ந்துள்ளன. நடப்பாண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் 87,881 பிரசவங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த ஆண்டோடு ஒப்பிடும்போது நடப்பாண்டில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் 44,000 பிரசவங்கள் அதிகம் நிகழ்ந்துள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 98.7 சதவிகித பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன.

31 கோடி ரூபாய் செலவில், 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த இடங்களில் கூடுதல் கட்டடப் பணிகள் தற்போது தொடங்கப்பட்டு வருகின்றன. மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் 5 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். ஏற்கெனவே உள்ள 106 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதலாக 85 மருத்துவர்களும் மற்றும் மருத்துவம் சாராத பணியிடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. 100 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு இவைகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் ஒரு மருத்துவர், செவிலியர் மற்றும் ஓட்டுநர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2006–2007 ஆம் ஆண்டில் மட்டும், மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், செமி ஆட்டோ அனலைசர், லித்தோடிரிப்ஸி, 64 ஸ்லைஸ் சி.டி. ஸ்கேன் போன்ற நவீன மருத்துவ உபகரணங்கள் சுமார் 83 கோடி ரூபாய்க்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னை ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் சேலம் மருத்துவமனைகளுக்கு 4 கோடி ரூபாய் செலவில் கோபால்ட் சிகிச்சைக் கருவிகள் வழங்கப் பட்டுள்ளன. 2006க்கு முன்னர் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இரண்டு கல்லூரி மருத்துவமனையில்

மட்டுமே இருந்தன. தற்போது இந்தக் கருவி மேலும் 7 மருத்துவமனைகளில் நிறுவப்பட்டு வருகிறது. 64 ஸ்லைஸ் சி.டி.ஸ்கேன் மற்றும் லித்தோடிரிப்ஸி கருவிகள் 2006 க்கு முன்னர் எந்த மருத்துவமனையிலும் இல்லை. தற்பொழுது இந்த நவீன மருத்துவக் கருவிகள் சென்னை மருத்துவக் கல்லூரிக்கும், மதுரை இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் 2006 மே மாதத்திற்குப் பிறகுதான் மாவட்டங்களில் 35 மருத்துவமனைகளில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டது. இப்பணிகள் அனைத்தும் முடியும் தருவாயில் உள்ளன. தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் 227 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் கட்டடங்கள் கட்ட 220 கோடி ரூபாயும், இந்தக் கட்டடங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்க 30 கோடி ரூபாயும், கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்ய 21.27 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 271 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கட்டடங்கள் கட்டுவதற்கு பொதுப்பணித் துறை ஒப்பந்தப் புள்ளிகள் கோரியுள்ளது.

மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டவையாகும். அவைகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு தேவைப்படும் கட்டடங்கள், உபகரணங்கள், பணியாளர்களின் எண்ணிக்கை ஆகியவைகளை ஆய்ந்து அரசுக்கு வழங்கும் பொருட்டு ஓய்வுபெற்ற கல்லூரி முதல்வர் திரு. கணேசன் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவரது அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். அதுவரை காத்திராமல், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையை 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டு முதல் கட்டமாக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப்பணி தொடங்கப்பட உள்ளது. மேலும் செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தலா 25 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. மதுரை இராஜாஜி மருத்துவமனை விரிவாக்கப் பணிகளுக்காக 22 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. செங்கல்பட்டு, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, கீழ்ப்பாக்கம், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் சென்னை பல் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தங்கும் விடுதிகள் கட்ட 21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட 13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய அவசர கால ஊர்திகள் வட்டாரம் ஒன்றிற்கு ஒரு ஊர்தி வீதம் 187 வட்டாரங்களுக்கு வழங்கப்பட்டு அவைகள் உபயோகத்தில் உள்ளன. எஞ்சிய 198 வட்டாரங்களுக்கும் அவசர கால ஊர்திகள் வழங்கப்பட ஆணைகள் வெளியிடப்பட்டு கொள்முதல் செய்யும் நிலையில் உள்ளது. இந்த ஊர்திகள் அனைத்தும் விரைவில் செயல்படத் தொடங்கும். இந்த ஊர்திகள் தன்னார்வ நிறுவனங்களால் இயக்கப்பட்டு, கருவுற்ற தாய்மார்கள் மற்றும் அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நோயாளிகளை குறைந்த செலவில் அரசு மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

பேறு காலத்தில் ஏற்படும் சிசு மரணம் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் மரணம் ஆகியவற்றை குறைப்பதற்காக 24 மணி நேரமும் செயல்படும் அவசர கால தாய் சேய் நல மையங்கள் 66 மருத்துவமனைகளில் துவக்கி வைக்கப்பட்டு செயல்படாமல் இருந்து வந்தன. இந்த மருத்துவமனைக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு, சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 200 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டம் மேலும் 32 அரசு மருத்துவமனைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கட்டடப்பணிகள் தொடங்க 41 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டடப்பணி விரைவில் தொடங்கப்படும். திருவாரூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரிகள் துவங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு ஆரம்பப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1,419 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்கள் மற்றும் 270 மாவட்ட மற்றும் வட்ட மருத்துவ மனைகளில் "மருத்துவப் பயனாளிகள் நலச்



**"இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் வியக்கும் வண்ணம் கருவிலே இருக்கும் குழந்தைக்கும் உணவு அளிக்கும் உன்னதத் திட்டமாக, ஏழை கர்ப்பிணிகள் பயன்பெறும் வகையில் "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்" மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றது."**

சங்கங்கள்" ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்ட மருத்துவ மனைகளிலும் சேவையை மேம்படுத்த ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள சங்கங்களுக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

12,619 கிராம சுகாதார மற்றும் குடிநீர் தூய்மைக் குழு அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் கிராமங்களில் சுகாதார நடவடிக்கை மேற்கொள்ள 12.619 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

2001–2002ஆம் ஆண்டில் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டோர் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டது. கருவுற்ற தாய்மார்களில் எச்.ஐ.வி.யால் பாதித்தோர் 1.13 சதவிகிதமாக கண்டறியப்பட்டது. இந்த அரசு எடுத்த தடுப்புப் பணிகள், மருத்துவ சிகிச்சைப் பணிகள் போன்ற முயற்சிகளால் 2006இல் பாதிக்கப்பட்டோர் சதவிகிதம் 0.38 ஆக குறைக்கப்பட்டது. நாட்டிலேயே எச்.ஐ.வி. பாதித்தோரின் எண்ணிக்கையை குறைத்தது தமிழ்நாட்டில் மட்டும்தான்.

சென்னை குழந்தைகள் நல மருத்துவ மனையில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டவும், இராயப்பேட்டை மருத்துவமனையில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டவும், வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் மாநில பொதுப் பணித்துறையால் தயாரிக்கப்பட்டு நிருவாக ஒப்புதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டடப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பரிசோதனை சேவை கிடைப்பதற்கு 10 நடமாடும் பரிசோதனை வாகனங்களும், இரண்டு நடமாடும் தகவல் கல்வி மற்றும் தொடர்பு வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

பூச்சிகளால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மருந்துகள் மற்றும் சிகிச்சை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆய்வகப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தீவிர சிகிச்சை வசதிகள், தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மருந்துகள் குறித்து தகவல் அறியவும், அவற்றின் விலை சரிதானா என்பதை உறுதி செய்து கொள்ளவும், தரம் பற்றி தெரிந்து கொள்ளவும் ஏதுவாக மருந்துகள் தகவல் மற்றும் மருந்தியல் விழிப்புணர்வு மையம் ஒன்று பொது மக்கள் நலன் கருதி தொடங்கப்படவுள்ளது.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து இந்த அரசு மெத்தனமாக நடைபெறவில்லை என்பதை புரிந்து கொள்ள முடியும். அண்மையில் கூட கடந்த மாதம் சேலத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டெல்லியில் உள்ள All India Institute of Medical Sciences மருத்துவமனையைப் போல அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவ மனையாக அங்கேயுள்ள மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கான முயற்சியில் மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தம்பி அன்புமணி ஈடுபட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு நானே சென்று கலந்துகொண்டேன். மூன்றாண்டு கால முயற்சிகளுக்குப் பின்னர் தான் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதுபோன்ற கால தாமதம் அரசுத் துறைகளில் ஒன்றிரண்டில் ஏற்படுகின்றதென்றால், அதற்கான காரணம் நடைமுறைகளில் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகளும், தவறுகள் எதுவும் நடந்துவிடக் கூடாது என்பதில் காட்டப்படும் அக்கறையும் தான். எனவே அரசு மெத்தனமாக செயல்படுகிறது என்றெல்லாம் ஒட்டுமொத்தமான முடிவுக்கு வந்துவிடக் கூடாது. ★



# மலேசியத் தமிழர்களின் துயரத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
டாக்டர் **மன்மோகன் சிங்** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
எழுதிய கடிதம்

கோலாலம்பூரில், 25.11.2007 அன்று தமிழர்கள் மலேசிய அரசின் காவல்துறையால் நடத்தப்பட்ட விதம் குறித்து நான் மிகவும் வருத்தம் அடைந்துள்ளேன்.

மலேசியாவில் சிறுபான்மை இந்திய வம்சாவழியினர் ஒதுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழர்கள் பேரணி நடத்தியுள்ளனர். மலேசியாவிலுள்ள இந்திய வம்சாவழி சிறுபான்மையினரில் தமிழர்கள் மிகப் பெரும் சதவிகிதத்தில் உள்ளனர் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள் மகாத்மா காந்தியின் பெரிய படங்களை ஏந்திச் சென்றுள்ளனர். சம உரிமைகளுக்காக இந்தப் பேரணி நடத்தப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டம் செய்தவர்களை ஒடுக்குவதற்கும், பேரணியைக் கலைப்பதற்கும் மலேசிய காவல் துறையினர் நீர்ப்பீய்ச்சி இயந்திரங்களையும், கண்ணீர்ப் புகையையும் பயன்படுத்தியுள்ளனர்.

அதுவுமின்றி அவர்கள் 250 இந்திய வம்சாவழியினரையும் கைது செய்துள்ளனர்.

கோலாலம்பூரில் நடந்துள்ள நிகழ்ச்சிகளால் தமிழக மக்கள் கவலை அடைந்துள்ளனர். மிக நீண்ட காலமாக மலேசியாவில் வாழும் தமிழர்கள் மோசமாக நடத்தப்பட்டு வருவது குறித்து தமிழர்களின் கவலையையும், அக்கறையையும் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மலேசியத் தமிழர்களின் துயரத்தையும், அவர்கள் மோசமாக நடத்தப்படுவதையும் முடிவுக்குக் கொண்டுவரத் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★






# காவல்துறையின் நற்பணிகளுக்குத் தேவையான சாதனங்களை வழங்குவதற்கு எல்லோரும் முன் வர வேண்டும்

காவல்துறையினருக்கு
டி.வி.எஸ். நிறுவனத்தின் சார்பில்
100 இருசக்கர வாகனங்கள்
வழங்கிய விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை
(3.12.2007)

நான் அன்போடும் பாசத்தோடும் செல்லமாக அழைக்கிற வேணு அவர்கள் இந்த அரசின் காவல் துறைக்கு உதவிகரமாக இருக்க வேண்டும் என்பதற்காக 100 இருசக்கர வண்டிகளை வழங்கியிருக்கின்றார்கள். அவர் என்னை இங்கே வரவேற்றபோது எவ்வளவோ வேலைகளுக்கிடையே இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி என்று சொன்னார். இதுபோல உதவிகளைச் செய்வதாக இருந்தால் எவ்வளவு வேலைகள் இருந்தாலும் அவைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இந்த வேலைகளைக் கவனிப்பதற்காக நிச்சயமாக வருவேன் என்பதை வேணு அவர்களுக்கு மாத்திரமல்ல; அவருடைய நண்பர்களாக இருக்கின்ற தொழில் அதிபர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொண்டு அத்தகைய சந்தர்ப்பங்களை நழுவவிடாதீர்கள் என்று அவர்களையும் கேட்டுக்கொண்டு

வேணு சீனிவாசன் அவர்களுக்கு நன்றியை தமிழக அரசின் சார்பாக, காவல் துறையின் சார்பாக தெரிவித்துக் கொள்கின்றேன்.



> **“இவைகளை பயன்படுத்திக் கொண்டு இங்கே மேலும் பல பயனுள்ள காரியங்களை இப்பொழுதே காவல் துறை அதிகாரிகள் திறம் பட தமிழகத்திலே குறிப்பாக சென்னை மாநகரத்திலே செயலாற்றி வருகின்றார்கள், பணியாற்றி வருகின்றார்கள்”**

ஏற்கெனவே ஹுண்டாய் கம்பெனியின் சார்பாக காவல் துறையினுடைய பயன்பாட்டிற்காக 100 கார்கள் வழங்கப்பட்டன. அந்த நிறுவனத்தின் அதிபரோடு நான் பேசிக்கொண்டிருந்தபோது அவரிடத்திலே நான் தெரிவித்ததை ஏற்றுக்கொண்டு உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்து, அவைகளும் சென்னை மாநகரத்திலே காவல்துறைக்காக பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து வேணு அவர்களிடத்திலே நான் பேசும் போது இதேபோல அரசுக்குத் தேவையான மக்களைச் சார்ந்த உதவிகளை அவர் செய்வதற்கு தயாராக இருக்கக் கூடிய ஒருவர் என்ற முறையில் இதனையும் நான் அவரிடத்தில் சொன்னேன்.

ஏற்கெனவே அவர் சாய்பாபா அவர்களிடத்திலே தொடர்பு கொண்டு அவருடைய முயற்சியால் கிருஷ்ணா தண்ணீர் உரிய அளவு வந்து சேர்வதற்கும் அதனுடைய செலவுகளில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதற்கும் சம்மதிக்க வைத்து, அவர் சென்னைக்கு வந்து போன விபரம் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அந்த ஏற்பாட்டிற்கும் மூல காரணமாக இருந்தவர் வேணு சீனிவாசன் என்ற முறையிலும், இன்றைக்கு இந்த 100 இருசக்கர வண்டிகள் பல்வேறு ஆயத்தங்களோடு வண்ண விளக்குகள் இன்னும் அதிலே சவாரி செய்கின்றவர்களுக்கு கடமையை நிறைவேற்றுவதற்கான சாதனங்கள் அத்தனையும் பொருந்திய இருசக்கர வண்டிகள் நமக்குத் தரப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே மேலும் பல பயனுள்ள காரியங்களை இப்பொழுதே காவல்துறை அதிகாரிகள் திறம்பட தமிழகத்திலே குறிப்பாக சென்னை மாநகரத்திலே செயலாற்றி வருகின்றார்கள், பணியாற்றி வருகின்றார்கள். அப்பணி மேலும் சிறக்க இதுபோன்ற நன்கொடைகள் உதவும் என்று நான் கருதுகின்றேன்.

வேணுசீனிவாசன் அவர்களைப் பின்பற்றி காவல் துறைக்கு தேவையான இதுபோன்ற நற்பணிகளுக்குத் தேவையான சாதனங்களை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்று நான் எல்லோரையும் கேட்டுக் கொண்டு உங்கள் அத்தனை பேருடைய சார்பாக வேணு சீனிவாசன் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உலக மனித உரிமை நாள் செய்தி



ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 10ஆம் நாள், ‘உலக மனித உரிமை நாள்’ எனக் கடைப்பிடிக்கப்படுகிறது.

சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளும், ஆண், பெண் எனும் பால் வேறுபாடுகளுமின்றி நமது அரசியல் அமைப்புச் சட்டம் அளிக்கும் அடிப்படை உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரத்துடன், சமத்துவத்துடன், கண்ணியத்துடன் வாழ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தும் நாள் ‘உலக மனித உரிமை நாள்’.

இந்நாள் நலிந்தோர்க்கும், மெலிந்தோர்க்கும் பாதுகாப்பு உணர்வை நல்கிடும் நாள்!

வலிமை மிகுதியால் எளியோரை வருத்தி வஞ்சகம் புரிவோரைச் சிந்திக்கச் செய்திடும் நாள்!

இந்நாளில், ‘யாதும் ஊரே; யாவரும் கேளிர்!’ எனும் சங்கத் தமிழ்ப் புலவன் தந்த பொதுநோக்குச் சிந்தனையைப் புதுப்பிப்போம்!

*‘எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
*மாணா செய்யாமை தலை’*

‘எவ்வளவிலும், எப்பொழுதும், எவரையும் இழிவுபடுத்தும் செயலை மனத்தால் கூட நினைக்காமல் இருப்பதே முதன்மையான சிறப்பாகும்’.

என்னும் அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளும், அதுதரும் பொருளும் ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இயல்பாய்க் கிளர்ந்தெழுந்து மனிதனை மனிதனாய் மதிக்கும் மனிதநேயம் வளர்ப்போம் என உறுதியேற்போமாக.



# கொடி நாள் நிதிக்குத் தாராளமாய் நிதி வழங்கி உதவிடுவீர்!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்**
**வேண்டுகோள்**



டிசம்பர்த் திங்கள் 7ஆம் நாள் கொடிநாள். நாடு காத்திடும் அரும்பணியில் பீடுடன் கடமையாற்றிடுவோர் நமது படைவீரர்கள். அவர்தம் நலன் பேணிடும் திருப் பணிகளில் பங்கெடுத்திடும் உணர்வை நாட்டு மக்களிடம் வளர்த்திடும் திருநாள் இந்நாள்.

தமிழக மக்கள் வாரி வழங்கும் கொடி நாள் நிதியைப் பயன்படுத்தி, முன்னாள் படை வீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் தேவையான பல உதவிகளை ஆற்றி வருகிறோம். உலகப் போரில் பணியாற்றி, வறிய நிலையில் வாடும் முன்னாள் படை வீரர்களுக்கு 700 ரூபாய் வீதமும், அவர்களின் விதவையர்களுக்கு 500 ரூபாய் வீதமும் மாதந்தோறும் நிதியுதவி வழங்குகிறோம்.

தொழுநோய், காசநோய், பக்கவாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும், பார்வை இழந்தோருக்கும் மாதம் 500 ரூபாயும், புற்றுநோயாளிகளுக்கு 700 ரூபாயும், பக்கவாதம் மற்றும் பார்வையற்ற சிறாருக்கு 300 ரூபாயும் மாதந்தோறும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கி வருகிறோம்.

முன்னாள் படை வீரர் குடும்பங்களின் கல்வி வளர்ச்சிக்காக மருத்துவப் பட்டப் படிப்பில் 2 இடங்கள், பல் மருத்துவப் பட்டப் படிப்பில் ஒரு இடம், பி.பார்ம்., பி.எஸ்சி.நர்சிங், பிசியோதெரபி படிப்புகளில் தலா ஓர் இடம், பொறியியல் பட்டப் படிப்பில் 81 இடம், பாலிடெக்னிக் பட்டயப் படிப்பில் 80 இடம், பி.ஏ., பி.எஸ்சி., பட்டப் படிப்புகளில் ஒவ்வொரு கல்லூரியிலும் 6 இடங்கள், பி.எட்.இல்





ஒவ்வொரு கல்வியியல் கல்லூரியிலும் ஒரு இடம், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 132 இடங்கள், கால்நடை ஆய்வாளர் பயிற்சியில் 5 சதவீத இடங்கள் என கல்விப் பிரிவுகள் அனைத்திலும் இடஒதுக்கீடுகளை வழங்கி முன்னாள் படை வீரர்களும், அவர்களது வாரிசுகளும், வழிவழியாகப் பயன்பெற படிக்கும் வாய்ப்புகளைத் தந்துள்ளோம்.

பள்ளி முதல் கல்லூரி வரை படிப்பு உதவித் தொகையும், முன்னாள் படை வீரர்களுக்கு மறு வேலைவாய்ப்புகளுக்கு வழிவகை செய்வதுடன், அவர்களின் குடும்பத்தாரின் வேலை வாய்ப்புகளுக்கும் உதவும் பல்வேறு பயிற்சிகளை அளிக்கிறோம்.

2006 இல் இந்த அரசு அமைந்த பிறகு, முன்னாள் படை வீரர்களின் குறைகளை உடனுக்குடன் களைந்திட, மாவட்டங்களில் உள்ள முன்னாள் படை வீரர் நல அலுவலகங்கள் அனைத்தையும் கணினி மயமாக்கி அவற்றை முன்னாள் படை வீரர் நல இயக்ககம் மற்றும் முப்படைகளின் ஆவணக் காப்பகங்களுடன் ஒருமுகமாக இணைத்திடும் இணையதள வசதியை ஏற்படுத்தியுள்ளோம்.

முப்படை வீரர்கள், முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரை நாடிச் சென்று நலம் காத்திட, வாகனங்கள் இல்லாத 8 மாவட்டங்களுக்கு, 34 இலட்சம் ரூபாயில் 8 வாகனங்கள் வழங்கியுள்ளோம்.

நீண்ட காலமாக காலியாக இருந்த 16 உதவி இயக்குநர் பணியிடங்களையும், 17 நல அமைப்பாளர் பணியிடங்களையும் நிரப்பியுள்ளோம். தமிழ்நாடு காவல்துறையில் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற 42 முன்னாள் படை வீரர்களுக்கு நிரந்தர பணி நியமனம் அளித்துள்ளோம்.

2006–07 இல் மட்டும் முன்னாள் படை வீரர் குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரம் பேருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் 11 கோடி ரூபாய் அளவுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் தமிழ் மக்கள் அன்புடன் வாரி வழங்கிய கொடி நாள் நிதியின் துணை கொண்டே நிறைவேற்றப்பட்டுள்ளன.

வரும் ஆண்டுகளிலும் முன்னாள் படை வீரர் குடும்பங்களின் நல வாழ்வையும், வள வாழ்வையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பும், அரும் கடமையும் நமக்குண்டு என்னும் உணர்வோடு, அவற்றை நிறைவேற்றும் வகையில் இந்த ஆண்டின் கொடி நாள் நிதிக்குத் தாராளமாய் நிதி வழங்கி உதவிடுவீர் எனத் தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

**நாடு காத்திடும் படை வீரர்களை நாம் காத்திடுவோம் –**
**கொடி நாளில், நம்மால் இயன்ற வரை நிதியளித்திடுவோம்.**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்.
தலைமைச் செயலகத்தில் முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களின்
பிறந்தநாளையொட்டி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.
(19.11.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களை அவரது
இல்லத்தில் டெல் நிறுவனத்தின் உலகளாவிய வசதிகள் துறை
முதுநிலை துணைத் தலைவர் திரு.கிப் தாம்ஸன் சந்தித்துப் பேசினர். (3.12.2007)





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்.
தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற காவல்துறையின் செயல்பாடுகள் குறித்த
ஆய்வுக் கூட்டத்தில், புது டில்லி திகார் சிறையில், தமிழ்நாட்டின் சிறப்புக் காவல் படையை
பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதற்காக புதுடெல்லி மாநில அரசு அளித்த
ரூபாய் 22 கோடிக்கான காசோலையை தமிழகக் காவல்துறை இயக்குநர்
திரு. பி. இராஜேந்திரன், இ.கா.ப., அவர்களிடம் வழங்கினார். (22.11.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்,
தலைமைச்செயலகத்தில் புதியதாக கட்டப்படவுள்ள சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர்
அலுவலகத்தின் மாதிரி கட்டட வடிவமைப்பை பார்வையிட்டார்.(4.12.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்,
தலைமைச் செயலகத்தில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின்
வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு, புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில்
மேதகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி.**பிரதிபா பட்டீல்** அவர்களால்,
இந்தியாவிலேயே காற்றாலை சக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பதில்
முதல் மாநிலமாகத் திகழும் தமிழகத்திற்கு வழங்கப்பட்ட கேடயத்தை மாண்புமிகு மின்சாரத்துறை
அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். (1.12.2007)



சென்னையில் மகாகவி பாரதியார் அவர்களின் 126-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு
அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்ட புகைப்படத்திற்கு
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன்,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி,
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர்
திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர்
ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். (11.12.2007)





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களை,
11.12.2007 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் இலக்கியச் சுற்றுப்பயணம்
மேற்கொண்ட மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சந்தித்தனர். இந்நிகழ்வின்போது
மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன், கவிப்பேரரசு வைரமுத்து,
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப.,
செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் திரு.ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப.,
தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் திரு.ம.இராசேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களை,
11.12.2007 அன்று அவரது இல்லத்தில் பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர்
திரு. சுக்காதியா தோரட் அவர்கள் தனது துணைவியார் திருமதி. விமல் தோரட் அவர்களுடன்
சந்தித்துப் பேசினார்.



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள்
புதுடெல்லியில் நடைபெறும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு நாள் விழாவினை பார்வையிட்டார். தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. கம்பம் செல்வேந்திரன், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர். (18.11.2007)





மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள்
சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், தென் இந்திய உணவகங்களின் கூட்டமைப்பும் இணைந்து நடத்திய, தமிழகத்தில் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து உரையாற்றினார். உடன் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., சுற்றுலாத்துறை செயலர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., சுற்றுலாத்துறை இயக்குநர் மற்றும் நிருவாக இயக்குநர் டாக்டர். எம்.இராசாராம், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர். (24.11.2007)



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில் தமிழகத்தில் வியப்பூட்டும் ஆரம்ப சுகாதார நிலைய சேவைகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு 13.5.2006 அன்று பொறுப்பேற்ற பின்னர் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மிகச் சிறப்பான பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

- இந்த அரசு பதவியேற்றபோது ஆரம்ப சுகாதார நிலையங்களில் 800 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. இவ்வரசு மேற்கொண்ட இடையறாத முயற்சிகளின் விளைவால் கடந்த 15 மாத காலத்தில் மருத்துவர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு, இன்று 315 மருத்துவர் பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. மேலும், கூடுதலாக 85 சிறப்பு மருத்துவர்களும், 100 நடமாடும் மருத்துவக் குழுவிற்கான மருத்துவர்களும் இந்த அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

- அதேபோன்று, முன்னர் 3,081ஆக இருந்த ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் ஒப்பளிப்பு எண்ணிக்கை தற்போது 3,266 ஆக உயர்ந்துள்ளது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் பணி நியமன தடைச் சட்டம் நீக்கப்பட்டு, வரலாறு காணாத அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செவிலியர் நியமனங்கள், மருத்துவ உதவிப்பணியாளர் நியமனங்கள் நடைபெற்றுள்ளன. 780 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா 3 செவிலியர்கள் வீதம் 2,340 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 220 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 660 செவிலியர்கள் நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இதேபோன்று மருந்தாளுநர் காலிப்பணி யிடங்கள் நிரப்ப ஒப்புதல் அளிக்கப்பட்டதில் 50 மருந்தாளுநர் பணியிடங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிரப்பப்பட்டுள்ளன. 19 துப்புரவுப் பணியாளர்கள், 17 துப்புரவாளர்கள், 13 ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

- 2006ஆம் ஆண்டில் (ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய) 45,950 பிரசவங்கள் முன்னர் நடைபெற்றன. தற்போது மருத்துவ காலிப்பணியிடங்களை, செவிலியர் உட்பட மருத்துவம் சார்ந்த பணியிடங்களை நிரப்பப்பட்டதன் விளைவாக, 24 மணிநேர பிரசவ சேவை மேம்படுத்தப்பட்டு 2007ஆம் ஆண்டில் (ஏப்ரல் முதல் அக்டோபர் முடிய) 71,450 பிரசவங்கள் நடைபெற்றுள்ளன. கடந்த ஆண்டை விட 25,500 பிரசவங்கள் கூடுதலாக நடைபெற்றுள்ளன. 56 விழுக்காடு சாதனை எட்டப்பட்டுள்ளது.

- வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 385 ஆரம்ப சுகாதார நிலையங்கள் பேறுகால அவசர

சிகிச்சை மற்றும் இளஞ்சிசு கவனிப்பு மையங்களாக மேம்படுத்தி, 24 மணி நேர சேவை வழங்கிட ரூ.54.97 கோடி செலவிடப்பட்டு வருகிறது.

- ❖ ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக எளிதில் தகவல் பரிமாற்றம் நடைபெற ஏதுவாக 385 முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இணையதள வசதியுடன் கூடிய கணிப்பொறிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் ஆரம்ப சுகாதார நிலைய அளவிலான முழுத் தகவல்கள் சேகரிப்பது எளிதாகி வருகின்றது.

- ❖ துல்லியமான ஆய்வகப் பரிசோதனை வசதிகள் கிராமப்புற மக்களுக்குக் கிடைத்திட முதற்கட்டமாக 385 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு செமி ஆட்டோ அனலைசர் என்ற நவீன ஆய்வகப் பரிசோதனைக் கருவிகள் ரூ.5.16 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பெருவாரியான கிராம மக்கள் பயனடையக்கூடிய வகையில் இரத்தத்தில் உள்ள கொழுப்பின் அளவு, சர்க்கரை அளவு மற்றும் சிறுநீரகம், கல்லீரல் முதலான உறுப்புகளின் செயல்பாடுகளை துல்லியமாகக் கண்டறிய இந்த செமி ஆட்டோ அனலைசர்கள் பெரிதும் உதவிபுரிகின்றன. மேலும், 385 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இச்சாதனங்களை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- ❖ கர்ப்பிணிப் பெண்களின் குறைபாடுகளைக் கண்டறிய ஏதுவாக 237 அல்ட்ரா சோனாகிராம் கருவிகள் ரூ.7.11 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

- ❖ மிக தொலைவில் உள்ள கிராமங்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் மாதந்தோறும் அங்கேயே சென்று நோய்களைக் கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளித்திட, கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் வண்ணம் 100 வட்டாரங்களில் நடமாடும் தாய்சேய் நல மருத்துவக் குழுக்கள் ஆம்புலன்ஸ் வசதியுடன் ரூ.12.88 கோடி செலவில் வாங்கி வழங்கப்பட உள்ளது. வருகிற ஜனவரி 2008 முதல் வாரத்தில் இவை வழங்கப்படும். இதற்கென பிரத்யேகமாக மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ உதவிப்பணியாளர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் தாய்சேய் நலப்பணிகள் மட்டுமின்றி அவசரகாலப் பணிகள் மற்றும் கொள்ளைநோய் தடுப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

- ❖ தமிழகத்தில் உள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தலா ஒரு இலட்சம் அரசு நிதி உதவி வழங்கி 1,417 ஆரம்ப சுகாதார நிலைய பயனாளிகள் நலச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்புடன் கூடிய இந்த நலச்சங்கங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மேம்பாட்டிற்கான சேவை அமைப்புகளாக செயல்பட்டு வருகின்றன. இதன் பயனாக சிறு சிறு பழுதுபார்ப்புப் பணிகள், கருவிகள் பராமரிப்பு, அவசர அவசிய கருவிகள் வாங்குதல் முதலான பணிகள் இந்த சங்கங்களால் தேவைக்கேற்ப மேற்கொள்ள முடிகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இத்திட்டத்திற்கென ஆண்டொன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு, சிறப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- ❖ இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் கர்ப்பகால சர்க்கரை நோயைக் கண்டறியும் இரத்தப் பரிசோதனை சிகிச்சைத் திட்டம் 385 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 8.3.2007 முதல் நடைபெற்று வருகின்றன. கர்ப்ப காலத்தில் ஏற்படும் நீரிழிவு நோயால் தாய்க்கும், குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படுவதை உணர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கருகலைதல், குறைப்பிரசவம், குழந்தை அளவுக்கதிகமாக வளர்ந்து பிரசவத்தில் சிக்கல், ஊனத்துடன் குழந்தை பிறத்தல் போன்ற குறைபாடுகளை இத்திட்டத்தின் வாயிலாகக் களைந்திட முடிகிறது.



- ❖ பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களின் முதன்மையானது கர்ப்பப்பை புற்றுநோய் ஆகும். ஆரம்ப நிலையில் இதனைக் கண்டறிந்து அதற்கான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக கர்ப்பவாய் புற்றுநோய் கண்டறியும் திட்டம் ஆரம்ப சுகாதார நிலைய அளவில் செயல்பட்டு வருகின்றது. இதன்படி முதற்கட்டமாக தஞ்சாவூர் மற்றும் தேனி ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 30 வயது முதல் 60 வயது வரை உள்ள அனைத்துப் பெண்களுக்கும் கருப்பை வாய்ப்புற்று நோய்க்கான சோதனை நடத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2 ஆண்டுகளில் சுமார் 8 இலட்சம் பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பரிசோதிக்கப்படுவர். தென் கிழக்கு ஆசியாவிலேயே இந்த அளவு பெரிய மருத்துவ ஆய்வு இதுவரை நடைபெற்றதில்லை. இந்த சோதனைத் திட்டத்தின் முடிவுகளை ஆய்வு செய்து இத்திட்டம் தமிழகமெங்கும் விரிவுபடுத்தப்படும்.

- ❖ பூச்சிகளால் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்க ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலைய அளவிலும் மருந்துகள் மற்றும் சிகிச்சை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆய்வகப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தீவிர சிகிச்சை வசதிகள், தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ❖ மக்களை நாடி மருத்துவ சேவையளிக்கும் திட்டங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இந்த நிதியாண்டில் மூளைக் காய்ச்சல் தடுப்பூசித் திட்டம் கடலூர், விருதுநகர் மற்றும் விழுப்புரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு ரூ.3 கோடி செலவில் 17 இலட்சம் குழந்தைகளுக்கு மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடப் பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தை விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- ❖ கொசுக்களினால் பரவும் யானைக்கால் நோயை வெகுவாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன் யானைக்கால் நோய் பாதிப்புள்ள 13 மாவட்டங்களில் டி.இ.சி மாத்திரைகள் வழங்கும் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப் பட உள்ளது.

- ❖ சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 161 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிநவீன பச்சிளங்குழந்தை பராமரிப்புக் கருவிகள் ரூ.1.15 கோடி செலவில் யூனிசெப் நிறுவன உதவியுடன் வாங்கி வழங்கப் பட்டுள்ளன.

- ❖ ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 32 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு பல் மருத்துவ சாதனங்கள் வழங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும், 71 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் அமைத்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

- ❖ ஆரம்ப சுகாதார நிலைய கர்ப்பிணி உள் நோயாளிகளுக்கு சுயஉதவிக் குழுக்கள் மூலமாக மூன்று வேளை உணவு வழங்கிட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

- ❖ ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணிகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்து வதற்காகவும், எளிதில் சுகப்பிரசவம் நடைபெறவும் இந்திய மருத்துவ முறை மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்தியாவிற்கே முன்னோடியாகத் தமிழகத்தில் உள்ள 450 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இயங்கி வரும் இந்திய மருத்துவம் சார்ந்த சித்த மருத்துவப் பிரிவுகளில் பணிபுரிந்து வரும் சித்த மருத்துவர்களுக்கு இந்திய மருத்துவம் சார்ந்த அண்மைக்கால முன்னேற்றங்களை விளக்கும் வகையில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன.

★ ★ ★

# 211 உதவிப் பொறியாளர்கள், 77 தினக்கூலிப் பணியாளர்கள், 35 கருணை அடிப்படையிலான பணியாளர்கள் நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
பணிநியமன ஆணைகளை வழங்கினார்.



தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறையில் 2006 இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் பெருமளவில் சாலைப் பணிகளும் பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேற்பார்வையிடுவதில் உதவிப் பொறியாளர்கள் பெரிதும் துணைபுரிகின்றனர்.

கடந்த 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு முந்தைய ஆட்சியில் புதிய நியமனங்களுக்கு அரசு தடை விதித்ததால் நெடுஞ்சாலைத் துறையில் உதவிப் பொறியாளர்கள் யாரும் புதிதாக நியமிக்கப் படவில்லை.

தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி, அரசுப் பணிகளில் உள்ள காலியிடங்களை உடனடியாக நிரப்பிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிய அறிவுரைகளைத் தொடர்ந்து, நெடுஞ்சாலைத் துறையில் காலிப் பணியிடங்களாக இருந்த 215 உதவிப் பொறியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. அதன் பயனாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள 215 உதவிப் பொறியாளர்களில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டுள்ள 211 உதவிப் பொறியாளர்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 7.12.2007 அன்று வழங்கினார்.

உதவிப் பொறியாளர்களாகப் பணி நியமன ஆணைகள் பெற்றவர்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 38 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 43 பேரும், பிற்படுத்தப் பட்டோர் பிரிவில் 66 பேரும் அடங்குவர். இவர்களில் 63 பேர் பெண்கள்.

மேலும், நெடுஞ்சாலைத் துறையில் ஏற்கெனவே 300 சாலைப் பணியாளர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது 35 பதிவுரு எழுத்தர் களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுவதற்குரிய நியமன ஆணைகளையும், நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு நிலைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தினக்கூலிப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வந்தவர்களின் நீண்டநாள் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து, அவர்களின் கல்வித் தகுதிக்கேற்பச் சாலைப் பணியாளர்களாக 51 பேருக்கும், சாலை ஆய்வாளர்களாக 2 பேருக்கும், ஓட்டுநர்களாக 3 பேருக்கும், உதவி வரைவாளர்களாக 21 பேருக்கும் சேர்த்து மொத்தம் 77 பணியாளர்களுக்கு உரிய நியமனங்கள் வழங்கிட அனுமதி அளித்து, அவர்களுக்குரிய பணி நியமன ஆணைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வெள்ளக்கோயில் திரு.மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை செயலாளர் திரு.கே.அலாவுதீன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

## படித்த வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை

**பத்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மாதந்தோறும் 150 ரூபாய் என்றும், மேல் நிலை வகுப்பு வரை படித்து விட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மாதந்தோறும் 200 ரூபாய் என்றும், பட்டப் படிப்பு வரை படித்து முடித்து, வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மாதந்தோறும் 300 ரூபாய் என்றும் உதவித்தொகை தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அதற்கான நிகழ்ச்சிகள் மாவட்டந் தோறும் நடத்தப்பட்டு, அமைச்சர்கள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அதற்கான ஆணைகளையும், நிதியையும் வழங்கி வருகிறார்கள். இந்தத் திட்டத்தின்படி இதுவரை 3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 77 கோடியே 99 இலட்சத்து 50 ஆயிரத்து 360 ரூபாய் அரசின் சார்பில் நிதி உதவியாக அளிக்கப் பட்டுள்ளது. இதுவும் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி வருவதற்கு ஒரு சான்றுதான்.**

**– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.**

## சமூக விரோதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த இரவு ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்த காவல்துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் காவல் துறைப் பணிகள் பற்றிய ஆய்வுக் கூட்டம் 22.11.2007 அன்று பிற்பகல் 4.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்கள் பேராசிரியர் க. அன்பழகன், திரு.ஆற்காடு நா.வீராசாமி, திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், திரு.கோ.சி.மணி, திரு. துரைமுருகன், திரு.க.பொன்முடி, திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு.எ.வ.வேலு ஆகியோருடன், தலைமைச்செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., உள்துறைச் செயலாளர் திருமதி. எஸ்.மாலதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் மற்றும் அரசுச் செயலாளர்கள் ஆகியோரும். காவல்துறை தலைமை இயக்குநர் திரு.பி.இராஜேந்திரன், இ.கா.ப., காவல்துறை கூடுதல் இயக்குநர்கள், சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர், மண்டல துணை காவல்துறை தலைவர்கள் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விரிவான விவாதத்திற்குப் பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பின்வரும் அறிவுரைகளை காவல்துறையினருக்கு வழங்கினார்.

கூலிப்படையினர் மற்றும் ரவுடிக் கும்பல்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களின் செயல்பாடுகளைத் தடுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

காவல் துறையினர் சிவில் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளில் தலையிடக் கூடாது.

சமூக விரோதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் இரவு ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

காவல் நிலையங்களில் விசாரணைக் கைதிகளின் மரணம் எந்தச் சூழ்நிலையிலும் நிகழாவண்ணம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

புறநகர்ப் பகுதிகளில் கொள்ளை, களவு நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் காவல் துறையினர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சாலை விபத்துகளையும், உயிரிழப்புகளையும் தடுத்திட, போக்குவரத்து விதிமுறைகளை, வாகன ஓட்டுநர்கள் கட்டாயம் கடைபிடிக்குமாறு காவல் துறையினரும், போக்குவரத்துத் துறையினரும் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சிறைச்சாலைகளில் கைதிகள் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும். கைதிகள் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடத் துணை போகும் பணியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவுறுத்தினார்.



## பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் சிறந்த மேனிலைப் பள்ளிகளில் பயில நிதியுதவி வழங்கிடும் புதிய முன்னோடித் திட்டம்

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்



தமிழகத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த திறன்மிக்க மாணவ, மாணவியர்கள் அரசுப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், அவர்களது பெற்றோரின் பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக அவர்கள் விரும்பும் சிறந்த பள்ளிகளில் சேர்ந்து தங்கள் மேல்படிப்பினைத் தொடர இயலாத நிலையினைக் கருத்தில் கொண்டு, அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் பயின்று அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரில், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 3 மாணவர், 3 மாணவியர், மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 2 மாணவர், 2 மாணவியர் என ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பேர் வீதம் மொத்தம் 300 மாணவ, மாணவியருக்கு அவரவர் விருப்பத்திற்கேற்ப சிறந்த பள்ளிகளில் சேர்ந்து பயில வாய்ப்பளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமென 2007–2008ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், ஒவ்வொரு மாணவருக்கும் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் சேர்ந்து படிக்க ஆண்டொன்றுக்கு கல்விக் கட்டணமாக 8,000 ரூபாயும், பராமரிப்புக்

கட்டணமாக 3,500 ரூபாயும், விடுதிக் கட்டணமாக 15,000 ரூபாயும், சிறப்புப் பயிற்சிக் கட்டணமாக 1,500 ரூபாயும் என மொத்தம் 28,000 ரூபாய் வீதம், இரண்டு ஆண்டுகளுக்கு 56,000 ரூபாய் வீதம் செலவினம் மேற்கொள்ள ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்படி நடப்பாண்டில் தமிழகம் முழுவதிலும் பதினோராம் வகுப்பில் பயிலும் 300 மாணவ, மாணவியர்களுக்கு 84 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதன் அடையாளமாக சென்னை, காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், திருவாரூர், திருச்சி, தேனி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 20 மாணவ, மாணவியர்க்கு 4 இலட்சத்து 62 ஆயிரத்து 732 ரூபாய் மதிப்புடைய காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கி, தமிழக அரசு வழங்கும் இந்த உதவித் தொகையைப் பயன்படுத்தி நன்கு பயின்று சிறந்த இளைஞர்களாக உருவெடுத்து நமது தமிழகத்திற்குப் பெருமை தேடித் தருமாறு கூறி தமது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உதவி பெற்ற மாணவ, மாணவியர் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த தங்களுக்குப் பெரும்பயன் அளித்து ஊக்கப்படுத்திடும் இந்த அருமையான திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் தங்களுடைய நன்றியைத் தெரிவிப்பதாக மகிழ்ச்சியுடன் கூறினார்.

முன்னதாக, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் மாவட்டங்களில் பணிபுரியும் துறை அலுவலர்கள் அரசுத் திட்டங்களின் பணிகள் மக்களுக்கு விரைந்து கிடைப்பதற்கு உதவும் வகையில் துரிதமாகச் செயலாற்றுவதற்கு ஏதுவாக ஈரோடு, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, கரூர், கோயம்புத்தூர், விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு மொத்தம் 45 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 10 ஈப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு.ந.வாசுதேவன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் திரு.ஆர்.எஸ்.கண்ணா, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

## சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்!

**2006 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கையில் அரசுப் பணிகளில் நிரப்பப்படாமல் உள்ள மூன்று இலட்சம் காலி இடங்களுக்கு பணியாளர்களை நியமிப்போம் என்று அறிவித்தோம். அந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிடும் வகையில் ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குள் 2,28,149 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தவிர தமிழகத்திற்கு 11 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேற்பட்ட முதலீட்டில் தொழில்களைத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழக அரசின் முயற்சியால் செய்து கொள்ளப்பட்டு, அந்தத் தொழிற்சாலைகளின் மூலமாகவும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.**

–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்





## சென்னை மாநகரில்

## இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்
## எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள்
### வழங்கும் விழா



27.11.2007 கலைவாணர் அரங்கம்





## உங்களுக்காக என்றென்றும் நாங்கள் தொண்டுபுரிவோம்

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து, 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்தபடி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 15.9.2006 அன்று அண்ணா பிறந்த பொன்னாளில் காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் கரசங்கால் கிராமத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் முதற்கட்டமாக 30,000 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். 16.9.2006 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்து சமத்துவபுரக் குடியிருப்புகளுக்கும், நீலகிரி மாவட்ட மக்களுக்கும், சென்னை மாநகரில் இரண்டு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து, 25 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். அதே நாளன்று தமிழகம் முழுவதும் நடைபெற்ற விழாக்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு ஏழை எளிய தாய்மார்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்கள். தொடர்ந்து தமிழகம் முழுவதும் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 18.11.2007 வரை 23 இலட்சத்து 79 ஆயிரத்து 721 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு 21 இலட்சத்து 32 ஆயிரத்து 956 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவது கட்டமாக 750 கோடி ரூபாய் செலவில் மேலும் 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்காக தமிழக சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொண்ட முடிவுகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றை டிசம்பர் மாதம் முதல் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அதேபோல, ஏழை எளிய தாய்மார்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம் 14.1.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னையில் ஆயிரம் விளக்குப் பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டு, அதேநாளில் தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் நடைபெற்ற விழாக்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கினார்கள். 16.11.2007 வரை தமிழகம் முழுவதும் 3 இலட்சத்து ஓர் ஆயிரத்து 560 எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து 8 இலட்சம் எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டன.

இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னையில் நவம்பர் மாதம் 27 ஆம் நாள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளையும் ஏழை எளியவர்களுக்கு வழங்கி உரையாற்றினார்கள்.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் எரிவாயு இணைப்புடன்**
**கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**
**- கலைவாணர் அரங்கம், சென்னை (27.11.2007)**

"சென்னை மாநகரில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் – எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்குகின்ற விழா இன்றைக்கு திருவல்லிக்கேணி தொகுதிக்கும், சேப்பாக்கம் தொகுதிக்கும் சேர்த்து – என்னுடைய தொகுதியில் – மன்னிக்கவும் – நம்முடைய தொகுதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டம், தேர்தல் காலத்திலே நம்முடைய தேர்தல் அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு நாம் வெற்றி பெற்றால் நம்முடைய கூட்டணி பெரும்பாலான இடங்களைப் பெற்று ஆட்சிப் பொறுப்பிலே அமருமேயானால், அதன் பிறகு நாங்கள் வாக்களித்தோம் – நீங்கள் அளித்த வாக்குகள் எவ்வளவு உண்மையானதோ, அதைப்போல நாங்கள் அளிக்கின்ற வாக்கும் உண்மையானதாக இருக்கும் – இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் – அந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத இல்லங்களுக்கு வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டு – தேர்தல் முடிந்ததும், நாங்கள் சொன்னபடி உங்கள் அன்பான ஆதரவு எங்களுக்குக் கிட்டி ஆட்சிப் பொறுப்புகள் வந்ததும் – சொன்னதை மறந்துவிடாமல், அதனை ஆக்கப்பூர்வமாகச் செய்து, அதன் தொடர்ச்சியாக இன்றைக்கு இந்த மண்டபத்தில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.



பேராசிரியர் க. அன்பழகன்
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர்
திருவொற்றியூர் – (திருவள்ளூர் மாவட்டம்)



திரு. ஆற்காடு நா. வீராசாமி
மாண்புமிகு மின்துறை அமைச்சர்
சிதம்பரம் – (கடலூர் மாவட்டம்)





திரு. [illegible]
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்
வசவப்புரம் – (தூத்துக்குடி மாவட்டம்)



திரு. [illegible]
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்
திருவையாறு – (தஞ்சாவூர் மாவட்டம்)

### எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனை

இன்று சென்னையிலே மாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் நம்முடைய அமைச்சர் பெருமக்கள் இதேபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை – எரிவாயு இணைப்போடு கூடிய அடுப்புகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதை அறிவித்த போது, எதிர்முனையிலே இருந்த நண்பர்கள் அல்லது கட்சிகளின் தலைவர்கள் அல்லது கட்சிகளின் பேச்சாளர்கள் அல்லது கட்சிகளுக்குரிய நாளேடுகளில் எவ்வளவோ பழிப்பு, இழிவுரை, இவர்களால் முடியுமா? ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி எவ்வளவு தெரியுமா? இதை வாங்கி இவர்கள் அளிப்பார்களா, ஏமாற்றுகிறார்கள் என்று யாரும் இந்தக் கூட்டணிக்கு வாக்களிக்காதீர்கள், வாக்களித்து ஏமாறாதீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஏமாந்தவர்கள் யார் என்று நாட்டிற்கு மிக நன்றாகத் தெரிகிறது.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பெற்றவர்கள் – அந்தப் பெட்டியை வீட்டிலே வைத்துக் கொண்டு, இதுவரையிலே இல்லாத அளவிற்கு பக்கத்து வீட்டிற்கு ஒலி கேட்கும் அளவிற்கு எழுப்பி, கேட்கிறதா ஒலி? இது தி.மு.கழக ஆட்சியிலே அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி, அவர்கள் தந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் ஒலி என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு பெரும் சாதனையை, நம்முடைய மேயர் இங்கே குறிப்பிட்டதைப் போல – இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையை – வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குகின்ற சாதனையை நாம் நிறைவேற்றி வருகிறோம்.

கடந்த 2006–2007 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே தெரிவித்தபடி இந்தப் பெட்டிகளை வழங்குகின்ற திட்டம் 15.9.2006 அன்று அறிஞர் அண்ணா பிறந்த நாளில் தொடங்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம், படப்பைக்கு அருகிலே உள்ள கரசங்கால் என்ற கிராமத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரத்திலே இது தொடங்கப்பட்டது. எடுத்த எடுப்பிலே தொடங்கப்பட்ட இடமே சமத்துவபுரம். எனவே தமிழகத்திலே உள்ள அனைவருக்கும் சமத்துவமாக இலவசமாக இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் என்பதற்கு அடையாளமாக இந்த நிகழ்ச்சி காஞ்சிபுரம் மாவட்டத்தில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திலே தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக 9 கோடி ரூபாய் செலவில் 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

இரண்டாவது கட்டமாக 685 கோடி ரூபாய் செலவில், 25 இலட்சம் ஏழையெளிய குடும்பங்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம், பம்மதுகுளம் கிராமத்திலே தொடங்கப் பட்டது.

### படிப்படியாகத்தான் வழங்க முடியும்

தமிழகம் முழுவதும் 26.11.2007 வரை 23 இலட்சத்து 56 ஆயிரத்து 242 வண்ணத் தொலைக்காட்சிப்



திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
பெத்தநாயக்கன்பாளையம் – (சேலம் மாவட்டம்)



திரு. துரைமுருகன்
மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர்
பழையபாளையம் – (வேலூர் மாவட்டம்)

பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டு, இதுவரை 21 இலட்சத்து 9 ஆயிரத்து 273 பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இப்படி வழங்கிக் கொண்டிருக்கும்போதே, எங்களுக்குக் கொடுக்கவில்லை, எங்களுக்குக் கொடுக்கவில்லை என்ற குரல் கேட்கத் தவறவில்லை. நான் இல்லை என்று சொல்லவில்லை. ஏனென்றால் ஆறு கோடி மக்கள் இருக்கின்ற நம்முடைய தமிழ்நாட்டில் – இந்த ஆறு கோடி மக்கள் வாழ்கின்ற வீடுகளின் எண்ணிக்கை ஒரு கோடிக்குக் குறையாமல் இருக்கும். சாதாரணமாக ஒரு கோடி வீடுகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை ஒரே நேரத்தில் வழங்கிட முடியாது. படிப்படியாகத் தான், மெல்ல மெல்லத்தான், கட்டம் கட்டமாகத்தான் வழங்க முடியும்.

நான் தொடக்கத்திலே ஒரு விழாவிலே எடுத்துக் கூறியதைப் போல திருமண வீட்டிற்கு எல்லோரையும் அழைத்து – ஆயிரம் பேர் திருமணத்திற்காக வந்திருந்தால் – 500 பேரை முதல் பந்தியிலே உட்கார வைத்து விட்டு, இரண்டாவது பந்திக்கு மீதம் இருக்கிற 500 பேரை, நீங்கள் இரண்டாவது பந்தியிலே சாப்பிடலாம், கொஞ்சம் பொறுமையாக இருங்கள் என்று கேட்டுக்கொள்வதைப் போலத்தான், தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒரேயடியாக ஒரே நேரத்தில் தயாராக முடியாது.

தமிழ்நாட்டில் மாத்திரமல்ல, இந்தியாவிலே உள்ள மாநிலங்களில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலே கூட சீனா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து கூட நாங்கள் இந்த ஒப்பந்தங்களைப் பேசி அதுவும் தனிப்பட்ட முறையில் நானோ, அமைச்சர்களோ, எங்களுடைய செயலாளர்களோ பேசி அல்ல – ஒரு குழுவை அமைத்திருக்கிறோம், சட்டமன்றத்திலே உள்ள எல்லா கட்சித் தலைவர் அவர்களுக்கும் – தி.மு.கழகத்தின் தலைவர் என்ற முறையிலே முதலமைச்சராகிய நானும், காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பா.ம.க.வின் தலைவரும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும், முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் முன்னிலையிலே தான் டெண்டர்களே பிரித்துப் பார்க்கப்படுகிறது. நாங்களே பிரித்துப் பார்த்து, நானோ, தலைமைச் செயலாளரோ, செயலாளர்களோ பிரித்துப் பார்த்து உடனடியாக ஆணை பிறப்பித்து பெட்டிகளை வாங்குவதில்லை. விநியோகிப்பதும் இல்லை. எப்படி விநியோகிக்கிறோம் என்றால் – அந்த ஒப்பந்தப் புள்ளிகளையெல்லாம் பிரித்து, யார் குறைவாகக் கேட்டிருக்கிறார்கள் என்று பார்த்து, குறைந்த விலைக்கு கோரியுள்ள நிறுவனத்தோடு பேசி, மேலும் கொஞ்சம் குறைத்துக் கொடுக்கலாமே என்று கேட்டு, குறைத்துக் கொடுத்தாலும், அதையும் எல்லோருக்கும் தெரியும்படியாக அறிவித்து, அந்தக் குழுவிலே இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக் கொண்டு அதற்குப் பிறகு அவர்கள் அந்த ஆணையைப் பெற்றுக் கொண்டு, பின்னர் குறிப்பிட்ட தேதியில் சொன்னபடி பெட்டிகளை அனுப்பி வைக்கிறார்கள். அப்படி கட்டம் கட்டமாக அனுப்பி வைக்கின்ற இந்தப் பெட்டிகள் உங்களுக்கு அவ்வப்போது வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுவதில் எந்தத் தவறு இருந்தாலும், யார் சுட்டிக்காட்டினாலும் உடனே அந்தக் குறை நிவர்த்திக்கப்பட வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன்படி நம்முடைய அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.





முனைவர் க. பொன்முடி
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
திருவெண்ணெய்நல்லூர் – (விழுப்புரம் மாவட்டம்)



திரு. கே.என். நேரு
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
வளநாடு – (திருச்சி மாவட்டம்)

தொடர்ந்து வழங்கப்படும்

இதிலே எந்த தவறும் ஏற்படுவதற்கு இம்மியும் இடமில்லை. கிராமங்களில் சொல்வார்கள், “லவலேசமும்” இதிலே குறையில்லை. யாரும் தவறு செய்ய முடியாது. அந்த அளவிற்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்றைக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது தொடர்ந்து வழங்கப்படும்.

இரண்டாவது கட்டமாக முடிவு செய்யப்பட்ட 25 இலட்சம் ஏழையெளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் விரைவில் நிறைவுறவுள்ளது. இதனைத் தொடர்ந்து மூன்றாவது கட்டமாக 750 கோடி ரூபாய் செலவில், மேலும் 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதற்காக தமிழகச் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் படி அவையும் இப்போது கொள்முதல் செய்யப்படுகின்றது. அவைகள் வரவர தேதி நிர்ணயிக்கப்பட்டு, நம்முடைய அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் அந்தந்தப் பகுதிகளிலே வழங்கப்பட்டு – அப்படி வழங்கப்படும்போது, ஒவ்வொரு ஊரிலும், கிராமங்களாக இருந்தாலும், நகர்ப்புறப் பகுதிகளாக இருந்தாலும் அங்கெல்லாம் வழங்கப்பட – அதற்கும் ஒரு குழு, உள்ளூர் குழு, அதிலும் எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் இடம் பெறச் செய்து அவர்கள் மூலமாக இதனை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இது மிகவும் முக்கியமான அவசியமான மக்கள் விரும்பக் கூடிய இப்படியும் ஒரு திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்ற கேள்வி எழுப்பி – முடியாது என்று அவர்களே பதில் சொல்லி, முடிகிறது பார் என்று நாம் இன்றைக்கு அவர்களுக்கு அறைகூவல் விட்டு நிறைவேற்றுகின்ற திட்டம்தான் இந்தத் திட்டம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்லது தோழமைக் கட்சிகள் எல்லாம் ஆதரிக்கின்ற இந்த ஆட்சி – இந்தக் காரியத்தை இன்றைக்குச் செய்கிறதென்றால், ஏதோ தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கிக் கொடுத்து, அதிலே வருகின்ற கதைகளை, கட்டுரைகளை, அதிலே வருகின்ற உரையாடல்களை, பாடல்களை ஆடல்களை பாருங்கள் என்பதற்காக அல்ல, நாட்டு நடப்பையும் தெரிந்துகொள்ள இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயன்படுகிறது. விஞ்ஞானத்தில் இதுபோன்ற சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்கிற அந்த முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் இந்தச் சாதனங்களின் வாயிலாக உலக செய்திகளை அறிந்து கொள்ளவும், நம்முடைய நாட்டுச் செய்திகளை அறிந்து கொள்ளவும், நம்முடைய வாழ்க்கை முறை எப்படி அமைய வேண்டும் என்ற விஞ்ஞான கருத்துக்களை, நல்வாழ்வுக் கருத்துக்களை புரிந்துகொள்ளவும் இந்தத் தொலைக்காட்சி பயன்படுகிறது. அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, நாங்கள் எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறோம். நிறைவேற்றாமல் இருந்தால், கலைவாணர் அரங்கத்திற்கு நாங்கள் இத்தகைய வரவேற்போடு வர முடியாது. நீங்கள் எங்களை இவ்வளவு மகிழ்ச்சியாக வரவேற்றிருக்க மாட்டீர்கள். எங்களைப் பார்த்தவுடன் முகங்களை சுளித்துக் கொண்டிருப்பீர்கள். நாங்களும் எப்படி உங்கள் முகங்களில் விழிப்பது என்ற



திரு.
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
குளத்தூர் – (பெரம்பலூர் மாவட்டம்)

எண்ணத்தோடுதான் வந்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் நீங்களும் எங்களை வெற்றி பெற வைத்தீர்கள், நாங்களும் உங்களை ஏமாற்றவில்லை, ஏமாற்றமாட்டோம், என்றைக்கும் உங்களை ஏமாற்றமாட்டோம், உங்களுக்காக என்றென்றும் நாங்கள் தொண்டுபுரிவோம், அதற்கு அடையாளம்தான் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற எங்களுடைய அந்த வாக்குறுதியை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறோம் என்று கூறி, இந்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், அடுப்புகளையும்



திரு. பொங்கலூர் என். பழனிச்சாமி
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
சின்னவேடம்பட்டி – (கோவை மாவட்டம்)



திரு. சுரேஷ்ராஜன்
மாண்புமிகு சுற்றுலா மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர்
நுள்ளிவிளை – (கன்னியாகுமரி மாவட்டம்)



திரு.
மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்
நெடுங்கூர் – (கரூர் மாவட்டம்)

வழங்குகின்ற நிகழ்ச்சியை நான் தொடங்கி வைக்கிறேன். இவைகளைப் பெற்று மகிழ்ச்சியுற்று இந்த அரசுக்குத் தொடர்ந்து நீங்கள் உங்களுடைய ஆதரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்". இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

அதே நாளில் (27.11.2007) தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளையும் வழங்கினார்கள்.



திரு. இ. பெரியசாமி
மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்
மணலூர் – (திண்டுக்கல் மாவட்டம்)



திரு. எ.வ.வேலு
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்
வேட்டவலம் – (திருவண்ணாமலை மாவட்டம்)





திரு.
மாண்புமிகு குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர்
கோரவள்ளி – (இராமநாதபுரம் மாவட்டம்)



திரு.
மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்
பல்லாவரம் – (காஞ்சிபுரம் மாவட்டம்)



திரு. என்.கே.கே.பி. ராஜா
மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்
ஊதியூர் – (ஈரோடு மாவட்டம்)



திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
ஆச்சாரஹள்ளி – (தருமபுரி மாவட்டம்)



திரு.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்
முத்தாண்டிபுரம் – (விருதுநகர் மாவட்டம்)



திரு.
மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர்
மித்ராவயல் – (சிவகங்கை மாவட்டம்)



திரு. தங்கம் தென்னரசு
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
காவேரிப்பட்டணம் – (கிருஷ்ணகிரி மாவட்டம்)



திரு. டி.பி.எம். மைதீன்கான்
மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்
கீழவடுகரை – (தேனி மாவட்டம்)



திரு.
மாண்புமிகு வனத் துறை அமைச்சர்
பொட்டவெளி – (அரியலூர் மாவட்டம்)



திரு
மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
புங்கனூர் – (நாகப்பட்டினம் மாவட்டம்)



டாக்டர். திருமதி. பூங்கோதை
மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்
பிரானூர் – (திருநெல்வேலி மாவட்டம்)



திருமதி.
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்
நெடுமதுரை – (மதுரை மாவட்டம்)



திரு. கே.பி.பி. சாமி
மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்
அறந்தாங்கி – (புதுக்கோட்டை மாவட்டம்)



திரு. உ. மதிவாணன்
மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்
கீழ்த்திருப்பாலக்குடி – (திருவாரூர் மாவட்டம்)



திரு. க.இராமச்சந்திரன்
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
பரளியாறு பஞ்சாயத்து – (நீலகிரி மாவட்டம்)



திரு. வி.பி.துரைசாமி
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்
ஓ. பட்டுடையான் பாளையம் – (நாமக்கல் மாவட்டம்)



## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவிப்புகள்



## மாநில அரசின் சார்பில் நெல்லுக்கு ஊக்கத்தொகை

நெல்லுக்குத் தரப்படுகின்ற விலை போதாது என்றும், அதனை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்றும் விவசாயிகள் சார்பில் தொடர்ந்து கோரிக்கைகள் வந்ததன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலாளர், உணவு மற்றும் கூட்டுறவுத் துறைச் செயலாளர் ஆகியோருடன் விவாதித்தார்.

நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு 2006–2007இல் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் ஊக்கத் தொகையுடன் சேர்த்து, மொத்தக் கொள்முதல் விலையாக சாதாரண ரக நெல்லுக்கு 620 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு 650 ரூபாயும் என்று மத்திய அரசு அறிவித்தது.

2007–2008இல் முதல் ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 675 ரூபாய் வீதமும், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 645 ரூபாய் வீதமும் ஆதார விலையாக நிர்ணயித்து, மத்திய அரசு ஆணை வெளியிட்டது. ஆனால் 2006–2007இல் ஊக்கத் தொகையாக 40 ரூபாய் வழங்கியதைப் போல, 2007–2008க்கு நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு மேல் ஊக்கத் தொகை எதுவும் வழங்கப்படவில்லை.

எனவே, ஊக்கத் தொகை வழங்கக் கோரி மத்திய உணவு மற்றும் விவசாயத் துறை அமைச்சருக்கு, மாண்புமிக தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதியதன் காரணமாக, மத்திய அரசு குவிண்டால் ஒன்றுக்கு ஊக்கத் தொகையாக ஐம்பது ரூபாய் வழங்கிட முன் வந்தது.

இந்த நிலையில் கோதுமைக்கு குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் என்று ஆதார விலையை மத்திய அரசு நிர்ணயித்ததால், நெல் சாகுபடிக்கான செலவு கோதுமை சாகுபடிக்கான செலவை விட அதிகம் என்பதை விளக்கி, நெல் கொள்முதல் விலையையும் உயர்த்திட வேண்டுமென்று தமிழக அரசு சார்பில் மீண்டும் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது.

இதன்பின்னர் தமிழக அரசு வலியுறுத்தியதன் அடிப்படையில் மத்திய அரசு நெல்லுக்கான ஊக்கத் தொகையை ஏற்கெனவே குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் என்று அறிவித்ததற்கு மாறாக, 100 ரூபாய் ஊக்கத் தொகை என்று அறிவித்தது. இதன்படி தற்போது முதல் ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 775 ரூபாய் வீதமும், சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 745 ரூபாய் வீதமும் விவசாயிகளுக்கு வழங்கி நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதன் பின்னரும் நெல்லுக்கான கொள்முதல் விலை போதவில்லை என்ற குறைபாடு விவசாயிகள் சார்பாக தெரிவிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் குவிண்டால் ஒன்றுக்கு மேலும் 50 ரூபாய் ஊக்கத் தொகையாக அளிக்கப்படும் என்று இன்று அறிவித்திருக்கிறார். எனவே தமிழகத்தில் கொள்முதல் செய்யப்படும் முதல் ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 825 ரூபாய் வீதமும், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 795 வீதமும் வழங்கப்படும். இதனால் தமிழக அரசுக்கு 82.50 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படினும், தமிழ்நாட்டு விவசாயிகள் நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த முடிவினை எடுத்திருக்கிறார்கள். ❊

## ஒரு டன் கரும்புக்கு விலை ரூ.1,034

2007 – 2008 அரவைப் பருவத்தில் 9 சதவிகிதம் சர்க்கரைச் கட்டுமானமுள்ள ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 811.80 என்று மத்திய அரசு குறைந்தபட்ச விலையாக நிர்ணயம் செய்துள்ளது. தமிழகத்தில் உள்ள கரும்பு விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு – மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச விலையை விடக் கூடுதலாக ரூ.222.20 உயர்த்தி, ஒன்பது சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள ஒரு டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூபாய் 1,034 என்று நிர்ணயம் செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.11.2007 அன்று அறிவித்துள்ளார்.

இந்த விலை உயர்வு, 1.10.2007 முதல் தொடங்கியுள்ள நடப்புக் கரும்பாண்டில் ஏற்னெவே கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கும் பொருந்துமாறு முன் தேதியிட்டு வழங்கப்படும்.

மேலும் 9 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானத்துக்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித சர்க்கரைக் கட்டுமானத்துக்கும் டன் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் ஊக்கத் தொகையாக (Incentive) வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

❊ ❊ ❊



# சிறு சிறு கிராமங்களை, பட்டி தொட்டிகளை இணைக்கின்ற வகையில் ரயில்பாதைகள் அமைய வேண்டும்

இன்றைய தினம் இங்கே நடைபெறுகின்ற மகிழத்தக்க இந்த விழாவில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் மிகுந்த பெருமையடைகிறேன், பெருமகிழ்ச்சி யடைகிறேன். இந்த விழா என்னால் தான் தாமதப்பட்டுக் கிடக்கிறது என்று பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வந்து, அந்தச் செய்தி கொடுத்தது நானல்ல என்று நம்முடைய மத்திய இணை அமைச்சர் திரு.வேலு அவர்கள் என்னிடத்திலே நேரடியாக விளக்கம் தந்து, பத்திரிகைகளிலே இப்படியெல்லாம் வரும், விழா நடக்கும் நடக்காது அல்லது தாமதமாகும் என்றெல்லாம் வரும் என்றாலுங்கூட, நாங்கள் இணைந்து நடத்துகின்ற எந்த




19.11.2007 அன்று
திருவான்மியூர் - வேளச்சேரி
இடையே ரயில் சேவையைத்
தொடங்கி வைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்
ஆற்றிய உரை






நிகழ்ச்சியானாலும் அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நடந்தே தீரும், அளிக்கப்பட்ட உறுதி காப்பாற்றப்பட்டே தீரும் என்பதற்கு இங்கே நடைபெறுகின்ற இந்த விழாவும் ஒரு சான்று.

தம்பி டி.ஆர்.பாலு அவர்களுக்கு என்னுடைய ஊர் பெயர்கூட மறந்து விட்டது. அவர் வேலு அவர்களிடம் சிபாரிசு செய்யும்போது, திருவாரூர் ரயில் தடத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் வேலு அவர்களிடம் ஞாபகப்படுத்தியிருப்பது – நான் பிறந்த ஊரான திருக்குவளைக்கு ஒரு ரயில் தடம் வேண்டுமென்பதுதான். அதற்கான முயற்சிகளில் அவரும் ஈடுபட்டிருக்கிறார், அவர் மாத்திரமல்ல, நம்முடைய லல்லு பிரசாத் யாதவ் அவர்களே அதிலே தனி கவனம் செலுத்தி வருகிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் பாலு இங்கே, சின்ன ஊர்கள் எல்லாம் அவருக்கு இப்போது பிடிப்பதில்லை – அதனால் அவர் திருவாரூர் ரயிலுக்காக இங்கே, சிபாரிசு செய்து விட்டு, வந்து என் பக்கத்திலே அமர்ந்திருக்கிறார். அதற்கு தைரியம் வேண்டும்.

**எளிய மக்கள் பயன்படுத்திய ரயில்**

இந்தத் திட்டம், தம்பி பாலு இங்கே குறிப்பிட்டதைப் போல, நீண்ட காலமாக ஆரம்பிக்கப்பட்டு, விரைவிலே முடியும், முடியும், முடியும் என்று ஒவ்வொரு ஆட்சியும் வருகிற நேரத்தில் எல்லாம் எதிர்பார்க்கப்பட்டு, மத்தியிலே உள்ளவர்களுடைய தயக்கத்தாலோ அல்லது வழித் தடம் தருகின்றவர்களுடைய இடையூறுகளாலோ இது முழுமையாக நிறைவேற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, இன்றைக்கு இந்த வழித் தடத்திலே வேளச்சேரி வரையிலே இந்த பறக்கும் ரயில் என்ற ஒரு முடிவு எய்தப்பட்டிருக்கிறது.

இன்னும் அதிகமான ரயில் தடங்கள் தமிழ்நாட்டிற்கு தேவை என்பதை நானும் உணர்ந்திருக்கிறேன், நீங்களும் உணர்ந்திருக்கிறீர்கள். போக்குவரத்திற்கு பேருந்துகளை, விமானங்களை நம்பி எதிர்பார்த்து அவைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவைகளையும் பயன்படுத்திக் கொண்டு, அவைகள் மட்டும்தான் போக்குவரத்துச் சாதனங்கள் என்று இல்லாமல் ஆரம்ப காலத்திலே, நமக்கு, நம்முடைய ஏழை எளிய மக்கள், சாதாரண மக்கள், கிராமப்புறத்து மக்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்திய எளிய ஒரு வாய்ப்பு ரயில்தான் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

**மேம்பாலங்கள் கட்டும் பணி**

ஒரு ஆட்சிக்கு எல்லா வகையான வசதி வாய்ப்புகள் இருந்தாலும், மக்களிடத்திலே எப்படியெல்லாம் ஒரு ஆட்சி நிறைந்த தொடர்பு கொண்டிருந்ததாக இருந்தாலும், போக்குவரத்து சரியாக இல்லையென்றால், போக்குவரத்திலே இடையூறு ஏற்படுமேயானால் மக்கள் ஆங்காங்கு சலித்துக் கொள்ளும்போது, ஆட்சியைத்தான் மனதிலே நினைத்துக் கொண்டு சலித்துக் கொள்வார்கள். நான் உதாரணத்திற்குச் சொல்லுகின்றேன், சென்னையிலே இன்றைக்கு எத்தனையோ இடங்களில் போக்குவரத்து ஸ்தம்பிக்கின்ற வகையில் நிலைமை இருக்கிறது. காரணம், இருக்கின்ற சாலைகள் போதவில்லை,




பாலங்கள் போதவில்லை என்பதை நம்மால் உணரமுடிகிறது. அதனால்தான் மாநகராட்சி மன்றத்திலே நம்முடைய பொறுப்பு வரும்போதெல்லாம் மேம்பாலங்கள் கட்டுகின்ற அந்தப் பணியிலே நாம் ஈடுபடுகின்றோம்.

பல மேம்பாலங்கள் சென்னை மாநகரத்திலே கட்டப்பட்டும்கூட ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலும், மேம்பாலங்கள் அமைத்தும்கூட போக்குவரத்து இன்னும் எளிமையாக இல்லை, இலகுவாக இல்லை. அதிலே பல சங்கடங்கள், இடையூறுகள் இருக்கின்றன என்ற நிலையை உணரமுடிகிறது.

என்னதான் வசதி வாய்ப்புகளை மக்களுக்கு உருவாக்கிக் கொடுத்தாலும், அரிசியைக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு; போகின்ற வழியிலே ஒரு கலர் டி.வி. பெட்டியை இனாமாகப் பெற்றுக்கொண்டு போகின்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், வீட்டுக்கு உரிய நேரத்திலே போய்ச் சேரமுடியாவிட்டால் வழியிலே போக்குவரத்து இடையூறாக இருந்தால், கையிலே குறைந்த விலைக்கு வாங்கிய அரிசி பை இருந்தாலும், அதிக விலை பெறக்கூடிய டி.வி.பெட்டி – அதுவும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கையிலே இருந்தாலும், அந்தப் போக்குவரத்து இடையூறு காரணமாக இவைகளைக் கொண்டுபோய் வீட்டிலே சேர்த்து குழந்தைக் குட்டிகளோடு மகிழ்ச்சி அடைய முடியவில்லையே; நேரமாகிறதே என்று அவர்கள் பேருந்து ஓட்டுபவர்களை; அவர்களுக்கு வழித்தடம் காண்பிப்பதற்காக வழியிலே குறுக்கே நின்று சைகை காட்டிக் கொண்டிருக்கின்ற காவல் துறை நண்பர்களை மாத்திரமல்ல, இவ்வளவும் செய்கின்ற சர்க்காரையே "என்ன சர்க்காரப்பா, எவ்வளவு நேரமாகிறது" என்று அலுத்துக் கொள்வார்கள். அப்படிப்பட்ட ஒரு அலுப்பு, சலிப்பு அரசின் மீது வராமல் இருப்பதற்கு நம்முடைய போக்குவரத்துக்கள், வழி நடைப்பாதைகள் எல்லாம் எளிதாக, வசதிமிக்கதாக, வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாக இருந்திட வேண்டும்.

**மக்கள்தொகை பெருக்கம்**

அப்படிப்பட்ட நிலை இன்று தமிழகத்திலே மாத்திரமல்ல; இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள அரசுகளால் நம்முடைய நண்பர் வேலு போன்றவர்களுடைய உதவியோடு, முயற்சியோடு, துணையோடு இந்த போக்குவரத்துக்கள் சீர் செய்யப்பட்டாலும்கூட இன்னும் பல தேவைகளை அந்தந்த மாநிலங்கள் மத்திய அரசுக்கு தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு சட்டமன்ற உறுப்பினர், ஒரு ரயில்வே அமைச்சரை, கப்பல் துறை






அமைச்சரைச் சந்திக்கின்ற நேரத்தில் எங்கள் ஊருக்கு ஒரு ரயில் தேவை என்று சொல்லாமல் இருப்பதில்லை. என்ன காரணம் ? எவ்வளவுதான் தேவைக்கு ஏற்ப போக்குவரத்து வசதி செய்து கொடுத்தாலும், மக்கள் தொகையினுடைய பெருக்கம் அளவுக்கு மீறி பெருகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் அவர்களுடைய தேவையையெல்லாம் நிறைவு செய்யக்கூடிய ஒரு நிலை ஏற்படுவதற்கு ஒரு அரசு நிதியை அதற்காக ஒதுக்கினாலும், அதற்காக ஆற்ற வேண்டிய ஆக்கப்பணிகளை செய்வதற்கு காலம், நேரம் அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

இந்தியா இன்றைக்கு சுதந்திர நாடு. 200, 300 ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய போக்குவரத்துக்கள் கிடையாது. இன்றைக்குக் கூட பள்ளிக்கூடத்தில் உள்ள ஆரம்ப பாடப் புத்தகத்திலே அசோக மன்னர் என்ன நன்மைகளைச் செய்தார் நாட்டுக்கு என்றால், சாலைகள் போட்டார், குளங்கள் வெட்டினார் என்றுதான் இன்றைக்கும் பாலபாடத்திலே படிக்கிறோம். காரணம் சாலைகள் அதாவது போக்குவரத்துக்கள் அவ்வளவு அவசியமாக கருதப்பட்டது. அதனால் தான் சாலைகள் போடுவதிலும், அப்படி சாலைகள் போடுகின்ற வழியிலே அவர்களுக்குத் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்காகக் குளங்கள் வெட்டுவதிலும், அரசுகள், அரசர்கள் தனி கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருந்தார்கள். இது 300, 400 ஆண்டுகளுக்கு முன்பு.

அப்படிப்பட்ட நேரத்திலேதான் இந்தியாவில் வெள்ளைக்காரன் நுழைந்தான். ஆங்கிலேயர்களுக்கு முன்பு டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள் நுழைந்தாலும் கூட அவர்களைவிட நுழைந்தவர்களிலே கெட்டிக்காரர் களாக இந்தியாவினுடைய நிலைமைகளை அறிந்து அந்தத் தேவைகளை நிறைவு செய்பவர்களாக இருந்தவர்கள் ஆங்கிலேய வெள்ளைக்காரர்கள். அதனால்தான் அவர்கள் போக்குவரத்தை முதலில் சீர் செய்தார்கள்.

**தபால், தந்தி, ரயில்**

கிராமங்களில் அந்தக் காலத்தில் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டும் என்று பேசப்படும்போது காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களிலே காங்கிரஸ் தியாகிகள் இந்திய சுதந்திரத்தைப் பற்றி பேசும்போது – வெள்ளைக்காரனைத் தாக்கிப் பேசும்போது கிராமங்களில் உள்ள தாய்மார்கள், வயதான பாட்டிகள் என்ன சொல்வார்கள் என்பதை கேட்டிருக்கிறேன்; "ஆமா வெள்ளைக்காரனை விரட்டி விட்டு – அவன் இல்லையென்றால் ரயில் வருமா? அவன் இல்லையென்றால் தந்தி உண்டா? அவன் இல்லையென்றால் தபால் உண்டா?" – இப்படி தபால், தந்தி, ரயில் போன்ற இந்த சாதாரண வசதிகள் என்று இன்றைக்கு கருதப்படுகின்ற இந்த வசதி வாய்ப்புக்கள் அந்தக் காலத்திலே எவ்வளவு பெரிதாகக் கருதப்பட்டது என்பதால்தான் "ரயில் போட்டான் வெள்ளைக்காரன்; தபால் நிலையங்களை உருவாக்கினான் வெள்ளைக்

காரன்; எனவே அவனை ஏன் விரட்ட வேண்டும்?" என்று பட்டிக்காட்டிலே வாழுகின்ற பாமர மக்கள் பதில் அளித்தார்கள்.

தியாகம் செய்த காங்கிரஸ்காரர்களைப் பார்த்தும்கூட, விடுதலைக்காகப் போராடியவர்களைப் பார்த்தும்கூட கேட்டார்கள். இதற்கு என்ன காரணம் என்றால் மனிதனுடைய அத்தியாவசியத் தேவைகளிலே ஒன்றாக இருக்கின்ற உணவு, உடை இவைகளோடு சேர்த்து ஒத்த வகையில் எண்ணத்தக்க இந்தப் போக்குவரத்து வசதிகள் ஆளுகின்றவர்களால் இன்றைக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

எண்ணிப்பாருங்கள்! நீலகிரி மலையில் இந்தச் சாலைகள் எல்லாம் போடப்படாமல் – அன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு நீலகிரி மலை எப்படி இருந்தது? காடு முரடாக எந்தப் பாதையும் இல்லாமல் இருந்தது நீலகிரி மலை. ஏன் நீலகிரிக்குப் போகவேண்டும்? சேலத்திற்கு பக்கத்திலே இருக்கின்ற சின்னஞ்சிறு மலை;

நேர்மையாக நேர்த்தியாக செய்து தர வேண்டும். அப்படி செய்து தரப்படும் பொழுது உள்ள போக்குவரத்துக்களிலே இன்றைக்கு உச்சக்கட்டத்திற்கு வந்திருக்கின்ற போக்குவரத்து, தம்பி டி.ஆர்.பாலு இங்கே சொன்னதைப் போல அது ஆகாய விமானமாக இருக்கலாம், அதுவும் போக்குவரத்துதான். அடுத்து கப்பலாக இருக்கலாம், அதுவும் போக்குவரத்துதான். அதற்கடுத்து நம்முடைய வேலு நிர்வகிக்கின்ற ரயில்வே இலாக்காவாக இருக்கலாம், அதுவும் போக்குவரத்துதான்.

ஆனால் இவைகள் எல்லாம் இந்தியாவினுடைய மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமானதாக அமைந்திருக்கின்றதா என்றால் இல்லை. 100 கோடியைத் தாண்டி இருக்கிறது இந்தியாவினுடைய மக்கள் தொகை. ஆனால் 100 கோடி மக்களுடைய வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப அவர்களுடைய தேவைகளையெல்லாம் நிறைவு செய்யக்கூடிய அளவிற்குப் போக்குவரத்துத் துறை இருக்கிறதா என்றால் இல்லை. இதை நான் குறையாக – குற்றமாக எந்த ஒரு அரசு மீதும் அல்லது மத்திய அரசு



ஏற்காடு மலை என்று எடுத்துக் கொண்டாலும்கூட அங்கெல்லாம் செல்வதற்கு வழியில்லாமல் நல்ல பாதை இல்லாமல் இருந்த அந்த மலைப்பாங்கான இடங்கள் ஆங்கிலேயருடைய காலத்திலேதான், வெள்ளைக் காரனுடைய காலத்திலேதான் சீர்படுத்தப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்டு இன்றைக்குத் தார்ச் சாலைகளாக, சிமெண்ட் சாலைகளாக விளங்குகின்ற காட்சிகளை எல்லாம் பார்க்கிறோம்.

இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் அடிப்படை போக்குவரத்துக்கான வசதிகளை ஒரு அரசு

மீதும் சொல்லமாட்டேன், சொல்ல முடியாது; ஏனென்றால் அவர்களும் நம்மால் உருவாக்கப்பட்ட அரசு தான் அவர்களுக்கு என்ன கஷ்டம் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல. நானும் ஒரு அரசு பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் எனக்கும் அது புரிகிறது.

**மத்திய, மாநில அரசுகளின் உதவி**

மெல்ல மெல்லத்தான், ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற அக்கறையோடு நாம் பாடுபடுகின்ற






காரணத்தினாலேதான் இன்றைய தினம் இந்த போக்குவரத்திலே பிரதானமாக நாம் கருதுகின்ற ரயில்வே துறை மூலம் இன்னும் சிறு சிறு கிராமங்களைக் கூட பட்டிதொட்டிகளைக்கூட இணைக்கின்ற வகையிலே ரயில்வே பாதைகள் அமைய வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அண்மையிலே அதுவும் தமிழகத்திலே இதுபோன்ற காரியங்களைச் செய்யும்போது எவ்வளவு இடையூறுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதையெல்லாம் சேலத்தில் ஒரு ரயில்வே கோட்டம் அமைக்கும்போது நம்மால் அதை எதிர்பார்க்க முடிந்தது. நாம் அதைச் சமாளிக்க முடிந்தது. அப்படிச் சமாளிப்பதற்கு மக்கள் சக்தியைத் திரட்ட வேண்டியிருந்தது. அதற்கு மத்திய அரசின் உதவியும் இருந்தது. மாநில அரசின் உதவியும் இருந்தது. இவ்வளவு உதவிகளை வைத்துக் கொண்டு ஒரு கோட்டத்தை அமைக்கக் கூட நாம் அவ்வளவு கஷ்டத்தை ஏற்கவேண்டியிருந்தது.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், எந்த ஒரு நல்ல காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், அதைத் தமிழ்நாட்டில் செய்வதாக இருந்தாலும், அது தண்ணீராக இருந்தாலும், போக்குவரத்தாக இருந்தாலும், அது ஆறாக இருந்தாலும், நதியாக இருந்தாலும், ஏன் சாதாரண வாய்க்காலாக இருந்தாலும்கூட தமிழ்நாடு மக்களுக்கு அது பயன்படுகிறதென்றால், அதைத் தடுக்க, அதைத் தாமதப்படுத்த, அதிலே தகராறு செய்ய பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள் கூட இன்றைக்குத் தவறுவதில்லை. எனவே தான் பல கஷ்டங்களை நாம் சமாளித்து, நம்முடைய தேவைகளை நிறைவு

செய்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆறு, வாய்க்கால்களிலே தகராறு வரலாம். ஆனால் ரெயில்வே பாதைகளிலே கூட தகராறுகளை நாம் சமாளித்துத்தான் அதிலிருந்து மீள வேண்டியிருக்கிறது. அப்படி மீண்ட ஒரு நிகழ்ச்சி தான் அண்மையிலே நாம் உருவாக்கிய சேலம் ரயில்வே கோட்டம்.

**சேலம் ரயில்வே கோட்டம்**

எத்தனை நாட்களாக அதைப் பற்றி பேசியிருக்கிறோம்? சேலம் ரயில்வே கோட்டத்தைப் பற்றி தேவகவுடா பிரதமராக இருந்த காலத்திலேயே – தேவகவுடா அவர்களை உங்களுக்கு ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன் – அவர் பிரதமராக இருந்த போதே சேலம் கோட்டம் வேண்டுமென்று சேலத்திலே ஒரு நிகழ்ச்சியிலே கோரிக்கை வைத்து, அவரும் நிறைவேற்றுவதாகச் சொல்லி விட்டுப் போனார். ஆனால் தேவகவுடா காலத்திலும் நிறைவேறவில்லை. பிறகு யார் யாரோ பிரதமர்களாக வந்தார்கள், நிறைவேறவில்லை. இப்போது நம்முடைய திருமதி. சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலில், திரு. மன்மோகன் சிங் அவர்களுடைய ஆட்சியிலே தான் – நண்பர் வேலு போன்றவர்கள், லல்லு போன்றவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாகத் தான் சேலம் கோட்டம் இன்றைக்கு வந்திருக்கின்றது.

என்ன? சேலம் கோட்டம் என்று அடிக்கடி சொல்கிறாரே, அது என்ன வள்ளுவர் கோட்டம் போலவா என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. சேலம் கோட்டம் என்றால் ரயில் பாதை எந்தெந்த ஊர்களை இணைக்கின்றது, எப்படிப்பட்ட செழிப்புள்ள இடங்களையெல்லாம் அது இணைக்கிறது, எப்படிப்பட்ட

பொருளாதார வசதியுள்ள இடங்களையெல்லாம் அது இணைக்கிறது, எப்படிப்பட்ட தொழில் வளர்ச்சியுள்ள இடங்களையெல்லாம் அது இணைக்கிறது, அப்படி இணைப்பதால் எந்தப் பகுதி மக்கள், சாதாரண சாமான்ய பாட்டாளி மக்கள் எந்த அளவிற்குப் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைவார்கள், கோட்டம் என்பது ஏதோ பெயர் மாத்திரமல்ல, அதனால் விளையும் பயன்களையெல்லாம் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கின்றது. ஒரு நாளைக்கு 58 தடவை போனாலோ, 60 தடவை போனாலோ போகின்ற ரயில் ஒழுங்காகப் போக வேண்டும், யார் மீதும் மோதாமல் செல்ல வேண்டும். ஏனென்றால் இப்போது ரெயில்கள் குறைந்து, பேருந்துகள், லாரிகள் சாலைகளிலே அதிகமாகப்



நாம் எண்ணிப் பார்க்கிறோம். அப்படி எண்ணிப் பார்த்துத் தான் சேலம் கோட்டத்திற்காக அந்த அளவிற்கு நாம் போராடி அதைப் பெற்றிருக்கிறோம்.

அதே போல இன்றைக்கு இந்த விஷயம் – வேளச்சேரிக்குப் பறக்கும் ரயில் கொண்டு வருவது சாதாரணமாகத் தெரியலாம். எதுவுமே ஒன்று நடக்கிற வரையிலே பெரிதாகத் தெரியும், நடந்து விட்டால் அது நமக்கே சாதாரணமாகத் தெரியும். அது தான் வந்து விட்டதே என்று நமக்கு சாதாரணமாகத் தெரியும். ஆனால் வந்த இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள நம்முடைய மக்கள் தயாராக இருக்க வேண்டும். அதற்கு நல்ல முறையிலே ஒத்துழைப்புத் தர வேண்டும்.

**ஓட்டுநர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்க வேண்டும்**

இந்தப் பாதையில் ரயில் வேகமாகப் போகும், ஒரு நாளைக்கு 58 முறை போய் வரும் என்றெல்லாம் போக்குவரத்துக்களுக்குப் பயன்படுத்துகின்ற காரணத்தால் எனக்கே சகிக்காமல் சொல்கிறேன், என்னால் தாங்க முடியாமல் சொல்கிறேன், விபத்துக்கள் அந்த அளவிற்கு இன்றைக்கு தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் விபத்துக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் நாம் பத்திரிகைகளைப் பார்த்தால் அல்லது வானொலியைக் கேட்டால், தொலைக்காட்சிகளைக் கண்டால் ஐம்பது பேர், அறுபது பேர் விபத்துக்களுக்கு ஆளாகி உயிர் விட்டார்கள் என்ற செய்தி வந்து கொண்டிருக்கின்றது. அதற்கு யார் காரணம்? வைதீகர்கள் விதி என்று சொல்லி விட்டுப் போய் விடுவார்கள். அல்ல, இது விதி அல்ல, நம்முடைய அஜாக்கிரதை. நம்முடைய தவறு. நம்முடைய காரோட்டிகள், பேருந்து ஓட்டுநர்கள், லாரி ஓட்டுநர்களின் அஜாக்கிரதை. இதிலே நூற்றுக்கு தொண்ணூறாவது இவர்களுடைய அஜாக்கிரதையால் நடைபெறுகிறது. எனவே அவர்களுக்கெல்லாம் நல்ல



பயிற்சி அளிக்க வேண்டும். போதுமான பயிற்சி அவர்களுக்குத் தரப்பட வேண்டும்.

இரவிலே தூங்கி விட்டு, லாரிகளிலே உட்கார்ந்து கொண்டு தூங்கி விட்டு அல்ல, படுத்துத் தூங்கி விட்டு, பிறகு லாரியை ஓட்ட வேண்டும் என்கிற அளவிற்கு அவர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் போகிற உயிர்கள் சாதாரண உயிர்கள் அல்ல. பச்சைக் குழந்தைகள், பாவையர்கள், பெண்கள், பாட்டிமார்கள், தாய்மார்கள், உழவர்கள், பாட்டாளி மக்கள் என்று இப்படி பலபேருடைய உயிர்கள் – அவர்களுடைய உயிர்களைக் குடிக்கின்ற, புராண பாஷையிலே சொல்ல வேண்டுமேயானால், "எமன்"களாக இன்றைக்கு நம்முடைய நாட்டுச் சாலைகளிலே சென்று கொண்டிருக்கின்ற பேருந்துகளுக்கும், லாரிகளுக்கும் நாம் ஒரு ஒழுங்குமுறையை ஏற்படுத்தி அவைகள் எல்லாம் ஒழுங்காகச் செல்வதற்கு சட்டம் போட்டு முடியாது, அவைகளை ஓட்டுகின்றவர்கள், அவைகளை நிர்வகிக்கின்றவர்கள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு இந்த விபத்துக்களைத் தடுக்க அவர்கள் முன்வரவேண்டும்.

ரெயில்களால் இப்படி விபத்துக்கள் ஏற்படாது. ஏனென்றால் ஒழுங்காக கட்டுப்பாட்டிலே இரண்டு தண்டவாளங்களிலே போய்க் கொண்டிருக்கின்றன. கட்டுப்பாடில்லாமல் போய்க் கொண்டிருக்கின்ற பேருந்துகள், லாரிகள் எல்லாம் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய விபத்துக்களை இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கின்றன. அதிலும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எச்சரிக்கையாக இருக்கின்ற அதே நேரத்தில் நாம் போக்குவரத்தில் இன்றைக்கு காவல் புரிகின்ற காவல் துறை நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அவர்களும் லாரிகளை ஓட்டுகின்றவர்கள், பேருந்துகளை ஓட்டுகின்றவர்கள் தேர்ச்சி பெற்றவர்கள் தானா? முறையாகப் பயிற்சி பெற்றவர்கள் தானா என்பதை இன்னும் நல்ல முறையிலே ஆராய்ந்து அவர்களை அனுமதிக்க வேண்டும் என்றும், அதிலே விழிப்பாக இருக்க வேண்டுமென்றும் நான் வலியுறுத்தி இந்த அளவில் உங்களையெல்லாம் இந்த நிகழ்ச்சியிலே சந்திப்பதில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, இந்தப் பறக்கும் ரயில் விரைவிலே கொண்டு வருவதற்கு அரும்பணியாற்றிய அருமை சகோதரர் வேலு அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன். ✶

## சொன்னதைச் செய்வோம் செய்ததைச் சொல்வோம்!

**கேள்வி :-** ஆந்திரத்தில் ஏப்ரல் முதல் ரூ.2 க்கு 1 கிலோ அரிசி என்று அந்த மாநில முதல்வர் அறிவித்திருக்கிறாரே?

பதில் :- மகிழ்ச்சி. முதன் முதலில் இந்தியாவிலேயே அந்தத் திட்டத்தை அறிவித்து, நடைமுறைப்படுத்திய மாநிலம் தமிழ்நாடு என்பதில் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஆந்திராவிலே மாத்திரமல்ல ; விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள குஜராத் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் அறிக்கையில் அங்கே காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைக்குமேயானால், ஏழைகளுக்கு இலவச ரேஷன் பொருட்கள், கலர் டி.வி. போன்ற ஏராளமான சலுகைகளை வழங்குவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக தமிழகத்தில் உள்ள தி.மு.கழக ஆட்சி நடைபெறுகிறது.

–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

# இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கிட எந்தவிதமான வருமான உச்சவரம்பு கிடையாது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமது உணர்வோடு இரண்டறக் கலந்திட்ட ஈடுஇணையற்ற திட்டமான இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் விதம் குறித்து மாண்புமிகு அமைச்சர்கள், அரசுச் செயலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் 14.11.2007 அன்று கலந்தாய்வு நடத்தினார்.

31–7–2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த நிதி ஆண்டு முடிவதற்குள் மூன்றுஇலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்றுஒரு வரையறை விதித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைவரும் அந்தப் பணியில் முழுமூச்சுடன் செயல்பட வேண்டுமென்று முடிவெடுத்து அறிவித்ததைத் தொடர்ந்து, 14.11.2007 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில்; அந்த வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்த அளவிற்குப் பணியாற்றினார்கள் என்பதை ஆய்வு செய்வதற்கான கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி, தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வளர்ச்சி ஆணையர், வருவாய்த் துறைச் செயலாளர், நில நிருவாக ஆணையர் மற்றும் திருச்சி, நாகை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கோவை விழுப்புரம் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப் பட்டதில், 10.11.2007 வரை 2 இலட்சத்து 7 ஆயிரத்து 287 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து இந்தப் பணியினை முழு வேகத்தோடு முடிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும் அன்றைய தினம் நடைபெற்ற கூட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட புதிய அறிவிப்புகள் :–

இலவசமாக வீட்டுமனை பெற கிராமப் புறங்களில் ஆண்டு வருமானம் 30 ஆயிரம் ரூபாய் என்றும், நகர்ப்புறங்களில் ஆண்டு வருமானம் 50 ஆயிரம் ரூபாய் என்றும் இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்பை முழுவதுமாக நீக்குவதென்று முடிவு செய்யப்பட்டது. இனி இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க எந்தவிதமான வருமான உச்சவரம்பும் கிடையாது.

கிராமப்புறங்களில் இதுவரை மூன்று சென்ட் வரையிலும், நகராட்சிப் பகுதிகளில் ஒன்றரை சென்ட் வரையிலும், மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு சென்ட் வரையிலும் வருமான வரம்புக்குட்பட்டு, இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வரைமுறை செய்து வழங்கப்பட்டதற்கு மாறாக இனிமேல் கிராமப் புறங்களில் நான்கு சென்ட் வரையிலும், நகராட்சிப் பகுதிகளில் இரண்டரை சென்ட் வரையிலும், மாநகராட்சிப் பகுதிகளில் இரண்டு சென்ட் வரையிலும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வருமான உச்சவரம்பு எதுவுமின்றி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தச் சிறப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற மனைக்கிரயம் செலுத்தியவர்களுக்கு, அவர்கள் செலுத்திய தொகை அவர்களுக்கே திரும்ப வழங்கப்படும். ✶



# வேளாண்மை - ஊரக வளர்ச்சி - நீர் பாசனம் - சமூகத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நிதி ஒதுக்கி, தமிழ்நாட்டிற்கான பதினோரவாது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் அளிக்கப்பட்டது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் மாநிலத் திட்டக் குழுவின் கூட்டம் 8.12.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கையை, மாநிலத் திட்டக் குழுத் தலைவரான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் திரு.மு.நாகநாதன் அளித்து, இத்திட்டத்தின் முதன்மையான துறைகளின் இலக்குகளையும், அணுகுமுறைகளையும், நிதி ஒதுக்கீடுகளையும் பற்றி விளக்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திட்டத்தின் அனைத்துக் கூறுகள் பற்றி தமது கருத்து களையும், ஆலோசனைகளையும் வழங்கினார்.

பின்னர் திட்டத்தின் மீதான கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது. பதினோராவது திட்டத்தில், இயைந்த வளர்ச்சியை முன்னிலைப்படுத்த மத்திய அரசின் திட்டக்குழு தம் கருத்துகளை முன் வைத்தது. மத்திய அரசின் திட்டக்குழுவால் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 9 விழுக்காடு வளர்ச்சி இலக்கினை இயைந்த வளர்ச்சி அணுகுமுறை வாயிலாக எட்ட வேண்டுமென முன்மொழியப்பட்டது.

ஒன்பதாம், பத்தாம் ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண் துறை வளர்ச்சியானது பல இயற்கைக் காரணிகளுக்குட்பட்டு, பல்வேறு காரணங்களால் பெரும்பாதிப்புக்கு உள்ளானது. இருப்பினும், தொழில், பணித் துறைகளில் ஏற்பட்ட தொடர் வளர்ச்சியால் தமிழகப் பொருளாதாரம் சீரான வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது.

இத்திட்ட காலத்தில் வேளாண் துறையில், ஆண்டு வளர்ச்சி 4 விழுக்காட்டினை எட்ட வேண்டும் என்ற இலக்கு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. துறை வாரியாக பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகால நிதி ஒதுக்கீட்டைவிட, இத்திட்ட காலத்தில் நிதி ஒதுக்கீடு அளவு பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 80 ஆண்டுகளாக இடஒதுக்கீட்டுக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு, சமுதாயத் துறையில் பெருமளவில் பொதுச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டு, சமூகநீதி முன்னிலைப் படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, மனித வளர்ச்சிக் குறியீடுகளில் பஞ்சாப், கேரளா ஆகிய மாநிலங்களுக்கு அடுத்த நிலையில் தமிழ்நாடு 1991ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மூன்றாம் இடத்தில் இருந்து வருகிறது.

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்ட பரந்த நோக்கங்களின் அடிப்படையில், வேளாண்துறை, ஊரக வளர்ச்சி, நீர்ப்பாசனம், சமூகத் துறை ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பத்தாவது திட்ட காலத்தின் மொத்த செலவான 43 ஆயிரம் கோடி ரூபாய் அளவைவிட, பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில், திட்ட நிதி ஒதுக்கீடு 85 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த மொத்தத் தொகையில் வேளாண் துறை, நீர்ப்பாசனம், ஊரகத் துறைகளுக்கு 25.6 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டக் காலத்தில் வேளாண் துறைக்கு 9.18 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்வி, நலவாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி, குடிநீர் வழங்கல் ஆகிய துறைகளை உள்ளடக்கிய சமுதாயத் துறைக்கு மொத்தத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 43.04 விழுக்காடு அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் விரைந்த வளர்ச்சியைப் பெற்று வரும் தொழில், பணித் துறைகளின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், மின்சாரம், நெடுஞ்சாலைப் போக்குவரத்து வசதிகள் முதலான கட்டமைப்புப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீட்டில் 30.76 விழுக்காடு அளவில் இருக்கும்.

திட்ட நிதி ஒதுக்கீடுகள் நீடித்த வேளாண் வளர்ச்சியைப் பெறுவதற்கு உறுதுணை புரியும். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளான மாநிலப் பொருளாதாரத்தில் ஆண்டு வளர்ச்சி வீதம் 9 விழுக்காட்டினைப் பெறுவதற்குரிய தொடர் முயற்சிகளை தமிழ்நாடு மேற்கொள்ளும்.

இந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துறைவாரியான நிதி ஒதுக்கீடுகள் 19.12.2007 அன்று புதுடெல்லியில் நடைபெற உள்ள தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, இறுதி வடிவம் பெற்ற பின் திட்டங்கள் பற்றிய முழு விவரங்கள் செய்தி ஊடகங்களுக்கு அளிக்கப்படும்.

இக்கூட்டத்தில் திட்டக்குழுவின் முழுநேர உறுப்பினர் முனைவர் திரு.இராம.சீனுவாசன், பகுதி நேர உறுப்பினர்கள் திரு.இலட்சுமிகாந்தன் பாரதி,(ஓய்வு), திரு.ஜி.சிதம்பரம், முனைவர் திரு.பெ.ஜெகதீசன், திரு.கருமுத்து தி.கண்ணன், திரு.தமிழருவி மணியன், மருத்துவர் சுநிதி சாலமன், உறுப்பினர்–செயலர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.பா., ஆகியோரும், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர்–முதன்மைச் செயலர் திரு.ஏ.நாகராசன், இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன் இ.ஆ.ப., ஆகியோரும் கலந்துகொண்டனர்.

❖ ❖ ❖

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**அவர்களின் வேண்டுகோளின்படி**

விவசாயிகளின் நலன் கருதி, டிசம்பர் – ஜனவரி மாதங்களில்

விவசாயிகளுக்கு தேவையான 68,500 மெ.டன் உரம்

மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இதனால் தமிழகத்தில் எந்த மூலையிலும் உரத்தட்டுப்பாடு இல்லை.





# அரியலூர் மாவட்ட வளர்ச்சிக்கான திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும்

**புதிய அரியலூர் மாவட்டத்தைத் தொடங்கிவைத்து**

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

தொகுப்பு :

**த.மருதப்பிள்ளை**

செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,

பெரம்பலூர்

தற்போது உள்ள பெரம்பலூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு "பெரம்பலூர் மாவட்டம்" என்றும், அரியலூரைத் தலைநகராகக் கொண்டு "அரியலூர் மாவட்டம்" என்றும் அமைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் (25.7.2006) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றும்போது அரியலூர் மாவட்டம் மீண்டும் வரும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டும், உள்ளூர் மக்களின் விருப்பத்தை ஏற்றும் அரியலூரைத் தலைநகராகக் கொண்டு புதியதாக

அரியலூர் மாவட்டம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.அதன்படி பெரம்பலூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு பெரம்பலூர் வருவாய்க் கோட்டம், பெரம்பலூர், குன்னம், வேப்பந் தட்டை ஆகிய மூன்று வட்டங்களைக் கொண்டும் பெரம்பலூர் மாவட்டம் அமையும்.

அரியலூரைத் தலைநகராகக் கொண்டு இரண்டு வருவாய்க் கோட்டங்கள் – அரியலூர், உடையார்பாளையம் மற்றும் மூன்று வட்டங்கள் (தாலுக்காக்கள்) – அரியலூர், உடையார் பாளையம் மற்றும் செந்துறை ஆகியவைகளைக் கொண்டு அரியலூர் மாவட்டம் அமையும்.

புதிய அரியலூர் மாவட்டம் நவம்பர் மாதம் 23–ஆம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. புதிய அரியலூர் மாவட்டத்திற்கு 73 பணியிடங்கள் அனுமதிக்கப் பட்டுள்ளது.

அரியலூரில் 23.11.2007 அன்று பெற்ற விழாவில் தமிழகத்தின் 31–ஆவது மாவட்டமாக அரியலூர் மாவட்டத்தை தொடங்கி வைத்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 5,973 நபர்களுக்கு ரூ.2 கோடியே 66 இலட்சம் மதிப்பில் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் 17 புதிய வழித்தடங்களில் அரசுப் பேருந்துகளை இயக்கி வைத்தார்.

இந்த விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :–

"அரியலூரில் பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றி உத்தரவிட்டதைத் தொடர்ந்து 23.11.2007 அன்று அரியலூர் மாவட்டத்தைத் தொடங்கி வைப்பதுடன், இம்மாவட்ட மக்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகிறது. அதன்படி ஊரக வளர்ச்சித்துறை மூலம் 1,423 நபர்களுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனாக ரூபாய் 72.51 இலட்சமும், 45 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள 743 மகளிருக்கு சுழல் நிதி மற்றும் கடனாக ரூபாய் 18 இலட்சமும், வருவாய்த்துறை மூலம் 2,337 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா மற்றும் நல உதவிகளாக ரூ.1 கோடியே 32 இலட்சம் மதிப்பிலும், 100 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகளும் வழங்கப்படுகின்றன.

இது தவிர வேளாண்மைத் துறை மூலம் 100 விவசாயிகளுக்கு வேளாண் இடு பொருள்களும், மாவட்டத் தொழில் மையம் மூலம் 7 நபர்களுக்கு 2.60 இலட்சம் மதிப்பில் சுயதொழில் கடன் உதவியும் சுகாதாரத் துறை மூலம் 60 கர்ப்பிணிப் பெண்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவியும், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மூலம் 50 நபர்களுக்கு ரூபாய் 11.25 இலட்சம் மதிப்பிலும் சமூகநலத் துறை மூலம் 60 ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு மூவலூர் இராமாமிர்தம் பெயரிலான திட்டத்தில் ரூ.9 இலட்சமும், தாட்கோ திட்டத்தில் 97 ஆதிதிராவிட மகளிருக்கு பல்வேறு உதவிகளும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 96 நபர்களுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பிலும், நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

அரியலூர் மாவட்ட மக்களின் பல ஆண்டு கால கோரிக்கை இன்று மீண்டும் நிறைவேற்றப்பட்டுள்ளது. முதன் முதலாக 1995ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம் 3ஆகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூர் மாவட்டத்திற்கு அரியலூர், தலைமையிடம் வேண்டுமென்று வைக்கப்பட்ட கோரிக்கை அன்றைய அ.தி.மு.க அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதன் பிறகு 1.1.1997இல் திருவாரூர், தேனி மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன. அதனையடுத்து 19.1.2004இல் தருமபுரி மாவட்டம் பிரிக்கப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் தோற்றுவிக்கப் பட்டது. அந்தக் கணக்கின்படி இன்று அரியலூர் 31ஆவது மாவட்டமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 16.5.1999 அன்று அரியலூர் அருகே வாரணவாசியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்து முதல்வர் கலைஞர் அவர்கள் அரியலூர் மாவட்டத்தைத் தொடங்க அறிவித்தார்.

அதன்படி 30.12.1999 முதல் தனி அலுவலரும் நியமிக்கப்பட்டு 1.1.2001 முதல் செயல்பட்டு வந்த அரியலூர் மாவட்டத்தை 19.4.2002 அன்று ஒரே நாளில் அன்றைய முதல்வர் ஜெயலலிதா அரியலூர் மாவட்டத்தை பெரம்பலூர் மாவட்டத்துடன் இணைத்து உத்தரவிட்டார். அன்று எதிர்த்து யாரும் போராட்டம் நடத்தவில்லை. ஆனால் 2006இல் மீண்டும் 5ஆவது முறையாக கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பதவியேற்றவுடன் மீண்டும் அரியலூர் மாவட்டக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. நாங்கள் சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் உறுதி அளித்தபடி மீண்டும் அரியலூர் மாவட்டத்தைத் தொடங்கிட முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.

**பழுப்பு நிலக்கரி மின் திட்டம்**

இங்கே அமரமூர்த்தி பேசும்போது சொன்னார். நான் தொடங்கி வைக்கும் முதல் மாவட்டம் என்று. இது எனக்கு கிடைத்த முதல் வாய்ப்பு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் தொடங்கி



வைத்துள்ள முதல் மாவட்டம் தமிழகத்தில் முதல் மாவட்டமாக வளரவேண்டும். முந்தைய ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் எது கேட்டாலும் கிடைக்காது. ஏசுபிரான் சொல்லிய தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கும் மேலாக தற்போது யாரும் கேட்காமலேயே வழங்கும் முதல்வராக கலைஞர் இருக்கிறார். புதிய அரியலூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்கு ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்திட்டம் விரைவில் தொடங்கப்பட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வாய்ப்பாக உள்ளது. பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் 90 சதவிகிதம் காவிரி கூட்டு குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. விடுபட்டுள்ள ஜெயங்கொண்டம் பகுதிக்கும் திட்டம் நிறைவேற்ற அரசாணை வெளியிடப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. இராசா அவர்கள் பேசும்போது, அரியலூர் மாவட்டம் பிரிக்கப்படுவதால் பெரம்பலூர் மாவட்டம் சிறியதாக ஆகும் என்றும், இதனால் அப்பகுதியில் வளர்ச்சி குறையும் என்று யாரும் அஞ்சத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார். அப்பகுதியின் வளர்ச்சிக்காக சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபோல் அப்பகுதியில் மருத்துவ கல்லூரி தொடங்கவும் முதலமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுபோல் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களின் வளர்ச்சிக்காகவும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் ஊரக வளர்ச்சித்துறை மூலம் செயல்படுத்தப்படும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மிகப்பெரிய திட்டமாகும். இத்திட்டத்தினால் தமிழகத்தில் உள்ள 12,618 கிராமங்கள் முழுமையான அடிப்படை வசதிகள் பெற உள்ளன. ஒருங்கிணைந்த பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 65 ஊராட்சிகளில் 1,880 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 1,699 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. நடப்பாண்டு 65 ஊராட்சிகளில் 1,075 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 904 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுபோல் தமிழகத்தில் உள்ள 140 பேரூராட்சி களுக்கும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தலா ரூ.50 இலட்சம் மதிப்பில் பணிகளை மேற்கொள்ள திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் பொறுப்பேற்ற விழா மேடையிலே அறிவித்த 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டமும், விவசாயிகளின் ரூ.7 ஆயிரம் கோடி கூட்டுறவுக் கடன் தள்ளுபடி, சத்துணவுடன் வாரம் 3 முட்டை வழங்கும் திட்டமும் இதுவரை சிறப்பாகத்தான் செயல்பட்டு வருகின்றன. இவற்றைப் போல்தான் கிராம மக்களிடையே மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ள இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டமும் அறிவித்தபடி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத அனைத்து ரேசன் அட்டை உள்ளவர்களுக்கும் வழங்கப்படும். இந்த திட்டத்தை தவறின்றிச் செயல்படுத்திட முதலமைச்சர் தலைமையிலான குழு இதுவரை 20 முறை கூடி, டி.வி கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை ஆய்வு செய்துள்ளது. இதனால் மூன்றாம் கட்ட இலவச டி.வி. வழங்கும் திட்டத்தில் அரசு ஒதுக்கீட்டில் ரூபாய் 163 கோடி மிச்சமாகியுள்ளது. இதனால் மூன்றாம் கட்டமாக 30 இலட்சம் கலர் டி.வியுடன் 4 இலட்சம் கலர் டி.வி. கூடுதலாக வாங்கப்பட்டு 34 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் நவம்பர் 27ஆம் தேதி முதல் வழங்கப்பட உள்ளன. இத்திட்டத்தை முதல்வர் கலைஞர் சென்னை சேப்பாக்கத்தில் தொடங்கி வைக்க உள்ளார்.

இதுபோல் மக்களுக்கான திட்டங்களை இந்த அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. புதிய மாவட்டத்தைப் பெற்றுள்ள இப்பகுதி அனைத்துப் பொதுமக்களும் எப்போதும் ஆதரவாக இருக்க வேண்டும். இந்த மாவட்டத்திற்கு தேவையான அனைத்துத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு தேவையான அளவு வழங்கப்படும். மாவட்டம் முதன்மை பெற்றிட அனைவரும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும்" என்று உரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் தலைமை வகித்துப் பேசினார். மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ.இராசா, மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.என்.செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசினர். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு.வெள்ளகோவில் சாமிநாதன், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம். உபயதுல்லா மற்றும் உயர் அலுவலர்களும் கலந்துகொண்டனர். முன்னதாக பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.அணில் மேஷராம் இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார். முடிவில் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.மு. சேவியர்கிறிசோ நாயகம், இ.ஆ.ப., நன்றி தெரிவித்தார்.



# மாநகராட்சி சமுதாயக் கல்லூரியில் பயின்ற 90 மாணவ, மாணவியருக்கு தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதற்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

**எஸ்.செல்வராஜ்,**
மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை மாநகராட்சி

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மாநகராட்சி மேயராக இருந்தபோது 1999 ஆம் ஆண்டு ஏழுகிணறு, திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், ஆழ்வார்பேட்டை ஆகிய நான்கு இடங்களில் சமுதாயக் கல்லூரிகளைத் தொடங்கினார். கழக அரசு பொறுப்பேற்றவுடன் இக்கல்லூரிகள் மீண்டும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகள் வேலை வாய்ப்பினை, செயல்திறனை, தொழில் பயிற்சியினை அடிப்படையாகக் கொண்டு தரமான கல்வியை வழங்கி வருகின்றன. சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் மிகவும் பின்தங்கியுள்ளவர்களுக்கு இக்கல்லூரியில் முன்னுரிமை வழங்கி சேர்க்கப்படுகின்றனர்.



சென்னை மாநகராட்சி சமுதாய கல்லூரியில் கணினி நுட்பவியல், அச்சுத்தொழில் நுட்பவியல், இரண்டு / நான்கு சக்கர வாகன நுட்பவியல், பெண் செவிலியர் உதவியாளர், கணினி பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு, அலுவலக மேலாண்மை, உணவக மேலாண்மை மற்றும் ரொட்டித் தயாரிப்பு ஆகிய எட்டு வகையான தொழிற் கல்விகள் கற்பிக்கப்பட்டு மாணவர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. ஆகஸ்ட் 2006 வரை 1,900 மாணவ / மாணவியர் பயிற்சி பெற்றவர்களில் 90 சதவீதம் பேர் வேலை வாய்ப்பினைப் பெற்று குடும்பத்திற்குப் பெரிதும் துணை நிற்கின்றனர்.

> “தற்போதைய நடைமுறை வாழ்விற்கு ஏற்ற புதிய 3 மாத குறுகிய கால தொழிற் பாடப் பிரிவுகள் சென்னை மாநகராட்சியின் சமுதாயக் கல்லூரியில் இக்கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.”

தற்போதைய நடைமுறை வாழ்விற்கு ஏற்ற Business Process Outsourcing (B.P.O), Customer Relations and Sales, Hospitality Services ஆகிய புதிய 3 மாத குறுகிய கால தொழிற் பாடப் பிரிவுகள் சென்னை மாநகராட்சியின் சமுதாயக் கல்லூரியில், இக்கல்வி ஆண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

இத்துறையில் அனுபவம் பெற்ற டாக்டர் ரெட்டி பவுண்டேஷன், ஹைதராபாத் (Dr. Reddy's Foundation, Hyderabad) என்ற தரமான நிறுவனமும், சென்னை மாநகராட்சியும் சேர்ந்து பயிற்சிகள் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் ஆகஸ்ட் 2007இல் முதற்கட்டமாக 105 மாணவ / மாணவிகள் சேர்க்கப்பட்டு, அதில் பயிற்சியை முழுமையாக முடித்த 90 மாணவ / மாணவிகளுக்கு முன்னோடி நிறுவனங்களான மெக்டோனால்ட்ஸ் (MCDONALDS), இம்பெடஸ் (IMPETUS (Reliance) அர்விந்த் பிராண்ட்ஸ் (ARVIND BRANDS (Retail), ஏ.பி.என். ஆம்ரோ (ABN AMRO), நோக்கியா (NOKIA), ஸ்மோக்கிங் ஜோ'ஸ் (SMOKING JOE'S (Hotel) ஸ்பென்சர்'ஸ் டெய்லி (SPENCER'S DAILY), வோடோபோன் (VODAFONE (HUTCH) டிஷ் டி.வி. (DISH TV), காபி டே ஹோட்டல் (COFFEE DAY (Hotel) மற்றும் ஸ்டார் சிட்டி ஹோட்டல் (STAR CITY Hotel) போன்றவற்றில் மாநகராட்சி முயற்சியுடன் பணிபுரியத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு சராசரியாக ரூ.4,000 முதல் ரூ.6,000 வரை மாத வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.11.2007 அன்று தலைமைச் செயலகத்தில் மாணவ / மாணவிகளுக்கு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். பணி ஆணை பெற்ற இக்கல்லூரி மாணவ / மாணவியர் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாநகராட்சிக்கும் நன்றி தெரிவித்தனர்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு கே. தீனபந்து, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

# நகர்ப்புற ஏழை மக்களுக்கு ரூ.1,437.93 கோடியில் அடிப்படை வசதி அளிக்கும் திட்டம்



நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதியான வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு வசதி ஆகியவைகளை மேம்படுத்துதல், ஏழை மக்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதி, அடிப்படை வசதிகள் மற்றும் குடிசை வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்க மாநில அளவிலான வழிகாட்டும் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது.

இத்திட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கு 137 கோடியே 44 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய்க்கும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 235 கோடியே 90 இலட்சம் ரூபாய்க்கும், மதுரை மாநகராட்சிக்கு 195 கோடியே 46 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய்க்கும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு 823 கோடியே 98 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்க்கும், ஆணையூர் நகராட்சிக்கு 6 கோடியே 38 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்கும், தாம்பரம் நகராட்சிக்கு 6 கோடியே 33 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய்க்கும், பல்லவபுரம் நகராட்சிக்கு 6 கோடி ரூபாய்க்கும், ஆவடி நகராட்சிக்கு 5 கோடியே 95 இலட்சம் ரூபாய்க்கும், குறிச்சி நகராட்சிக்கு 4 கோடியே 29 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கும், குனியமுத்தூர் நகராட்சிக்கு 4 கோடியே 24 இலட்சம் ரூபாய்க்கும், கவுண்டம்பாளையம் நகராட்சிக்கு 3 கோடியே 20 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய்க்கும், அவணியாபுரம் நகராட்சிக்கு 3 கோடியே 15 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும், திருமங்கலம் நகராட்சிக்கு 3 கோடியே 14 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய்க்கும், திருப்பரங்குன்றம் நகராட்சிக்கு 2 கோடியே 43 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய்க்கும் ஆக மொத்தம் 1,437 கோடியே 93 இலட்சத்து 38. ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிற்கான பணிகளுக்கு 20.11.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நகர்ப்புற ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். இதன் மூலம் 47 ஆயிரத்து 513 வீடுகள் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட 4 முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மத்திய அரசுக்குப் பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.

1. நெற்குன்றம் கிராம பஞ்சாயத்தில் குடிநீர்த் திட்டம் – 21.70 கோடி ரூபாய்.
2. ஆவடி நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் – 177.10 கோடி ரூபாய்.
3. வள்ளுவர்கோட்டம் பகுதியில் தொடர்ச்சியான குடிநீர் வசதி – 31.77 கோடி ரூபாய்.
4. சென்னை மாநகரில் மழைநீர் வடிகால் மற்றும் பெரிய நீர்வழி கால்வாய் மேம்பாடு – 998 கோடி ரூபாய்.



# சென்னை மாநகராட்சி சார்பில் 100 இளைஞர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உரை



சென்னை மாநகராட்சி சார்பில் 100 இளைஞர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கிடும் விழா சென்னை – இராஜா அண்ணாமலைபுரம் – இமேஜ் கூட்ட அரங்கில் 29.11.2007 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் சுழல் நிதி வழங்கி அவர் ஆற்றிய உரை வருமாறு:

"இளைஞர்களின் எழுச்சிமிகு தோற்றத்துடனும், ஏற்றமிகு தோற்றத்துடனும் இந்த விழா இமேஜ் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. சமுதாயத்தில் இளைஞர் களின் இமேஜை உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த விழா இங்கு நடைபெறுகிறது.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் 1989–ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்களால் முதன்முதலில் தொடங்கப்பட்டது. அரசியல் நோக்கத்துடன், சுயவிளம்பரத்தோடு குறுகிய நோக்கத்தோடு சுயஉதவி குழுக்கள் தொடங்கப்படவில்லை. பெண்கள் நாட்டில் நம்பிக்கையுடன் சுயதொழில் புரிந்து வளர்ந்திட வேண்டும் என்ற சேவை மனப்பான்மையுடன் தொடங்கப்பட்டது. வங்கிகள் மூலம் குறைந்த

தொகுப்பு: **எஸ். செல்வராஜ்**, செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை மாநகராட்சி

வட்டி விகிதத்தில் கடன் உதவி வழங்கி வாழ்க்கை வளம் பெற வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தில் 1989–ஆம் ஆண்டு சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டன. இன்று அவை நன்கு வளர்ச்சி அடைந்து 3 இலட்சத்து 54 ஆயிரம் குழுக்களாக உயர்ந்துள்ளன. இதில் ஏறக்குறைய 57 இலட்சம் குடும்பங்களை சார்ந்தச் பெண்கள் வாரந்தோறும், மாதந்தோறும் சிறுசேமிப்பு செய்து வங்கிகளில் கடன் பெற்று தொழில் செய்து தங்களின் குடும்பங்களை பொருளாதாரத்தில் முன்னேற்றி உள்ளனர்.

### பொருளாதார முன்னேற்றம்

கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி 10.26 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி 8.2 சதவீதம் மட்டுமே. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியைவிட, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகமானதற்குக் காரணம் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்களின் பொருளாதார முன்னேற்றமே ஆகும்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் அயராது பாடுபட்டு பொருளாதார நிலையில் முன்னேறி உள்ளனர். இளைஞர்களின் வாழ்வில் வசந்தம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இளைஞர் சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தி.மு.கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். கடந்த ஆட்சியில் சுயஉதவிக் குழுக்கள் பட்ட கஷ்டங்களை நன்கு அறிவோம். இந்தியா முழுவதும் பல இளைஞர்கள் வேலைவாய்ப்புத் தேடி வருவதை நாம் அறிவோம். அவர்கள் நேர்முகத் தேர்வுகளுக்காக இரயில், பேருந்து போன்றவற்றில் வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள உதவித் தொகைகள் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் வழங்கப்படுகிறது.

2006–07ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இளைஞர் குழுக்களை அமைப்பதற்கும், வலுப்படுத்துவதற்கும் ரூ.10 கோடி ஒதுக்கப்படும் என்று மானிய கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டு கடந்த ஓராண்டு காலத்தில் 16 ஆயிரத்து 269 இளைஞர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றில் 2 இலட்சத்து 43 ஆயிரத்து 180 இளைஞர்கள் உறுப்பினர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். வங்கிகளின் சேமிப்புத்தொகை ரூ.13.48 கோடியாகும்.

### இளைஞர் குழுக்கள்

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை ஒன்று சேர்த்து குழுக்களாக அமைத்து அந்தக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களிடையே சேமிப்பு ஏற்படுத்தி அதிக அளவில் உள் கடன் பெற வேண்டும் என்பதற்காக சுழல்நிதி வழங்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியின் முயற்சியின் பலனாக 100 இளைஞர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 25 ஆயிரம் வீதம் ரூபாய் 25 இலட்சம் இன்று வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் 2 ஆயிரத்து 700 இளைஞர் குழுக்களுக்கு வங்கிகளில் கடன்கள் பெறுவதற்கு முன்னோட்டமாக ரூபாய் 6.75 கோடி சுழல் நிதியாக வழங்கப்படுள்ளது.

இளைஞர் சுயஉதவிக் குழுக்கள், சமூகப் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்குப் பல்வேறு தொழில் பயிற்சிகளை கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் 5,000 இளைஞர்களுக்கு ஒருவருக்கு ரூபாய் 10,000 செலவில் தொழில்கல்வி பயிற்சிப் அளிக்கப்படுள்ளது. இளைஞர்கள் சுயமாகத் தொழில் செய்ய வங்கிக்கடன் பெற்றுத்தரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ரூபாய் 10 கோடி செலவில் 10,000 இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. மகளிர் சுய உதவிக்குழுக்களின் பயிற்சித் தொகை ரூ.7.50 லிருந்து தற்போது ரூ.45ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

1965–ஆம் ஆண்டு தமிழகத்தில் இந்தி திணிக்கப்பட்டபோது அதை எதிர்த்துஇராஜேந்திரன் என்ற இளைஞன் போராடினான். அப்போது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அடக்க துப்பாக்கிச்சூடு நடத்த அனுமதிக்கப்பட்டது. அந்த இளைஞன் மீது குண்டுகள் பாய்ந்து இறக்கும் தருவாயில் கூட "இந்தி ஒழிக, தமிழ் வாழ்க" என்று முழக்கமிட்டு இந்திய வரலாற்றில் சாதனை புரிந்து இறந்தான். இளைஞர்களும் மகளிர் குழுக்களைப் போல் சிறப்பாகச் செயல்பட்டு சிறந்து விளங்க வேண்டும். தமிழக அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்".



# உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் குறித்த மாநில அளவிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரை அறிக்கைகள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம்
மாண்புமிகு உள்ளாட்சித் துறைத் தலைவர் அவர்கள் அளித்தார்

**1996**ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் உள்ளாட்சிகளுக்கான அதிகாரப் பரவலாக்கம் குறித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய காந்தியவாதியும், மாநிலத் திட்டக்குழு உறுப்பினருமான திரு. எல்.சி. ஜெயின் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அதன் பரிந்துரைகள் பெறப்பட்டு நிறைவேற்றப்பட்டன. அதன் பின்னர் 1997ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் மீண்டும் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பெருவாரியான பரிந்துரைகள் அரசால் நிறைவேற்றப்பட்டன.

தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகள் வழங்கிட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று 11.8.2006 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களால் சட்டமன்றப்

பேரவையில் அறிவிக்கப்பட்டபடி, மாநில அளவிலான மூன்றாவது உயர்நிலைக் குழுவை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைத்து 22.1.2007 அன்று அரசு ஆணையிட்டது. இக்குழுவில் அரசு உயர் அதிகாரிகள், பல்வேறு கட்சிகளின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோர் இடம் பெற்றனர்.

இக்குழுவின் கூட்டம் 7.3.2007 மற்றும் 19.3.2007 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் தவிர்த்து இதர உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்போடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் உள்ளாட்சித் தலைவர்கள் கருத்தரங்கம் 18.3.2007 அன்று சென்னையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அதிகாரப் பரவலாக்கம் குறித்து தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சித் தலைவர்களின் கருத்துகளையும் அறிந்திட ஈரோடு, திருவண்ணாமலை, திருச்சி, விருதுநகர் ஆகிய நகரங்களில் கிராம ஊராட்சித் தலைவர்களின் மண்டல கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

உயர்நிலைக் குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் மற்றும் அரசுத் துறைச் செயலர்கள், துறைத் தலைவர்கள் உடனான ஆலோசனைக் கூட்டங்கள், வல்லுநர்களின் பரிந்துரைகள் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சி மன்றத் தலைவர்களின் பரிந்துரைகள் ஆகியவற்றைப் பெற்று இப்பரிந்துரைகளை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு ஆய்வு செய்து, ஊரக உள்ளாட்சிகளுக்கும், நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கும் கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறித்த பரிந்துரைகள் அடங்கிய இரண்டு அறிக்கைகளை இறுதி செய்துள்ளது. இந்த இரண்டு அறிக்கைகளுக்கும் உயர்நிலைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று அவற்றை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் 10.12.2007 அன்று அளித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது நெல்லை மாநகர மேயர் திரு.ஏ.எல்.சுப்பிரமணியன், திருச்சி மாநகர மேயர், திருமதி. சாருபாலா தொண்டைமான், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைச் செயலர் திரு.க.அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., உயர்நிலைக்குழு வல்லுநர்களான உள்துறைச் செயலர், திருமதி.எஸ்.மாலதி, இ.ஆ.ப., திரு.தமிழருவி மணியன், காந்தி கிராம பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு.க.பழனித்துரை, ஆகியோரும் உடனிருந்தனர்.❖

---

**அரசுப் பள்ளிகளில், 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த 300 மாணவ மாணவியர் (மாவட்டத்திற்கு 10 பேர் வீதம்) அவரவர் விரும்பும் சிறந்த பள்ளிகளில் பயில அரசு நிதி உதவி வழங்கிடும் திட்டம் தொடங்கப்பட்டது.**





## ஈரோடு மாவட்டம் பிரம்மதேசம் பஞ்சாயத்துக் கூட்டமைப்பின் தன்னலமற்ற சேவைக்கு தமிழக அரசின்

# மணிமேகலை விருது

–என்.பாலையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு மாவட்டம்.

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிரம்மதேசம் என்ற கிராமத்தில் மகளிர் சுயஉதவிக் குழுவினர்களைக் கொண்டு பஞ்சாயத்து கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்தக் கூட்டமைப்பில் இருக்கும் 85 மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 1,350 பேர் தற்போது உறுப்பினர்களாக உள்ளனர்.

இவர்கள் ஆற்றிய பணியினைப் பாராட்டி தமிழக அரசு மணிமேகலை விருதினை வழங்கி கௌரவித்துள்ளது. இவர்களுக்கு விருது கிடைத்தது குறித்து இக்குழுவினரை நேரில் சந்திக்க பிரம்மதேசம் சென்றபோது அவர்கள் அப்போது மாதாந்திரக் கூட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். அரசு மணிமேகலை விருது வழங்கியுள்ளது குறித்து கேட்ட போது இந்தக் கூட்டமைப்பின் செயலாளர் திருமதி வெண்ணிலா (வயது 42) தெரிவித்ததாவது :-

“எங்களுடைய குழு ஆரம்பிக்கப்பட்டு மூன்றரை ஆண்டுகளாகிறது. பஞ்சாயத்திலுள்ள அனைத்து சுயஉதவிக் குழுக்களும் இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன. இதுவரை 64 பஞ்சாயத்துக் கூட்டமைப்புக் கூட்டங்களைக் கூட்டியுள்ளோம். பஞ்சாயத்துக் கூட்டமைப்பு மூலம் 25 குழுக்களுக்கு தலா ரூ.25,000 நிதி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எங்களுடைய குழுவினர் வாங்கிய கடனை நிலுவையின்றி செலுத்தி வருகின்றனர். குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொருளாதார கடனுதவியை முறையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

நாங்கள் அரசினுடைய திட்டங்களைப் பொது மக்களுக்கு எடுத்துக் கூறி வருகிறோம். கிராமங்களில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கிறோம். கணவன்–மனைவி இடையே உள்ள பிரச்சினைகளைக் கூட தீர்த்து வைத்து அவர்கள் நல்லுறவுடன் வாழ அறிவுரை வழங்கி வருகிறோம். அரசினுடைய சிறந்த திட்டமான தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தில் எங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ளோம். இதற்கு அடிப்படை

காரணமும் ஒன்று உண்டு.



அந்தியூர் வட்டாரப் பகுதியில் மலஜலம் கழிப்பதற்காக சாலை ஓரத்தில் அமர்ந்திருந்த 2 குழந்தைகள் இறந்து விட்டனர். குழந்தைகளை இழந்த பெற்றோர்களுக்கு ஆறுதல் கூறியும் அவர்களை சமாதானப்படுத்த இயலவில்லை. சாலையில் மல ஜலம் கழித்ததினால் தான் இந்த குழந்தைகளுக்கு இறப்பு ஏற்பட்டது. இந்த இறப்பு எங்களை வெகுவாகப் பாதித்தது. அன்று முதல் சாலைகள் மற்றும் வெளியிடங்களில் பொதுமக்கள் மலஜலம் கழிப்பது சுகாதாரமற்றது என்பதை வலியுறுத்தியும், வீடுகளில் தனிநபர் கழிப்பறையை அரசு கொடுக்கும் நிதியினைக் கொண்டு அமைத்துக் கொள்வதன் அவசியம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

இதன் பயனாக தற்போது 40 மகளிர் சுய உதவிக் குழுவினர்களின் வீடுகளில் தலா ரூ.3,000 வீதம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடமிருந்து ரூ.1.20 இலட்சம் பெற்று கழிப்பறைகளை அமைத்துள்ளோம். தற்போது அனைத்து வீடுகளிலும் தனி நபர் கழிப்பறை கட்டுவதற்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறோம். இது தவிர ஈரோட்டிலுள்ள அரசின் கண் மருத்துவமனையினை அணுகி தவிட்டுப்பாளையம் நடுநிலைப்பள்ளியில் இலவச கண் பரிசோதனை முகாமினை நடத்தி, 64 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்து, கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

டெல்லியில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியில் பங்கேற்று எங்கள் குழு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மிதியடி மற்றும் கோராப்பட்டு பொருட்களை கண்காட்சியில் விற்பனை செய்தோம். ஆதரவற்ற பள்ளிக் குழந்தைகளுக்கு எங்கள் குழு மூலம் சீருடையும், ரூ.2,500 மதிப்பில் மாணவ, மாணவியருக்கு தட்டு, டம்ளர், அங்கன்வாடி பள்ளிகளுக்கு நாற்காலிகள் போன்றவற்றையும் இலவசமாக நாங்கள் வழங்கியுள்ளோம். கிராமசபைக் கூட்டங்களில் பங்கேற்று மக்களுக்குத் தேவையான அடிப்படை பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி அதனை நிறைவேற்றி வருகிறோம்.

ரூ.5,450 மதிப்பில் ஆதரவற்ற 2 நபர்களுக்கு தையல் இயந்திரமும், 3 பேருக்கு இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ள ரூ.40 ஆயிரம், 4 நபர்களுக்கு வீடு கட்ட கனரா வங்கி மூலம் கடனுதவி, 5 நபர்களுக்கு கல்விக் கடனும் எங்கள் கூட்டமைப்பு வாயிலாக பெற்றுத் தரப்பட்டுள்ளது. 16 குழுவினருக்கு கோராப் பட்டு, மிதியடி போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதற்காக ரூ.29.80 இலட்சம் தொழில் கடன் பெற்றுத் தரப்பட்டுள்ளது" என்றார்.

இந்தக் கூட்டமைப்பின் பொருளாளர் திருமதி எஸ். மணிமேகலை தெரிவித்ததாவது:- "கிராமத்தினுடைய அடிப்படை வசதிகளான தண்ணீர் வசதி, சாக்கடை வசதி, சாலை வசதி போன்றவைகளை பெற்றுத் தந்துள்ளோம். பிரம்மதேசத்தில் சுகாதார வளாகம், சந்திப்பாளையம் கண்மாய் அருகே தடுப்புச் சுவர் போன்றவைகள் உருவாக்கிட பெரும் முயற்சி எடுத்துக்கொண்டோம்" என்றார். இணைச் செயலாளர் திருமதி எம். ராணி தெரிவித்தபோது.

"சுகாதாரத்திற்கு எங்கள் கூட்டமைப்பு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதனடிப்படையில் செம்புளிச்சாம்பாளையம் கிராமத்தில் அரசு மூலம் இரண்டு சுகாதார வளாகம் கட்டுவதற்கு பெரும் முயற்சி எடுத்துக்கொண்டோம். தெருவிற்கு குடிநீர்க் குழாய் இணைப்புப் பெற்றுள்ளோம். தார்சாலை, மற்றும் சாக்கடை வசதியை, எங்களுடைய முயற்சியால் அரசு செய்து கொடுத்துள்ளது" என்றார்.

பிரம்மதேச கூட்டமைப்பின் பொதுச் சேவை, அரசின் திட்டங்களைப் பொதுமக்களுக்கு கொண்டு செல்லுதல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இயலாதவர்களுக்கு உதவிகளைச் செய்தல், சுகாதாரத்திற்காக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், அரசிடம் பொருளாதார கடனுதவி, தொழில் தொடங்க கடனுதவி, சுழல் நிதி பெற்று கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபடுதல் போன்ற செயல்பாட்டினைப் பாராட்டி தமிழக அரசு மணிமேகலை விருதினை வழங்கி இந்தக் கூட்டமைப்பினை கௌரவித்துள்ளது.

இந்தச் சீரிய பணிக்காக சென்னை கலைவாணர் அரங்கில் 25.9.2007 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் ரூ. ஒரு இலட்சம் நிதியுதவி மற்றும் மணிமேகலை விருதுச் சான்றிதழ் ஆகியவற்றை இக்குழுவிற்கு வழங்கிப் பாராட்டினார்.



## பொருளாதார வளர்ச்சிக்குப் பாடுபடும் குப்புச்சிபாளையம் ஸ்ரீ அம்மன் மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு தமிழக அரசின் மணிமேகலை விருது

அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குப்புச்சிபாளையம் கிராமத்தில் ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழு என்கிற அமைப்பு இயங்கி வருகிறது. 2000–ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குழுவில் தற்போது 12 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுவின் பொது சேவைக்காகவும். பொருளாதார மேம்பாட்டிற்கு தொழில் மூலம் அயராது பாடுபட்டு வரும் விடா முயற்சியினை பாராட்டியும் அரசு மணிமேகலை விருதினை வழங்கியுள்ளது. இந்த குழு செயல்படும் விதம் குறித்து நேரில் பார்வையிட்டு இக்குழுவின் ஊக்குநர் திருமதி கே.எம். தனபாக்கியம் அவர்களிடம் நேரில் குழு செயல்பாடுகள் குறித்து பேட்டி காணப்பட்டது. அப்போது அவர் தெரிவித்ததாவது.

12 பேர்கள் உள்ள எங்கள் குழு மூலம் 2002ஆம் ஆண்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ரூ.1.20 இலட்சம் பொருளாதார கடன் உதவி பெற்று அதன் மூலம் 12 தையல் இயந்திரங்கள் வாங்கப்பட்டன. அன்று முதல் தலையணை, மெத்தை ஆகியவைகள் தயாரிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறோம். அருகாமையில் உள்ள இலவம் பஞ்சு அரவை மில்லுக்குத் தேவைப்படும் அளவிற்கு இலவம் பஞ்சினைக் கொள்முதல் செய்து தலையணை மற்றும் மெத்தைக தயார் செய்கிறோம். இந்த அரவை மில்லிற்கு பொள்ளாச்சி, சிறுமலை, ஒட்டன்சத்திரம், ஆயக்குடி மற்றும் கேரளா மாநிலத்திலிருந்து இலவம் பஞ்சு பெறப்படுகின்றன. சென்ற ஆகஸ்ட் மாதம் நூறு தலையணைகள், 50 மெத்தைகள் தயாரிக்கப்பட்டு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூ.1.18 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. அக்டோபர் 2007 ஆம் ஆண்டு 50 மெத்தைகள், 150 தலையணைகள் தயாரிக்கப்பட்டு சேலம் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு ரூ.1.25 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. அதே போன்று 2005ஆம் ஆண்டு 300 மெத்தைகள். 2006–ஆம் ஆண்டு 2,300 மெத்தைகள் தயாரிக்கப்பட்டு கரூர் மற்றும் காதி கிராப்ட் அங்காடிக்கு வழங்கப்பட்டன.

இக்குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் 30 நாட்களுக்கும் வேலை கிடைத்தால் ஒருவருக்கு மாதத்திற்கு ரூ.2,500 முதல் ரூ.3,000 வரை வருமானம் கிடைக்கும். சாதாரணமாக மாதத்தில் 15 முதல் 20 நாட்கள் தான் வேலை கிடைக்கும். அவ்வாறு வேலை கிடைக்கின்றபட்சத்தில் இலவம் பஞ்சுகளை தலையணைகளில் அடைப்பது பொறுத்து நாள் ஒன்றிற்கு ரூ.60 முதல் 100 வரை வருமானம் கிடைக்கும். இதில் கிடைக்கின்ற வருமானம் போதுமானதாக இருப்பதால் குடும்ப செலவினங்களை மேற்கொள்ளவும், பிள்ளைகளை படிக்க வைக்கவும் முடிகிறது. ஆனால் இதற்கு முன்னர் விவசாயக் கூலி வேலைக்குச் சென்று வந்தோம். களையெடுத்தல், நாற்று நடுதல் போன்ற விவசாயக் கூலி வேலை மூலம் குறைந்த வருவாய் தான் கிடைத்தது. தற்போது இந்த நிலை நீங்கி ஓரளவிற்கு வருமானம் கிடைப்பதால் பொருளாதார நிலை சற்று மேம்பட்டு வருகிறது. எனவே தான் இந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்குத் தேவைப்படும் நிதி வசதிக்கு பொருளாதார கடனுதவியைப் பெற்றுப் பயன்படுத்தி வருகிறோம்.

தற்போது ரூ.3 இலட்சம் பொருளாதார கடனுதவி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் கோரப்பட்டுள்ளது. இது விரைவில் கிடைத்து விடும். எங்களுடைய தொழிலில் நாங்கள் ஈடுபடும் நேரத்தை தவிர மற்ற நேரங்களில் சமூக சேவையிலும் தன்னலம் கருதாது செய்து வருகிறோம். இதுவரை 12 உறுப்பினர்கள் வீட்டிலும் தனிநபர் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. பல்வேறு குடும்பங்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளோம். சுகாதாரத்தின் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். குப்புச்சிபாளையத்தில் கட்டப்பட்டுள்ள 2 சுகாதார வளாகத்தினை மகளிர் சுயஉதவிக் குழுவினர் பராமரித்து வருகின்றனர். 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் நாள் கடலோர மாவட்டங்களில் சுனாமி ஏற்பட்டு அங்குள்ள மக்கள் பாதிக்கப்பட்ட போது அவர்களுக்கு நிவாரண உதவியாக நிதி திரட்டி வழங்கியுள்ளோம். போலியோ நோய் மற்றும் எய்ட்ஸ் அபாயம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். இலவச மருத்துவ முகாம்களை நடத்தி பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்திட உதவி புரிந்துள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த மகளிர் சுய உதவிக் குழுவின் பொது சேவையையும், வறிய நிலையில் இருந்து அரசின் மூலம் தொழில் தொடங்குவதற்கு பொருளாதார கடனுதவி பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டு வரும் இந்த குழுவின் சேவையைப் பாராட்டி தமிழக அரசு மணிமேகலை விருதினை வழங்கியுள்ளது. சென்ற 25.7.2007 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மணிமேகலை விருதையும், ரூ.50 ஆயிரத்திற்கான நிதியுதவியையும் வழங்கி பாராட்டியுள்ளார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் ஊரகப் பகுதி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 15 ஆயிரத்து 958 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த குழுவில் 2,54,396 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்தக் குழுவின் மூலம் வங்கிகளில் ரூ.51 கோடியே 55 இலட்சத்து 99 ஆயிரத்து 873 சேமிப்பு உள்ளது. ★

# உள்ளாட்சித்துறையில் நிரப்பப்படாமல் இருந்த பணியிடங்களில் இதுவரை 15,311 பணியாளர்கள் நியமனம்



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உதவிப் பொறியாளர்களாக நியமிக்கப்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு பெற்றுள்ள 206 உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கி, புதியதாகப் பணியில் சேரும் பொறியாளர்களுக்கான 3 நாள் அடிப்படைப் பயிற்சித் திட்டத்தை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கிண்டியில் உள்ள மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அரங்கில், 19.11.2007 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

கடந்த ஆட்சியின்போது அரசுப் பணியிடங்களில் காலியான இடங்களை நிரப்பிடத் தடை ஆணை விதிக்கப்பட்டது. ஊரகப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்ற பெரும் பொறுப்பு உடைய இத்துறையில் காலிப் பணியிடங்களை நிரப்பாததால் வளர்ச்சிப் பணிகளைச் செயல் படுத்துவதில் பின்னடைவு ஏற்பட்டது. இதனை உணர்ந்ததால்தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு, வேலை நியமனத் தடையை நீக்கி ஆணையிட்டவுடன் இத்துறையில் காலியாக இருந்த 17,819 பணியிடங்களும் நிரப்பப்படும் என சட்டமன்றத்தில் இத்துறை சார்பாக அறிவிக்கப்பட்டபடி, அனைத்து காலிப் பணியிடங்களுக்கும் நியமனம் நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.



தமிழக அரசு, வேலை நியமனத் தடையை நீக்கி ஆணையிட்டவுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைதான் காலிப் பணியிடங்களை நிரப்பிட முதன் முதலாக நடவடிக்கை மேற்கொண்டது. இத்துறையின் பல்வேறு நிலையிலான அலுவலகங்களில் காலியாக இருந்த 17,819 பணியிடங்களில் இதுவரை 15,311 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

13,100 மக்கள் நலப் பணியாளர்கள், 745 குடிநீர் பொருத்துநர் உதவியாளர்கள், 322 சாலை ஆய்வாளர்கள், 202 பணி மேற்பார்வையாளர்கள், 209 தட்டச்சு சுருக்கெழுத்தர்கள், 17 இணை இயக்குநர்கள், 95 உதவி இயக்குநர்கள், 206 உதவிப் பொறியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள், இரவுக் காவலர்கள் என மொத்தம் 15,311 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஊரக வளர்ச்சித் துறையில் பணியாற்றிடத் தேர்வு பெற்றுள்ள 206 உதவிப் பொறியாளர்களுக்கும் பணி நியமன ஆணையை வழங்கி தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டு 3 நாள் அடிப்படைப் பயிற்சியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்களின் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பில் உள்ள ஊராட்சி ஒன்றிய உதவிப் பொறியாளர்கள் தங்களது கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும் என்றும், செயல்படுத்தும் பணிகளைத் தரமாகவும், விரைவாகவும் நிறைவேற்ற வேண்டும் என்றும், அப்போதுதான் திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு விரைவில் பயன் அளிக்கும் என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலர் திரு. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., மற்றும் இயக்குநர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப. ஆகியோரும் கலந்து கொண்டனர். ✶



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வை. பெருமாள் அவர்களின் மருத்துவச் செலவிற்கான ஈட்டுத் தொகை 2,81,087 ரூபாய்கான காசோலையை, மறைந்த உறுப்பினரின் மனைவி திருமதி.பெ.ராசம்மாள் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் வழங்கினார். (9.12.2007)

# மகளிர் சுய உதவி குழுக்களின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்திட உதவித் திட்ட அலுவலர்கள் நியமனம்

1989ஆம் ஆண்டில் மகளிர் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட சுயஉதவிக் குழு இயக்கம் தமிழகமெங்கும் உள்ள ஏழை எளிய மகளிரின் வாழ்வில் ஒளியேற்றும் மாபெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் செயல்படும் 3.54 இலட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்களில் 57 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குக்களின் சேமிப்புத் தொகை மொத்த ரூ.1,582 கோடியாகும். ரூ.2,520 கோடி அளவிற்கு வங்கிகள் மூலம் கடன் வசதி பெற்று சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. சுயஉதவிக் குழுக்களின் செயல்பாட்டினை மேலும் மேம்படுத்த தமிழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சிறப்பாகச் செயல்படும் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு மணிமேகலை விருதுகள் வழங்கப்படுகின்றன. கல்வியறிவில்லா சுயஉதவிக் குழு மகளிருக்கு அடிப்படைக் கல்வி அளிக்கும் புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், பிற ஊரக வளர்ச்சித் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களை ஈடுபடுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

மாவட்டங்களில் சுயஉதவிக் குழுத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மகளிர் திட்ட அலுவலகங்களை வலுப்படுத்திட கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாவட்டந்தோறும் இரண்டு உதவித் திட்ட அலுவலர்கள் வீதம் 60 உதவித் திட்ட அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்திட அரசு ஆணை பிறப்பித்தது.

மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை முறைப்படி அமைத்தல், குழுக்கள் உட்கடன் பெறும் முறைகளைக் கண்காணித்தல், சிக்கன மற்றும் சேமிப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல், தர மதிப்பீடு செய்தல், மானியம் மற்றும் கடனுதவி பெற உதவுதல், முறையாக குழுக் கூட்டங்களை நடத்துதல், கடனைத் திருப்பிச் செலுத்துதல், பயிற்சி அளித்தல், பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட தேவையான ஏற்பாடுகளைச் செய்தல், குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்திட உதவுதல் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகிய பல்வேறு முக்கியப் பணிகளை உதவித் திட்ட அலுவலர்கள் மேற்கொள்வார்கள்.

தகுதியின் அடிப்படையில் உதவித் திட்ட அலுவலர் பணிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழாவும், சுயஉதவிக் குழு முன்னேற்றத்தில் பங்காற்றிடும் அலுவலர்களுக்குப் பயன்படும் வண்ணம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட "சுய உதவிக் குழு கையேடு" மற்றும் "ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கையேடு" ஆகிய இரு கையேடுகள் வெளியீட்டு விழாவும் 3.11.2007 அன்று சென்னையில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு உதவித் திட்ட அலுவலர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கியும், "சுயஉதவிக் குழு கையேடு" மற்றும் "ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கையேடு" ஆகிய நூல்களை வெளியிட்டும் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு மகளிர்நல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி திருமதி. சூசன் மாத்யூ, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலர் திரு.க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார், நிறைவாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாடு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்



# ஈரோடு, திருப்பூர் நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டன

தந்தை பெரியார் அவர்கள் ஈரோடு நகராட்சியின் தலைவராகப் பதவிப் பொறுப்பை ஏற்றிருந்த போது 1917 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17 ஆம் நாள், ஈரோடு நகராட்சியில் பெரிய சேமூர், வீரப்பன்சத்திரம் போன்ற பகுதிகளும் ஈரோடு நகரத்தோடு இணைக்கப்பட்டு விரிவாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

தந்தை பெரியார் கண்ட அந்தக் கனவை நிறைவேற்றுகின்ற வகையில், ஈரோடு நகராட்சியை விரிவுபடுத்த வேண்டுமென்று ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.9.2007 அன்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி ஈரோடு நகராட்சி அதன் தற்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி 1.1.2008 முதல் ஈரோடு மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படுகிறது.

**ஈரோடு நகராட்சி :**

ஈரோடு நகராட்சியின் தற்போதைய பகுதி அப்படியே மாநகராட்சியாக அமைக்கப்பட்டாலும், தந்தை பெரியார் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகின்ற வகையில் பெரிய சேமூர், வீரப்பன்சத்திரம், காசிபாளையம், சூரம்பட்டி ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளும், பி.பெ.அக்ரஹாரம், சூரியம்பாளையம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளும், திண்டல், கங்காபுரம், எல்லப்பாளையம், வில்லரசம்பட்டி, முத்தம் பாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளும் ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும்.

இவ்வாறு விரிவுபடுத்தப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் இந்த விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி செயல்படத் தொடங்கும்.

**திருப்பூர் நகராட்சி :**

ஆசிய அளவில் பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் நகரம் முன்னணி இடத்தை வகிக்கின்றது. இந்நகரின் பிரமிக்கத்தக்க தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செம்மையான முறையில் அளிக்கும் வகையில் திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக அமைக்கப்படுகிறது.

திருப்பூர் நகராட்சியும் தற்போதைய எல்லைகளுடன் 1.1.2008 முதல் மாநகராட்சியாக அமைக்கப்படுகிறது. 15 வேலம் பாளையம், நல்லூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளும், செட்டிபாளையம், மண்ணரை, தொட்டி பாளையம், ஆண்டிபாளையம், வீரபாண்டி, முருகம் பாளையம், நெருப்பெரிச்சல், முத்தணம்பாளையம் ஆகிய கிராம ஊராட்சிப் பகுதிகளும் திருப்பூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும்.

இவ்வாறு விரிவுபடுத்தப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் இந்த விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி செயல்படத் தொடங்கும். ஈரோடு மற்றும் திருப்பூர் நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்துவதற்கெனத் தனித்தனியாக இரண்டு அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

# மிகவும் நுணுக்கமாகவும், கடினமாகவும் உழைத்து தயாரிக்கப்படுகிற நகர் ஊரமைப்புத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில்தான் உண்மையான வெற்றி உள்ளது



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.**பரிதி இளம்வழுதி** அவர்கள்

**ந**கர்ப்புற வளர்ச்சி தொடர்பாக "திட்டமிடுதலும், முறைப்படுத்துதலும்" என்ற தலைப்பில், சென்னையில் **4.12.2007** அன்று நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உரையாற்றும்போது,

"நகர் ஊரமைப்புத் திட்டமிடுதலில் நமது மாநிலம் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. இந்தத் துறை பல்வேறு நகர்ப்புற வளர்ச்சிக்கேற்பவும், காலத்தின் தேவைக்கேற்பவும் தொடர்ந்து தேவையான மாற்றங்களைச் செய்து திட்டங்களை உருவாக்கி வந்துள்ளது. மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் திட்டங்களைத் தயாரித்துள்ளது. தவிர, 1920–ஆம் வருட சட்டத்தில் காலத்திற்கேற்ப திருத்தங்கள் கொணர்ந்து, புதியதாக நகர் ஊரமைப்புச் சட்டம் 1971இல் இயற்றப்பட்டது. அக்கால கட்டங்களிலே மண்டலத் திட்டங்கள் தயாரித்து, மக்கள் பங்கேற்புடன் கருத்தரங்கங்கள் நடத்தியுள்ளது. அதன் பின்னர் நகரப் பகுதிகள் அனைத்திற்கும் முழுமைத் திட்டங்கள் தயாரித்துள்ளது. நகரின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்துள்ளது. சில முக்கிய இடங்களின்





சிறப்பையும், தனித்தன்மையையும் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்துள்ளது என்பதை அறிவீர்கள்.

இது தவிர, நகர் ஊரமைப்புத் துறை பல்வேறு சிறப்புத் திட்டங்களைத் தயாரித்துள்ளது. நகர் புனரமைப்புத் திட்டம், போக்குவரத்து மேலாண்மைத் திட்டம், புராதன நகர் மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டங்களையும் தீட்டியுள்ளது. இது பாராட்டுக்குரிய பணியாகும்.

வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மக்களுக்கான நகர்ப்புறத் தேவையை நிறைவு செய்யவும், துவக்க முதலீட்டுத் திட்டம், போக்குவரத்து நிதி உதவித் திட்டம் மூலமாக நிதி உதவியை உள்ளாட்சிகளுக்கு இத்துறை வழங்கிவருகிறது. புராதன நகரங்களின் அடிப்படைத் தேவைகளுக்காக நகருக்கு ரூ.50 இலட்சம் என்ற அளவில் நிதி மானியமாக அளித்து வருகிறது. மேலும் தொழில்நுட்ப அறிவியலிலும் இத்துறை வளர்ந்து வருகிறது.

இவ்வாறு பரந்துபட்ட அளவில் திட்டங்கள் தயாரித்த போதிலும், நகரங்களின் நிலையை நாளுக்கு நாள் புதுப்புது பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. இதற்கு மக்கள்தொகை வளர்ச்சி ஒரு காரணம் என்ற போதும், இதனை எதிர்நோக்கி தயாரிக்கப்பட்ட திட்டம் அமல்படுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடே முக்கிய காரணம் என நான் கருதுகிறேன். அதைப்போன்றே நகர்ப்புற, கிராமப்புற வளர்ச்சியை முறைப்படுத்த மேற்கொள்கின்ற வரையறைகளும் எதிர்ப்பைச் சந்திப்பதைக் கண்டுவருகிறோம்.

மக்களுக்காகத் தயாரிக்கப்படுகின்ற எந்தத் திட்டமும் மக்களின் வரவேற்பைப் பெற்று, செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன் அடைவதை இந்த அரசு மிகவும் விரும்புகிறது. அதற்கு உரிய வழிவகைகளை கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் சீரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மிகவும் நுணுக்கமாகவும், கடினமாகவும் உழைத்து தயாரிக்கப்படுகிற நகர் ஊரமைப்புத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதில்தான் உண்மையான வெற்றி உள்ளது. எனவே, பயனீட்டாளர்களும், திட்டமிடுபவர்களும் கருத்தினைப் பரிமாற இவ்வகையான கருத்தரங்கங்கள் மிகவும் உதவியாக அமையும், அரசு இதனை வரவேற்கிறது.

திட்டமிடுதலில் வல்லுநர்கள் பல்வேறு நுணுக்கங்களைப் பற்றி விரிவுரை செய்ய உள்ளார்கள். அவர்களுடன் பிரதிநிதிகளும் தங்களுடைய கருத்துகள், ஐயப்பாடுகளைப் பகிர்ந்து தெளிவுபெற இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

இந்தக் கருத்தரங்கின் முடிவுகள் எதிர்காலத்தில் திட்டமிடுதலுக்கும், நடைமுறையில் உள்ளவைகளை மாற்றி அமைத்து இத்துறையையும், அதன் பணியை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் என நான் நம்புகிறேன். இக்கருத்தரங்கம் சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்." என்று உரையாற்றினார். ★



# நில உரிமையாளர்களாக மாறும் விவசாயத் தொழிலாளர்கள்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிலமில்லாத விவசாய கூலித்தொழிலாளர்களுக்கு இலவசமாக நிலம் வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையிலேயே வாக்குறுதி அளித்தார்கள். எப்போதுமே சொன்னதைச் செய்யும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 16.9.2006 அன்று நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் பயன்பெற்ற விவசாயிகள் சிலரை நேரில் சந்தித்தோம்.

அவர்களில் ஒருவரான நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், குருவாடி என்னும் கிராமத்தைச் சேர்ந்த, திரு.ஜெயபால் கூறுகையில், "எனது மனைவியின் பெயர் அஞ்சம்மாள். எனக்கு 2 மகள்கள் 1 மகன் உள்ளனர். நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடியே எங்களுக்கு இலவச நிலம் அளித்துள்ளார்கள். ஆண்டாண்டு காலம் அடிமைகளாகவும் கூலிகளாகவும் உழைத்து தேய்ந்து கொண்டிருந்த நாங்கள் இப்படி ஒரு உரிமை பெற்ற வாழ்வும், சொந்த நிலமும் கிடைக்கும் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

நாங்கள் சாதாரண விவசாயக் கூலித் தொழிலாளர்களாக இருந்தபோது நாங்கள் பெற்ற கூலி எங்கள் அன்றாடச் செலவிற்கே போதாது. கூலி வேலையும் எப்பொழுதும் கிடைக்காது. எத்தனையோ நாட்கள் பட்டினி கிடந்திருக்கிறோம். ஆனால் இப்போது நிலத்திற்குச் சொந்தக்காரராகியிருக்கிறோம். கருணை மிக்க நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய இந்த நிலத்தில் பயிர் செய்து கடந்த வருடம் முதல் அறுவடை செய்தோம். அதன்மூலம் எங்கள் குடும்பம் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. தற்போதுநடவு


பொ. முத்தையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகப்பட்டினம்


செய்துள்ளோம். எங்களுக்கு உரிமையான நிலத்தில் நாங்கள் வேலை செய்யும்போதும், அதில் விளைந்த அரிசியை உணவாக உண்ணும்போதும் நாங்கள் பெறும் இன்பத்திற்கு இணையே கிடையாது. காலமெல்லாம் கூலித்தொழிலாளியாக இருந்த எங்களை ஒரு நிலத்துக்குச் சொந்தக்காரராய் மாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் காலமெல்லாம் நன்றியுடையவர்களாக இருப்போம்". என தெரிவித்தார்.

அடுத்ததாக அதே கிராமத்தில் வசிக்கும் திரு. மகாலிங்கம் என்பவரை சந்தித்தபோது அவர் கூறுகையில் "என் மனைவியின் பெயர் சுதா. எனக்கு ஒரு மகன், ஒரு மகள் இருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய நிலத்தில் கடந்த ஆண்டு வாழ்வில் அடைய முடியாத பூரிப்போடு அறுவடை செய்தோம். நெல்லை விற்று அதன் மூலம் கிடைத்த வருமானத்தில் இப்போது எங்கள் குடும்பம்



சந்தோஷமாக இருக்கிறது. இது மாபெரும் ஒரு புரட்சிகரமான திட்டம். ஏனென்றால் எனது அப்பாவும் ஒரு விவசாயக் கூலித் தொழிலாளியாகத்தான் கஷ்டப்பட்டார்.

> **"காலமெல்லாம் கூலித்தொழிலாளியாக இருந்த எங்களை ஒரு நிலத்துக்குச் சொந்தக்காரராய் மாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் காலமெல்லாம் நன்றியுடையவர்களாக இருப்போம்"**

இந்த நிலம் கிடைக்கும் வரை நானும் ஒரு கூலியாளாகத்தான் உழைத்து கஷ்டப்பட்டேன். ஆனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த இலவச நிலம் வழங்கும் திட்டத்தால் எங்கள் வாழ்வே தலைகீழாக மாறிவிட்டது. இப்போது நாங்கள் அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்ற சுதந்திரப்பறவைகள். எங்களுக்கென்று சொந்தமாக ஒரு நிலம் இருக்கிறது. அதில் உரிமை யோடும், மகிழ்ச்சியோடும் உழைக்கிறோம். அதன் பலனை நாங்கள் அனுபவிக்கும்போது எல்லையில்லாத ஆனந்தம் அடைகிறோம். ஏழை விவசாயத் தொழிலாளர் களாகிய எங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நில உரிமைக்காரர்களாக மாற்றியுள்ளார்கள். வாழ்நாளெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நாங்கள் வாழ்த்திக்கொண்டே இருப்போம்; என்றும் நன்றி உள்ளவர்களாக நாங்கள் இருப்போம்" என்று மகாலிங்கம் ஆனந்த கண்ணீரோடு கூறினார்.

நாகை மாவட்டத்தில் இதுவரை இத்திட்டத்தின்கீழ் 5 கட்டங்களாக 1,572 குடும்பங்களுக்கு 574.11 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. 629 குடும்பங்களுக்கு 863 ஏக்கர் நிலம் மேம்பாடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் நிறுவனங்கள் உள்ளூர் வாசிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குவதுடன், அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்தால் மேலும் கூடுதலாக ஊக்க சலுகைகள் வழங்கப்படும் என அரசு அறிவிப்பு.**

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்

# 27 - நட்சத்திர சுற்றுலா

– டாக்டர். **எம்.இராசாராம்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும் நிருவாக இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல்வேறு வகையான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. அவற்றுள் 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா, 6 நாட்கள் மூகாம்பிகைச் சுற்றுலா, 3 நாட்கள் நவக் கிரகச் சுற்றுலா மற்றும் 4 நாட்கள் 108 அம்மன் திருக்கோயில் சுற்றுலா ஆகிய வரிசையில் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப "27 நட்சத்திர சுற்றுலா" தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இது ஐந்து நாட்கள் சுற்றுலாவாகும்.

| | நட்சத்திரம் | வழிபாட்டுத் தலம் | சுவாமியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | பூராடம் | திருநாவலூர் | அருள்மிகு குரு பகவான் |
| 2. | ரேவதி | ஓமாம்புலியூர் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 3. | மகம் | சிதம்பரம் | அருள்மிகு தில்லைக்காளி |
| 4. | ரோகிணி | திருநாகேஸ்வரம் | அருள்மிகு நாகநாதசுவாமி |
| 5. | அனுஷம் | திருவிடைமருதூர் | அருள்மிகு மூகாம்பிகை |
| 6. | மிருகசீரிஷம் | கதிராமங்களம் | அருள்மிகு வனதுர்காதேவி |
| 7. | பூரம் | திருமணஞ்சேரி | அருள்மிகு உத்வாசநாதர் |
| 8. | அசுவனி | திருநள்ளாறு | அருள்மிகு சனீஸ்வரர் |
| 9. | உத்திராடம் | தருமபுரம் | அருள்மிகு தட்சிணாமூர்த்தி |
| 10. | உத்திரட்டாதி | திருவையாறு | அருள்மிகு தட்சிணாமூர்த்தி |
| 11. | கிருத்திகை | நாகப்பட்டினம் | அருள்மிகு நாகநாதர் |
| 12. | அஸ்தம் | திருவாரூர் | அருள்மிகு ராஜ துர்கை |
| 13. | சித்திரை | திருவாரூர் | அருள்மிகு ராஜ துர்கை |
| 14. | திருவாதிரை | திருக்கொள்ளிக்காடு | அருள்மிகு சனீஸ்வரர் |
| 15. | புனர்பூசம் | ஆலங்குடி | அருள்மிகு குருபகவான் |
| 16. | சுவாதி | திருவானைக்காவல் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 17. | மூலம் | மதுரை | அருள்மிகு மீனாட்சியம்மன் |
| 18. | விசாகம் | சோழவந்தான் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 19. | ஆயில்யம் | திருப்பரங்குன்றம் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 20. | பூசம் | குச்சனூர் | அருள்மிகு சனீஸ்வரர் |
| 21. | கேட்டை | பல்லடம் | அருள்மிகு அங்காள பரமேஸ்வரி |
| 22. | திருவோணம் | தெட்டுப்பட்டி | அருள்மிகு ராஜ காளியம்மன் |
| 23. | உத்திரம் | மூலனூர் | அருள்மிகு வாஞ்சியம்மன் |
| 24. | சதயம் | திருச்செங்கோடு | அருள்மிகு சனீஸ்வரர் |
| 25. | அவிட்டம் | கொடுமுடி | அருள்மிகு சனீஸ்வரர் |
| 26. | பூரட்டாதி | காஞ்சிபுரம் | அருள்மிகு ஆதிசேடன் |
| 27. | பரணி | திருவாலங்காடு | அருள்மிகு மகாகாளி |



இச்சுற்றுலா ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை காலை 6.00 மணிக்குப் புறப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள அவரவர் பிறந்த ஜென்ம நட்சத்திரத் தலங்களாகப் போற்றப்படும் வழிபாட்டு இடங்களை தரிசனம் செய்து விட்டு ஞாயிறு மாலை 6.00 மணி அளவில் சென்னை வந்தடையும்.

இந்தச் சிறப்புச்
சுற்றுலாவிற்கான கட்டணம் :
பெரியவர் ரூ.3,800/–
(ஒரு நபர் மட்டும்)
சிறுவர் ரூ.3,200/–
(ஒரு நபர் மட்டும்)



சுற்றுலாவின் போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி மற்றும் திருக்கோயில் தரிசன வசதி ஆகியவைகளைச் சிறப்பான முறையில் செய்து வருகிறது.

சுற்றுலாவின்போது இரவு தங்கும் இடங்கள் –

1. வைத்தீஸ்வரன் கோயில்,
2. தஞ்சாவூர்
3. மதுரை,
4. காஞ்சிபுரம்

சுற்றுலாப் பயணிகள் மேலும் விவரங்கள் மற்றும் பயண முன்பதிவு பெற கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

1) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
சுற்றுலா வளாகம்,
எண். 2, வாலாஜா சாலை,
கலைவாணர் அரங்கம்,
சென்னை – 600 002.
தொலைபேசி எண்.
044–25383333 / 25384444/
25389857
மின் அஞ்சல் ttdc@vsnl.com.
இணையதளம்
www.tamilnadutourism.org
நிகரி 044 - 25361385

2) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக
விற்பனைப் பிரிவு
எண். 4, ஈ.வெ.ரா சாலை,
சென்னை –600 003
தொலைபேசி எண் 044 - 25384356 /
25382916

★ ★ ★

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

TAICO BANK

தாய்கோ வங்கி,
தாளமுத்து நடராசன் மாளிகை,
எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர்,
சென்னை-600 008.
தொ.பே.எண் 044-28411643, 044-28547952
மின் அஞ்சல்: taico@dataone.in/taico@vsnl.net

தமிழகம் முழுவதும் ஆங்காங்கே கிடைக்கும் மூலப் பொருட்கள், கைத்திறன், சந்தை வாய்ப்புகள் ஆகியவற்றை பயன்படுத்தி கூட்டுறவு முறையில் தொழில் நிறுவனங்களை நிறுவி வேலை வாய்ப்பு, நல்ல வருமானம், நியாயமான விலை ஆகியவை கிடைக்கப் பெறவும், அதற்கான கடன் வசதிகளைப் பெறவும், மாவட்ட தொழில் மையங்களையோ அல்லது எமது வங்கி கிளைகளையோ அணுகலாம்.

**பொது மக்களுக்கான கடன் வசதிகள்:**

வீடு அடமானக் கடன், வீடு கட்டக் கடன், அதிகபற்றுக்கடன், அரசு பத்திரங்களின் மீது கடன், வைப்புநிதிகளின் மீது கடன், நகைக்கடன் ஆகிய கடன் வகைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் பெற்று பயனடைவீர்!

வைப்புத் தொகைகளுக்கு கூடுதலாக வட்டி பெறுவீர்!
முதியோரின் வைப்பு தொகைகளுக்கு 1% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

வைப்பு நிதிகளுக்கு அதிக வட்டி! கடன்களுக்கு குறைந்த வட்டி!
நிறைந்த பாதுகாப்பு! சிறந்த சேவை!

## தாய்கோ வங்கியில் முதலீடு செய்து பயனடைவீர்!

மேலும் விவரங்களுக்கு எங்கள் கிளைகளை தொடர்பு கொள்ளவும்

### வங்கி கிளைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| குன்னூர் | கோவில்பட்டி | சாத்தூர் | மதுரை | திருச்சி | சேலம்* | வேலூர்* |
| 0423 2206003 | 04632 220547 | 04562 260359 | 0452 2343464 | 0431 2462745 | 0427 2313189 | 0416 2212597 |
| நாகர்கோவில் | சேப்பாக்கம் | கோயம்புத்தூர் | தஞ்சாவூர் | திருநெல்வேலி* | நெய்வேலி* | ஈரோடு* |
| 04652 233741 | 044 28547751 | 0422 2529207 | 04362 238286 | 0462 2322921 | 04142 268849 | 0424 2268024 |
| அம்பத்தூர்* | காஞ்சிபுரம் | திருவண்ணாமலை | திண்டுக்கல் | காரைக்குடி | ஆழ்வார்பேட்டை | ஆத்தூர் |
| 0424 26540223 | 044 27223562 | 04175 251058 | 0451 2433351 | 04565 233881 | 044 24342463 | 04282 242070 |
| கடலூர் | தர்மபுரி | சிவகாசி | கரூர் | தேனி | வியாசர்பாடி | நாமக்கல் |
| 04262 263712 | 04342 266744 | 04562 276867 | 04324 262636 | 04546 252163 | 044 25516566 | 04286 277616 |
| திருவாரூர்* | கிருஷ்ணகிரி* | எழும்பூர் | | | | |
| 04366 220090 | [illegible] | 044 28411643 | | | | |

* பாதுகாப்பு பெட்டக வசதி உள்ளது

வெளியீட்டு ஆணை எண்.2126/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம் 2007, நாள் : 19.12.2007

228655
சென்னை-600 008





# கோ-ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை...
# காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை



**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**

கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

செ.ம.தொ.இ / 602 / வரைகலை / 2007

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/
TN/PMG(CCR) WPP-518/06-08





**தமிழ்நாடு சுற்றுலாத்துறை,** தமிழ்நாடு சுற்றுலா வளாகம்,
வாலாஜா ரோடு,சென்னை- 600 002.
முன்பதிவு தொடர்புக்கு : 2538 3333, 2538 8785, 2538 1640 ஃபேக்ஸ் : 2536 1385, 2536 6633